BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 05 Issue - 111 13 Friday February 2009

இலவசம்

நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052

## வன்னிக் களம் தான் வல்லமை யார் பக்கம் என்று உணர்த்தும்!
## வாடா பகையே! உன்னைப் பிளந்து எங்கள் தேசியக் கொடி பறக்கும்!



**VBR**
Special Offers... Call: 020 8540 8886
2 EPOS & 1 Back Office PC for £3999*
1 EPOS FOR £1799*
Free 3 years POS PACK Warranty!!! Pricing, Promotion & Stock Control!!! Online Product, Order &Promotion!!!
Costcutter Nisa Todays Premier
Visual Business Retail Ltd. Well over 200 retail, hospitality and cash & carry clients in the UK since 2004 *Offer valid from July 25th 2008 to August 24th 2008.

**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing: Buying and Selling Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING: 10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG Tel: 020 8772 4900
COLLIERS WOOD: 2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

**Iyngaran Food & Wine**

80 Burlington Road, New Maldon, Surrey KT3 4NU
020 8949 5640

**ABBEY TRAINING.NET**
Off Licence / Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் Personal Licence & Premises Licence எடுத்து தருவோம்
வகுப்புகள் NCPLH Certificate Course Life in the UK
NESS & Co.
Immigration, Conveyancing, Licencing, Family Disputes & Others
Call: S.Thavanessan (NESS)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

**SANGAMAM JEWELLERY**

இலவசம்
£ 500 க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
தமிழர்களின் பாரம்பரிய வேலைப்பாட்டை எம் கைவண்ணத்தில் பார்த்து மகிழுங்கள்
OPEN ALL 7 DAYS 10.00 AM - 7.00 PM
377A Rayners Lane, Pinner, HA5 5EN Tel: 020 8429 7221

**Indian Funeral Directors**
Now, we Operate from our modern and fully equipped premises at Mollison Way in Edgware
- Large prayer room(Mandir) for performing funeral rites or for paying the last respect.
- All religious rites and wishes respected and administered.
- Modern, fully equipped washing and dressing facilities.
- Priest arranged for final rites.
- Funeral ceremony items provided.
- Repatriation arranged at short notice.
- Horse drawn carriages arranged.

020 8952 5252 | 24 hours mobile: 0777 030 6644
INDIAN FUNERAL DIRECTORS
www.indianfuneraldirectors.co.uk
e mail: info@indianfuneraldirectors.co.uk
44 South Parade, Mollisonway, Edgware, Middlesex HA8 5QL

0870 042 0606
AIRPORT >

BAtransfer.com
British Airport Transfer
Securely book taxi from & to all major UK airports

**FREE Courses @ TR TEC**
Jan2009 முதல் Alperton, Gants Hill & Tooting மூன்று கிளைகளிலும் இலவச
ESOL English, Computers & Computing, Basic Accounting —Classes
AAT Courses-Foundation, Intermediate & Technicians Levels
And 11+ Exam, SATS-KS2, Maths, Accounts Classes
மேலதிக விபரங்களுக்கு
020 8554 2963
020 8672 4005 | 020 8903 8121
e-mail: admin@trtec.org
aat
TR TEC பயிற்சித்துறையில் 18 ஆண்டுகள் அனுபவமிக்க தமிழ் நிறுவனம்

**RAJ LAW SOLICITORS**
உங்களுக்கு என்ன இடர் வந்தாலும் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்
This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.
- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal
- Serious Crime, Murder/Attempted Murder

We speak Tamil, French and Creole
Experts in Criminal Defence Service (UK)
M: 07947 641 876
T: 020 8516 7730/020 3133 0000
Trident Business Centre, 89, Bickersteth Road, Tooting Broadway, London SW17 9SH
24 hour police station emergency service

இலண்டனில் முதல்முறையாக பல இலவச வாகனத்தரிப்பிட வசதிகளுடன் உதயமாகியுள்ளது

# JAFFNA MARKET



"ஒருமுறை வந்து பாருங்கள்"

"பலமுறை வரத்தூண்டும் Customer friendly services"

உங்கள் தேவையறிந்து சேவையாற்றக் காத்திருக்கின்றனர்

**Jaffna Market நிறுவனத்தார்**

- சகல விதமான இலங்கை இந்திய பொருட்கள்
- கடல் உணவு வகைகள்
- பழங்கள் மரக்கறிவகைகள்
- Frozen Foods அனைத்தும்

இதுவரை கண்டிராத வகையில் மலிவு விலையில்

தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள உடனே நாடுங்கள்

## JAFFNA MARKET

280 - 282 NORTH HOLT ROAD

SOUTH HARROW, HA2 8EB

# பூராயம்




## முத்துக்குமாரினின் ஈகம்

தியாகி முத்துக்குமரன் அவர்கள் தனது உயிரை உணர்ச்சி வசப்பட்டு முட்டாள்தனமாக மாய்த்துக்கொள்ள வில்லை. இது ஒரு ஆற்றாமையின் வெளிப்பாடு அல்ல. மாறாக தனது ஈகத்தின் மூலம் உறங்கிக் கிடக்கும் மற்றவர்களின் மனச்சாட்சியை தட்டி யெழுப்பியிருக்கிறார். அவரது தியாகம் அளப்பரியது.

*- பாமினி*

## இப்போதுமா?

ஈழத் தமிழர்களின் அவலம் கண்டு இங்குள்ள நாமெல்லாம் கொதித்துப் போயிருக்க இப்போதும் ஒரு சில ஈனத் தமிழர்கள் களியாட்டங்களிலும் கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டிருப்பது வேதனையைத் தருகிறது.

ரோம் நகரம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த போது பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோ மன்னனைப் போல் வாழாமல் எம் மக்களினைக் காப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டியது தமிழுணர்வுள்ள ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.

*- சுதன்*

## அருமையான களம்

புலம்பெயர் வாழ்வில் முதியவர்களின் நிலை என்ற தலைப்பில் வாசகர்களுக்கான பக்கம் ஒன்றை ஒதுக்கியிருப்பதில் மிக்க மகிழ்ச்சி.

களம் ஒன்றைத் தேடிக் கொண்டிருந்த என் போன்ற இளம் எழுத்தாளர்களுக்கு இந்தப் பக்கம் நல்லதொரு சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறது.

இந்த வாசகர் கருத்துக்களம் பகுதியிலே புலத்திலே இளையவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

*- சாந்தினி*

## தொப்புள் கொடி உறவு

முத்துக்குமரன்கள் வேண்டாம் என்ற சயந்தனின் கருத்துக்களுடன் என்னால் உடன்பட முடியாதுள்ளது.

தமிழகத்திற்கும் - தமிழீழத்திற்கும் இடையிலான உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. திமுக தேர்தல்களில் வென்றபோது, வெடிசுட்டு மகிழ்ந்து, அண்ணா, எம்ஜிஆர் போன்ற தலைவர்கள் இறந்த போது அழுது, தமிழக மக்களை தங்கள் உறவுகளாக மதித்தவர்கள் தான் ஈழத்தமிழர்கள்.

இந்த உறவின் ஆழத்தை சயந்தன் உணர்ந்து கொள்ளவில்லை.

*- மனோகரன்*

## கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிய வேண்டாம்

தமிழக எழுச்சி பற்றிய சில உண்மைகள் என்ற தலைப்பில் அநபாயன் எழுதியிருந்த புலம்பலை வாசித்தேன்.

தமிழக மக்களின் நுகர்வுக் கலாச்சார சுயநலம் பற்றியும் தமிழீழப் போராட்டம் குறித்த அறியாமை பற்றியும் அங்கலாய்க்கும் அநபாயனிடம் சில கேள்விகள்

ஐயா புலத்தில் வாழும் தமிழ் மக்களிடம் குறிப்பாக எமது அடுத்த சந்ததியினரிடம் ஈழம் குறித்து அறிவு எந்த அளவில் இருக்கிறது?

முத்துக்குமாரன் என்ற தியாகிக்கு இருக்கும் ஈழம் குறித்த அறிவில் எத்தனை வீதம் புலத் தமிழருக்கு இருக்கிறது?

தமிழகத்தின் உயர்சாதி மாணவர்கள் போராட்டத்தில் குதிக்கவில்லை என்று குறைப்படும் உங்களுக்கு, புலத்து மாணவர்களிலே எத்தனை வீதமானவர்கள் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள் என்ற புள்ளி விபரம் தெரியுமா?

தமிழக மக்களின் நுகர்வுக் கலாச்சாரம் தவறானது என்றால் தமிழனை அழிக்கும் சிறிலங்கா அரசின் பொருட்களை வாங்கி நுகரும் புலத் தமிழன் நிலைப்பாடு சரியானதா?

தமிழரின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்படுவது கண்டு கொதித்துப் போய் தம் உயிர்களையே துறக்கத் துணிந்த அவர்களது உணர்வில் பாதியாவது புலத்தவர்களிடம் இருக்கிறதா?

கடைசியாக ஒரேயொரு வார்த்தை, அடுத்தவனை நோக்கி நாம் கை நீட்டும் ஒவ்வொரு பொழுதிலும் எம்மை நோக்கி விரல்கள் இருக்கின்றன என்பதை மனதில் இருத்திக் கொள்ளுங்கள்.

*- முத்துராமன்*

## பொங்கடா தமிழா!

கடந்த ஒரு பேப்பரில் வெளியான அலசு வாரத்தில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் வெறும் உணர்ச்சியின்பால் எழுதப்பட்டவையாக இல்லாமல் உண்மையான விடயங்களாக இருந்தன.

அவர் குறிப்பிட்ட மாவோவின் கூற்றான 'எதிரி தூங்கும்போது தாக்கு எதிரி விழித்திருக்கும் போது ஒளித்துக்கொள் என்பது இன்றய நிலையை விளக்குவதாக அமைந்திருக்கிறது.

*- குமணன்*

## நம்பிக்கை தரும் சேயோன்

நீதி ஒரு நாள் எம்மை நிறுத்தும் எனற சேயோனின் கட்டுரை தளர்ந்து போயிருக்கும் புலத் தமிழர்களுக்கு நம்பிக்கை தருவதாக அமைந்திருந்தது.

அத்துடன் புலம் பெயர் வாழ் தமிழர்கள் செய்ய வேண்டிய அவசிய பணி பற்றியும் விளக்கமாக எழுதியிருந்தார்.

இது போன்ற கட்டுரைகள் இன்றைய காலத்தின் அவசியத் தேவை.

*- சங்கீதா*

## அறுத்ததுக்கு நன்றி

பிள்ளையள். எனக்கெண்டால் சரியான சந்தோசம். நாங்கள் பல நாள் போட்ட கூச்சலுக்கு ஒரு மாதிரிக் காது குடுத்திட்டியள்.

அது தான் செல்லங்கள். உந்தக் கோதாரி விழுந்த அறுவைப் பக்கத்தை அறுத்து எடுத்திட்டியள். அதுக்குக் கட்டாயம் உங்களுக்கு நன்றி சொல்லித் தான் ஆக வேணும்.

இஞ்சை நாங்கள் அறுக்கிற அறுவை காணாதெண்டு பேப்பரிலையும் ஒரு பக்கம் வேணுமே.

சரி சரி அந்தப் பக்கத்தை நல்ல பிரயோசனமான விசயத்துக்குப் பாவியுங்கோ

*- கனகு*

## தமிழ் ஊடகங்களா? தரகு ஊடகங்களா?

தமிழருடைய சந்தாப் பணத்தில் இயங்குகின்ற சில ஊடகங்கள் சிங்கள அரசின் பிரச்சார பீரங்கிகள் போலச் செயற்படுகின்றன. அதிலும் குறிப்பாக இங்கிலாந்தில் இருந்து ஒளிபரப்பாகும் ஒரு தொலைக் காட்சியின் செய்தியறிக்கையில் சிங்கள இராணுவப் பேச்சாளரின் செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. இவர்கள் பேசாமல் பஹன என்ற சிங்களப் பெயரிலேயே தங்கள் ஒளிபரப்பை நடத்தலாமே.

*- சசி*

ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கான இலக்கம் 020 7043 4314.

*ஆ—ர்*

வாசகர் கடிதம்

## நாடகத்தில் மாற்றம் தேவை

'மரணத்துள் வாழ்வு' நாடக விமர்சனத்துக்காக ஒரு பேப்பர் பக்கம் பக்கமாக இடம் ஒதுக்குவது ஒரு துர்திர்ஸ்டம் என்றே நான் கருதுகின்றேன். குறிப்பாக அரவிந்தன் எழுதிய நீண்ட கடிதத்தை மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கியிருக்கலாம். உண்மையில் முன்னைய இதழில் இரவி அவர்கள் எழுதிய விமர்சனம் பொதுவான நாடக இரசிகர்களின் எண்ணத்தை பிரதிபலிக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன் அதற்காக ஒரு பேப்பரைத் தாழ்த்தி எழுதுவதை அரவிந்தன் தவிர்த்திருக்கலாம். அத்துடன் இரவி அவர்களை தரந்தாழ்த்தி எழுதுவதையும் தவிர்த்திருக்கலாம். அதே வேளையில் சுகி அவர்கள் எழுதிய நாடக விமர்சனத்தை வரவேற்கின்றேன்.

எனினும், 'மரணத்துள் வாழ்வு' நாடகத்தை மீண்டும் மேடையேற்றுவதானால் திரு. பாலேந்திரா அவர்கள் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். முக்கியமாக இந்த நாடகத்தின் கதை மற்றய தமிழ் நாடகங்களைப் போன்று தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாகக் காணவில்லை. குறிப்பாக டொக்ரர் இராஜரத்தினம், இராஜரத்ன வாக அல்லது சிங்கள இராணுவ சிப்பாயாக அல்லது சிங்கள இராணுவ அதிகாரியாக இருந்திருந்தால் நிச்சயம் தமிழ்மக்களின் உணர்வுகளைத் தொட்டிருக்கும். என்றே நான் கருதுகின்றேன். அத்துடன் ஒரு தமிழ் வைத்தியர் இப்படியான இழிவான வேலையை செய்திருப்பார் என்று தமிழ் வைத்திய சமுதாயம், ஏன் தமிழ்ச் சமுதாயமே ஏற்கமாட்டாது.

*- த.செல்வரத்தினம்*

## இன்றைய தேவை

சிறிலங்கா அரசுதான் எமக்கு தெட்டத் தெளிவான எதிரி. ஆனால், நண்பனாக நடித்துக் கொண்டிருக்கும் துரோகிகளால்தான் இன்னும் இன்னும் எமது இனத்தின் அவலங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இந்த வரிசையில் மேற்குலகும் அமெரிக்காவும் மத்திய கிழக்கின் ஒருசில நாடுகளும் தென்கிழக்காசியாவில் சில நாடுகளும் எமக்காக வருத்தப்படுவதும் பின்னர் சிறிலங்கா அரசுக்கு போருக்கான உற்சாகம் அளிப்பதுமாக இரட்டைவேடம் போடுகின்ற நாடகத்தையே தொடர்கின்றன.

இந்த நாடுகளின் வரிசையில் இந்தியா, மேலும் பல படிகள் மேலே சென்று, எமது தாயகத்தில் முன்னின்று போரை நடத்துகின்ற துரோகத்தனத்தை மிக தந்திரோபாயமாக நடத்திக் கொண்டிருக்கின்றது. புலனாய்வு உதவிகள் கடற் கண்காணிப்பு உதவிகள் மற்றும் இராணுவ - தளபாட அனைத்து உதவிகளையும் வழங்கி புலிகளுக்கெதிரான போரையும் தமிழினத் துடைத்தழிப்புப் போரையும் நடாத்திக் கொண்டிருக்கின்றது. அனைத்துலகுக்கு தனது பொய் முகத்தை மிகச் சாதுரியமாக மறைத்த வண்ணம் சிறிலங்காவுக்கான இராஜதந்திர ரீதியான ஆலோசனைகளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

புலம்பெயர் நாடுகளில் பல்வேறு வடிவங்களில் சிறிலங்காவின் இன அழிப்புப் போரை தத்தம் வதிவிட நாடுகளின் கவனத்திற் கொண்டு வருதற்காக கவன ஈர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நேரத்தில் தமிழ் இனத்தைப் பூண்டோடு அழித்து விடும் நோக்கத்தோடு சிறீலங்கா அரசுக்கு சகல ஒத்துழைப்பையும் வழங்கிக் கொண்டிருக்கும் இந்தியாவின் தொடர் துரோகத்தனத்தை சர்வதேச அரங்கில் தோலுரித்துக் காட்ட மிகக் கூர்மையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறி விட்டோம்.

இணைத் தலைமை நாடுகள் அவ்வப்போது நல்லது செய்வது போலக் காட்டிக் கொள்வதும் பொறுத்த நேரங்களில் நட்டாற்றில் எம்மைக் கைகழுவி விடுவதும்கூட எமது மக்களால் அவதானிக்கப்பட்டாயிற்று. எனினும் இந்த நாடுகளின் அரவணைப்பு நிச்சயமாக உரிய நேரத்தில் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எமது மக்களிடம் உண்டு.

ஆனால், இந்தியா எமது இனத்திற்கெதிராக கட்டவிழ்த்துவிட்டிருக்கும் துரோகமானது மிகவும் வேதனையான செயலாகும். எனவே இன்றைய முக்கியதேவை சகல புலம் பெயர் நாடுகளிலும் வாழும் எம் உறவுகள் ஆங்காங்கு உள்ள இந்தியத் தூதுவர் ஆலயங்களை முற்றுகையிட்டு தொடர் போராட்டம் நடாத்துவதாகும். இத்தகைய நடவடிக்கைகள் இந்திய நற்பெயரை வெளியுலகத்தில் சீரழிக்கும் தன்மை கொண்டதால், இந்திய வல்லாதிக்கம் தனது போக்கை மாற்றிக்கொள்ளத் தூண்டுவதாக இருக்கலாம். எனவே இத்தகைய நடவடிக்கைகளில் மிக அவசரமாக இறங்குவது இன்றியமையாத தேவையாகும்.

*- ஹோமராஜ்*



Natural Herbal Medicine

GURUJI

S.L SAHADEVA RAJA (KANNAN)

ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியசாலை நாடி பார்த்து உங்கள் சகலவிதமான நோய்களையும் இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்து வைக்கப்படும்.

நாடி பிடித்துப்பார்த்தல் இலவசம்

இந்தியாவில் 8 தலைமுறையாக வைத்தியம் செய்தவர்கள் இப்போது லண்டனில் ! சந்தர்ப்பத்தை தவற விடாதீர் !!

ஆஸ்த்மா, தோல்வியாதி, புற்றுநோய், நீரிழிவு, இரத்த அலர்ஜி, மாதவிடாய்ப் பிரச்சினை, குடற்புண், மூலநோய், முடி உதிர்தல், மூட்டு நோ, தலைவலி, பக்கவாதம், நரம்பியல், ஞாபகமறதி, தும்மல், அலர்ஜி, எக்சிமா, பயம் மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும் இயற்கை மூலிகை வைத்தியப்படி பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியும் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்

Come and meet the Group Leader tribal Adivasi Herbal Medical practitioner and get relief from all kinds of diseases, illness diagnoised only by pulse reading, Giving wonderful natural herbal treatment, Also Herbal Treatment for mor than 360 kinds diseases with out any side effects Asthma, Allergy, Diabetes, Arthritis (Join Pain), Fear, Memory Loss, Menstrual Problem, Ulces, Dermatitis, All Type Piles, Kidney Stone, Cancer, Paralysis, Neuropathy, Nerous Weakness, Hair Fall, Ezema, Blood Allergy, Headaches.

Evershine Dry Cleaner (Upstairs) 123 Mitcham Road, Tooting, London, SW17 9PE Near By Tesco

MOB: 07918 995 631 & 07529 400 523

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, FEBRUARY 13, 2009, ISSUE 111

## இனவழிப்பு யுத்தம், தவிர வேறொன்றுமில்லை!

சர்வாதிகாரி கிட்லர் காலத்திலிருந்தது போன்று, தடுப்பு முகாம்களை நிறுவி, அங்கு தமிழ் மக்களை அடைத்து வைப்பதற்கான முயற்சிகளில் சிறிலங்கா. அரசாங்கம் இறங்கியுள்ளது. இதற்காக பல தற்காலிக கொட்டகைகளுடனான பாரிய முகாம்களை அமைத்து வருவதாகவும், அங்கு மக்களை, இராணுவ கட்டுப்பாட்டுடன் வருடக் கணக்கில் சிறை வைக்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும், சர்வதேச ஊடகநிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஏற்கனவே இவ்வாறான முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும், மக்களின் அவல வாழ்வினை பார்க்கும்போது, இங்கு வதை பட்ப் போகும் மக்களையிட்டான கவலை அதிகரிக்கிறது.

'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற போர்வையில், சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் ஒரு முழுமையான இனவழிப்பினை நோக்கியதாகவுள்ளது. இது சிறிலங்கா பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்ட கடந்த 61 ஆண்டுகளில் நன்கு திட்டமிடப்பட்டு, தொடர்ச்சியான முறையில் நடாத்தப்பட்டு வருகிறது. கடந்த முப்பது ஆண்டுகளாக, முழுவீச்சுடன் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், அண்மைக் காலமாக, பயங்கரவாதத்திற்கு எதிரான போராக உருமறைப்புச் செய்யப்பட்டு சர்வதேச உதவியுடன் தொடரப்படுகிறது.

அண்மையில் பி.பி.சி வானொலி, தமிழ் கல்வியாளர் ஒருவரை பேட்டி கண்ட போது, அவர் இனவழிப்பு யுத்தத்தின் பரிமாணங்களை சிறிலங்காவில் நடைபெறும் இனவழிப்பு நடவடிக்கையுடன் தொடர்புபடுத்தி விளக்கினார். ஆனால் தமிழர்கள் மீதான தாக்குதல்களை ஒரு இனவழிப்பு நடவடிக்கையாக பேட்டி கண்டவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். அதுபோன்று சீ.என்.என் தொலைக்காட்சி, பிரபல பாடகி மாயா அருட்பிரகாசத்தின் பேட்டியை ஒளிபரப்புச் செய்தபோது, மாயா இனவழிப்புப் பற்றி குறிப்பிட்டவற்றை நீக்கிய பின் ஒளிபரப்பியது.

இவற்றை வைத்துப் பார்க்கும் போது, தமிழின அழிப்பு என்பது சந்தடியில்லாமல் நடைபெறுவதையே இந்நாடுகள் விரும்புவதாகவே தெரிகிறது. நாடுகளற்ற தேசிய இனங்கள் விடயத்தில், மேற்கத்தைய நாடுகள் அதிகம் சிரத்தையெடுப்பதில்லை என்பதால், இங்கு நடைபெறும் இனவழிப்பின் மூலக் காரணிகள் பற்றி அவை அக்கறைப்படுவதில்லை. இந்நிலை சிறிலங்காவிற்கு சாதகமாக அமைந்துள்ளது.

இங்கு பாதிக்கப்படுவது தமிழர்கள் என்பதனால், அதனை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு எட்டுக் கோடி உலகத் தமிழர்களிடமே உள்ளது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*இப்போது எங்கள் சந்திப்பு துக்கம் தோய்ந்த நாட்களாக இருக்கின்றது. வழமையாக **ஒரு பேப்பர்** ரில் எழுதும் பத்தி எழுத்தாளர்களே எழுதுவதில் விருப்பம் காட்டுகிறார்கள் இல்லை. துன்பக் கேணியிலிருக்கிறது ஈழம், இருந்தாலும் காலத்தின் கண்ணாடியாக உங்களது உள்ளக் கிடக்கைகளை வெளிக் கொணர முயற்சிக்கிறோம். இதுக்கு மேலை தத்துவம் பேசாமல் விசயத்துக்கு வருவம்.*

*போன பேப்பரை கனடாவில் தேடி அலைந்திருந்தால் மன்னியுங்கோ. தவிர்க்க முடியாத காரணங்களால் அங்கு வெளியிடப்படவில்லை. ஆனால் இந்தப் பேப்பர் நேரகாலத்துக்கு உங்கட கையிலை கிடைக்கும்.*

*லண்டனிலை நடந்த 'மரணத்துள் வாழ்வு' நாடகம் தொடர்பாக பல விமர்சனங்கள், ஏட்டிக்குப் போட்டியாக வந்துள்ளன. அவை எல்லாவற்றையும் பிரசுரிக்காவிட்டாலும், வஞ்சகமில்லாமல் இரண்டுபக்க விசயங்களையும் பிரசுரித்துள்ளோம்.*

*'முத்துக்குமரன்கள் வேண்டாம்' என்ற தலைப்பிலை ஒரு கட்டுரையை பிரசுரித்திருந்தம். அது எங்கட ஆசிரியர் குழுவிலை சுவிஸ் நாட்டிற்கான பிரதிநிதியாய் இருக்கிற சயந்தன் எழுதியது. அது சயந்தனின் கருத்து. அதனை வைத்துக் கொண்டு **ஒரு பேப்பர்** முத்துக்குமரனை அவமதித்துத்து விட்டது என்பது சரியில்லை. தன் இனத்தின் ஈன நிலைகண்டு, தன் மரணத்தின் மூலமாக மக்கள் எழுச்சியை ஏற்படுத்த வேண்டும் என தன்னுயிரை நீத்த தியாக உள்ளத்தை நாங்கள் சிறுமைப்படுத்தவில்லை. அவர் தொடர்பாக வேறு பல ஆக்கங்களும் பிரசுரித்திருந்தோம், பார்த்திருப்பீர்கள்தானே.*

*பேப்பரை ஒழுங்கா கடைகளிலை வைக்கிறதில்லையோ, போனால் அங்கை கிடைக்குதில்லை என்று நெடுக நீங்கள் முறைப்பாடு செய்யிறது வழக்கம். கடந்த வாரம், இடியப்பம் ஒடர் பண்ணியபோதுதான் சங்கதி தெரிந்தது. இடியப்பம் கொண்டு வந்தவர். பெட்டியை **ஒரு பேப்பர்** ரால் மூடிக் கொண்டு வந்து தந்தார். இடியப்பம் வாங்கினால் **ஒரு பேப்பர்** இலவசம் என்ற கொள்கையை வைத்திருகிறாரோ தெரியவில்லை. எனவே **ஒரு பேப்பர்** கடைகளிலை கிடைக்கேல்லையோ, இடியப்பம் ஓடர் பண்ணிப் பாருங்கோ. நாங்கள் நித்திரை முழிச்சு செய்யிற பேப்பர் ஆர் ஆரோ கைகளிலை எப்பிடிப் போகுது. நல்ல வேளை ஊரிலை ஒரு ஓசிப் பேப்பரை அடிக்கேல்லை.*

*தனிநபர் தாக்குதலை தவிருங்கோ எண்டு சொல்லுறியள், இன்னும் சில பேர் அங்கை பார் அவர் அப்பிடிச் செய்யிறார், இவர் இப்பிடிச் செய்யிறார் இதுகளைப் பற்றி எழுதினால்தானே சுணைக் கெட்ட சனம் கொஞ்சமெண்டாலும் திருந்தும் என்று சொல்கிறார்கள். இதுகளிலை இருக்கிற நல்லது கெட்டதுகளை மல்லாந்து படுத்துக் கொண்டு யோசிக்கிறம். இதுக்கு விரைவிலை ஒரு முடிவெடுக்கிறம்.*

*நாங்கள் செய்த புண்ணியம் கோத்தபாய இஞ்சால் பக்கம் வாலாட்டேலாமல் இருக்கிறது. இல்லை எண்டால் இத்தனைக்கும் ஒரு பேப்பர் காரன்கள் காரிகள் எல்லாரும் வெள்ளை வானிலை ஏறியிருப்பம்.*

*மீண்டும் சந்திப்போம்*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

# It's not over yet!

US President Barack Obama sent his 'warmest greetings and wishes' to Sri Lankan President Mahinda Rajapakse on the occasion of Sri Lanka's Independence Day', the 4th of February. The choice of words is more than just protocol and very significant. President Barack Obama saying people of Sri Lanka (Tamils inclusive) 'to find a friend and partner in him' means that the United States is going to be actively involved in the liberations of the crisis.

The choice is simply limited. Either they have to separate the two ethnicities deeply divided by a protracted war by accepting a two nation state in the island, or allow the Sinhala nations attempt of genocide and total annihilation of Tamil identity, facing consequences of protracted turmoil coupled with global Tamil backfire. Such is the kind of language of the world authorities.

## Tamil Nationalism

Both Colombo and New Delhi are now coming out with statements of satisfaction and jubilance over their achievements in 'ending the conflicts of decades', through **cordial collaboration and understanding**. They are the north-south axis for brutally setting a cruel global order in the region of South Asia and 'strategic partners' are invited from within the region as well as from outside.

The national liberation struggle of Eelam Tamils, arose from irrefutable realities of incorrigible ethnic oppression and was denied of any space other than an **armed struggle**. It became labeled and sabotaged by the above forces as it was seen as the only 'fighting sprit' and a stumbling block for their greed. This happened despite favorable disposition of those who were spearheading the struggle towards every power of regional or global imperialism.

In the process of abetting a war against Tamil nationalism in the island, the involved parties have only contributed to the deterioration of democratic institutions, militarization and rise of totalitarianism in the island.

For the first time in the history of modern South Asia, it has so happened that **all the authoritarian forces of the world have joined hands in allowing and abetting the military subjugation of a people by their adversaries, without international safeguards and monitoring.**

The tendency in a section of the above group to dodge poltical and social responsibilities, citing the LTTE and for that sake, abetting reactionaries, is not a positive approach. When nobody was there to address the crux of the matter the LTTE did it, **facing the entire world, armed with only its local genius.** Since the solution imposed by the Indo-international system is 'a no solution' at all, for the Eelam Tamils, **the LTTE will continue the struggle in its own way.**

The genuine efforts of those who may not agree with the LTTE in the struggle against the oppression of Eelam Tamils need not interfere with each other and can be complimentary, if the aims are beneficial to the oppressed and not in any way to the oppressors.

The major impediment for a political solution to the crisis in Sri Lanka is the ambiguity on the model for political solution. All peace talks and attempts miserably failed in the last quarter of a century, in successively conceiving and implementing **a political solution other than secession**. In their frustration they have now resorted to brutal military solution of genocide and **military subjugation of Tamils**, citing the LTTE as an excuse.

## 'Self- Immolation' and Suicide Bombing.

LTTE is treated as a terrorist organization by all the Western countries and other opportunist countries like India, only because suicide bombing is one of their tactics.

"The, so said suicide terrorist campaigns are directed toward a strategic objective, like trying to establish or maintain political self determination by compelling a democratic power to withdraw from the territories or homelands they claim", says Robert A.Pape, in his book titled Dying to Win.

"Provocative….. Pape wants to change the way you think about suicide bombings and explain why they are on the rise", - Henry Schuster,CNN.com. **Always the democratized countries or invading powers are at the receiving end.**

The Liberation Tigers of Tamil Eelam, popularly known as 'Tamil Tigers' or LTTE, took up arms, to compel the Sri Lankan government basically to accept the homeland of Tamils.

The Japanese Kamikazes in World War 11 are not normally considered terrorists because their actions were directed and authorized by a recognized national government.

So are the Black Tigers who fight for their nation under certain death circumstances or in response to a sudden threat, scarify themselves to save others. Indeed, such sacrifice is **part of our definition of military heroism**. The Tamil community always accepts.

Recently there have been more than 5 self- immolations and many hunger-strikes either individually or in groups mainly, as demonstrative acts intended to evoke political sympathy and awareness.

The imperialistic powers shed their habits of massacres, carpet- bombing, and slavery and started saying 'that is old order' or more nicely 'now it is new order'. The non-implementation of the UN charter of the right of self-determination seems to be the one of the root causes of the terrorism found widespread today. To comment on terrorism, however there does not seem to be any unbiased definition so far. **It is heavily weighted towards the oppressed and favors the aggressor**. So much so, (Sir) Peter Ustinov has aptly described **"Terrorism is the war of the poor, and war is the terrorism of the rich."**

Rebels like Hezbollah, Hamas, PKK, and LTTE have to wait for the ultra new order, then, the world would Rebels like Hezbollah, Hamas, PKK, and LTTT have to wait for the ultra new order, then, **the world will be a far better place to live.** In Afghanistan, the Moujadeen are giving the USA, NATO and Canada forces a terrible time, hence obviously LTTE has no chance at all. That is the unfortunate part of the whole episode. Only Time will tell.

Those, who use fork and spoon or chop-sticks, say,' disgusting', when they see others using fingers. See what they do when they eat Connel Sander's Kentucky or even MacDonald's.

# செஞ்சிலுவையை வெளியேற்ற முஸ்தீபு?

உதயன்

## ஆசிரியர் தலையங்கம்

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற கோஷம் தென்னிலங்கையில் மிகப் பலமாக பொங்கி எழுந்துள்ளது. அந்தக் கோஷத்துக்கு மேலும் ஆதரவு தேடுவதற்காகவும் பிரசித்தப் படுத்துவதற்காகவும் கொழும்பில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. அந்தப் பேரணியை நடத்திய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தனது கோரிக்கைக்கு முன்வைத்த காரணம் செஞ்சிலுவைக் குழு புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது என்பதாகும்.

இதற்குமுன்னர், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் செஞ்சிலுவைக் குழுவை நாட்டை விட்டுத் துரத்தவேண்டும் என்று வலியுறுத்திச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அவரும் செஞ்சிலுவைக் குழுவினர் புலிகளுக்கு ஆதரவாகவும் படையினருக்கு எதிராகவும் செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டையே தூக்கிப் பிடித்தார்.

மொத்தத்தில் இனவாதத்தில் திளைத்து, யுத்த வெறியில் நின்று சன்னதம் ஆடும் தென்னிலங்கைத் தரப்புகள் எல்லாமே, இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளில் பணியாற்றும் பிரதிநிதிகள், அதிகாரிகள் தமக்குச் சார்பாகவே செயற்படவேண்டும் என்று விரும்புகிறார்கள். இல்லையெனில் அவர்களுக்கு சந்தேக (புலி) முத்திரை குத்துகிறார்கள்.

அதாவது, தமிழர்களின் பிறப்புரிமைகளை வழங்காது, அவர்கள் இரண்டாம் தரப்பிரசைகளாக தாம் போடும் அரசியல் மற்றும் நிர்வாகப் பிச்சைகளை ஏந்தி வாழ வேண்டும் என்ற தமது கோட்பாடுகளையும் கொள்கைகளை யும் ஏற்றுக் கொண்டு பிறநாட்டவரும் அதற்குத் தாளம் போட வேண்டும் என்றேஎதிர்பார்க்கின்றார்கள்.

இத்தகையோரின் வாக்குப் பலத்தினைக் கொண்டு ஆட்சிக் கட்டில் ஏறிய மஹிந்தரின் அரசும், அந்த நச்சு வழியிலேயே 'வீறுநடை' போடுகிறது. தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, தாம் பெரும்பான்மை என்ற ஒரே காரணத்துக் காக சிங்களத்துவம் மேலாதிக்கம் செய்ய வேண் டும் என்ற இலக்குடன் ஆட்சி நடத்துவதால், அரசும் இந்த நாட்டில் வந்து பணிபுரியும் வெளிநாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லோருமே, தமது உண்மை, நீதி என்ற இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு தமக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கிற விரும்புகிறது.

அந்த விருப்பத்தின் ஒரு துளிதான், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித்த கோஹண கூறியுள்ள (அல்லது கோரியுள்ள) கருத்து. புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது இராணுவம் தாக்குதல் நடத்தியதாகத் தகவல் வெளியிட்டதற்காக, ஐ.நா.சபையின் கொழும்புச் செயலகம் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளார் கோஹண!

வன்னியில் நடைபெறும் உண்மைகள் அரசின் அட்டூழியங்கள் வெளியே வந்துவிடக் கூடாது என்பதற்காகவே வன்னிப் பிரதேசத்தில் பணிபுரிந்த வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள்யாவும் பல மாதங்களுக்கு முன்னரே 'பாதுகாப்பு' என்ற பூண் போடப்பட்டு வெளியேற்றப்பட்டன என்பது எல்லோருக்கும் தெரிந்ததும் புரிந்ததுமாகும்.

அந்தவகையில், போரின் மத்தியிலும் அங்கு மனிதா பிமானப் பணிகளைச் செய்வதற்கென அனுமதிக்கப் பட்டிருப்பவை ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டமும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் மட்டுமே.

அவை தாமாக வெளியேறிவிடக்கூடாது, தமது அளப் பரிய பணிகளில் இருந்து பின்வாங்கி விடக்கூடாது என்பதே வன்னியில் போர் அக்கிரமத்துக்குள் சிக்குண்டிருக்கும் ஒவ்வொரு தமிழ்ப் பிரஜையினதும் ஆராத வேண்டுதலாக இருக்கின்றது.

வெளிநாட்டவர்கள் அல்லது வெளிநாடுகள் உண்மை யைக் கூறித் தமது நோக்கத்துக்கு ஊறுவிளை வித்துவிடக்கூடா? சர்வதேச மட்டத்தில் தமது பொட்டுக்கேடு அம்பலமாகி விடக்கூடாது என்ற ஒரே நோக்கத்துடன்,அளப்பரிய மனிதாபிமானப் பணியை காயமுற்றவர் களைக் காப்பாற்றும் பணியை ஆற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவை வன்னியிலிருந்து வெளியேற்றி விட்டு, காயமுற்றுச் சிகிச்சை வசதி கிடைக்காமல் மரணிக்கும் அப்பாவி மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க 'அ' கரம் எழுதுகிறதா அரசு?

போர்முனையில் காயமுற்றவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துடன் தோற்றுவிக்கப்பட்ட செஞ்சிலுவைச் சங்கம், இப்போது போரில் காயப் படும் அப்பாவி மக்களின் உயிரைக் காப்பாற்றும் உன்னத மனிதாபிமானப் பணியை உலகளாவிய ரீதியில் ஆற்றி வருகிறது. மனித உயிர்கள் எந்த நாட்டவர், இனத்தவர், மதத்தினர் என்ற வேறுபாடு இன்றி காப்பாற்றப் பட வேண்டும் என்ற மகோன்னத மனிதாபிமானமே செஞ் சிலுவைச் சங்கத்தின் அடிவேர். குடிமக்கள் ஆழ்ந்த வன்முறைக்கு அதிக அளவில் இலக்காகி வரும் இக்காலத்தில், செஞ்சிலுவைச் சர்வதே சக்குழு தனது கவனத்தை அவர்கள் மீதே குவித்துள்ளது. பகைமைகளின் நேரடி விளைவுகளிலிருந்தும், போர்களிலிருந்தும் அவர்களுக்கு எதிராகப் புரியப்படும் வன்முறைச் செயற்பாடுகளில் இருந்தும் மக்களைப் பாதுகாப்பதே செஞ்சிலுவைக் குழுவின் பிரதான பணி என் பதனை அவதானிக்க முடிகிறது.

அத்தகைய ஓர் இயக்கத்தை, வன்னிப் போர்ப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான கோஷங்களும்,கோரிக்கைகளும், முஸ்தீபுகளும் முரண்மிக்கவை யாகும். பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகமே இருண்டு விட்டதாக கருதுவதா? உண்மையைச் சொல்வதற்காக, அந்த உண்மை தங்களை உறுத்துகிறது என்பதற்காக, செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவை போர் பிரதேசமான வன்னியில் இருந்து வெளியேற்றஅடிகோலப்படுவது அபத்தமாகும்.

அந்த அமைப்பை 'பொய்யனாக்கி' கரிபூச முயல்வது, சந்திரனைப் பார்த்து நாய் குரைத்த நிலைக்கு ஆளாக்கினும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இனம் மானம்
உணர்வு
கொண்டு
ஈழத்தமிழர் நாம்
எழுவோம் எனில்
அறம் வெல்லும்

ஒரு பேப்பர்
ORU PAPER

# India's power blunted in Sri Lanka

**Krittivas Mukherjee**
**REUTERS**

After decades of strong-arming tiny neighbour Sri Lanka, India finds itself jostling for influence as the civil war nears an end, its power blunted by the island nation's growing ties with Pakistan and China.

While domestic political sensitivities over the fate of Sri Lanka's Tamils forced India to ease its leverage, rivals China and Pakistan stepped into the breach, offering Colombo military assistance in its war against the Tamil Tigers.

China has sold Jian-7 fighters, anti-aircraft guns and JY-11 3D air surveillance radars to the resurgent Sri Lankan army as it seeks to finish one of Asia's longest-running wars by squeezing the Liberation Tigers of Tamil Eelam fighters in a shrinking patch of jungle in the north.

Pakistan also supplied the army small arms, multi-barrel rocket launchers and trained Sri Lankan air force in precision guided attacks against the LTTE, strategic analysts said.

"There have been several shipments of weapons from Pakistan. What has made a real difference to the outcome of the war is the Sri Lankan air force which has been rigorously trained by Pakistan in precision-guided attacks.," retired Indian army major general Ashok Mehta said.

India, by contrast, has limited its military assistance to the Sri Lankan army to "defensive weapons".

India has been limited by its insistence on protection of Sri lanka's Tamils, who are closely linked to 60 million Tamils in the Indian state of Tamil Nadu, across a narrow strait from Sri Lanka.

"The shine has somewhat gone off from the leverage India has over Sri Lanka, partly because India has allowed it to happen," said Pakiasothy Saravanamuttu of the Colombo-based Centre for Policy Alternative.

China's and Pakistan's help against Tamil Tigers may have been crucial, a former Sri Lankan official said.

"If not for China and Pakistan, we would not have been able to finish off the insurgency," K. Godage, a former deputy head of Sri Lanka's foreign office, told Reuters.

India trained and armed Tamil Tigers in the early 1980s and followed it up a disastrous 1987-1990 peacekeeping foray into Sri Lanka, which has cast a long shadow over the war and made Sri Lanka wary of its giant neighbour.

National Security Adviser M.K. Narayanan asked Sri Lanka to stop seeking arms from China or Pakistan last year, saying India as the regional power would still meet its defence requirements.

Narayanan made an unscheduled visit to Colombo last year to ensure Sri Lanka did not become a cockpit of regional rivalry, as with Afghanistan where Islamabad fears the influence of India.

This week, Indian Foreign Minister Pranab Mukherjee visited Sri Lankan President Mahinda Rajapaksa, and the two discussed safety measures for Tamils trapped in fighting between the army and Tamil Tigers separatists, and post-war reconstruction.

The visit was also to cool tensions with Tamil Nadu politicians in India's ruling coalition who are sympathetic to the Tigers and demand India broker a ceasefire.

WIDER POWER STRUGGLE

The strategic battle in Sri Lanka is seen as part of a wider power struggle in South Asia, involving not only India and Pakistan but also China, which seeks to gain influence in the important economic region. China has made strides developing strategic assets, like the Gwadar port in Pakistan, the Sri Lankan port of Hambantota and assets in Yangon, part of a strategy to protect shipping lanes.

Sri Lanka sits next to shipping lanes that feed 80 percent of China's and 65 percent of India's oil needs.

"There is a convergence of strategic interest in Sri Lanaka among regional powers," said security analyst C. Uday Bhaskar.

But ignoring India may be hard for Sri Lanka. As the war appears to draw to a close, the focus is turning to the state of Sri Lanka's $32 billion economy.

Sri Lanka is suffering from costly short-term foreign debt. The war is expected to cost nearly $2 billion this year.

Indian investments in Sri Lanka have grown. Bharti Airtel Ltd, India's top mobile operator, launched operations in Sri Lanka with a $200 million investment this month. Sri Lanka is also dependent on India for much of its fuel.

"Strategic relationship is also governed by trade, and India has a lot of room to manoeuvre in Sri Lanka," Saravanamuttu said.

ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
**சேயோன் - அ.இரவி**
**அகிலன் - மயூரன்**

கனடா
**தயா - மணி**

பிரான்ஸ்
**சிறி**

ஜேர்மனி
**சபேசன் - சாந்தி**

சுவிஸ்
**சயந்தன்**

பொறுப்பாசிரியர்
**- கோபி -**

மக்கள் தொடர்பு
**பாலா**

விளம்பரம்
**கௌரி - குந்தவி**

அச்சு
**குமார் (ஜெர்மனி)**

வடிவமைப்பு
**jasmine studio**

முகப்பு வடிவமைப்பு
**seven zero graphics**

விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா**

தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**

நிதி – நிர்வாகம்
**முருகானந்தன்**

வழங்கல்
**உதயகுமார்-ராஜு-கரன்**



**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277

தொலைநகல் (Fax)
020 7043 4312

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

**பணிமனை முகவரி**
**Oru Paper**
**45'B' Crusoe Road**
**Mitcham CR4 3L J**
**Surrey**

மின்னஞ்சல்:
**info@orupaper.com**

இணையம்:
**www.orupaper.com**



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# நம்மை நாம் நம்புவோம்

நல்லன நடக்கும். அப்படித் தான் நாம் நம்பினோம். பொல்லாதன எல்லாம் போய்ச் சேரும். அப்படியும் நம்பினோம். எல்லாம் பொய்யாகப் போயிற்றோ. வல்லான் வகுத்ததே சட்டம். அதன் வழி செல்ல நாம் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். விரக்தியில் உழன்று வரும் வார்த்தைகளா இவை. வீணில் நாம் அவநம்பிக்கை கொள்கின்றோமா?

நாள்தோறும் நாம் மக்களை இழக்கின்றோம். நம் நிலங்களை இழக்கின்றோம். பொழுதுகள் யாவும் கருகியே போகிறது. பூப் பூப்பதாய் ஏதும் இல்லை. பூப் பூத்தாலும் பிஞ்சு வைத்தாலும் காய்ப்பதற்கு முன் அவை கன்றி வீழ்கின்றன. எல்லாமே எம்மை விட்டுப் போய் விடுகின்றன. சொல்லாமல் போய் விடுகின்றன.

நித்திரையில்லை. நீண்ட கனவுகள் சாவதும் பிறப்பதுமாய். கனவில் கூட எதுவும் களிப்புக்குரியதாய் இல்லை. மரணத்தின் வாசனையையே கனவுகளும் முகர்கின்றன. நாளும் பொழுதும் மனதை நலிய வைக்கின்றன. இப்படியே வாழ்வு வதைபட்டுப் போகிறது.

ஒப்பாரியுடன் தான் எங்கள் நாட்களை ஓட்டப் போகின்றோமா? செத்தோம், வீழ்ந்தோம், சிதைந்தோம், சீரழிந்தோம் என்றே தான் இக் கணங்களை நாம் கரைக்கப் போகின்றோமா? இவற்றில் இருந்து மீண்டு வர வழியில்லையா? மீண்டும் எழுவோம். என்ற பேச்சுக்கே இடமில்லையா?

இப்படியே நாளும் பொழுதும் என் சிந்தனை நீண்டது. ஏதாவது செய் ஏதாவது செய் என்றே மனம் தூண்டியது. என்ன செய்யலாம் என்றே மனம் ஏங்கியது. எமது தேச அரசியல் தொடர்பாக எனக்கு விதிக்கப்பட்ட பணிகளில் நான் மூழ்குகிறேன். அதற்கு மேலாக பேரணி, கவனயீர்ப்புப் போராட்டங்கள் என்று யாவற்றிலும் கலந்து கொள்கிறேன். அவநம்பிக்கை கொள்வாரை நம்பிக்கை கொள்ள வைக்கிறேன். ஆயினும் ஒப்பாரி வைக்கிறேன். ஓலமிடுகிறேன்.

இப்படியான ஒரு இராப் பொழுதில் தான் நான் GTV தொலைக்காட்சியின் முன் அமர்ந்திருந்தேன். கள நிலவரம் என்றொரு நிகழ்ச்சியைக் கண்ணுற்றேன். ஊடகவியலாளர் நிராஜ் டேவிற் அந்த நிகழ்ச்சியைத் தயாரித்திருந்தார். உண்மையின் தரிசனம் என்ற நிகழ்ச்சியைத் தயாரித்தனூடக நிராஜ் டேவிற் மீது எனக்கு நிரம்பிய அபிமானம். நிராஜ் டேவிற் அவர்களுடன் ஊடகவியலாளர் கனகரவி மற்றும் சண் தவராஜா ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

கள நிலவரம் தொடர்பான கலந்துரையாடலாக அது அமைந்திருந்தது. மூவரும் நடுநிலமை என்ற அர்த்தமற்ற பதத்திலிருந்து விலகி ஒடுக்கபபட்ட மக்கள் நலன் சார்ந்து நிலவரத்தை அலசியிருந்தனர். நடுநிலமை குறித்து மீண்டும் மீண்டும் சொல்வதுண்டு. உண்மைக்கு முன்னால் நடுநிலமை என்று எதுவும் இல்லை. மக்கள் நலன் என்ற ஒன்று மாத்திரமே உள்ளது. ஊடகவியலாளரும் மக்கள் நலன் சார்ந்தே பிரச்சினைகளை அணுக வேண்டும் என்பதே என் உயர்ந்த அபிப்பிராயம். ஆனால் பல ஊடகவியலாளர்கள் தாங்கள் வானத்திலிருந்து குதித்தவர்களாகவும் மக்களிடம் இருந்தும் மேம்பட்ட மேல் சாதி என்றும் கருதிக் கொள்கிறார்கள். இவர்களை ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும்.

மேற்படி கள நிலவரத்தில் கனகரவி ஒரு கருத்துச் சொன்னார். 'ஜெயசிக்குறுக் காலத்தில் சிங்களப் படை ஊடகவியலாளர் சிலரை வவுனியாவில் இருந்து மாங்குளம் வரை அழைத்து வந்ததாகவும் வழிநெடுகலும் ஆங்காங்கே புத்தர் கோயில்கள் அமைக்கப்பட்டதாகவும் சிங்களப் படைகள் உறுதியாக வேரூன்றி நிலை எடுத்திருப்பதைப் பார்க்கையில் விடுதலைப் புலிகளால் சிங்களப் படைகளை ஒரு போதும் வீழ்த்த முடியாது என்று ஊடகவியலாளர்கள் பேசிக் கொண்டதாகவும் தானும் அவ்வாறே கருதியதாகவும் ஆனால் அவ்வாறு நினைத்து மூன்று மாதங்களுக்குள் விடுதலைப் புலிகளின் பேரெழுச்சியில் சிங்களப் படைகள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டும் வன்னியை விட்டு ஓட ஓட விரட்டப்பட்டும் வவுனியா நகரை விட்டே சிங்களப் படை ஓட ஆயத்தமாக இருந்ததாகவும் கூறினார்.

கனகரவியின் இந்த உரையாடலைக் கேட்கின்ற போது மிகுந்த நம்பிக்கை ஒன்று தோன்றியது. அதனையும் கனகரவி மறுக்காமல் நாசுக்காகச் சொன்னார். 'எதனையும் நாங்கள் சரியாக அவதானிப்போம். இனங் காண்போம். வீணான மயக்கங்களும் தேவையில்லை. அதற்காக மனமுடைந்து போகவும் தேவையில்லை' என்றார்.

இத்தகைய ஊடகவியலாளர்கள் தான் நமக்குத் தேவை. மக்கள் நலன்சார்ந்த ஊடகவியலாளர்கள் இவர்கள் தாம். வேறு சில ஊடகவியலாளர்களும் இருக்கிறார்கள். 'நஞ்சினை நெஞ்சில் வைத்து நாவினில் அன்பு வைத்து நல்லவர் போல் நடிப்பார்'

இன்று (11-02-09) தீபம் தொலைக்காட்சியில் மாலை நேரச் செய்தி பார்த்தேன். இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய மனிதப் பேரவலம் வன்னியில் நிகழ்த்தப்படுகின்றது என்றும் பொது மக்களைத் தாம் கொல்லவில்லை என்றும் விடுதலைப் புலிகளின் அறிக்கை ஒன்று இச் செய்தியில் வாசிக்கப்பட்டது. இவ்வறிக்கை வாசிக்கப் பட்ட போது கடந்த ஒன்பதாம் திகதி விசுவமடுவில் மனிதகுண்டு வெடித்ததில் 20 சிங்களப் படையும் 8 தமிழர்களும் கொல்லப்பட்டதாக சிறிலங்கா அரசு வெளியிட்ட காணொளிக் காட்சிகளே பின்னணியாக வந்தன.

இதில் உட்பொதிந்துள்ள சூட்சுமத்தையும் இது விதைத்த நச்சு விதைகளையும் எம்மால் புரிய முடியாததொன்றல்ல. ஆனால் ஊடக சுதந்திரம், ஊடக ஜனநாயகம் என்ற பெயரில் எம் மக்களிடம் காசு வாங்கி எம்மக்களின் விடுதலைப் போராட்டத்தையே காட்டிக் கொடுககும் கயவாளித் தனத்தையே சில ஊடகர்களும் ஊடக நிறுவனங்களும் செய்கின்றன.

நண்பர்களே! இந்த நாட்கள் மிக மிக மிக முக்கியமான நாட்கள். ஊடக சுதந்திரம் என்ற பெயரில் சில ஊடக நிறுவனங்களும் ஊடகர்களும் தமது எஜமானர்களிடம் எந்த அளவு பணம் வாங்கினார்களோ அந்த அளவிற்கு எம்மைக் குழப்புவர். கண்விழித்திருப்போம் நண்பர்களே! நாம் குழம்பாது கவனமாக இருப்போம். நம்பிக்கை அதுதான் நமது பலம். நம்பிக்கையை நாம் கைக் கொள்வது ஒன்று. நம் உறவுகளிடமும் நட்புகளிடமும் அதனை விதைத்தும் விடுவோம். அத்துடன் இன்னொன்றும் உண்டு. நமக்கான பணி, நமக்கான கடமையை நாம் செய்ய வேண்டும். அதற்கு யாவரும் முன்வருவோம்.

# சினமே முதல் எதிரி

கோபம் என்ற உணர்ச்சிக்கு ஆளாகாதோரே இருக்க முடியாது. அந்தக் கோபத்தை நாம் இரண்டு விதத்தில் கையாள்கிறோம். கோபத்திற்குக் காரணமான மனிதர் மீது அந்தக் கோபத்தைக் காட்டுவது அல்லது. அல்லது கோபத்தை அடக்கிக் கொண்டு விழுங்கிக் கொள்கிறோம்.

பிறர் மீது கோபித்து, அனல் கக்கி ஓயும் போது பெரும்பாலும் நாம் மகிழ்ச்சியாய் இருப்பதில்லை. குற்ற உணர்வு, பச்சாதாபம், தேவை இருந்திருக்கவில்லை என்கிற மறுபரிசீலனை என்று பல்வேறு உணர்வுகளால் பாதிக்கப்படுகிறோம். இது ஒரு புறமிருக்க இதன் விளைவாக அந்தப் பக்கமும் கோபமும், வெறுப்பும் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தால் விளைவுகள் விபரீதமே.

ஏற்படும் கோபத்தை அடக்கி நமக்குள்ளே விழுங்கிக் கொண்டாலும் கோபம் மறைவதில்லை. உள்ளே சேர்த்து வைத்த கோபம் என்றாவது எப்போதாவது வெளிப்பட்டே தீரும். அது இயற்கை.

அது நம் கோபத்திற்குக் காரணமான நபர் மீதிருக்கலாம். அல்லது பாவப்பட்ட வேறு யார் மீதாகவோ இருக்கலாம். விழுங்கியது வெளிப்படவே செய்யும். நமக்குள்ளே தங்கி இருந்ததன் வாடகையாக அல்சர் முதலான நோய்களைத் தந்து விட்டே கோபம் நம்மை விட்டு அகலும்.

ஆக இந்த இரு வழி முறைகளும் நம்மைத் துன்பத்திற்கே அழைத்துச் செல்கின்றன. பின் என்ன செய்வது?

கோபமே அவசியமில்லை, கோபத்திற்கு யாரும் காரணமில்லை என்று உணர்ந்து அந்தக் கணத்திலேயே தெளிவடைவது தான் கோபத்திற்கு மருந்து.

ஒரு நண்பர் வந்து நம்மைக் கிண்டல் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். பெரும்பாலும் நாம் சிரித்து பதிலுக்கு நாமும் ஏதாவது கிண்டலாக சொல்வோம். ஆனால் ஒரு நாள் நாம் பல பிரச்னைகளால் மனநிலை சரியில்லாமல் இருந்தால் அன்று அந்த நண்பரின் கிண்டல் நம்முள் ஒரு எரிமலையையே ஏற்படுத்தக் கூடும். அவரது வார்த்தைகளுக்கு அந்த நேரம் ஒரு தனி அர்த்தம் தெரியும். மனம் வீணாகப் புண்படும். கடுகடுப்புக்கு முகமும்,கடுஞ்சொற்களுக்கு நாக்கும் தயாராகும்.

இந்தச் சிறிய தினசரி அனுபவம் ஒரு பேருண்மையை வெளிப்படுத்துவதை நாம் உணரலாம். அடுத்தவரது சொற்களோ, செயல்களோ மட்டுமே கோபத்திற்குக் காரணம் என்றால் அவற்றை எப்போதும் கோபமாகத் தான் எதிர் கொள்வோம். ஆனால் உண்மையில் கோபமும், கோபமின்மையும் நம் மனப்பான்மையையும் மனநிலையையும் பொறுத்தே அமைவதை நம் தினசரி வாழ்விலேயே பார்க்கிறோம்.

வறண்ட கிணற்றில் விடப்படும் வாளி வெற்று வாளியாகவே திரும்பும். நீருள்ள கிணற்றில் விடப்படும் வாளியே நீருடன் திரும்பும். உள்ளே உள்ளதை மட்டுமே வாளியால் வெளியே கொண்டு வர முடியும். வாளியால் நீரை உருவாக்க முடியாது.

அடுத்தவர்கள் வாளியைப் போன்றவர்கள். அவர்களது சொற்களும் செயல்களும் நமக்குள்ளே சென்று வெளிக் கொணர்வது நமக்குள்ளே சென்று வெளிக்கொணர்வது நமக்குள்ளே இருப்பதைத் தான். அது கோபமாகட்டும், வெறுப்பாகட்டும், அன்பாகட்டும், நல்லதாகட்டும், தீயதாகட்டும், அவர்கள் நம்மில் வெளிக் கொணர்வது நாம் நம் ஆழ்மனதில் சேர்த்து வைத்திருப்பதையே. அந்த விதத்தில் அவர்கள் நமக்கு உதவியே செய்கிறார்கள். நமக்குள் என்ன உள்ளது என்பதை அவர்கள் நமக்கு உணர்த்துகிறார்கள்.

கம்ப்யூட்டர்கள் பதிவு செய்யப்பட்ட ப்ரோகிராம்கள்படி இயங்குகின்றன. அதுபோல நாமும் நம் ஆழ்மனதில் பதிவு செய்து கொண்டுள்ள ப்ரோகிராம்கள் படியே உந்தப்பட்டு செயல்படுகிறோம். அதில் எத்தனையோ பதிவுகள் தவறானவை என்பதை உணராமலேயே பலரும் வாழ்ந்து முடித்து விடுகிறோம்.

இதெல்லாம் கோபப்படத் தக்கவை, சொற்களாலோ, செயல்களாலோ தகுந்த பதிலடி தரத் தக்கவை என எத்தனையோ விஷயங்களை நாம் ஆழ்மனதில் பதிவு செய்து வைத்து இருக்கிறோம். அதன்படி அப்போதைய சூழ்நிலையையும், மனநிலையையும் பொறுத்து சிந்திக்காமல் பேசி விடுகிறோம் அல்லது செயல்பட்டு விடுகிறோம்.

எனவே ஒவ்வொன்றையும் நாம் எப்படி எடுத்துக் கொள்கிறோம், நமது பதில் நடவடிக்கைகள் எப்படி அமைகின்றன என்பது நம்மைப் பொறுத்தே இருக்கிறது. காரணமாகத் தெரியும் மற்றவர்கள் முன்பு குறிப்பிட்டது போல் காலிப் படகுகள் அல்லது வாளிகளே.

இந்த உண்மையை நம் ஆழ்மனதில் பதிய வைத்து தவறாக மற்றவர்களைக் காரணம் காணும் ப்ரோகிராம்களைத் திருத்திக் கொள்வது மிகவும் நல்லது.

கோபம் தற்காலிகமாய் பைத்தியம் பிடிப்பது போன்றது என்பார்கள். கோபப்படுவது அதை அடையாளம் காட்டுவதற்குச் சமம். ஆராய்ந்து அறியாமல், கோபத்தைக் காட்டாமல் அடக்குவது என்பது உண்மையில் கோபத்தை ஒத்திப் போடுதலே.

எனவே இரண்டையும் தவிர்த்து விட்டு அமைதியாகவும் தெளிவாகவும் சூழ்நிலையைக் கையாளுங்கள். ஒருவர் கோபமூட்ட முனைகையில் அவரது செய்கை முக்கியமல்ல, அதை நீங்கள் எப்படி எதிர் கொள்கிறீர்கள் என்பது தான் முக்கியம் என்பதை எப்போதும் நினைவில் நிறுத்துங்கள்.

பல நேரங்களில் மௌனமே உத்தமம். புன்னகையே சிறந்த பதில். வார்த்தைகளில் பதில் அவசியம் என நீங்கள் உணரும் போது சற்றும் கோபம் கலக்காமல் அமைதியாய் தெளிவாய் பதில் அளியுங்கள். உங்கள் அமைதியைக் குலைக்கும் அதிகாரத்தை நீங்களாக மற்றவர்களுக்குத் தந்தால் ஒழிய அவர்கள் அதைப் பெற முடியாது என்பதை மறந்து விடாதீர்கள்.

அரிஸ்டாடில் சொன்னது போல் 'கோபப்பட ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றில் ஒன்றும் சரியானதாக இருக்காது' என்பதை உணர்ந்திருங்கள். கோபம் பிறக்கும் அக்கணமே அதன் அவசியமின்மையை உணர்ந்து, அழித்து, அமைதி காக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

*- என்.கணேசன்*

# பலத்தைத் தக்கவைத்தலும் இந்தியாவுடனான அணுகுமுறையும்

**அரசியல் அலசல்**

வி.சபேசன் (ஒரு பேப்பர் - ஜெர்மனி)

தி.வழுதி என்பவர் அண்மையில் எழுதிய மூன்று கடிதங்கள் பலர் மத்தியில் பெரும் வாதப் பிரதிவாதங்களை தோற்றுவித்துள்ளன. இணையத் தளங்களின் ஊடாக பல மக்களைப் போய்ச் சேர்ந்த இந்தக் கடிதங்கள் பலரது கவனத்தையும் ஈர்த்திருக்கின்றன.

இந்தக் கடிதங்களில் வரவேற்கத்தக்க அம்சங்கள் பல உண்டு. ஆயினும் ஓரிரு விடயங்கள் எனக்கு சற்று நெருடலை ஏற்படுத்தி விட்டன.

இரண்டாவது கடிதத்தில் 'புலிகள் தம்மிடம் உள்ள எல்லாவற்றையும் பாவித்துப் போராடுகிறார்கள், தமது சக்திக்கு மீறி எல்லாவற்றையும் செய்து போரிடுகின்றார்கள், தமது எல்லாப் போராளிகளையும், எல்லாப் படையணிகளையும் எல்லா முனைகளிலும் களத்தில் இறக்குகின்றார்கள்' என்கின்ற ஒரு 'செய்தியை' குறிப்பிட்டிருந்தார்.

மூன்றாவது கடிதத்தில் புலம்பெயர்ந்த மக்கள் தமது நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களை முற்றுகையிட வேண்டும் என்றும், 'தமிழீழமே இந்தியாவின் உண்மையான நட்பு நாடு' என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்று ஒரு 'ஆலோசனையையும்' கூறியிருந்தார்.

இந்த இரண்டு விடயங்கள் பற்றியும் என்னுடைய சில கருத்துகளையும் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

விடுதலைப் புலிகள் தமது அனைத்து பலத்தையும், வளங்களையும் பயன்படுத்தி போரிடுகின்றார்கள் என்னும் செய்தியை தன்னுடைய ஊகிப்பின் அடிப்படையில் கூறுவதாகச் சொல்லியிருந்தால் பரவாயில்லை. ஆனால் 'வன்னியின் உண்மை நிலை இதுதான்' என்று உறுதியான முறையில் கூறுகின்றார்.

இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. எதிரியின் திட்டத்தை நிறைவேற்றுவது போன்று விடுதலைப் புலிகள் ஒரு போதும் போரிடுவது இல்லை. இன்றைய நிலையில் விடுதலைப் புலிகள் அனைத்து பலத்தையும் வளங்களையும் பயன்படுத்தி போரிட்டால், அது எதிரியின் திட்டத்தை நிறைவேற்றுவதாகவே இருக்கும்.

தமது பலத்தை பாதுகாப்பதை முதன்மையாகக் கொண்டே விடுதலைப் புலிகள் போரை எதிர்கொள்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் தமது அனைத்து பலத்தையும் வளங்களையும் பயன்படுத்தி நடத்திய போர்களும் உண்டு. உதாரணமாக ஓயாத அலைகள் மூன்றைச் சொல்லலாம். அதில் விடுதலைப் புலிகளின் அனைத்துப் படையணிகளும், அனைத்து விதமான ஆயுதங்களும், வளங்களும் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன.

பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் இறுதி நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை அவர்கள் ஒரு செய்தியைக் குறிப்பிட்டிருந்தார். குடாரப்பு தரையிறக்கத்திற்கான தயார்படுத்தல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. 1500 போராளிகளையும் அவர்களின் ஆயுதங்களையும், அவர்களுக்கு தேவையான மற்றைய பொருட்களையும் கடலால் கொண்டு சென்று இறக்க வேண்டும். இந்தப் பணிகளை செய்வதற்கு நூற்றுக் கணக்கான படகுகள் பயன்படுத்தப்பட வேண்டும். அத்துடன் பல சண்டைப் படகுகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

இந்த நிலையில் சிறப்புத் தளபதி சூசை பிரிகேடியர் பால்ராஜிடம் கூறிய தகவல் இதுதான். 'உங்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு மட்டுதான் எம்மிடம் உள்ள எரிபொருள் போதும்'. அதாவது குடாரப்பில் தரையிறங்கிய விடுதலைப் புலிகளுக்கு ஏதும் பிரச்சனை என்றால், அவர்களை மீண்டும் கடலால் அழைத்து வர முடியாது.

தம்மிடம் உள்ள கடைசி வளங்களையும் பயன்படுத்தி ஓயாத அலைகள் மூன்றை விடுதலைப் புலிகள் நடத்தினார்கள். அனைத்து வளங்களைப் பயன்படுத்தினாலும், அடி வாங்கித் தோற்றோடிய சிறிலங்காப் படைகளால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பதில் தாக்குதல் எதையும் பெரியளவில் செய்ய முடியாது என்பதை சரியாக கணித்தே அதைச் செய்தார்கள். அதே வேளை அனைத்து வளங்களையும் பாவித்து விட்டு நிற்கின்றோம் என்னும் எச்சரிக்கை உணர்வே விடுதலைப் புலிகளை யாழ் குடாவிற்குள் தொடர்ந்தும் முன்னேறாது தடுத்தது.

பின்பு சிறிலங்கா அரசு உலகநாடுகளிடம் இருந்து பல்குழல் பீரங்கிகள் உட்பட பல நவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்து சாவகச்சேரி, அரியாலை போன்ற இடங்கள் மீது படை நடவடிக்கையை மேற்கொண்டது. இதில் இழப்புக்களை சந்தித்த விடுதலைப் புலிகள் அப் பகுதிகளில் இருந்து பின்வாங்க வேண்டி நேர்ந்தது.

ஆயினும் சில மாதங்கள் கழித்து சிறிலங்காப் படைகள் மேற்கொண்ட தீச்சுவாலை நடவடிக்கையை விடுதலைப் புலிகள் சிறந்த திட்டமிடலோடு எதிர்கொண்டு சிறிலங்காப் படைகளை ஒரு பொறிக்குள் வீழ்த்தி பெரும் அழிவுக்கு உள்ளாக்கி முறியடித்தார்கள். ஏற்கனவே ஓயாத அலைகள் மூன்றில் ஏற்பட்ட இழப்போடு, தீச்சுவாலை முறியடிப்பும் கட்டுநாயக்க விமானத்தளத் தாக்குதலும் சேர்ந்து சிறிலங்காப் படையினரை முடக்கிப் போட்டது.

தம்முடைய நடவடிக்கை சிறிலங்காப் படைகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மீண்டும் எழ விடாமல் செய்யும் என்று உறுதியாகத் தெரிந்தால் மட்டுமே, 'விடுதலைப் புலிகள் தமது முழு வளங்களையும் ஒருங்கிணைத்து பெரும் சமர்களை செய்வார்கள். சிறிலங்காப் படைகள் முடங்கிக் கிடக்கும் அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் தமது படையணிகளை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்பதே இதற்குக் காரணம்.

> விடுதலைப் புலிகள் தமது கடைசிப் பலத்தையும் பயன்படுத்தி போரிட வேண்டும் என்றுதான் சிறிலங்காவும், அதன் நட்பு சக்திகளும் விரும்புகின்றன.

இன்றைய நிலையில் தற்காப்புச் சண்டைகள் என்றாலும் சரி, வலிந்த தாக்குதல்கள் என்றாலும் சரி, விடுதலைப் புலிகள் தமது அனைத்து வளங்களையும் பலத்தையும் பயன்படுத்துவது சரியான உத்தியாக அமையாது என்றே கருதப்படுகின்றது.

இன்றைக்கு விடுதலைப் புலிகள் தமது அனைத்து படையணிகளையும், வளங்களையும் பயன்படுத்தி சிறிலங்காப் படைகள் மீது தாக்குதல் தொடுத்தால், விடுதலைப் புலிகளால் பல பகுதிகளை மீட்க முடியும். சிறிலங்காப் படைகளும் பின்வாங்கி ஓடும். ஆனால் சிறிலங்காவிற்கு முண்டு கொடுத்து போரை நேரடியாக நடத்தும் இந்தியாவும், மற்றைய உதவிகளை செய்து வரும் வல்லரசு நாடுகளும் உடனடியாகவே சிறிலங்காப் படைகளை மீளப் பலப்படுத்தி விடும்.

தன்னுடைய படையினரை நேரடியாக களத்தில் இறக்கியிருக்கும் இந்தியாவும் உடனடியாகவே மேலதிக படையினரை தருவித்து ஆட்பலப் பிரச்சனையையும் தீர்த்து வைக்கும்.

தமது அனைத்து வளங்களையும் பயன்படுத்தி, அனைத்துப் படையணிகளையும் களம் இறக்கி பெரும் சண்டையை நடத்திய விடுதலைப் புலிகள் ஆட்பலத்திலும் ஆயுதபலத்திலும் கண்டிருக்கக் கூடிய சேதங்களை சரி செய்வதற்குள் சிறிலங்காப் படைகள் மீண்டும் அசுர பலத்தோடு எழுந்து நிற்கும். இப்பொழுது மீண்டும் தாக்குதல் நடத்தி பலவீனப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளை முழுமையாக தோற்கடித்தும் விடுவார்கள்.

ஆகவே அனைத்து வளங்களையும் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் நடத்தக் கூடிய சண்டை, கடைசியில் அவர்களுக்கு பாதகமாக முடியக் கூடிய நிலையே தற்பொழுது காணப்படுகின்றது. விடுதலைப் புலிகள் தமது கடைசிப் பலத்தையும் பயன்படுத்தி போரிட வேண்டும் என்றுதான் சிறிலங்காவும், அதன் நட்பு சக்திகளும் விரும்புகின்றன. ஆனால் அதை விடுதலைப் புலிகள் ஒரு போதும் செய்ய மாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் தமது பலத்தை முடிந்தளவு பாதுகாத்தபடியே, போரின் எல்லைகளை விரிவுபடுத்தி, எதிரிக்கு பெரும் இழப்பைக் கொடுத்தபடி போரை நீடித்துக் கொண்டு போவார்கள் என்பதே இன்றைக்கு எதிர்பார்க்கக் கூடிய ஒன்று.

இந்திய அரசு இந்தப் போரில் இருந்து விலகும் வரை இதைத் தவிர வேறு வழியேதும் இருக்கப் போவதில்லை. அந்த வகையில் இந்திய அரசை இந்தப் போரில் இருந்து விலகச் செய்வதற்கான வேலைகளில் இறங்க வேண்டியதே அனைத்துத் தமிழர்கள் முன் உள்ள பெரும் பணியாக இருக்கின்றது.

புலம்பெயர் நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களை முற்றுகை இடலாம் என்று திரு வழுதி அவர்கள் யோசனை சொல்லியுள்ளார். அதையும் செய்யலாம். ஆனால் அது மட்டுமே போதுமானது அன்று.

உலகில் உள்ள இந்தியத் தூதரகங்கள் என்பவை இந்திய அதிகார மையத்தை பிரதிநிதித்துவம் செய்பவையாக இருப்பவை. இந்தியாவின் ஆட்சியில் உள்ள அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்பவை அல்ல. அரசாங்கங்கள் மாறிக் கொண்டிருப்பன. அரசு என்பது மாறுவது இல்லை. இந்திய அரசை இயக்கிக் கொண்டிருக்கும் இந்திய அதிகார மையத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதரகங்களை முற்றுகையிடுவது ஒரு அளவுக்கு மேல் பலனைத் தரப் போவது இல்லை.

ஒரு நாடு தன்னுடைய நாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஊடாக இந்திய அரசுக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுக்கலாம். ஆனால் அந்த நாட்டில் வாழும் ஒரு சிறு தொகையைக் கொண்ட புலம்பெயர்ந்த மக்கள் கூட்டத்தினால் குறிப்பிடக் கூடிய அழுத்தம் எதையும் கொடுக்க முடியாது.

மின்னஞ்சல்கள் அதற்கான குப்பைத் தொட்டிக்குள் போனால், கடிதங்களும் அதற்கென்று உள்ள குப்பைத் தொட்டிக்குள் போகும். அவ்வளவுதான்.

'தமிழீழம்தான் இந்தியாவின் உண்மையான நண்பன்' என்று இந்தியாவிற்கு விளங்கப்படுத்தலாம் என்று நம்புவதும் அர்த்தமற்றதாகவே இருக்கின்றது. நாம் சொல்லும் காரணங்கள் இந்தியாவிற்கு புரியவில்லை என்று உண்மையிலேயே யாராவது நம்புகின்றீர்களா? இந்தியாவில் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் அத்தனை முட்டாள்களா?

தன்னுடைய நலன்களை முன்னிலைப்படுத்தும் இந்திய அதிகார மையம் இந்திய அரசை வழிநடத்துவதே இன்றைய பிரச்சனைகளுக்கு காரணம். இவர்களுடைய நலன்கள் வேறு வகையானவை. பனிப்போர் காலத்தில் இருந்த இந்திய நாட்டின் நலன்களைப் பற்றி நாம் இன்றைக்கும் இவர்களோடு பேசிக் கொண்டிருப்பதில் பலன் ஏதும் இல்லை.

'நாங்கள்தான் உங்கள் நண்பன்' என்று மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தால், அவர்களிடம் இருந்து ஒரு நமுட்டுச் சிரிப்புத்தான் வருமே தவிர, வேறு ஒன்றும் நடக்கப் போவது இல்லை.

தமிழீழம் உருவாவது இந்திய அதிகார மையத்தின் நலன்களுக்கு எதிரானது என்று அவர்கள் கருதுகிறார்கள். நீண்ட கால நோக்கில் தமது இருப்பைப் தமிழீழத்தின் உருவாக்கம் பாதிக்கும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். நேபாளத்தில் ஏற்பட்டுள்ள மக்கள் ஆட்சியைக் குழப்புவதற்கு இவர்கள் செய்கின்ற சதி வேலைகளும் இது போன்ற கருத்தின் அடிப்படையிலானதே.

இந்திய அதிகார மையத்தின் நலன்களுக்கு ஏற்றபடி எம்மால் நடக்க முடியாது என்பதும், அப்படிச் செய்வதானது எமது விடுதலைப் போராட்டத்தையே காவு கொடுப்பதற்கு ஒப்பானது என்பதுமே யதார்த்த நிலையாக இருக்கின்றது.

இந்த நிலையில் இந்திய மக்களினதும், உலக மக்களினதும் மனச் சாட்சியைத் தட்டியெழுப்பும் படியான அறப் போராட்டங்களை தொடர்வதோடு, தமிழ்நாட்டிலும் உலகின் மற்றைய நாடுகளிலும் வாழும் தமிழர்களை ஒன்றிணைத்து இந்திய சிறிலங்கா அரசுகளின் இனவழிப்பு யுத்தத்தை எதிர்கொள்வதுதான் இன்று எமக்கு முன் உள்ள வழி.

நல்லவர்கள்
நானிலத்தில்
நாள்முழுதும்
மாய்வரென்றால்
நல்லவராய்
வாழ்வதனால்
நமக்கென்ன
லாபமிங்கே

ஒரு பேப்பர
ORU PAPER

# பௌத்தம் செய்யும் பாபம்

பாகம் 65

இந்தப் பத்தியில் இன்றைய காலகட்டத்தில் எதை எழுதுவது என்பதே புரியவில்லை. எழுத எவ்வளவோ இருந்தாலும் காலத்திற்கொவ்வாத விடயங்களை எழுதித் தான் என்ன பயன்? பொருள் இடம் காலம் என்னும் மூன்றும் பொருத்தமாய் அமையும் போதுதான் மனம் எம்மை ஏவிச் சரியாக வினையாற்றப் பணிக்கும்.

'பற்றி எரிகையில் ரோம் நகர் மன்னவன்
பண்ணிசை செய்ததுபோல் – நாம்
சற்றும் கவலையிலாது வீண் சளப்பல்
செய்தென்ன பயன் ?'

கம்பியூட்டர் விசைப் பலகையில் கைகள் ஓட மறுக்கின்றன. உள்ளம் சோர்வடைந்து போயிருக்கிறது. நமது அரசியல் ஆய்வாளர்கள் பலர் இன்றைய நிலையை பற்றிய தங்களது தீட்சண்யமான பார்வையுடன் அலசல்களில் ஈடுபடுகிறார்கள். ஆனாலும் எல்லாமே ஏட்டுச் சுரைக்காய்களாகக் கறிக்குதவாமலேயே கீறப்படும் ஓவியங்களாகிவிட்டன.

நமக்கு இன்று அவசரத் தேவையாயிருப்பது அரசியல் ஞானமா எமது இனத்தை அழிவிலிருந்து காத்துக் கொள்வது பற்றிய அறிவா? அல்லது எம் இனம் எக்கேடு கெட்டாவது கெட்டுப் போகட்டுமென்று காதலைக் கவிதையில் பாடிக் கொண்டிருப்பதா?

தமிழ் நாட்டில் எத்தனையோ கவிஞர்களும் எழுத்தாளர்களும் சினிமாவுக்காகவும் இலக்கியத்துக்காகவும் எழுதிக் குவிக்கின்றார்கள். அவர்களுக்கு அங்கே வேறு வேலைகள் பெரிதாக இல்லை. நமக்கோ நெஞ்சம் கனன்று நெருப்பாயெரிகிறது.

இனக்கொலைக்கு உட்படுத்தப்பட்டு நாதியற்று ஒளிந்து கொள்ள இடமின்றி பூமித் தாயின் மடியில் பங்கர்களுக்குள் எம் இளஞ்சிறுசுகளும் தாய்மாரும் அடைக்கலந் தேடி அடைகின்றனர்.

## அலசுவரம்

அலசுபவர் : மட்டைக்களப்பான்

மண்ணே உனக்கேன் மனது வரவில்லை.
காக்க முடியாதவரைக் காலனிடம்
கையளிக்கும்
உன்னை நினைக்கையிலே உள்ளம்
வெதும்புவதை
என்னென்று சொல்வேன் இது நீ
எமக்களித்த
பொல்லா விதியா ? பூமாதேவி என்று
தாயாய் உனை நினைக்கும் தமிழன் பெறும்
பரிசா ?

நெஞ்சம் நெருப்பாக நீறு அதன் மேற்
பூச்சாய்
வாழும் நிலைக்கு எம்மை வரலாறு
விட்டதனை
என்னென்போம் நண்பர்களே இம் முடிவு
தான் எமக்கா ?

காக்கக் கடவுளில்லை கவனிக்க யாருமில்லை
காலன் கொடிய தறு கண்ணாளன்
கைப்பட்டு
பூக்களாய்ப் பிஞ்சுகளாய் பூமியிலே
உதிர்கின்ற
எங்கள் உறவுகளை எண்ணி மனம்
வேகையிலே
எங்கே மனது எழுத இடங்கொடுக்கும்

நாளும் பொழுதும் எம் உறவுகள் ஒன்றல்ல இரண்டல்ல நூற்றுக் கணக்கில் கேட்கப் பார்க்க யாருமின்றி படுகொலை செய்யப்படும் கோர நிகழ்வுகளே மனதில் முன்வந்து நிற்கின்றன.

கலிங்க யுத்தத்தின் அழிவைக் கண்டு அசோகன் மனம்மாறினான். யுத்தகளத்திலேயே உபதேசம் பெற்றுப் பௌத்தனானான். அகிம்சா நெறியாம் பௌத்தத்தை தனது தூதுவர்கள் மூலம் உலகம் முழுவதும் பரப்பினான். இலங்கைத் தீவிற்கு தனது விசேட தூதுவர்களாக மகன் மகிந்தனையும் மகள் சங்கமித்திரையையும் அனுப்பினான். இருவருமே பௌத்த சாதுக்கள். ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் வளர்ச்சியடைந்த பௌத்த நெறி சைவ வைணவர்களின் நெருக்குவாரங்களைத் தாக்குப் பிடிக்க முடியாமல் படிப்படியாக ஒதுங்கி இலங்கைத் தீவில் சிங்களவர்களிடம் அடைக்கலம் தேடியது. அகிம்சா தர்மத்துக்கு அதுவே வினையாயிற்று. வரலாறு காணாத அவப்பெயரைப் பௌத்தம் சிங்கள அரசுகளால் பெற்றுக் கொண்டது.

தமிழனின் கண்களைப் பிடுங்கி அகிம்சா மூர்த்தியாக தியானநிலையில் சாந்தியை அனுபவித்துக் கொண்டிருந்த புத்த மகானின் சிலைக்குப் படையல் வைக்குமளவுக்கு சிங்களம் பௌத்த நெறியைச் சீரழித்தது.

இன்றோ காவியைப் போர்த்துக் கொண்டிருக்கும் ஈன இரக்கமற்ற இனவெறி பிடித்த கிரிமினல்கள் வன்னியிலிருக்கும் அப்பாவிகளைக் கொல்லுமாறு அரசபடைகளை ஏவி வழிநடத்துகிறார்கள்.

புத்தன் தந்த சன்மார்க்க நெறி இப்படிக் கேவலப்படுத்தப்படும் அளவுக்கு அந்த மகான் செய்த குற்றந்தான் என்ன?

அரசியலைத் துறந்து உலக பந்த பாசங்களிலிருந்து விடுதலையாகி, பரிபூரண நிர்வாணமடைந்து, தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமென்று பௌத்த நெறியை உலகிற்குப் போதித்த புத்தபிரானுக்கு இந்தப் போக்கிரிகளால் ஏன் இந்த அவப்பெயர் வரவேண்டும்?

அன்புதான் இன்ப ஊற்று, அன்புதான் இதய ஜோதி, அன்புதான் உலக மகாசக்தி என்று அன்பைத் தெய்வமாகப் போற்றிய மகாஞானி புத்தனுக்குப் போய் இந்தக் காடையர் கூட்டமா சீடப் பிள்ளைகளானார்கள்?

புத்தன் தவமிருந்த போதி மரந்தன்னை
நித்தம் வணங்கியதால் நேர்ந்ததென்ன
சிங்களர்க்கு ?
பல்வணங்கிச் சொல் வணங்காப் பாவம்
நிறைந்ததனால்
கொல்லும் வெறியைவிடக் கூடவென்ன
பெற்றார்கள் ?

வரலாற்றில் ஒரு மகானின் புனித நெறி இப்படிக் களங்கப்படுத்தப்பட்ட துரதிஸ்டம் நிகழ்ந்திருக்கிறது.

எத்தனையோ புனித யுத்தங்களும், சிலுவைப் போர்களும் இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களின் பேரால் நடந்திருக்கின்றன இப்போதும் நடைபெறுகின்றன. இந்தியாவிலும் சமயத்தின் பேரால் நடக்கும் படுகொலைகள் ஏராளம். ஆனால் அகிம்சையை வாழ்வு நெறியாகக் கொண்ட குருமார்கள் அரசாங்கத்தோடு இணைந்து நின்று யுத்தத்தைத் தூண்டும் கேவல நிலை இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் இலங்கையில் தான் நடைபெறுகின்றது.

ஜாதிக ஹெல உறுமய போன்று பௌத்த பிக்குகளை பாராளுமன்ற உறுப்பினர்களாகக் கொண்டு யுத்தத்தைத் தூண்டும் வேறு மத அமைப்புக்கள் உலகில் இருப்பதாகத் தெரியவில்லை.


இஸ்லாம் ஒரு கையில் வாளோடும் மறுகையில் புனித குர் ஆனோடும் பரப்பப்பட்டதாகக் கூறுவார்கள். இஸ்லாம் யுத்தங்களினூடாகத்தான் தோற்றம் பெற்றது வளர்ச்சியடைந்தது. புனித யுத்தம் அதன் சமய தர்மமாகிவிட்டது.

ஆனால் அகிம்சையைப் போதித்துக் கொண்டு யுத்தத்தைத் தூண்டும் பரிதாப நிலை பௌத்த தர்மத்துக்கு இலங்கையில் ஏற்பட்டுள்ளமை விசித்திரமானதாகவே உள்ளது.

- தொடரும்.


"Weakness Gone.. Energy On.."
இது உறுதி - இன்றைய இரவு இனிமையானது - இனிவரும் இரவுகளும்
மூலிகையில் தயாரிக்கப்பட்ட மாத்திரை ஆண்மை விருத்திக்கான தைலம் இது.
"Recharge Your Life" ஆண்களின் நண்பன்
Performance Enhancer for Men


£ 20
Mascula Massage Oil for Men
மஸ்குலா மசாஜ் ஒயில்
எண்ணெய் Massage மூலம் ரத்த ஓட்டத்தை அதிகரித்து புத்துயிருட்டி மீண்டும் சக்தி கொடுத்து ஆண்மையைப் பெருக்கி இளமையாக்கும் அரிய மருந்து.
To Tone Up The Under-developed Penile Muscles & Nerves of Male Sex Organ For Improved Performance


Herbal 1-Top Capsules
கேர்பல் வன் டொப் கப்சியூல்ஸ்
உலகத்தின் அனைத்து ஆண்களாலும் விரும்பப்பட்ட ஆண்மை அதிகரிக்கும் ஒரே நிவாரணி.
£ 30
• ஆண்மைக் குறைவு • உடலுறவு பலவீனம் • அனைத்தும் ஒரே மருந்தில்
Herbal 1-Top Capsules for Male Problems & Impotence Management

HEART CARE

£ 10 கார்ட் கெயார் கப்சியூல்ஸ்
அனைத்து இதய சுவாச நோய்களை கட்டுப்படுத்த
• இதயத்தை பலப்படுத்த
• இதய அழுத்தத்தை சீராக்க
• இரத்த ஓட்டத்தை சீராக்க


AVAILABLE FROM YOUR LOCAL CHEMIST NATIONWIDE
Bristol 60 Almavale Road, Clifton, Tel : 0117 7973144
Birmingham
1. Spark Hill, 491 Startford Road, Tel: 0121-4720174
2. 115 Soho Road, Handsworth, Tel: 01215512444
Bradford 127, Great Horton Road, Tel: 0845 257 0181
Coventry
1. 5 Station St. West, Tel: 02471 300 6443
2. 304, Walsgrave Road, Tel: 02476 454523
Derby 299 Normanton Road, Tel: 01332 366644
Gravesend 2 Living Stone Rd, Tel: 01474 365140
Glasgow 405 Great Western Rd, Tel: 0141 3395979
Hayes 788 Uxbridge Road, Tel: 020 8848 4612
Hounslow 322 Great West Road, Tel: 020 8577 7436
ILLFORD :
1. Eden Pharmacy, 79-85 Goodmayes Rd. Tel: 020 8597 3477
2. Munro Pharmacy, 303 Green Street, Tel: 020 8471 2575
3. Weston Pharmacy 3 St Stephen Parade (Near Post office), Green Street, Tel : 020 8470 5858
Kingsbury 511 Kingsbury Road, Tel : 020 8204 8731
London 32A Baker Street, Marylebone. Tel : 020 7935 9667
Leyton 694 High Road, Tel : 020 8556 5416
Leeds 255-257 Roundhay Road, Tel: 0113 2490557
Leicester 68 Harlington Road, Tel: 0116 253 7985
Luton 453 Dunstable Road, Tel: 01582 572523
NORBURY - 301 Northborough Road Tel : 020 8764 1629
NorthHampton 4 Kingsley, Park Terrace, Tel: 0160 471 3297
Reading 104a Oxford Road, Tel : 0118 9572687
Slough 400 Farnham Road, Tel: 01753 517263
SouthHall
1. Gill Chemist, 31-33 King Street, Tel: 020 8571 1555
2. Fokal Cash & Carry, 103-105 Southall Broadway, Tel: 020 8574 1647
Tooting 216 Upper Tooting Rd, Tel: 020 8672 5417
Wembley
1. 282 Ealing Road, Tel: 020 8902 5047
2. 182 Ealing Road, Tel: 020 8902 0173
3. 210 Ealing Road, Tel : 020 8902 4698
Wolverhampton 311 Dudley Road, Tel: 01902342 000

டயானில் பென்டா கப்சியூல்ஸ்
Dianil Penta Capsules

இனிப்பு சிற்றுண்டிகளை ஏன் தவிர்க்க வேண்டும்?
சர்க்கரை வியாதிக்கோர் அரிய இயற்கை மூலிகை மருந்து
கணைய சுரப்பிகளை தூண்டி இன்சுலின் ஓமோனை சுரக்க வைப்பதன் மூலம் சர்க்கரை நோயினால் வரும் அனைத்துப் பாதிப்புகளிலிருந்தும் விடுபட ஒரு புதிய நிவாரணி.
£ 10

LIVER CARE

£ 10
லிவோ ஸ்பைலின் கப்சியூல்ஸ்
• சுரல் வீக்கம்
• hepatitis (A & B), virus இன் தாக்கத்தால் சுரல் பெரிதாகல்
• அதீத குடிப்பழக்கம்
• மலக் கடுப்பு
• ஜீரண சக்தியில் குழப்பம்
• சுரல் தொழிற்பாட்டில் பிரச்சனை இதற்கெல்லாம் சிறந்த நிவாரணி


BRAIN CARE

£ 10 செரபிக்கல் கப்சியூல்ஸ் (பிரெய்ன் கெயார்)
• ஞாபக சக்தியைக் கூட்டவும்
• மன அழுத்தத்தைக் குறைக்கவும்
• மனப் பயத்தைத் தவிர்க்கவும்
• இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும்

கிமாலயன் வொண்டர் கார்லிக்
Himalayan Wonder Garlic

உங்கள் உடம்பில் கொழுப்பைக் குறைத்து கலங்களுக்கு புத்துயிர் அளிக்கும். இமயமலையின் இயற்கை சூழ்நிலையில் விளைந்த மாசடையாத பூண்டு.
£ 10
இதயநோய், கொழுப்பு நோய் நிவாரணி.
Supports anti-clotting mechanism in arteria and vains.

Pentax Hair Tonic
பென்ரக்ஸ் கெயர் டொனிக்

வழுக்கைத் தலையர்களுக்கு ஒரு வழி
• தலை வழுக்கை
• தலை முடி உதிர்தல்
• தலைமுடி சுண்டமாதல்
• அலோபேசியா (alopecia) நோய் அனைத்தும் குணமாக்கலாம்
£ 10

PURE SHILAJEET

£ 10
பியோர் சிலாஜீட் கப்சியூல்ஸ்

Contact: Mr. J.B. Singh 0781 541 9103 * Dr. R.N. Sharma (B.A.M.S. M.D. (Ayurvedic)
Pentavox (UK) Ltd, 10, Park Avenue, South Hall, UB1 3AQ. Tel 020 8843 0330, 07815 419 103
e-mail: info@pentavoxuk.com * Online Shopping: www.pentavoxuk.com
Postage & Packaging Free over order worth £30
"Distributors/Stockist required all over UK & Europe"

# கலைஞரே! நீங்கள் பதவி துறப்பதை நானும் விரும்பவில்லை



மாதவன்
*(ஒரு பேப்பருக்காக)*

திரு. கருணாநிதியை பதவி விலக வேண்டாம் என சில ஈழத்தமிழர்கள் கேட்டிருக்கிறார்களாம். இவ்வாறு அவரே தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'தினமலர்' பத்திரிகைக்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார். அதில் மூன்று பேரின் விபரங்களையும் குறிப்பிட்டிருக்கிறார். ஒருவர் மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம், மற்றயது சந்திரகாசன் செல்வநாயம், மூன்றாமவர் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஒரு தமிழ் பத்திரிகையாளராம்.

இதனைப் படிக்கின்ற போது முன்னர் ஊரில் எங்கள் அயல் வீட்டில் வசித்து வந்த ஒரு அரசாங்க உத்தியோகத்தரின் நினைவு தான் வந்தது.

அவர் தூர இடமொன்றிலுள்ள அரசாங்க அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தமையால் அங்கேயே தங்கியிருந்தார். ஊரிலுள்ள அவரது மனைவியையும் பிள்ளைகளையும் பார்க்க வெள்ளிக்கிழமை மாலையில் ரயிலேறி சனிக்கிழமை காலையில் வெகு உற்சாகமாக வீட்டுக்கு வரும் அவர், திரும்ப ஞாயிறு மாலையில் பெருத்த கவலையுடன் புறப்பட்டுச் செல்வார்.

ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்தே ஏதாவது சம்பவம் நடந்து தனது பயணத்தை ஒத்திப் போட முடியுமா என்ற சிந்தனையில் அவர் ஆழ்ந்து விடுவார். யாராவது தூரத்து உறவு இறந்து போனால் போதும், சீமான் பயணத்தை இரத்து செய்து விட்டு, திங்கள் காலையில் தபாலகத்திற்கு சென்று "Sick Beg Leave" என்று ஒரு தந்தியை தனது அலுவலகத்திற்கு அனுப்பி விட்டு, தனது விடுமுறையை அனுபவிக்க தொடங்கி விடுவார்.

இவ்வாறு சம்பவங்கள் ஏதும் ஏற்படாத விடத்தும் சிறு சாக்குகளை வைத்துக் கொண்டு லீவுபோடுவது அவரது வழக்கம். அரசதிணைக்களங்களில் அளவுக்கதிகமாக விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்பதனால் அவரது வேலை பறிபோகவில்லை. சிலசமயம் அவரது சின்னவன் 'அப்பா ஏன் இண்டைக்கு போறிங்கள்?' என்று ஒருக்கால் கேட்டால் போதும், 'மகன் ஆசைப்படுகிறான், நான் எப்பிடி போறது?' என்று விடுப்பு கேட்டு தந்தியடிக்க தபாலகத்துக்கு போய்விடுவார்.

எங்கள் அயல்வீட்டுகாரர் போல், கருணாநிதியும், பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க, சில சொட்டை காரணங்களை முன் வைக்கிறார். யாரோ மூன்று புறம்போக்குகள் இவரை பதவி விலக வேண்டாம் என்று கேட்டார்களாம். அதனால் இவரும் அந்த எண்ணத்தை கைவிட்டு விட்டாராம். இந்த புறம்போக்குகளைப் பற்றி சிலர் அறியாதிருக்கக் கூடும் என்பதால் அவர்களைப் பற்றிய விபரங்களைத் தருகிறேன்.

அவர்களது பெயரில் சேர்ந்திருக்கிற மற்றய பெயரைக் கொண்டு அவர்களை யாரென ஊகித்துக் கொள்ள முடியும். முதலாவது மங்கயர்க்கரசி, தற்போது, லண்டனின் புறநகர் பகுதியான சேர்பிற்றன் பகுதியில் உள்ள மூத்தோர் காப்பகத்தில் வசிக்கும் இவர் அந்நாட்களில் வாய் வீரத்தில் பெரிய வீராங்கனையாகத் திகழ்ந்தவர். சிங்களவர்களின் குருதியில் நீச்சலடிக்கப் போவதாக மேடைக்கு மேடை சவடால் விட்டவர். (தண்ணீரிலேயே இவருக்கு நீச்சலடிக்கத் தெரியாது என்பது வேறு விடயம்).

லண்டனில் மகிந்த இராஜபக்சவை சந்திக்கச் சென்று அவர் முன் நாணிக் கோணிக்கொண்டு நின்ற படங்கள் அண்மையில் இணைய தளங்களில் வெளிவந்திருந்தன. மங்கயர்கரசிக்கு இப்போது இருக்கிறது ஒரே ஒரு குறைதான், அமிர்தலிங்கத்திற்கு முத்திரையடிப்பதாக வாக்குக் கொடுத்த மகிந்த அதைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. மகிந்தவுக்கு போனடித்து களைத்துப் போனதால், கலைஞருக்கு போனடிக்க தொடங்கியிருக்கிறார்.

அடுத்தவர் சந்திரகாசன், தந்தை செல்வா என்ற மாமனிதனுக்கு, திருஸ்டி பரிகாரமாய் பிறந்தது. தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் ஈழ அகதிகளுக்கு உதவுவதற்கான அமைப்பு என்ற பெயரில் ஒன்றை நடாத்திக் கொண்டு, 'றோ'வின் பணத்தில் தமிழ்நாட்டில் உல்லாசமாயிருக்கிறவர். முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் ஆளை ஆள் கண்ணிலே காட்டக் கூடாது என்றாலும் ஈழத்தமிழருக்கு இரண்டகம் செய்வதில் நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போடுவார்கள். சிறிலங்கா ரத்ன 'ஹிந்து' இராமுக்கு இரண்டுமே நெருக்கமான பேர்வழிகள்.

இந்த அகிம்சாமூர்த்திகளில், சந்திரகாசன் ரெலோ இயக்கத்திற்கான றோவின் தொடர்பாளராகவும், மங்கயர்கரசி அவரது மைந்தனின் ரெனா இயக்கத்தின் நிதிப் பொறுப்பாளராகவும் இருந்தவர்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இந்த இரண்டும் கேட்டதற்கு இணங்க, அவைகளை ஈழத்தமிழரின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகளாக ஏற்று, உலகத் தமிழரின் உத்தியோகப் பற்றற்ற தலைவர் கருணாநிதி பதவியை விட்டு விலகவில்லையாம்.

கருணாநிதிக்கும் இவர்களுக்கும் ஒரு ஒற்றுமை இருக்கிறது. இவர்கள் மூவரும் குடும்பத்தை அரசியலுக்கு கொண்டு வந்து அதிகாரத்தை பகிர்ந்து அனுபவிக்க விரும்புவர்கள். ஒருவேளை இந்தத் துறையில் பேராசிரியரான கருணாநிதியிடம் பாடம் கேட்டிருந்தால், இப்படி அநாதரவாய் போகிற நிலமை மற்றய இருவருக்கும் ஏற்பட்டிருக்காது.

**மூன்று புறம்போக்குகள் கருணாநிதியை பதவி விலக வேண்டாம் என்று கேட்டார்களாம். அதனால் இவரும் அந்த எண்ணத்தை கைவிட்டு விட்டாராம். இந்தப் புறம்போக்குகளைப் பற்றி சிலர் அறியாதிருக்கக் கூடும்**

உண்மையில் கருணாநிதிக்கு வாய்த்திருக்கிறது ஒரு நல்ல எதிர்க்கட்சி, கருணாநிதி எதைச் சொன்னாலும் அதை எதிர்த்தே சொல்லுவார் ஜெயலலிதா. அவரைக் காரணங்காட்டியே இயங்காமலிருந்து விடுவார் கருணாநிதி. இருந்தாலும், இப்போது அவருக்கு நெருக்கடியாக இருப்பது தமிழகத்திலுள்ள தமிழின உணர்வாளர்கள். எங்கே அவர்களது உணர்வு பூர்வமான போராட்டங்களால் ஏற்படப்போகும் எழுச்சிப் புயலில் தான் அடிபட்டுப் போய் விடுவேனோ எனப் பயப்பட அவர் ஆரம்பித்துள்ளார்.

இதற்கிடையில் முத்துக்குமார், சீர்காழி இரவிச்சந்திரன் ஆகியோரின் தற்கொடைகள் அவரை உறுத்தத் தொடங்கியிருக்கிறது. இப்போது அவரது கோபம் விடுதலைப் புலிகள் மீது விழுந்திருக்கிறது. தனது கையாலாகாத்தனத்தை மறைக்க (இந்தச் சூழ்நிலையில் எதிர்ப்பேதும் வராது எனத் தெரிந்து கொண்டு) அவர்கள் மீது பாய்ந்திருக்கிறார்.

கருணாநிதிக்கு சற்றும் சளைத்தவர் இல்லை என நிருபித்திருக்கிறார் அவரது வாரிசு கனிமொழி. 48 மணிநேரம் தாக்குதல்களை விலக்குவதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்ததை தங்களது (போர் நிறுத்த) கோரிக்கைகளுக்கு கிடைத்த வெற்றியாக தனது இடைப்பட்டியில் செருக முனைந்திருக்கிறார் கனிமொழி. ஐபிசி வானொலியில், அறிவிப்பாளர் யாத்திராவிற்கு வழங்கிய தொலைபேசிப் பேட்டியில் இவ்வாறு அவர் குறிப்பிட்டபோது, யாத்திரா அவரை இடைமறித்து, அந்த போர் தவிர்ப்பின் சீத்துவக் கேட்டை விளக்கினார். மறுமுனையில் கனிமொழி எதுவும் குறிப்பிட முடியாமல் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டிருந்தார்.

ஈழத்தமிழர் படும் அவலத்தை கருணாநிதி தனக்கு வாய்ப்பாக பயன்படுத்துகிறார் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. இதில் அவர் பதவி விலகித்தான் என்ன காணப் போகிறார்? வேண்டுமானால், வர்ணத் தொலைக்காட்சி பெட்டிகளுக்கு பதிலாக, பதவி விலகலை வைத்தே, அடுத்த தேர்தலில், (தமிழ்நாடு கொங்கிரஸ் தங்கபாலுவின் கூற்றுப்படி) ஈழத்தமிழருக்காக உயிர்விட்ட ராஜீவ் காந்தியின் சோனியா கொங்கிரசுடன் இணைந்து வாக்குக் கேட்கக் கூடும். தவிர, ஈழத் தமிழர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

கருணாநிதியைபதவிவிலகவேண்டாம்என்ற புறம்போக்குகளின் கோரிக்கையை நானும் ஆதரிக்கிறேன். நீங்களும் ஆதரியுங்கள்.

## வாழ விதிக்காதே இறைவா!

ஏது செய்ய நினைத்தாய் இறைவா!
கூறு பட்டழியவோ எம்மினக்
கொடிகள்
யாது செய்வோம் யார்க்குரைத்
தோய்வோம்
நீதி உரைப்பாய் உலகுக்கு நீயே!

எம் குலக் கொழுந்துகள் எரியவோ
தம் கருக்கள் தாயினுள் கருகவோ
வாழ் இளம் பூக்கள் வாழ்வழியவோ
கூன் கிழம் ஓலங்கள் தொடரவோ!

பிறவிப் பெருங்கடல் நீந்திக்
கடந்திடும்
தர்ம விதியெலாம் தவறிப் போகுமோ
பிறவா பேறெலாம் தமிழர்க்
கிலையோ
இறைவா எம்துயர் எவ்விதம்
நீங்குமோ!

உலகெலாம் ஒன்றாய் திரண்டெம்
மீதிலே
கொலைவெறி கொண்டாடுதல்
முறையோ
இலையே எமக்கோர் இடமது
ஒதுங்கிட
அலைவதோ செத்தழிவதுன்
தீர்ப்போ!

தர்ம யுத்தமாம் புரிந்த பாரதம்
சண்டாளராய் மாறிடல் தகுமோ
காருண்யம் கூறிய பௌத்த
நாடெலாம்
கொலைகள் தூண்டுதல் கடவுளே
ஒப்புமோ!

துன்பச் சிலுவைதான் சுமந்தாரே
ஏசுவின்
வழிவந்த உலகுகள் உருகவும்
இலையே
வல்ல பேரரசுகள் வாய்மூடி
ரசிக்கையில்
இல்லையே நீயும் எம்பக்கம்
இறைவா!

இன்றே எமக்காக நீயிங்கு வராவிடில்
கொன்றெம் இனத்தை முழுதும்
துடைத்திடு
ஒன்றேனும் தனித்திட மீதியாய்
வைக்காதே
அறம்செத்த உலகில் வாழ
விதிக்காதே!

*- ஹேமராஜ்*

SRI MUTTU MARIYAMMAN JYOTHIDA NILAYAM
Astrology Center



ஸ்ரீ முத்துமாரி
அம்மன் ஜோதிடம்

ஜோதிடர் :பரத்ராஜ்
சாஸ்திரிகள்
Astro-Palmist

உலகத்தில் உள்ள சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை, தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுவார். கணவன் மனைவி சண்டை, பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை, தொழில், உத்தியோகம், விசா பிரச்சனைகள், இப்படி பல்வேறான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். செய்வினை, பில்லி, சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய், பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் ஓட்டப்படும். கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் எப்போதும் கொழிக்க உதவும் லட்சுமி பூஜை செய்து தருகிறோம்.

An expert pandit at service. Past, Present and Future of your life, will be read over to you from your Numerology, Face reading, Palm reading & Horoscope reading. Prediction in Business, Education, Job, love, Marriege, Family problem children, Divorse, Court problems, Visa requirements, Sickness, Promotion, abroad Money, Removal All types of black magic and evil things by performing prayers.



RRR Cash & Carry
309 -311 London Road, West Croydon, Surrey, CR0 3PA.
Opening Hours: 9.00 a.m – 8.00p.m all 7 days.
SPOKEN LANGUAGES: TAMIL, HINDI, & ENGLISH.
Your Secret matters will be maintain confidently

Contact :- 0794 6599472 / 0794 6599402

# தமிழரால் கொல்லப்படும் தமிழர்கள்

**சுந்தரி**
***(ஒரு பேப்பருக்காக)***

எங்கே? எப்போது? என்று மனம் பதைபதைக்கின்றதா? அந்த தன்னினமானம் உள்ளவர்கள் மட்டும் தொடர்ந்து வாசியுங்கள்.

சிங்கள அரசால் வானத்தில் இருந்து குண்டு போட்டும், சரமாரியாக செல்லடித்தும் எமது தமிழ் இனம் நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டிருக்கிறது. அந்த அழிவில் இருந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்குரிய எல்லா வகையான நடவடிக்கைகளையும் நாம் முன் எடுக்க வேண்டும்.

அதன் ஒரு அங்கமாக கடைகளில் சிறிலங்கா விற்பனைத் திணைக்களத்தின் (Market Department) பொருட்களையோ, அவர்களுக்கு வருமானம் தரக்கூடிய வேறு எந்தப் பொருட்களையோ வாங்குவதையும், விற்பதையும் முற்றாக நிறுத்த வேண்டும்.

சிறீலங்கா வருமானத்தில் பெரும்பகுதி தமிழருக்கெதிரான போருக்காகவே செலவிடப்படுகின்றது. யானைமார்க் சோடாவையோ, போட்டலோவையோ குடிக்காவிட்டால் நாம் ஒன்றும் செத்துப் போய்விட மாட்டோம். இங்குள்ள தமிழ் உணவுக் கடைகளில் லயன் லாகர் வேண்டிக் குடித்தால்தான் எமக்கு சரக்கு தலைக்கு ஏறும் என்றில்லை. சனம் கேட்பதால் நாம் விற்கிறோம் என்றும், கடையில் விற்பதால் நாம் வேண்டுகிறோம் என்றும் ஆளை ஆள் சுட்டிக் காட்டி விட்டு நம் பொறுப்பை தட்டிக் கழிக்கிறார்கள்.

தமிழ் கடைக்காரரைக் கேட்டால் நாம் எமது தாயக மக்களுக்கு எவ்வளவோ உதவி செய்கிறோம் என்கிறார்கள். இப்படிச் சொல்லிக்கொண்டே இப்படியான பொருட்களை விற்பது 'படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்' என்ற மாதிரியில்லை.

என்னோடு வேலை செய்யும் கறுப்பின பெண்மணி சொன்னா, தான் சிறுமியாக இருக்கும்போது தனது தந்தையுடன் கடைக்குப் போனால் அவர் வேண்டுமென்றே ஒரு கூடையில் வேண்டிய பொருட்களும், மற்றொரு கூடையில் தனது நாட்டு அரசாங்கத்திற்கு வருமானம் தரக்கூடிய பொருட்களையும் எடுத்து வந்து பணம் கொடுக்கும் இடத்தில் அடடா ..சீ ..இது இங்கிருந்து வந்த பொருளா.. மன்னிக்கவும் எனக்கு வேண்டாம் என்று அதிலேயே வைத்து விட்டு வந்து விடுவாராம். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டால் ஏதோ என்னால் முடிந்தது இவ்வளவுதான் என்பாராம்.

எமக்கு அந்தப் பிரச்சனையில்லை தமிழருக்கென தமிழரால் நடாத்தப்படும் கடைகளோ ஏராளம் உண்டு. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. தமிழரின் சொல்லும் செயலும் ஒன்றாகட்டும்.

ஈழத்தமிழருக்காக மற்றத் தமிழர்கள் உயிரையே கொடுக்கும் போது, கேவலம் நாவின் சுவைக்கு நாம் அடிமையாவதா? நாம் சோற்றில் உப்பு போட்டுத்தான் சாப்பிடுகிறோமா? இது மட்டுமா அன்று ஒரு நண்பரைச் சந்தித்தேன் அவர் மலிவு என்று மானத்தை அடவு வைப்பதா என்று சீறினார். எம்மவர் நடாத்தும் விமான முகவர் நிலையத்தில் சிறிலங்கா விமானம் தவிர்ந்த ஏதோவொரு விமானத்தில் மலிவா பார்த்து பதிவு செய்து விட்டு, வீடு வந்து சேர்ந்து, பயண திகதிக்கு ஒருநாள் இருக்க விமான முகவர் அடித்து அண்ணை ஒரு பிழை நடந்திட்டுது ஓவர்புக்கிங் என்று உங்கட பயணச் சீட்டை ரத்து செய்து விட்டாங்கள் இனி நேரம் காணது பேசாமல் எயாலங்காவில போட்டுத் தாரன் நீங்க இலவசமாக சிங்கப்பூருக்கும் போட்டு வர வசதி செய்யலாம் என்று சொல்லி கையை விரித்திட்டினம். நானும் அந்தர ஆபத்தில மனசில இருந்த கொள்கையைக் கழட்டி கீழ வைத்திட்டு கூனிக்குறுகி போய்விட்டு வந்திட்டன். ஆனால் வந்த பிறகுதான் பார்த்தால் இதே மாதிரி வேறு ஒருவருக்கும் நடந்தது என்று அறிந்தன். இவையள் ஏயார் லங்காவோடு ஒரு டீல் போட்டு இப்படி கேவலமான பிழைப்பு நடாத்துகிறார்களோ தெரியவில்லை என அங்கலாய்த்துக் கொண்டார். ஏமாந்து போய் விட்டோம் என்ற வருத்தம் அவரில் நன்றாகவே தெரிந்தது.

தமிழர்கள் நாம் தமிழ் உணர்வால் ஒன்றுபட வேண்டும். தமிழ் தேசியம் பற்றிய ஆழமான உணர்வு வேண்டும். அதற்காக நாம் மேலோட்டமாக போராடாது ஆழமான பொறுப்புணர்ச்சியோடு நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களும் அதற்கு உறுதுணையாக இருக்கின்றதா? அல்லது ஊறுகேடாக இருக்கின்றதா? என்று ஆழமாக சிந்தித்து செயல்பட வேண்டும். 'சிறு துளி பெரு வெள்ளம்'.

1990 களில் தொலைபேசியில் 'வணக்கம்' 'யார் கதைக்கிறீர்கள்?' என்றால் என்ன சுத்தத் தமிழில் கதைக்கிறீர்கள் என்று கேட்டவர்களும், நொடிக்கொரு தடவை ம்.ம், யா..யா, ஐ..சீ என்று உம் கொட்டியவர்களும் இப்போ வணக்கம் சொல்கிறார்கள். அட போங்கள் இப்ப வெள்ளைகாரனே எங்கட கடைக்கு வந்தால் வணக்கம்..நன்றி எல்லாம் சொல்கிறார்கள். எல்லாம் சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்று சும்மாவாகவா சொல்லியிருக்கிறார்கள். இது போலத்தான் ஈழம் என்பதுவும்

நாம் ஈழவர்கள், ஈழம் என்பது எமது நாடு. தொன்று தொட்டே தமிழர் வாழ்ந்த நிலப் பகுதியை அழைத்து வந்த பெயர் ஈழம். ஈழம், ஈழவர்கள் என்று சொல்ல நாம் தயங்க வேண்டியதில்லை. அது தடை செய்யப்பட்ட பெயருமல்ல. இன்னம் சொல்லவேண்டுமானால் அதை நாம் பரவலாக பாவிக்க வேண்டும். பேச வேண்டும்.

லண்டனில் கரோ பகுதியில் ஈழவன் cash & carry என்னும் ஒரு கடையுள்ளது. அந்தப் பெயருக்காக நான் அந்தப் பகுதிக்கு போகும் போதெல்லாம் அங்கு பொருட்கள் வாங்குவதுண்டு. நமது தமிழ்க் கடை பெயர் பலகையில் இலங்கை மரக்கறி என்பதற்கு பதிலாக ஈழமரக்கறி, இந்தியன் சிறீலங்கன் foods என்பதற்கு பதிலாக இந்தியன், ஈழம் foods என்று போடவேண்டும். கொஞ்ச நாளைக்கு "what is Eelam means?" என்று கேட்பவர்கள் கூட நாளைடைவில் Shall we go to Eelam restaurant? .. Do you fancy Eelam foods? என்று கேட்கத் தொடங்கி விடுவார்கள்.

எல்லாம் எம் கையில், எம் ஈழமக்கள் கையில் தான் உள்ளது. சென்னை என்று இருந்தது தமிழ்நாடாக மாறவில்லையா? அது போல நாம் நினைத்தான் நடக்கும். நடத்திக் காட்டுவோம்.

### நெஞ்சத்துக் காதல் ...

கடலலையிலிருந்து
கிளிஞ்சல் பொறுக்கி
பாவாடையில் சேமிக்கும்
சிறுமியாய் சேகரிக்கிறேன்
உனக்கும் எனக்குமான
நம் காதலை
நெஞ்சுக்குள்...
காலை ஒட்டிக் கொண்டு
உதிர மறுக்கும்
கடற்கரை மண்ணாய்
இறங்க மறுக்கிறது
உன் காதல்...
அலை துரத்தும் சிறுமியாய்
என்னைக் காதலில்
துரத்துகிறாய்
நீ என்னை நினைப்பதும்
நான் என்னில் விழுவதும்
சாத்தியமா?

*-சிறீமதி*


**ELC Solicitors** Understanding your needs...

**சட்டத்தரணிகளின் அடிப்படைத் தகைமைகள் என்ன?**

- வாடிக்கையாளர்களின் நலனில் முதற் கவனம்.
- பல மொழிகளில் தேர்ச்சி.
- எப்போதும், எவரிடத்தும் பாரபட்சம் பாராத நேர்மை.
- தகுதி, திறமை, மதிப்புமிக்க உயர்தரம்.
- வெற்றி ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாதவர்கள்.

இத்தனைத் தகைமைகளும் கொண்ட சட்டத்தரணிகள் இருக்கும் ஒரு நிறுவனம்.

**Don't just take our word for it ...**

"...This is to say a big thank you for your fast and professional way of dealing with my case. I think the service was excellent - I will definitely use you in the future and recommend the company to family & friends."

- *Karen Sommers*

As a well established firm whose reputation precedes us, superior client care is at the heart of our philosophy.

Our highly skilled, multi-lingual team provide honest and impartial advice, seeking always to act in your best interests.

We are Law Society Lexcel accredited, an honour bestowed on only 4% of law firms nationwide.

அனைத்து விதமான immigration பிரச்சனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**SPECIALISTS IN:**

- Residential Conveyancing
- Re-mortgages
- Commercial Conveyancing
- Family Law
- Debt Recovery
- Civil Litigat ion
- Immigration

**COMPETITIVE PRICES - EXPERT ADVICE - QUALITY SERVICE**

**CALL US TODAY!**

**0800 027 8977**


ELC Solicitors

Understanding your needs...

St James House
105-113 The Broadway
West Ealing, London W13 9BE

**www.elcsolicitors.com**

# இயன்றதைச் செய்வோம் அதை இன்றே செய்வோம்



மணிவாசகன்
(ஒரு பேப்பர்)

தமிழர்களது வரலாற்றில் மிகவும் கடினமான, துயரங்கள் சோய்ந்த, இரத்தத்தில் நனைந்த ஒரு கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஈழத்திலே அப்பாவித் தமிழ் மக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் ஆட்டிலெறித் தாக்குதல்களிலும் வான் குண்டுத் தாக்குதல்களிலும் தினமும் பலர் கொல்லப்படுகிறார்கள். இன்னும் பலர் அங்கவீனமாக்கப்படுகிறார்கள். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க வேண்டிய வைத்தியசாலைகளைக் கூட 'இராணுவ இலக்கு' என்று சொல்லித் தாக்கும் கொடூரம் நடந்து கொண்டிருக்கிறது.

யுத்த தர்மம், மனித தர்மம் என்ற எதனையும் அறிந்திராத, எதனையும் மதிக்காத ஒரு கொடூரமான ஆட்சி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது

அந்த அராஜகங்களையும் கொடூரங்களையும் கண்டு புலத்திலே வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் (ஒட்டுக்குழுக்களைச் சேர்ந்த ஒரு சிலரைத் தவிர) கொதித்துப் போயிருக்கிறார்கள்.

தமது உறவுகளை அவலச் சாவிலிருந்து காக்க வேண்டும் என்ற உத்வேகத்தின் விளைவாக புலம் பெயர் நாடுகள் பலவற்றிலும் பலவிதமான போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆர்ப்பாட்டப் பேரணிகள், மனிதச் சங்கிலிப் போராட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் எனப் பலவகையான போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடும் குளிரையும் பொருட்படுத்தாது பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் வயது வித்தியாசமினறி ஒன்று திரண்டு சிங்களத்தின் இன அழிப்புக்கு எதிரான கோசங்களையும் அந்த இன அழிப்பைக் கண்டும் காணாமலும் இருக்கும் சர்வதேச நாடுகளைக் கண்திறக்கக் கோரியும் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

ஆனாலும் கடந்த சில தினங்களாக இது தொடர்பாக நடத்தப்படும் போராட்டங்களின் எண்ணிக்கையிலும் அதில் கலந்து கொள்பவர்களின் தொகையிலும் இந்தப் போராட்டங்களுக்கு ஊடகங்கள் வழங்கும் பிரச்சாரத்தின் அளவிலும் ஒரு தொய்வு ஏற்பட்டிருக்கினறது.

தமது போராட்டங்களின் பின்பும் கண் திறக்க வேண்டியவர்களின் கண்கள் மூடப்பட்டே இருக்கின்றதே என்ற ஆதங்கமும் தமது போராட்டங்களும் உழைப்பும் விழலுக்கிறைத்த நீராகி விட்டனவே என்ற வெறுப்பும் தமது நியாயபூர்வமான கோரிக்கைகளும் வேண்டுகோள்களும் ஏற்றுக் கொள்ளப்படப் போவதில்லை என்ற அவநம்பிக்கையுமே இதற்கான காரணம் என்று தெரிகின்றது.

நாங்கள் கையாலாகாதவர்களாகி விட்டோமே, எங்கள் மக்களைக் காக்க எங்களால் எதுவும் செய்ய முடியவில்லையே என்று ஆதங்கப்படுபவர்களே! உங்களுக்காக ஒரு குட்டிக் கதை

ஒரு காடு தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. தீ எங்கும் பரவி பெரும் நாசத்தினை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அத்தருணத்தில் அங்கு வாழ்ந்து வந்த மிருகங்கள் மற்றும் உயிரினங்கள் அனைத்தும் அந்தக் காட்டிலிருந்து அவசரமாக வெளியே வந்தன.

ஓடி வந்த மிருகங்கள் அனைத்தும் காட்டிற்கு வெளியில் நின்று கொண்டன. தீயை அணைக்கும் முயற்சியையோ தாம் வாழ்ந்த காட்டை காப்பாற்றும் எண்ணத்தையோ அவை கொண்டிருக்கவில்லை. அதற்கான காரணம் என்னவென்றால் அங்கு ஏற்பட்டிருந்த தீ யைக் கட்டுப்படுத்துவது என்பது தமது சக்திக்கு அப்பாற்பட்டது என்ற எண்ணமேயாகும்.

ஆனால் அங்கிருந்த பாடும் பறவையொன்று (Humming Bird) மட்டும் உடனடியாகச் செயற்பட ஆரம்பித்தது.

அது அருகிலிருந்து குளம் ஒன்றுக்குச் சென்று அங்கிருந்து தன்னால் எடுத்து வர முடிந்த ஒரு துளி நீரை உதடுகளால் எடுத்து வந்து கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த அந்தக் காட்டுத் தீயின் மீது ஊற்றியது. தனது முயற்சியில் சற்றும் தளராது அந்த Humming Bird தொடர்ந்து குளத்திற்கும் காட்டுக்குமாகப் பறந்து பறந்து நீரினை விசிறிக் கொண்டிருந்தது.

இந்தப் பாடும் பறவையின் செயலை அங்கு கூடியிருந்த மற்றைய உயிரினங்கள் ஏளனம் செய்தன. அதனுடைய முயற்சியை விழலுக்கிறைத்த நீர் எனக் கூறி எள்ளி நகையாடின. யானை, சிங்கம், புலி உள்ளிட்ட இந்தப் பெரிய மிருகங்களின் ஏளனத்தைப் பொருட்படுத்தாது அந்தச் சிறிய பறவை தன்னுடைய நடவடிக்கையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது.

பலம் வாய்ந்த தம்மைப் போன்ற மிருகங்களே எதுவும் செய்ய முடியாது என உணர்ந்து மௌனித்து இருக்கும் போது இந்தச் சிறிய பறவையால் எதனைச் சாதித்து விட முடியும் எனத் தொடர்ந்து ஏளனம் செய்த அந்த மிருகங்கள் அந்தச் சிறிய பறவையை வழி மறித்து ஏய் சின்னப் பறவையே! என்ன வேலை செய்து கொண்டிருக்கிறாய். கொழுந்து விட்டெரியும் இந்தப் பெரிய தீயைக் கண்டு பலம் வாய்ந்த நாங்களே சும்மா பயந்து போய் இருக்கும் போது நீ மட்டும் பெரிதாக எதனைச் சாதித்து விடப் போகிறாய். பேசாமல் எங்களுடன் இருந்து விடு என்று கூறின.

அதற்கு தொடர்ந்து தன் கடமையைச் செய்தவாறு அந்தப் பாடும் பறவை பின்வருமாறு பதில் சொன்னது.

'நான் என்னால் முடிந்ததைச் செய்கிறேன்.' (I am doing the best I can).

பலம் வாய்நத மிருகங்கள் பல எதுவும் செய்யாமல் வாழாவிருந்த போதும் தன்னால் சாதிக்கக் கூடியது மிகச் சிறிய அளவே என்று தெரிந்து கொண்டும் த்ன்னால் ஆனதை உடனடியாகச் செய்யத் தொடங்கிய அந்த Humming Birdஜப் போலவே புலம்பெயர் வாழ் நாடுகளில் வாழும் தமிழர்கள் அனைவரும் எம்மால் இயன்ற ·அனைத்தையும் எமது முழு வளங்களையும் பயன்படுத்திச் செய்ய வேண்டும்.

இதன் மூலமே மரணத்தின் வாசலில் நிற்கும் எம் தமிழ் உறவுகளை அந்தக் கொடூரர்களின் பிடியில் இருந்து மீட்டெடுக்க முடியும். நாம் தாமதிக்கும் ஒவ்வொரு விநாடியும் தாயகத்தில் ஒரு தமிழனின் உயிர் அநியாயமாகக் காவு கொள்ளபபடுகிறது என்பதை நினைவில் கொள்வோம்




Abra Wholesale Ltd
WHOLESALE LTD
SPECIAL OFFERS IN ABOUNDANCE...
'We Lead Others Follow'
Today's
JINGLE TILLS, JINGLE TILLS ALL THE WAY TO THE BANK
O WHAT FUN IT IS TO SHOP WITH OUR
CHRISTMAS PROFIT BOOSTERS
12 x 500ML £6.99
£7.89 24 X 380ML
24 X 250ML £11.99
Unit Price 55p Only
12 X 1.5LTR £4.89 Unit Price 41p Only
24 x 500ML £4.99 Unit Price 21p Only
24 X 330ML NRB £8.89 Unit Price 37p Only
24 X 330ML £3.49 Unit Price 15p Only
12 x 330ML £5.49
12 X 1LTR £6.49
12 x 500ML £4.49
COKE PM £1.65 6 X 2LTR £5.49 Unit Price 92p Only
27 X 288ML £7.29 Unit Price 27p Only
24 x 500ML £10.89
6 X 2LTR £5.69
24 x 330ML £5.29
24 X 330ML £3.79 Unit Price 16p Only
AAA - 10 X 4'S £9.89
AA - 20 X 4'S £19.69
Unit Price 99p Only
Unit Price 98p Only
SILVER K/S SLIM 10'S £13.69
BLUE K/S 50'S £9.49
12 X 500ML £3.99 Unit Price 33p Only
FOAM 6 X 200ML £4.49
12 X 16'S £1.39
Unit Price 11p Only
GREEN / RED STD - 100'S £9.89
4 X 14'S £4.89 Unit Price £1.22 Only
12 x 12'S £11.49 Unit Price 96p Only
5 X 500ML £4.59 Unit Price 92p Only
SLIMLINE FILTER 10'S £1.99 Unit Price 19p Only
12 X 250ML £4.99
12'S £4.89 Unit Price 49p Only
6 X 160ML £13.49 Unit Price £2.25 Only
12 X 100ML £4.99 Unit Price 42p Only
10 X 4'S £13.99 Unit Price £1.40 Only
12'S £4.29 Unit Price 36p Only
6 X 50G £8.69 Unit Price £1.45
20 X 450G £12.89 Unit Price 64p Only
6 X 150ML £7.99 Unit Price £1.33 Only
12 X 40'S £8.99 Unit Price 75p 0% VAT
6 X 100ML £8.99
48 X 34.5G £7.99 Unit Price 17p Only
12 X 43G £3.49 Unit Price 29p Only
24 X 45G £4.99 Unit Price 21p Only
T24 £5.99 Unit Price 25p Only
48 X 49G £13.99 Unit Price 29p Only
48 X 52G £11.79 Unit Price 25p Only
5 X T16 £9.99
UNIT 9P - H KYNOCH ROAD, ELEY ESTATE, EDMONTON, LONDON, N18 3BD.
Tel - 020 8887 9303
Fax - 020 8887 9304
E-mail - sales@abrawholesales.co.uk
Web - www.abrawholesales.co.uk
CUSTOMER ENTRANCE & CAR PARK IN ELEY ROAD
WHERE TO FIND US
We are open 7 days a week.
Monday - Friday 8.00am - 8.00pm,
Saturday & Sunday 9.00am - 3.30pm
Bank holidays 9.00am - 3.30 pm
Closed Christmas day, Boxing day and New Year's day.
ALL MAJOR CARDS ACCEPTED
* ALL PRODUCTS ARE SUBJECT TO GOVERNMENT SUBSIDY, DUTY, AND AVILABILITY.
* WE HAVE THE RIGHT TO RESTRICT QUANTITIES IF NECESSARY. E & O. E

# இனிப் புலிகளை ஒ(அ)ழிக்கேலாதாம்!

எல்லோருக்கும் வணக்கம் பிள்ளையள். எப்பிடிச் சுகமாய் இருக்கிறியளே... நாட்டு நடப்புக்கள் நாளுக்கு நாள் மாறிக் கொண்டு போகுது பாருங்கோ. இந்தா வெட்டுறம், இந்தா புடுங்குறம், இந்தா பிரட்டுறம், இந்த மாசத்தோடையே பூண்டோடை கொழுத்துறம், இனி உவையளாலை ஒரு மயிரையும் புடுங்கேலாது எண்டு ஒரு கூட்டமும், உந்தப் புலுடாக்கள் ஏதும் எங்கடை அடுப்பிலை வேகாது எண்டு இன்னொரு கூட்டமும் கதை விட்டுக் கொண்டிருக்கீனை பாருங்கோ.

இது பிள்ளையள் நவீன குரு சேத்திரம், இங்கையும் தருமம் தான் வெல்லும். அதர்மம் ஒரு நாளும் வெல்லாது. அப்படி அதர்மம் வெண்டது மாதிரிச் சரித்திரம் ஏதுமில்லைப் பாருங்கோ. உந்தப் பட நடிகர் அசித் குமாரிண்டை பஞ்சிலை சொல்லுறதெண்டால் 'இப்ப ஆர் வெல்லீனம் எண்டது முக்கியமில்லை. கடைசியிலை ஆர் வெல்லீனமெண்டடது தானாம் முக்கியம்.

பலமிழந்து போட்டீனம், இனிமேல் உவையள் பாய மாட்டீனம், படுத்திட்டீனம் எண்டதெல்லாம் வெறும் புலுடாவும், பம்மாத்தும் பாருங்கோ. என்ன தான் இருந்தாலும் எப்பவோ ஒரு நாள் புலி தன்ரை குணத்தைக் காட்டியே தீரும். அப்ப உவையள் எல்லோருக்கும் விளங்குது. உண்ணாணைச் சிரிக்காதேங்கோ பிள்ளையள். மகிந்த அண்ட் கோ ஒரே மேசையிலை சாப்பிடையிக்கை சொறி மசிந்தவும் அவரிண்டை கூட்டாளி மாரும் ஒரே மேசையிலை சாப்பிடையிக்கை சொல்லிச் சிரிப்பீனம் எப்பிடித் தெரியுமோ....

'அண்ணை மசிந்தா! நான் இந்தக் கிழமையிலை விட்ட பெரிய பகிடி என்ன வெண்டு தெரியுமோ?'

இன்னும் பதினைஞ்சு நாளையிக்கை புலிகளை ஒழிக்கிறமெண்டு உந்தச் சனத்தைப் பேக்காட்ட அறிக்கை விட்டது தான். இப்படிக் கோத்தா சொன்னதும் பக்கத்திலை இருக்கிற தவில் ராசா பக்ஸ, பெண்சேகா, உதய நாணயக் கயிறா எல்லோரும் மூச்சா போற அளவுக்கு விழுந்து விழுந்து சிரிப்பீனம் பாருங்கோவன். அவையளுக்குத் தெரியும் உதெல்லாம் நடக்காத விசயமெண்டு?? அது தான் தாங்கள் விட்ட பகிடியளை நினைச்சுத் தாங்களே சிரிக்கீனம்...

அவையளுக்குத் தெரியும் பிள்ளையள் அவையள் சொல்லுறது உண்மையில்லை. பெரிய பகிடி தானெண்டு. ஆனாலும் என்ன செய்யுறது? உந்தச் சிங்களச் சனத்தை ஏமாத்த வேணுமெல்லோ? அது தான்? எப்பவோ ஒரு நாள் தங்களை முட்டாளாக்குதெண்ட குட்டு வெளியிலை வந்ததும் எல்லாச் சனமும் ஒண்டு திரண்டு மசிந்த கூட்டத்துக்கு மொத்து மொத்தெண்டு மொத்தும் பாருங்கோவன்.

அப்ப விமல் வீராவேசா லண்டனுக்கும் கோத்தா, பெண் சேகா அமெரிக்காவுக்கும் ஒரே ஓட்டமா ஓடுவீனம் பாருங்கோவன். தலை தப்பினால் தம்பிரான் புண்ணியமெண்டு... ஆனால் எனக்கொரு கவலை பிள்ளையள்? உவர் மசிந்தாவுக்கும் வேறை நாட்டுக் குடியுரிமை இருக்கோ இல்லையோ எண்டு தான்? உப்பிடி ஏதும் உவருக்கு இல்லையெண்டால் ஆராவது நல்ல மனம் படைச்சவையள் இருந்தால் எங்கையாவது கருணைக் கொலைக் கடத்தல் செய்யுறவைக்கும் குடியுரிமை குடுத்தால் எடுத்துக் குடுங்கோவன்??

உந்த மாதிரி வேரோடை அழிக்கிறம், பூண்டோடை புடுங்கிறம், எண்டது மாதிரியான எண்டை காதும் அலுத்துப் புளிச்சுப் போச்சுப் பிள்ளையள். உப்பிடித் தான் வருச இறுதிக்குள்ளை புலிகளை அழிச்சு வாசல் முழுதும் சிங்கக் கொடி ஏத்துறம் எண்டு சொல்லியே இப்ப புது வருசம் பிறந்து ரெண்டு மாசமும் போட்டுது.

உந்த வருச இறுதியெண்டு உவையள் சொன்னது போன வருசத்தைப் பாருங்கோ.

'புலிகளை அழிக்கலாம்!
புலிகளை ஒழிக்காலம்!
புலிகளை மடக்கலாம்!
புலிகளைச் சிதைக்கலாம்!
புலிகளைக் கரைச்சும் குடிக்கலாம்!

குடிச்சு முடிய எல்லோரும் குடல் வெடித்துக் கிடப்பீங்கள்!

உப்பிடிச் சொன்னது எங்கடை புதுவை இரத்தின துரையார் பாருங்கோ. அது தானே இப்ப நடக்குது??

இனியும் பொடியள் அடிப்பீனமெண்டு அவங்களோடை இருக்கிற சனத்தின்ரை நம்பிக்கையும் வீண் போகுமே பிள்ளையள்? உந்தளவு சனமும் நினைச்சால் பொடி யளை உதறித் தள்ளிப் போட்டு ஆமியிட்டை வரேலாதே? செத்தாலும் பொடியளோடை இருப்பம். எப்பவோ ஒரு நாள் பொடியள் அடிப்பீனம் எண்டு தானே நம்பிக்கையோடை இருக்கீனம்? அப்ப உந்தச் சனத்தின்ரை நம்பிக்கையள் வீண் போகுமோ?? என்ன சொல்லுங்கோவன்? அடி இனித் தான் இருக்கு.

பொடியள் அடிக்க மாட்டீனம் எண்டு தெரிஞ்சால் சனம் ஏனாம் அவங்களோடை இருக்க வேணும்? எல்லாத்துக்கும் விரைவிலை நல்ல பதில் கிடைக்கும். சில வேளை நாளை கூட நல்ல சேதி வரலாம்...

இப்ப பெரும்பாலான ஆட்களுக்கு பெரும் பான்மைக் காறார் உச்சி குளிரச் சொல்லுற வசனத்தைக் கேட்டுக் கேட்டுச் சந்தோசம் பொங்குது பாருங்கோ.

பிரபாகரன் வெளி நாட்டுக்கு ஓடிட்டார், பிறகு மற்றத் தளபதிகள் எல்லோரும் மண்டையைப் போட்டுட்டீனம் எண்டு பல பல புலம்பல்கள் பாருங்கோ. அதுக்கை ஒரு சில காளான்கள் காயப்பட்ட பொடியளையேக் காப்பாற்ற வேறை வழி இல்லாமல் சயினைட் குப்பியைக் கடிச்சுச் சாகச் சொல்லுறாங்கள் எண்டு கதையளக்கீனம் .

உந்த வயித்தெரிச்சல் விழுவாற்றை கதையைக் கேட்டு நம்பினீங்கள் எண்டால் உலகத்திலை உங்களை விட அதி முட்டாள் வேறை யாரும் இருக்க மாட்டீனம் பிள்ளையள்.

எண்டை கூட்டாளி ஒருத்தர் எனக்கொரு வீடியோ ஒண்டை அனுப்பினார். அது உலகத்தின்ரை அடுத்த மூலையிலை உள்ள சிறு பான்மை மக்களை அடக்கி வைச்சிருக்கிற ஒஸ்ரேலியா வின்ரை ஒரு ரீ.வி.யிலை எடுத்துப் போட்ட பேட்டி பாருங்கோ.

அதுவும் ஒஸ்ரேலியாவிலை உள்ள முன்னணி ஆங்கிலத் தொலைக்காட்சியாம். பேட்டி குடுத்தவர் வேறை ஆருமில்லைப் பாருங்கோ 'சிசிர ஜெயசூரிய எண்ட' எங்கடை யாலுவா தான். மனுசனும் உண்மையை உண்மையாகவே ஒளிவு மறைவிண்டிச் சொல்லியிருக்கெண்டால் பாருங்கோவன்.

அதுவும் புலிகளாலை இனி மேல் ஏதாவது அடிபாடு செய்ய ஏலுமோ எண்டு கேட்கிற எல்லோருக்கும் இது நல்ல படிப்பினையா அமையுமெண்டு நினைக்கிறேன். புலிகளை அழிக்கிறதெண்டது முடியாத காரியமாம், நடக்காத காரியமாம், இலங்கை அரசாங்கம் செய்யுற வேலை துப்பரவா உதவாத வேலையாம் பிள்ளையள். பேட்டியிலை வாற எல்லா விசயத்தையும் கிழவன் சொன்ன ால் அதிலை பாருங்கோ சுவாரசியம் இருக்காது. அப்ப அதை நேரடியாகவே உங்கடை பார்வைக்கு விடுறன். (http://www.youtube.com/watch?v=kVRvfeErbq4)

வேறை என்ன பிள்ளையள்? மனுசன் ஏதோ நீதிக்காக தன்ர பக்க கருத்தை நல்ல வழியிலை சொல்லிப் போட்டுது. இனிச் சிறீலங்கா போனால் தான் அவருக்கு பயங்கர அலுப்பிருக்கும் எண்டு நான் நினைக்கிறன். ஏன் தெரியுமோ கோத்தபாசா கூட்டம் இதைப் பார்த்ததும் பொங்கியிருப்பீனம் தானே??

உதுக்குத் தான் சொல்லுவீனம், எல்லாச் செம்மறியும் ஒரே பாதயிலை ஓடையிக்கை விசயமறிஞ்ச செம்மறி மட்டும் தனக்குத் தெரிஞ்ச வேறை வழியிலை ஓடி முன்னேறுமாம். ஏன் தெரியுமோ? இதுக்கு மட்டும் தான் வித்தியாசமான அறிவாம். அப்ப நான் வரட்டே??

*- சக்(ங்)கடத்தார்*

## என்ன செய்வோம்


தமிழீழத்தில் எம்மக்கள் பலர் நாள்தோறும் கொல்லப்படுகிறார்கள். இப்போது இடைத்தங்கல் முகாம் என்ற சிறைச்சாலைக்குள் பல வருடங்களாக அடைத்து வைக்கப்பட போகிறார்கள். இதற்கெல்லாம் எங்களால் என்ன செய்ய முடியும் என்று நாங்கள் கையை கட்டிக் கொண்டு சும்மா இருக்கப் போகி றோமா?

நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? என்ன செய்ய இயலும் என்று நாள் தோறும் நாம் யோசிப்போம். அதிக நாட்கள் இல்லை அவசரமாக யோசிப்போம். அக்கம் பக்கம், அயலட்டை, உற்றார் உறவினர், நண்பர்கள் என்று எல்லோரிடமும் கலந்துரையாடுவோம்.

ஏதாவது நாம் செய்ய வேண்டும். அதைப் பற்றியே யோசிப்போம். என் ஒருவனால் ஏதும் செய்யும் என்ற நம்பிக்கையுடன் களத்தில் இறங்குவோம்.

வெற்றி நிச்சயம்.

*- மகேசன்*

Experienced Expertise
only a phone call away

One-off specific instructions are welcome, You can keep your own accounts, but we can provide extra help to tackle problems with Inland Revenue and Customs & Excise.

We are specialists in solving Tax Investigations, Negotiations & Settlements.

- Tax Solutions
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation

- Chartered Accountants & Registered Auditors
- Accountancy / Audit / Business Startup & Consultancy
- Solicitors Rules Audit

- IT Solutions Supply
- Install, Advice / Train & Support
- IRIS, SAGE, MYOB, DELL
- up to 40% discount on retail prices

- Licensed Insolvency Practice, Liquidation and for all insolvency advice.

For FREE initial consultations, contact: David Beckwith, Sabia Sahota or Ananthan Arnold

BBK Partnership
Chartered Accountants & Business Strategic Solutions

1 Beauchamp Court, Victors Way, Barnet, Herts EN5 5TZ
Telephone: 020 8216 2520 Fax: 020 8216 2521
Web: www.bbkca.com

Dosa n Chutny

Presents

**World Famous**

# SONA FAMILY

## Live Music

in Croydon Branch

on 21st feb 2009

**(between 7.00pm to 11.00pm)**

Dosa n Chutny

SOUTH INDIAN & SRILANKAN RESTAURANT

**We Serve Special Set Meal for the Dinner**

Celebrate your Valentine's day in Croydon Branch and Enjoy the Live Music

on 14th feb 2009

**(between 7.00pm to 11.00pm)**

Book it now

**BRANCHES**

**TOOTING**
68, Tooting High Street, London SW17 0RN
*( Opposite to Tooting Broadway Tube station )*
**Tel : 020 8767 9200**

**CROYDON**
466 London Road, Croydon CR0 2SS
*( Near to Mayday Hospital )*
**Tel : 020 8767 9200**

**HARROW**
247 Northolt Road, South Harrow, Middlesex HA2 8HR
*( Near to South Harrow Station )*
**Tel : 020 8426 5511**

www.dosanchutny.co.uk.

# அறம் வெல்லும் என்றால் நாங்களும் வெல்வோம்

எழுபரிதி
(ஒரு பேப்பருக்காக)

"How can we continue to tolerate the behavior of some Permanent Members of the Security Council that so often contradicts the spirit and the letter of the Charter which they are obligated to uphold and defend?" H.E. Father Miguel d'Escoto Brockmann, President of the 63rd Session of the General Assembly

'ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்தவர்களாக இருக்கும் சில நாடுகளே, தாங்கள் ஏற்றுக் கொண்ட சாசனத்தின் உள்ளார்த்தத்துடன், முரண்பட்டு கொள்ளும் நடைமுறையை கொண்டிருப்பதனை, எவ்வாறு நாம் தொடர்ந்து ஏற்றுக் கொள்வது? இவ்வாறு கேட்டிருப்பவர் ஐ.நா. பொதுச் சபையின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அருட்தந்தை மிகாயுல் டாக்கொஸ்தோ புரொக்மன். முன்னர் நிக்ரோகுவா நாட்டின் வெளிவிகார அமைச்சராகவிருந்த மிகாயுல் அவர்கள் சான்டினிஸ்ரா தேசிய விடுதலை முன்னணியில் (FSLN) முக்கிய புள்ளியாகவும் இருக்கிறார். அவர் கேட்கிற கேள்வியைப்போன்றுதான், 'சிறிலங்காவின் தமிழினவழிப்பு நடவடிக்கைகளுக்கு, சர்வதேச நாடுகள் துணை போகிற போது, நாங்கள் யாரிடம் போய் நீதி கேட்பது?' என்று ஈழத் தமிழர்கள் கேட்கிறார்கள்.

கடந்த இரண்டு வாரங்களில், சர்வதேச மட்டத்தில், ஈழத் தமிழர்கள் தொடர்பில், பல அரசியல் நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றன. புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள், பல ஆயிரமாய் வீதிக்கு இறங்கி கவன ஈர்ப்புப் போராட்டங்களை நடாத்தினார்கள். மனிதச் சங்கிலிகளாக நீண்டு நின்றார்கள். சர்வதேச ஊடகங்கள் 'காசா'வுக்கும் 'டாரபுர்' க்கும் கொடுக்கிற முக்கியத்துவத்தை கொடுக்கவில்லை என்றாலும் ஏனோ தானோ என்று ஒன்றிரண்டு தரம் இந்த விடயத்தையும் சேர்த்துக் கொண்டார்கள்.

யாருடைய கவனத்தை ஈர்க்கவேண்டும் என நாம் நினைத்தோமோ, அவர்களது கவனத்தை ஈர்த்தாகி விட்டது. ஆனால் அவர்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கையைத் தான் காணோம் என்பதுதான் ஈழத்தமிழர்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

இணைத்தலைமை நாடுகள் என்று சொல்லிக் கொள்ளுகிற சிறீலங்காவுக்கு உதவிவருகிற நாடுகள், விடுதலைப்புலிகளை தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சிங்கள அரசிடம் சரணடையச் சொல்கிறார்கள்.

பேச்சுவார்த்தை நாடகத்தில் சமாதானப் புறா வேடமேற்றிருந்த எரிக் சுலைய்ம் கூட, விடுதலைப் புலிகளுக்கு வேறு வழியில்லையாம், சிங்களப்படைகளிடம் ஆயுதங்களை கையளித்துவிட்டு அவர்களது காலில் விழ வேண்டும் என 'அறிவுரை' சொல்கிறார்.

அமெரிக்க இராஜங்க அமைச்சர் கில்லரி கிளின்ரனும், பிரித்தானிய வெளிவிகாரச் செயலர் டேவிட் மிலிபான்ட்டும் கூட்டாகச் சேர்ந்து அறிக்கை விட்டார்கள். இலங்கைத்தீவு விடயமாக பிரித்தானிய பாராளுமன்றத்திலும், கனேடிய பாராளுமன்றத்திலும் விவாதித்தார்கள். ஐ.நா பாதுகாப்புச் சபையில் மெக்சிக்கோ இலங்கைப் பிரச்சனையை முன்வைக்க, ரஷ்சியா அதனை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள விடாமல் தடுத்து நிறுத்தி விட்டது.

**யாருடைய கவனத்தை ஈர்க்கவேண்டும் என நாம் நினைத்தோமோ, அவர்களது கவனத்தை ஈர்த்தாகி விட்டது. ஆனால் அவர்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கையைத் தான் காணோம்**

இவைஎல்லாம் நடந்து அமளி ஓய்ந்துவிட்டது. ஆனால் வன்னியில் எங்கள் மக்களின் அவலக் குரல்தான் இன்னமும் ஓயவில்லை. சிங்கள இராணுவத்தின் தாக்குதலில், நாளுக்கு 30, 40 பேர் என எங்கள் மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. அங்கு மக்கள் படும் அவலம் அதிகரித்துச் செல்கிறது, அவர்களுக்கு சிறிதேனும் ஆறுதலாய் இருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும், அவர்களை கைவிட்டு விட்டு மாத்தலனில் படகேறி திருகோணமலைக்கு சென்று விட்டார்கள். மிச்சமிருக்கிற சுகாதார ஊழியர்களையும் அங்கிருந்து வெளியேறி விடுமாறு, கொழும்பு அரசு அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

இனி, அங்கேயிருக்கிற மக்கள் என்ன செய்வார்கள்? தங்களிடம் வந்து விடுங்கள் உங்களை தடுப்பு முகாம்களில் வைத்து பாதுகாக்கிறோம் என்று நாசிக்களின் பரிவுடன் சிறிலங்கா அரசாங்கம் அழைக்கிறது. போய் விடுங்கள், முகாம்களில் போய் நீங்களாகவே அடைபடுங்கள் அதுதான் எல்லோருக்கும் நல்லது என்று சில நாடுகளும், சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளும், ஆலோசனை கூறுகின்றன. வன்னியில் வசதியோடு, சுதந்திரமாக வாழ்ந்த எங்கள் மக்களை தங்க வைக்க வவுனியாவில் கூடாரங்கள் தயாராயிருக்கின்றனவாம். இனி என்ன அடிமைகள் தானே எங்கிருந்தால் என்ன?

உண்மையில், ஈழத்தமிழரின் அண்மைக் கால வரலாற்றில், இந்தளவுக்கு வேதனையான நிலை இதுவரை வரவில்லை. ஈழத்தில் தமிழ் இராச்சியத்தை போத்துக்கீசர் அழித்தொழித்ததிற்கு பின்பு இப்படியொரு நிலமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு புறம் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்து செய்வதறியாது நிற்கும் மக்கள் மீது தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. அவர்களின் எதிர்காலம் மட்டுமல்ல, அடுத்தடுத்த நிமிடங்களில் அவர்களது இருப்பே கேள்விக் குறியாகியுள்ளது. மறுபுறம் எக்காளத் தொனியுடன் வெற்றிவிழாக்கள் சிங்களப் பகுதிகளில் நடாத்தப்படுகின்றன. பதவிவெறியின் உச்சத்தில் இராஜபக்ச சகோதரர்கள் உளறித் தள்ளுகிறார்கள். இனக்கலவரகாலத்தில் இருந்தது போல், சிங்கள பௌத்தர்கள் என் போர் வெறியுடன் அலைகிறார்கள் ஒட்டுக் குழுக்களின் தலையாரிகளும் தங்கள் பங்குக்கு உளறி மக்களை வேதனைப்படுத்துகிறார்கள். சில தமிழ் புத்திசீவிகளோ, தாங்கள் இவற்றில் ஒட்டாதவர்கள் போல், போருக்கு பின்னான நிலவரம் பற்றி ஆய்வு செய்கிறார்கள்.

ஆனாலும் எங்கள் மக்கள் அசையவில்லை. அதனால், அவர்களை விடுதலைப் புலிகள் மனிதக் கேடயங்களாகப் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்ற பிரச்சாரம் தொடர்ந்து நடக்கிறது. கனவான்களே, சீமாட்டிகளே, நீங்களே, நேரில் போய்ப் பார்த்தால் என்ன என்று தயவாய் கேட்டால், விருப்பம்தான், சிறிலங்கா அரசாங்கம் அனுமதிக்கிறது இல்லை என்று பதில்வருகிறது. 'மடியில் கனமில்லை என்றால் வழியில் பயமெதுக்கு' என்று கொழும்பு அரசை, ஒரு வெளிநாட்டு ஊடக விற்பன்னனும் கேட்பதாய் தெரியவில்லை. மாறாக சிறிலங்கா வெளிநாட்டமைச்சர் ரோகித்த போகொல்லாகம சொல்வதை அப்படியே நம்பிவிடுகிறார்களாம். அல்லது நம்பியதாக எங்களிடம் சொல்கிறார்கள்.

**சர்வதேச சமூகம் என்று ஒன்று இருக்கிறது, அதற்கு அறத்தை தவிர வேறெதுவும் தெரியாது. மனிதவுரிமை, சனநாயகம், தாராளவாதம் என்ற நல்ல விடயங்களிலேயே அது நம்பிக்கை கொண்டிருக்கும் என்று கற்பித்தார்கள். நாங்களும் நம்பினோம்.**

சர்வதேச நாடுகள் பலவும் சிறிலங்கா அரசுக்கு ஆதரவு வழங்கிவருவதும், அவை, மனித அவலங்களையிட்டு அக்கறை கொள்ளாதிருப்பதும், விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக எனக் கூறப்படுகிறது. 'பயங்கரவாதிகள்' என வகைப்படுத்தப்பட்டோருக்கு மட்டுமல்ல அவர்களுடன் சேர்ந்தோர் என தாங்கள் கருதுவோருக்கும் மனிதவுரிமைகள் கிடையாது என்பது தான் அவர்களின் எழுதாத நியதியாகவிருக்கிறது.

ஒபாமாவால் அண்மையில் மூடப்பட்ட குவான்ரனோமோ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் மீது மேற்கொண்ட சித்திரவதைகள். அங்கு பாவிக்கப்பட்ட தொழில் நுட்பம் பற்றி, உலகத்தின் மிகப்பெரிய சனநாயக நாட்டிடம் மட்டுமே கேட்டுத் தெரிய வேண்டும. அந்த தொழல்நுட்பங்கள் கூட அவர்களது உதவி கிடைக்கும் நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

ஈழத்தமிழர்களுக்கு உலக அர்சியல் விடயங்களில், பல மாயைகள் இருந்தது என்னவோ உண்மைதான். அவை அத்தனையும் கலைந்து போய்விட்டன. இதனை யாரோ பரிநிர்வாண நிலையென்று கேலி செய்கிறார்கள். நாங்கள் தெளிவாக இருக்கிறோம் என்பதுதான், இப்போதுள்ள பாதகமான நிலையிலும், நாங்கள் ஆறுதலடைந்து கொள்ளக்கூடிய விடயமாகவுள்ளது.

ஆரம்பத்தில், பாக்குநீரிணை வழியாக எங்களுடைய மீட்பர்கள் அகிம்சை ஆயுதத்துடன் வருவார்கள் என எதிர்பார்த்தோம். வந்தார்கள்தான். வந்து ஆயிரக்கணக்கில் உயிர்களை குடித்தார்கள், நூற்றுக்கணக்கான பெண்களின் துகிலுரிந்தார்கள், அடக்கி ஒடுக்கினார்களா. அப்போதும் நாங்கள் அழிந்து போய்விடுவோம் என்று எண்ணினார்கள். ஆனால் அந்த மாயை கலைந்து விழித்துக் கொண்டோம்.

சர்வதேச சமூகம் என்று ஒன்று இருக்கிறது, அதற்கு அறத்தை தவிர வேறெதுவும் தெரியாது. மனிதவுரிமை, சனநாயகம், தாராள வாதம் என்ற நல்ல விடயங்களிலேயே அது நம்பிக்கை கொண்டிருக்கும் என்று கற்பித்தார்கள். நாங்களும் நம்பினோம். நல்லதும் கெட்டதும், வெள்ளை கறுப்புப் போலிருக்கும் என்று வகைப்படுத்தினார்கள் ஏற்றுக் கொண்டோம். சர்வதேச மன்னிப்புச் சபையையும் அதுபோன்ற மனிதவுரிமை அமைப்புக்களையும் நம்பினோம். அரசுசாரா தொண்டு நிறுவனங்களை நம்பினோம். அவை அடுத்த சுனாமிக்காக காத்திருக்கின்றன. யார் கண்டது, வவுனியா வதைமுகாமில் மக்கள் அடைக்கப்பட்டால், உலக நாடுகளின் அபிவிருத்தி முகவர் நிறுவனங்களின் நிதியை பெற்றுக் கொண்டு, 4 சக்கர வாகனங்களில் எங்களுக்கு உதவ அவர்கள் வரக்கூடும்.

மேலைநாட்டு அரசுகளை, கட்சிகளை, நாடாளுமன்ற உறுப்பினர்களை ஏன் உள்ளூராட்சி உறுப்பினர்களைக் கூட நம்பினோம். இன்றைக்கும், அவர்கள் எங்களுக்கு உதவுகிற பணியில் மும்மரமாக இருப்பதாகக் கூறுகிறார்கள். சிறிலங்கா அரசு தங்களுடைய சொல்லைக்கேட்கிறது இல்லை நாங்கள் என்ன செய்ய என்று நாங்கள் சந்திக்க செல்லுகின்ற வெள்ளை அமைச்சர்கள் சொல்கிறார்கள். மறுபுறத்தில் ஆயதங்களை வழங்குவதை மட்டும் நிறுத்துகிறார்களில்லை. நாங்கள் தான் இப்போது இவர்களை சட்டை செய்வதே இல்லை. வேண்டுமானால், தேர்தல் காலத்தில் வாக்குச் சீட்டு மூலமாகப் பேசிக்கொள்வோம்.

வேதனையுடன் இருக்கிறோம் என்பது உண்மைதான். ஆனால். இலங்கைத் தீவில் இரண்டு நாடுகள்தான் தீர்வு என்ற விடயத்தில் விட்டுக் கொடுப்புக்களுக்கு இனி இல்லை என்பதில் உறுதியாக இருக்கிறோம். எங்களின் இளையவர்கள் இந்தப் பணியை தங்கள் தோள்களில் சுமக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பது எங்களுக்கு ஆறுதலைத் தருகிறது.

யாரும் எந்தக் கோட்பாட்டுடனும் எங்களிடம் வர வேண்டாம். தமிழ்த் தேசியத்தை எந்தக் கொம்பனாலும் அழித்துவிடமுடியாது என்பதை உணர்ந்து கொண்டால் சரி. இது சிலவேளை ஆவேசத்தில் அள்ளிக் கொட்டும் வார்த்தைகளாகத் தெரியும். ஆனால் இதனை நடாத்திக் காட்டப் போகும் உலகத் தமிழர்களுக்கு இந்த வார்த்தைகளின் அர்த்தம் புரியும்.



ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிட நிலையம்
SRI KARUMARI AMMAN JOTHIDA NILAYAM
பண்டிதர் அர்ஜுன் ரெட்டி சாஸ்திரி
EELAM ENTERPRISES
164B, Mitcham Road, London SW17 9NJ
(Near Selvarajah Gold House)
Contact: PANDIT A ARJUN REDDY SASTRY
**Mob.: 07529 723 111, 07529 723 118**
Seven days a Week from 10.00 am. Till 10.00 pm.



மெய்யன்பர்களே,

30 வருட அனுபவம் நிறைந்த பண்டிதர், கருமாரி அருள் கொண்டு கைரேகை மூலம், முகநாடிமூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் - கணவன் மனைவி ஒற்றுமை, குழந்தைப் பாக்கியம், கைரேகை, திருமண யோகம், தொழில், வியாதிகள், வியாபாரம், லட்சுமீகர விடயம், காதல், கல்யாணம், கோட்டு வழக்குகள், வாகனப் பொருத்தம், வீட்டு வாஸ்த்த, கண் திருஷ்டி ஆகிய அனைத்தும். தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். முந்திர தந்திரம், செய்வினைகள் போன்றவை ஹரி ஓம் மந்திரத்தினால் பரிகாரம் செய்யப்படும்.

Pandit A Arjun Reddy Sastry

Through face – palm reading "Horescope" Date of birth, Numerology: So, come and consult him once. He will solve and guide all your problems like health, business, marriage, education, carrier/job, abroad, promotion, land. Court, birth of children, visa and family problems etc. He has done protection things for house, house vasthu, shop and personal matters etc. English, Tamil, and Hindi are the Languages of contact.



Sachin Tendulkar & Pandit A Arjun Reddy Sastry

Confidentiality will be maintained for your secret matters.

# Sri Lankan State at war with the sick, injured and the disabled not with the Tamil militants

No nations those call themselves civilized have ever bombed the life out of the people whom they call their own. Bombing hospitals out of existence is even more barbaric and this can happen only in Sri Lanka and yet the Head of this failed state Mahinda Rajapakse in the National day address says: "Our troops were able to carry forward the battle against terror with great care so as not to cause harassment to the innocent Tamil people". Nothing can be further from the truth.

The hospital attacks epitomize the acute Tamil suffering in the Vanni in the north east of Sri Lanka and are symbolic of the attack on the Tamils as proxies of the LTTE. The fact that the hospital in the midst of the 300, 000 displaced Tamil people in Sri Lanka being repeatedly shelled now forced to close down and patients including infants and little children killed is an act of outright genocide violating all tenets of humanitarian law. India has donated medicines to be used on the very patients who are part of those whom they are surreptitiously helping to be killed. Actually the medicines are sugar coated palliatives, pain killers meant to be tranquilizers to some leaders of Tamil Nadu. The Tamil people must be partially insane if they are to believe that the Indian Foreign Minister Pranab Mukherjee made a flying visit to Sri Lanka in the interests of humanitarianism and not to promote their covert programme of genocide of the Tamil people.

Even with the shelling of the paediatric ward injuring several children running for cover, some dead including a month old baby, Ms Radhika Coomaraswamy the Special representative for Children and Armed conflict in the UN with her obligations to the genocidal state, usually quick to point out the issues of child soldiers with the LTTE, has continued to maintain a weird silence while the UN spokesperson Gordon Weiss has lashed out against the Sri Lankan attacks on children and other civilians calling it a travesty of humanitarian law.

With increasing frustration at not being able to fight the rebels, the military is turning to the civilians and the helpless hospital inmates. With all the undertakings at international forums that civilians were not being targeted but discreetly avoided, the terrorist state does not only target individuals but also hospitals which stand out so glaringly as easy targets, not once, but many times over. A nurse was killed in a recent attack. Admitting culpability, when cornered, the Sri Lankan Defence Secretary and President Rajapakse's brother Gothabaya eminently qualified to be a war criminal who can do and say things with impunity says: "No hospital should operate outside the Safety Zone...everything beyond the safety is a legitimate target,"( Skynews).

Rajapakse government, recently gave a warning to the displaced Tamils that all those civilians in their homeland in the Vanni, now made refugees, would stay on at their own peril, and should leave if they are to stay alive. This was an ominously veiled warning to justify the forthcoming massacre of more civilians in their increasing acts of genocide to say at the end: "Look, we told them". They are being asked to leave their homes, the injured and the near relatives. If the civilians leave at this juncture to move towards military controlled areas they will only be walking into the jaws of death, rape and torture.

The story concocted and parroted also by some half baked analysts is that the rebels were preventing the civilians from moving because they want to use them as human shields. In fact the rebels could find the civilians a liability and an added responsibility, and further the rebels who have been fighting for the cause of the Tamil people cannot be seen as throwing them into such jeopardy at this juncture. Even to the most naïve it makes no sense.

In a warning to the foreign media, international humanitarian agencies and to the Swiss and German diplomats to put up, shut up or pack up, Rajapakse further said: "It was irresponsible [of the foreign media] not to talk about civilians held in the war zone by the LTTE while making comments that only helped the Tigers". In other words they should only make statements salutary to the acts of the genocidal state notwithstanding their veracity. It is a folly and strain for western democracies to view Sri Lanka in the perspective of their own democracies if they are to understand its autocratic, theocratic and prejudicial ethos and approach obtaining in its establishment. They will do well to treat it on par with the "democracy", equality, pluralism and freedom in China, Pakistan, Iran and Zimbabwe, to understand it better.

We unreservedly endorse the recent message of the Commission for Justice and Peace of Catholic Diocese (CJPCD): "Mere expression of concern by the countries of the world is not enough; immediate intervention to urge Sri Lanka government to stop its killing and maiming of the innocent Tamils in Vanni is the need of the hour."

Robert Evans, UK Labour Party member of the European Parliament said: "The troops of the Sri Lankan government, a government indirectly supported by the West, stand accused of war crimes and atrocities". Simon Hughes, another British Parliamentarian has stated that the American administration, the Commonwealth and the European Union should jointly look at the seriousness of this problem to resolve it without further losses. We also thank the US Senator John Kerry for his concern expressed in the Senate.

We welcome the stand jointly taken by the US Secretary of State, Hillary Clinton and British Foreign Secretary Miliband, calling on both the Government of Sri Lanka and the LTTE to agree to a temporary no-fire period with both sides needing to allow civilians and wounded to leave the conflict area and to grant access for humanitarian agencies. However, in the light of past experiences of this nature, we recommend the strong presence of a strictly independent international peace keeping or monitoring mission, if this is to be effectively executed.

We appreciate the kind gesture of the Canadian federal government offering up to $3 million for emergency aid relief to help Tamil civilians in Sri Lanka displaced by the conflict as announced by the Hon. Bev Oda, the minister of international cooperation: "These are people who have been destabilized. The last hospital operating has been bombed and we have people trying to provide them with medical care, food, clean water and shelter," she said. We are happy that Canada will work with only non-government agencies such as the Red Cross, World Vision and Care that are able to get supplies into the affected areas, with no cash to be administered by the Sri Lankan government, for we can assure you that if that is done, nothing will reach the suffering people as in the case of the Tsunami 2004.

MARKANDAN & CO
Solicitors & Administrators for Oaths

*We are Specialised in....*

**Work Permit**
(புதிய விண்ணப்பங்கள், மீளப் புதுப்பித்தல், காலவரை நீடிப்பு)

**Student Visa**
(புதிய விண்ணப்பங்கள், காலவரை நீடிப்பு)

**Student Visa Appeal**
(மேல் முறையீடு)

**Asylum Appeal**
(அகதி அந்தஸ்த்துக்கான விண்ணப்பம், முறையீடு)

**Post Studies Work**

முக்கிய குறிப்பு

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோரி உள்ளவர்களுக்கு, பிரித்தானியாவின் 'LP' என்ற பிரபலமான இலங்கைத் தமிழரின் அகதி விண்ணப்பம் வெற்றி பெற்ற நிலையில் அதனை பிரித்தானிய நீதிமன்றம் (AIT) Country Guidance ஆக ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் இலங்கையில் குறிப்பிட்ட எந்தவொரு விதத்திலும் (12 விதமான Principle Risk Factors) பாதிக்கப்பட்டவர்கள் (Fresh Application) புதிய விண்ணப்பம் மூலம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

European Court Appeals
100% success

- House / Flat
- Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation
- Bankruptcy
- Divorce

பிற நாடுகளிலிருந்து பிரித்தானியாவிற்கு வருவதற்கான
**Sponsors (Entry Clearance Sponsorships)**

**Family Reunion**
(கணவன் அல்லது மனைவி பிரித்தானியாவில் வசிப்பவராயின் அவரது குடும்பத்திற்கான visa நடைமுறைகள்)

**Permanent Residency** (நிரந்தர வதிவிடவுரிமை)

**EEA Dependent Spouse Visa**
(ஐரோப்பிய வதிவிடவுரிமை உள்ளவர்களுடைய கணவன் அல்லது மனைவியிற்கான விண்ணப்பங்கள்)

**Same Day Visa Extension**
(ஒரே நாளில் visa மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்கள்)

**ECHR Application** (பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்த உள்ள ஒருவரின் நாடுகடத்தலுக்கு எதிரான விண்ணப்பம்)

**100% Success in refund from college and universities** (**College, University** களிலிருந்து பணத்தை மீளப்பெறுவதில் **100%** வெற்றி கிடைக்கும்)

**Personal Injury**

*Have you been given Payment Protection Insurance by your bank (Lender)?* ***We may be able to reclaim the whole amount.***

**No Win – No Fee**
விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.




845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 0208 514 8188 Fax: 0208 514 8303
Mob: 07958 618 106
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

கடன் சுமையினால் பாதிக்கப்படுகிறீர்களா ?
நாம் கடன் தொகையை **£8000** இல்இருந்து **£3000**க்கு குறைத்துள்ளோம்.

அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்டோர் சொந்தநாட்டுக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். புதிதாக விண்ணப்பிப்பதன் மூலமோ அல்லது பழைய விண்ணப்பங்களை புதிப்பதன் மூலமோ அதனை தவிர்க்கமுடியும்

PI Contact Us - 24 hrs emergency no : **07951162346**

# This is a time for weeping



*(Text of the speech of Dr. Vikramabahu Karunaratne, at the meeting held by the platform for freedom held at Kundasale, in the Kandy District, on 4th Feb)*

As a present day leader of the Sama Samajist movement which made a special contribution to the independence struggle, I have neither shame nor fear to step into this stage to speak of freedom. At this time there is a celebration in Colombo, a shameful event where Lion flag is hoisted to cover up genocidal killings, abductions, corruptions, fraud and ransom taking. Ruling group led by Mahinda is using the Lion flag, the pride of Sinhala for 3000 years, as loin cloth to cover up their nakedness. Lion flag has become a cover to wrap the dead bodies of foul killings and to hide sinful frauds.

This is a time for weeping. From Point Pedro to Devundara, the island is soaked in blood and tears. Pardon me Hakim and Tamil leaders, for talking only of Sinhala youth that are killed in a distant unknown land, a deserted land. Buried without much ceremony in other peoples land. Thousands died while tens of thousand are suffering in crowded hospitals. Colombo ceremony is to cover up all these. We are told that by killing and destroying, bombing and blasting, Tamil struggle is brought to an end. At the same time we know that those who challenged and criticized this operation are classified as traitors and punished. Such Media men are killed or wounded and others are driven out of the island. Some Media houses are burned and crushed. We do not see an end to the problem, but we see pushing it underground while harvesting it in Tamil Nadu and in all cosmopolitan cities of the world.

At this moment there is a hartal in Tamil Nadu and massive demonstrations are taking place in all big cites of the world. Effigies of President Mahinda are carried and burned shouting slogans against killings, corruptions and plunder. All Lankan embassies are given special protection while ambassadors live in fear. These protest acts are carried out with the support of left and democratic forces in respective countries. War has created more hatred and in coming generations , we could harvest the produce in several folds.

> When ever an attempt was made to arrive at a solution on the basis of power sharing among all communities, terror of Sinhala chauvinism was unleashed and barbarism ruled the streets

Bandaranayke signed a pact with the Tamil leader Chelvanayagum and wanted to solve the problem by devolution of power. Then Dudley tried to go further and after a similar pact took Tamil leaders into the Cabinet, while planning devolution. President Jayewardene called an all party conference and tried to devolve power by the system of provincial councils. In this endeavor he was supported by Colvin, Bernard, Vijaya and other left leaders. I myself was among them. At least a nominal provincial council for the Tamil homeland was established and for the first time in history after Sankili, Tamils had a Tamil ruler for the Tamil land. Finally, Prime Minister Wickramasinghe arrived at a ceasefire agreement with the LTTE leader Pirapaharan and wanted to go for a serious political solution. All these leaders from Bandaranayke up to Wickramasinghe and the left leaders, who supported them, were with education from Oxford, Cambridge, Harvard and MIT etc; with massive libraries for reference, were supposed to be guided by the principles of kindness and mercy. Were they all fools and frightened imbeciles? Are they all traitors who wanted to deal with the foreign masters behind Tamil terrorism? On the other hand, is the 'fearless leader' who smashed and killed, silenced critiques and poisoned Sinhala people with chauvinism and hate, the hero?

Every time since the time of Bandaranayke, when ever an attempt was made to arrive at a solution on the basis of power sharing among all communities, terror of Sinhala chauvinism was unleashed and barbarism ruled the streets. Recently when President Jayewardene devolved power under 13th amendment for the NE province, Sinhala chauvinist terror was unleashed on every body associated with devolution of power. Killers did not come from Mars or Moon. Chauvinist gangs of Champika, gangs of Mahinda and gangs of Weerawansa under the name of patriotism attacked and killed. They killed 23 of my party. I got a bullet passing through my body leaving a hole of 3 inches at back I survived only by shear luck after suffering in hospital for months. Nearly 1000 of other leftist became victims while nearly 8000 UNP members and supporters were killed. Most of them unarmed ordinary people loyal to old UNP leaders. In addition these "patriots" wounded tens of thousand and burned hundreds of houses.

When Prime Minister Wickramasinghe signed a pact with the LTTE, again Sinhala chauvinist did every thing to sabotage the attempt for a solution.

We of the left appreciate the attempt to bring a settlement to this human issue of language and nationalities. But we differed on other issues with these rulers. I have fought on such issues affecting workers and peasants and languished in prisons of Bandaranayke, Jayewardene and Wickramasinghe. Nevertheless I have come here today as I respect the commitment of the UNP leader Wickramasinghe to communal harmony and democracy. Resolving national and communal problems needs mercy and kindness. All religions, Buddhism, Hinduism, Islam, and Christianity, advocate kindness and compassion for human existence and to dispel barbarism. When Marx spoke of opium of the masses he did not mean basic ethics of human existence. But the war mongering Sinhala chauvinist campaign is definitely opium to the masses. Mahinda use this opium to drug the masses to forget hunger and misery and to dance naked waving Lion flags. Thus he has taken the country towards barbarism.

For this country this it is the hour of Saturn, the moment of Mahasona the barbarian. At this hour vultures are roaming. We have come together to stand up and fight for freedom again.

# Legitimising LTTE

**By: Peter Ratnadurai**

**International inaction drives more Tamils to Tigers**

Thirty years ago, Sri Lanka's Sinhala rulers actioned a set of violent pogroms against the Tamils of the island. Sinhala mobs, backed by the police and army, embarked on regular killing sprees, leaving an entire community hapless. That environment gave birth to Tamil militancy. Thousands of Tamil youths, 'till then famed as bookworms, switched pen for gun; ahimasa gave way to ambushes; and eventually the conventional warfare we have witnessed for the last two decades.

## Of Ideals

How the Diaspora have funded the LTTE for the past thirty years is well documented. However, as late as 2006, determined support for the LTTE was mainly limited to the first generation of Tamil Diaspora who still had vivid memories of Sinhala state's atrocities.

A seizable portion of the second generation, versed in the ways of the West, were actually questioning the the need and legitimacy of an armed struggle. They argued that Tamils could live under the Sinhala state without fear, because, today, there are enough international institutions and safeguards in place to prevent outright genocide or even a repeat of previous anti-Tamil pogroms.

At the first hint of a riots, international media such as the BBC and CNN would rush to the island. Non-stop media coverage will bring international attention and cause an outcry. United Nations and aid agencies would provide immediate help for the people while rights groups will document every violation of human right and bring the perpetrators to the international criminal court. In the worst case, the Tamil Diaspora will take to the streets and demand humanitarian action from their host nations.

## Of Indifferences

Recent events in Vanni have put the second generation's idealistic outlook to the test. Over 300, 000 Tamils have been repeatedly displaced in the Vanni. International media, aid agencies and rights groups have all abandoned the people because the Sinhala state has told them to.

When dozens of Tamils are killed by Sri Lankan shelling there isn't even 24 seconds of coverage in the international media. Displaced people are suffering from acute shortage of food and medicine. Even hospitals are being hit by shells, with total impunity. Where are our international media, aid agencies and rights groups? They have all been banned from the "conflict area" by the Sinhala state. So withered the first layer of the second generation's innocence.

People, including children, who did leave the "conflict area" are kept in detention centres in military occupied Jaffna and Vavuniya. There are widespread reports of young women being raped and many civilians being made to disappear. Where are our international media, aid agencies and rights groups? No prize for the correct answer. Of course, they have all been banned from the centres by the Sinhala state.


## Of Interests

The Diaspora even took to the streets. No use. Hundreds of thousands marching across cities from Auckland to Vancouver made no difference. International foreign policy, and the activities of their institutions, are based on perceived "strategic partnerships" and not on any ideals of humanity; this realisation appears to have completely crushed the innocence of the second generation.

Those who questioned the legitimacy of the armed struggle are now asking what if the 50, 000 Sinhala soldiers in Jaffna embark on a week long Rwanda style spree against the 800, 000 odd Tamil civilians of the peninsula. Obviously, international institutions would be banned from the region. And yes, the worst fear looks increasingly likely.

There is still some time left for permanent occupiers of the moral high ground to prove otherwise. But for now, there is increasing evidence of the second generation realising the legitimacy of the LTTE. This, the more affluent section of the Diaspora, seem more determined than their parents to give all they can to secure the rights of their cousins, uncles and aunties in the homeland.

INSIGHT SYSTEM



வெளிவந்து விட்டது. Life in the UK பாட வழிகாட்டி- அதன் தமிழ் மொழி பெயர்ப்பு மற்றும் 2000க்கும் மெற்பட்ட பயிற்சி வினாக்கள் அடங்கிய CDக்கள்.

- பிரஜாவுரிமை பெறுவதற்குரிய LIFE IN THE UK வகுப்புக்கள்
- கம்பியூட்டர் வகுப்புக்கள்
- ESOL ஆங்கில வகுப்புக்கள்

மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை.

மேலும் Home Office விண்ணப்ப படிவங்கள் பூர்த்தி செய்தல் மற்றும் அது சம்பந்தமான ஆலொசனைகள்.

பிறப்பு திருமண இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் செய்தல் பொன்ற சேவைகளும் ஆரம்பம்...

தொடர்புகளுக்கு: 0790 88 66 300

# குளவிக் கூட்டைக் கலையாதீர் அது குத்திவிடும்

கடந்த இரண்டு ஒரு பேப்பர் களிலும், க. பாலேந்திராவின் 'மரணத்துள் வாழ்வு' பற்றிய ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. மற்றெதுக்கும் இல்லாத முக்கியத்துவம் இதற்கு ஏன்?

ஒரு விசயத்தை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். அவைக்காற்றுக் கலைக் கழகத்தை அவர்கள் தொடங்கிய பிறகு தமது புகழ் மாசு மறுவில்லாமல் இருக்க வேண்டும் என்பதில் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றார்கள்.

அவைக் காற்றுக் கலைக் கழகத்தில் அப்போது க.பாலேந்திரா, ஆனந்தராணி ராசரத்தினம், மு.நித்தியானந்தன், நிர்மலா நித்தியானந்தன் என்ற நான்கு பெரும் தூண்கள் இருந்தன. இப்போது உள்ளது போல் வேறு சிலரும் உதிரியாக இருந்தனர்.

பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்திலோ, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலோ இவர்கள் நாடகம் மேடையேறுகின்றது என்றால் நாடகத்தின் புகைப்படத்துடன் நாடகம் பற்றிய சிறு குறிப்புடன் பாலேந்திரா வீரகேசரி, தினகரன் வார வெளியீடுகளுக்கு எழுதி அனுப்பி விடுவார். இது நாடகம் நடக்கின்ற சனிக்கிழமைக்கு முதல் ஞாயிறு வார வெளியீட்டில் வந்து விடும்.

சனிக்கிழமை நாடகம் நடந்ததென்றால் அடுத்த ஞாயிறு வார வெளியீட்டில் மு. நித்தியானந்தன் அந்நாடகத்திற்குரிய புகழாரத்தை தன் பெயரிலேயோ, வேறு பெயரிலேயோ எழுதி விடுவார். இவ்வாறு திட்டமிடலில் ஒரு வியாபாரியின் நுணுக்கங்களை இவர்கள் கைக்கொள்வர். இவ்வாறு இலங்கைத் தமிழ் நாடக அரங்க வரலாற்றில் பாலேந்திராவின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

இதனிடையே நிர்மலா நித்தியானந்தனின் பங்கு என்ன? நிர்மலா நித்தியானந்தன் அவைக் காற்றுக் கலைக்கழகத்திற்கு வரக்கூடிய வசைச் சொற்களுக்கு கொடுக்குக் கட்டுக் கட்டி ஒரு சண்டியளாக களத்தில் புகுவார். பொல்லாத வார்த்தைகளைப் பயன்படுத்தி எதிரிகளைத் துவம்சம் செய்வார்.

அப்படியென்றால் பாலேந்திரா நல்ல நாடகங்களைத் தரவில்லையா என்ற கேள்வி எழும். அவர் நெறியாள்கை செய்ததில் மூன்று நாடகங்கள் தமிழ் நாடக வரலாற்றில் அதிமுக்கியமானவை. ரென்னசி வில்லியம்சின்' கண்ணாடி வார்ப்புகள்', கார்சியா லோகாவின் 'ஒரு பாலை வீடு', போடொல்ற் பிறெக்கின் 'யுகதர்மம்'. இவை குறிப்பிடப்பட வேண்டிய நாடகங்கள்.

ஆனால் ஒன்றைக் கவனியுங்கள். ரென்னசி வில்லியம்ஸ், கார்சியா லோகா, போடொல்ற் பிறெக் என்ற பெயர்களில் ஏதேனும் தமிழ்ச் சாடை தெரிகிறதா. அத்தனையும் அந்நிய மொழி, அந்நிய பெயர், வேற்று நாடகங்கள். ஆனால் அவை மிகப் பலமான பிரதிகள். நிர்மலா நித்தியானந்தனின் மொழிபெயர்ப்பு ஆளுமை மிகுந்தது. இதில் பாலேந்திராவின் பங்கு என்ன? நெறியாள்கை பாலேந்திரா என்ற பெயரைத் தவிர.

இதே காலங்களில் அல்ல, இதற்கு முற்பட்ட காலங்களில் இருந்தே தாசீசியஸ் மிக அற்புதமான நாடகங்களை நெறியாள்கை செய்திருந்தார். மகாகவியின் 'கோடை', 'புதியதொரு வீடு' என்ற பா நாடகங்களை அதி அற்புதமாக தாசீசியஸ் நெறியாள்கை செய்திருந்தார். அத்துடன் அவர் விட்டாரல்லர். மொழி பெயர்ப்பு நாடகம் ஒன்று. அலெக்சி ஆபுசோவின் 'பிச்சை வேண்டாம்'. 'கந்தன் கருணை' என்ற காத்தான் கூத்து நாடகம். பொறுத்தது போதும் என்ற மோடிப் படுத்தப்பட்ட நாடகம். 'கூடி விளையாடு பாப்பா' என்ற சிறுவர் நாடகம். அத்தனையும் நம்மவர் பிரதிகள். அத்தனையும் அரங்க அனுபவம் செரிந்த நாடகங்கள்.

அதே காலம் தான் மௌனகுரு என்ற மகா கலைஞன் தமிழ் நாடகத்தில் தந்த நாடகங்களில் ஞாநியின் 'குருசேத்திர உபதேசம்'. மௌனகுருவின் 'சங்காரம்'. நா. சுந்தரலிங்கத்தின் 'அபசுரம்'.... (இன்னும் இருக்கின்றன.)

தாசீசியசோ மௌனகுருவோ விளம்பரம் என்ற வியாபாரப் புத்தியில் அக்கறை கொள்ளவில்லை. தங்களுடைய கலைப் படைப்புக்களை எவ்வாறு மெருகேற்றலாம், செழுமைப் படுத்தலாம் என்றே கவலைப்பட்டார்கள், அரங்க அனுபவத்தை எவ்வாறு பகிரலாம் என்றே யோசித்தார்கள்.

இங்கிலாந்துக்கு வந்த புதிதில் பாலேந்திராவின் நாடகங்களை நான் ஓடி ஓடிப் பார்த்தேன். புதிதாக ஏதும் செய்வாரோ என்று. ஏமாற்றமே மிஞ்சியது. அதிர்ச்சியும் ஒன்று வந்தது. 'யுகதர்மம்' என்று இலங்கையில் செய்த நல்ல நாடகத்தை ஏதோ ஒரு பெயரில் சிறுவர் நாடகமாகத் தயாரித்திருந்தார். அத்துடன் அவர் மீதிருந்த துளி நம்பிக்கையும் இல்லாது போய் விட்டது.

மேலும் ஒன்று. இவர்கள் மனிதாபிமானம் மிக்க கலைஞர்கள் தானா என்ற கேள்வியும் என்னுள் எழுகின்றது. இவர்களுடன் சேர்ந்தியங்கிய சாந்தன் (போட்டோகிராபர்) கிருஸ்ணராஜா (ஓவியர்) ஆகியோரைக் கூட நட்டாற்றில் கைவிட்டார்கள். இவர்கள் எழுதிய ஒரு பிரசுரமும் எனக்குக் கிடைத்தது. இவர்கள் பேசுகின்ற மானுடம், மனிதம், ஜனநாயகம், மாக்சீயம், உழைப்பு, ஒற்றுமை இவையெல்லாம் எங்கு போனது?

இருக்கட்டும். இன்னும் காலம் இருக்கின்றது பாலேந்திராவுக்கு. தன்னை மெச்சாமல் தன் படைப்புக்களை ரசிக்காமல் தன்னை சுயவிமர்சனம் செய்து கொண்டு விளம்பரத்தினையும், புகழையும் கவனத்தில் எடுக்காமல் படைப்பது எப்படி என்று கருத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

*- அ.இரவி*

## *வன்னியிலே உனக்கு இரத்ததானம்!*

இரத்ததானம் கொடு..!
தயவுடன் இரத்ததானம் கொடு..!
மேற்குலகின் தெருக்களிலே
வாகனங்களில் தொங்கும்
வாசகங்கள் இவை...!

மேற்குலகே வன்னிக்கு செல்லுங்கள்
வேண்டியளவை அள்ளுங்கள்
உங்கள் உயிர்காக்கும் அதிசயத்திரவம்
எங்கள் உயிர் நீங்க முதல்
நாங்கள் தெருக்களிலே
ஊற்றிடும் திரவம்......!
அதில் உங்களுக்கும் உரிமையுண்டு
உங்களின் ஆயுதங்களால் தானே
உடலிலே ஓடாமல்; அது
தெருக்களிலே பாய்கிறது....

ஏன் இன்னும் தயக்கம்....!
கலந்துவிட்ட குருதிக்கூட்டங்களை
பிரிக்கும் விஞ்ஞானம்
புரியல்லையா உனக்கு...?
இறைவனே...! அதுவும் புரிந்துவிட்டால்
அலை மோதிடுமே உன் கூட்டம்
வன்னித்தெருக்களிலே இன்று....!

*- இளங்கவி*

# 4ம் ஆண்டு நினைவாக....



இறைவனும் நின்னை ஆண்டு
ஆண்டுகள் நான்கு மாண்டும்
சிறையிட்ட நினைவு மீண்டு
சிறகுகள் விரிக்குதையா
கறையில்லா வாழ்வு கண்டீர்!
கலங்கரை விளக்கமானீர்
புரையோடும் ரணத்தின் வலியை
புன்சிரிப்பால் போக்கடித்தீர்
மறையே! தமிழர் இரத்தம்
உறைகின்ற செய்தி வேண்டா
விரைந்தே சென்றீரோ?
விடியலை வேண்டி வர..

அமரர்
**சவிரிமுத்து நீக்கிலஸ்**
(கரம்பொன்)

மலர்வு 18 - 09 - 1931
உதிர்வு 04 - 02 - 2005

உங்கள் ஆன்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

**தொடர்புகளுக்கு: 0208 480 2836**

வாசகர் கருத்துக் களம்

# புலம்பெயர்ந்த நாடுகளில் முதியவர்களின் நிலை

**சிறை மீளச் சில மணிநேரம் ஒதுக்கப்பட வேண்டும்**

இந்த விஞ்ஞான யுகத்தில் அதிவேகத்துடன் சுழன்றுவரும் பூமியில் வசந்த காலத்தின் சுகத்தை அனுபவிக்க தொடங்கும் போதே குளிர்காலத்தின் கொடூரம் தொடங்கின்றது. ஆண்டு ஒன்று போக அகவை ஒன்று கூடுகின்றது. எதையும் சந்தோசத்துடன் பார்த்து பழகிய குழந்தைப் பருவம் போய், ஓடி விளையாடி பட்டாம் பூச்சியாய் பறந்து திரிந்த இளமைக் காலம் கழிந்து, குடும்பத் தலைவனாக தலைவியாக உருவெடுத்து, தன்நலம் கருதாது குடுப்பத்திற்காக அத்தனை தியாகங்களையும் புரிந்து மனிதப் பிறப்பில் இறுதி கட்டமாக தனிமையில் வாடப் போகும் அந்த முதுமைக்காலத்தை எண்ணி யாருமே ஒரு கணம் மிரளாமல் இல்லை.

காலம் காலமாய் எமது பாட்டி, பாட்டன்கள் பாற்சோறு ஊட்டி, தமிழ் மறவர்கள் வீரம் பேசும் கதைகள் கூறி, உறவுகளை அறிமுகப்படுத்த தாலாட்டு பாடி எம்மையெல்லாம் ஆனந்தமாக தூங்க வைத்த அந்த ரம்மியமான காலங்களை எம்முடைய குழந்தைகள் பெறப் போவதில்லை என்பது மறுக்க முடியாததும் அதே வேளை வேதனை தருவதுமான உண்மை. பெற்றோர் எம்மை தண்டிக்கும் முன் தங்கள் சேலைக்குள்ளோ சாரத்திற்குள்ளோ எம்மை போர்த்தி பாதுகாத்த எம் பாட்டான் பாட்டி அன்புக்கு ஈடு இணை ஏதும் உண்டோ.

பலசுவை மிக்க பணியாரங்கள் முதல் எமது பண்டைய கால உணவு வகை மிக்க நா சுவையுடனும் உணவாக்கி அதை தன் சேலை தலைப்பில் ஒளித்து வைத்து ஊட்டி விடும் அந்த அன்பு, சிறு நோய்களுக்குரிய அறிகுறிகள் தென்பட்டவுடனே பல வித இலைகளை அரைத்து இடித்து இலவசமாக சீகிச்சை செய்கின்ற நம்மூர் மருத்துவிச்சிகளின் துணிவுக்கு பி.எச்.டி பட்டம் பெற்ற இன்றைய கால மருத்துவர்கள் எங்கே?

காலம் காலமாக பேரன் பேர்த்திகளை அன்புடன் பாசத்துடன் அவர்கள் செய்யும் தவறுகளை கூட குறும்புத்தனமென எண்ணி பக்குவமாக எடுத்து இயம்பி அவர்களை திருத்தும் முதியோர்கள் இன்றைய கால கட்டத்தில் தனிமை என்னும் கொடுமையை அனுபவிக்கின்றனர் என்பது உண்மை.

தாயகத்தில் நடைபெறும் போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு உறவுகள் பலரும் புலம் பெயர்ந்து பிற நாடுகளுக்கு தப்பியோடி விட வீட்டையும் சொத்தையும் பாதுகாக்கவென தாய் மண்ணில் இருந்து அல்லல் படும் முதியோர்களுக்கு ஆதரவாக இருப்பது அவர் வீட்டு காவல் நாய்கள் மட்டுமே.

இவை தான் தாயகத்தில் முதுமையை எண்ணி பயப்படுவதற்கு சில முக்கிய காரணங்களாக அமைகின்றது. அடுத்து புலம் பெயர்ந்து வாழும் எம்மின முதியோர்களின் நிலமைகளை சற்று கவனிப்போம்.

கனடா, லண்டன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி எனப் பல நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் பிள்ளைகளுடன் இப்போது இரண்டாம் தலைமுறை முதியோர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்

தாயகத்தில் வாழும் முதியோர்கள் பணமின்றிக் கஸ்டப்படுகிறார்கள் என்றால் இவர்களுக்குப் பணத்தினால் தான் கஸ்டம் என்பது உண்மை.

பல பிள்ளைகள் தம் பெற்றோர்களை 'ஸ்பொன்சர்' மூலம் கூப்பிட்டுப் பின்னர் ஓரிரு வருடங்களில் தம்மால் பார்க்க முடியாது என அரசாங்கத்தில் முறையிட அவர்களும் 'வெல்பியர்' என்ற திட்டத்தின் கீழ் இந்த முதியவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட பணத்தை மாதந்தோறும் வழங்குகின்றார்கள். அந்த பணத்தினை பல முதியோர்கள் தொட்டுப் பார்க்க கூட அனுமதியில்லை என்பதையும் இங்கே கூறிப்பிட வேண்டும்.

சரி அந்தப் பணத்தைத் தொடாமல் இருந்தால் நம் முதியவர்களால் நிம்மதியாக இருக்க முடிகின்றதா என்றால் அதுவும் இல்லை என்பதே உண்மை

அம் முதியவர்களுக்கு 3, 4 பிள்ளைகள் இருந்தால் அவர் படும் அவஸ்தைக்கு அளவே இல்லை. ஒரு மகன் வீட்டில் கணவரும் மற்றைய மகள் வீட்டில் மனைவியும் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றார்கள். பேரப் பிள்ளைகளுக்கு காலையில் எழுப்பிச் சாப்பாடு கொடுத்து பனியோ காற்றோ பாடசாலைக்கு அழைத்து சென்று மதியச் சாப்பாட்டுக்கு அழைத்து வந்து திருப்பக் கூட்டிச் சென்று பாடசாலை முடிந்தவுடன் அழைத்து வந்து சாப்பாடு கொடுத்து வைத்திருக்க வேண்டிய கட்டாயம்.

இதற்குள் மொழிப் பிரச்சினை. ஆங்கில மோகம் கொண்டவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் மொழியை பயிற்றுவிக்கமால் இருப்பதால் அப்பிள்ளைகளுக்கு இவர்கள் சொல்வதும் விளங்காது. அதே போல் முதியவர்களுக்குப் பிள்ளைகளின் மழலை மொழியை கூட ரசிக்க முடியாமல் போகின்றது. பல வீட்டு குழந்தைகள் கோபத்தில் இவ் முதியோர்களை ஆங்கிலத்தில் தகாத வார்த்தைகளால் திட்டுவதை கூட அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

வாழ்வின் இறுதிக் கட்டத்திற்குள் வந்து விட்ட இம் முதியோர்கள் தமது இயலாமையுடன் பிள்ளைப் பராமரிப்பையும் செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்படுகிறார்கள். அதன் போது கூட பேரக் குழந்தைகளின் அன்பைப் பெறுவதற்கு துடிகின்றார்கள். ஆனாலும் அது கிடைக்கின்றதா என்பது சந்தேகமே.

மாளிகையென வீட்டை வேண்டி விட்டு வங்கிக் கடனை அடைப்பதற்கு ஆண் பெண் வேறுபாடுன்றி வேலையென ஓடித் திரியும் பிள்ளைகள் தம் பெற்றோர்களின் தனிமையை போக்குவதற்கு வழி தேடுவது இல்லை. 'வயது போன காலத்தில் இது தேவையோ' 'ஓர்இடத்தில் ஒதுங்க வேண்டியது தானே' என்னும் கருத்துத் தான் இவர்களிடம் ஓங்கி நிற்கின்றது.

தமக்குப் பிடித்த உறவுகளின் வீடுகளுக்கு போவதற்குக் கூடப் பிள்ளைகளின் அனுமதிக்காக காத்திருக்க வேண்டிய நிலை. பிள்ளைகள் எங்கு போகின்றார்களோ அங்கே தான் இவர்களும் போக வேண்டும். அங்கும் தெரியாத முகங்கள், விரும்பாத உணவுகள் எனப் பல இன்னல்களை அனுபவிக்கின்றார்கள்.

வெள்ளை இன மக்கள் எல்லாவித சுமைகளையும் தீர்த்து அதாவது முதிய பருவத்தில் தான் கணவனும் மனைவியும் புதுக் காதலர்கள் போலவோ புதுமணத் தம்பதிகள் போலவோ நேர்மையாக தமது கடைசிக் காலத்தை இன்புறக் கழிப்பர். ஆனால் நம் முதியோர்களோ கணவன் மகன் வீட்டிலும் மனைவி மகள் வீட்டில் மாதம் ஒரு முறை சந்திக்கும் வாய்ப்பு கூட இல்லாமல் வாழ்கின்றார்கள்.

மனதில் பல வித கவலைகளையும் அடக்கி யாரிடமே மனம் திறந்து பேசமுடியாமல் மன உளைச்சலுக்கு ஆளாகின்றார்கள். ஆறுதலாக ஆசையாக யாரவது தங்களிடம் பேச மாட்டார்களா என்ற ஏக்கம் தான் இவர்களை நோயாளிகளாகின்றது.

தாயகத்தில் ஓடியாடி வேலை செய்தவர்கள் காலநிலையின் நிர்ப்பந்தத்தால் ஒரு அறைக்குள் முடங்கிக் கிடக்க வேண்டிய கட்டாயம். தொலைக்காட்சியை பார்ப்பதற்கு கூட பேரப் பிள்ளைகளின் அனுமதியை பெற வேண்டிய நிலை.

அடுத்து முதியோர் இல்லங்களில் வசிக்கும் (கட்டாயத்திற்குள்ளான) முதியோர்கள் நிலையை பார்ப்போம். பிள்ளைகளை பாரமரிக்கவோ அல்லது வேறு பல காரணங்களுக்காக தம் பெற்றோர்களை அழைத்து அந்தத் தேவை முடிந்தபின் அவர்களின் இறுதிக் காலத்தை முதியோர் இல்லத்திற்கு அவர்கள் விரும்பியோ விரும்பலோ வசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றாார்கள். மாதம் ஒருமுறை கூட அவர்களை சென்று பார்ப்பது இல்லை. பேரப் பிள்ளைகளை கொஞ்சிக் குலாவுவதற்காக ஓடி வந்த முதியவர்கள் வேற்று நாட்டவரின் சேவையில் வாழ வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

'காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்' என்றோர் பழமொழி தமிழில் உண்டு. அந்தக் காவோலையின் முதுமையை எண்ணி சிரிக்கும் குருத்தோலை தானும் அந்நிலையை அடைவேன் என்பதை ஏனோ மறந்து விடுகின்றது.

முதுமை என்பது பூமியில் வாழும் எல்லாவற்றிக்குமே நிச்சயிக்கப்பட்ட ஒன்று. நாம் எமது முதியோர்களுக்கு செய்கின்ற தீங்குகளை எமது பிள்ளைகளும் பார்த்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். நாளை பிள்ளைகளும் வளர்ந்து நாமும் எமது முதுநிலையை அடையும் போது இவற்றை எல்லாம் அவர்கள் நமக்குச் செய்ய மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

'முதுமை என்பது பிரச்சினை அல்ல அது ஒரு வரம்' என்று எங்கோ வாசித்த ஞாபகம். அந்த வரத்தை களிப்புடன் கழிக்க முதியோர்கள் இருக்கும் ஒவ்வொரு உறவுகளும் அவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும். உறவுகள் மேம்பட ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் முதியவர்கள் சந்தோசமாக இருக்க வேண்டும். முதியவர்களின் கடந்த கால அனுபவங்கள் வீட்டில் இருக்கும் சிறியோர்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமையும் என்பதையும் மறந்து விடாதீர்கள். முதியோர்கள் தான் குடும்பத்தின் ஆணி வேர்கள். அவர்கள் தங்கள் சந்ததியினரை முளைப்பித்து, அரும்பிட்டு துளிர்க்க வைத்து, பூக்க வைத்து, காய்க்க வைத்துக் கனியாக்கி, பெரும் மரமாக்குவது அவர்கள் கையில் தான் உள்ளது என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

*- ரமா*

**முதியவர்களின் நிலையில் பல படி முன்னேற்றம்**

புலம் பெயர் நாடுகளில் இன்றைய முதியவர்களின் நிலையைப் பற்றி ஆராய்வதற்குப் பதிலாக 20 ஆண்டுகளுக்கு முன் புலம் பெயர்ந்த என் போன்ற முதியவர்களின் வாழ் நிலைக்கும் தற்போதைய முதியவர்களின் வாழ் நிலைக்கும் இடையிலான வித்தியாசத்தை ஆராய விரும்புகின்றேன்

1970 களின் இறுதிப் பகுதியிலே நான் புலம் பெயர்ந்த போது விரல் விட்டு எண்ணக் கூடிய தமிழர்களே இந்த நாடுகளில் வசித்தார்கள். அரிசியையோ எமது மரக்கறிகளையோ மிளகாய்த் தூளையோ கண்களால் கண்பதே ஆபூர்வம்.

ஒரு தொலைபேசி அழைப்பு எடுப்பது என்பது மிகவும் சிரமமானதும் அதிக செலவானதுமாக இருக்கும். அதனால் ஆண்டிற்கு ஒரு முறை சில நிமிடங்கள் மட்டுமே நெருங்கிய உறவுகளுடன் ஆசையாய் நான்கு வார்த்தை பேச முடியும். தாயகத்தில் என்ன நடைபெறுகிறது என்பதை அறிவதற்கு ஊரிலிருந்து கடிதம் வரும் வரை காத்திருக்க வேண்டும்.

தமிழ் வானொலிகளோ தொலைக்காட்சியோ இல்லை. நூலகங்களில் தமிழ்ப் புத்தகங்கள் மருந்துக்கும் இல்லை. ஆலயங்களோ் கிடையாது. ஏன் சுவாமிப் படங்களைக் கூட மிகச் சிரமத்துடனேயே தருவிக்க வேண்டியிருந்தது.

பண்டிகைகளோ விரதங்களோ எமக்கு ஞாபகத்திற்குக் கூட வருவதில்லை. வந்தாலும் கொண்டாட வழியுமில்லை.

இவற்றையெல்லாம் நான் எழுதியதன் காரணம் எம்முடன் ஒப்பிடும் போது தற்போது புலம் பெயர்ந்து வரும் முதியவர்கள் மிகவும் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் என்றே கூற வேண்டும். எனவே குறைகளை மறைந்து நிறைவுடன் வாழ்வதே சரியானது என்பது என் கருத்து

*- க.டேவிட்*

அனைத்து வகையான இலங்கை
இந்திய உணவுப் பொருட்கள்,
கடலுணவு வகைகள், பசுமையான
மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப்
பொருட்கள், மளிகைப்பொருட்கள்
பாத்திர வகைகள், தமிழ்,
இந்தி சினிமா DVD, CD, VHS
போன்றவற்றை தரமாகவும் நியாயமான
விலையிலும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நம்பிக்கையுடன் நாட வேண்டிய இடம்



கடல் கடந்து வாழ்கின்ற
உங்கள் உறவுகளுக்கு
பணம் அனுப்புவதற்கும்
அழையுங்கள்....
020 8905 7765

MARUTHI CASH & CARRY
15 - 17 Queensbury Station Parade Queensbury HA8 5NR
Tel: 020 8952 66 55 | 020 8381 3442 | Fax: 020 8905 7546

# ஈழத் தமிழர்களே! வேறு வேலையில்லையா உங்களுக்கு...

ஈழத்தில் சிங்களவன் தமிழனைக் கொல்றானாம். அதை நிறுத்த இந்திய, தமிழகத் தமிழர்கள் மற்றும் தலைவர்கள் ஆதரவு வேணுமாம். என்ன கோளாறு உங்க புத்தியில?

பக்கத்து நாட்டுக்காரன் எங்க வீட்ல வந்து எங்க குடும்பத்தக் கொத்தா சுட்டு போட்டுட்டு போனாலும், பெரியண்ணன் கிட்டதான் நாங்க போய் புலம்புறது வழக்கம். அவரு என்ன சொல்றாரோ அதான் எங்க கருத்தும். அவரு பொத்திகிட்டு இருன்னு சொல்வாரு, நாங்க அப்படியே இருப்போம். அப்பப்போ சவுண்ட் விடுவோம், அடங்கிடுவோம். ரொம்ப வருஷ பழக்கம் இல்லையா? அதான் சீக்கிரம் மாத்திக்க முடியல. அதுக்காக எங்கள அடிமையின்னெல்லாம் சொல்லப் பிடாது.

ஈழத்துல தமிழன் தலைகள் பந்தாடப்படுதாம். கிரிக்கெட் பந்து மேல வச்ச கண்ணையே எங்களால மாத்த முடியல. உங்கள நோக்கி நீட்டப்படுற 'gun' ஐ எப்படி அய்யா பாக்க முடியும். எங்களுக்கு முக்கியம், தோனி எவ்வளவு அடிச்சான், சேவாக் எத்தனை புடிச்சாங்கிறது தான். நீங்க ஒரு பக்கம் அவுட்டாயிகிட்டு இருங்க. தெண்டுல்கர் அவுட் ஆக கூடாதுங்குறதுதான் எங்களுக்கு வேண்டுகோள். எல்லா எஃப் எம் லயும், ரண்ணிங் கமெண்ட்ரி குடுக்குறான் இலங்கையில நடக்குற கிரிக்கெட் பத்தி. உயிருக்குப் பயந்து எம் தமிழரின் ரண்ணிங் பத்தி, நோ வொர்ரி.

அன்னியர்களுக்கு அடிமைப் பல்லக்கு தூக்குறத நாங்க இன்னும் நிறுத்தல. தோள் வலியும் இன்னும் போகல. இந்த வலியில, உன் சகோதரனின் பிணத்தைத் தூக்குற உன் வலி எனக்கு எப்பிடி அய்யா தெரியும்?

எங்க தமிழ்நாட்ல தளபதி, கேப்டன், புரட்சி, புயல், சூப்பர், தானைக்குத் தலைவன், போர்வாள், செங்கோல் எல்லாம் இருக்கும். மேடைக்கு மேடை வாள் கொடுப்போம் தங்கத்தில. அதப் பாத்துட்டு, எங்களுக்கு வீரம் இருக்குன்னு நீங்க நம்புனா, எங்கள என்னப் பண்ணச் சொல்றீங்க? நாங்க வாய்ச் சொல்லில் மட்டும் வீரர்கன்னு எப்படி எங்க வாயால சொல்லச் சொல்றீங்க?

எங்கத் தங்கத் தலைவர்களும் தலைவிகளும், தப்பு செஞ்சுட்டு ஒரு நாள் உள்ளே இருந்தாலும், எங்க உயிரக் கொடுப்போம். நீங்க குண்டடிப் பட்டு சாவுறதுக்கு நாங்க சாக முடியுமா? சரி செத்தாலும், செத்தவன் பொண்டாட்டிக்கு அடுத்த எலக்சன்ல சீட்டுக் குடுப்பீங்களா? இல்ல ஒரு கட்சி போஸ்ட்டு குடுப்பீங்களா?

எங்க பட ஹீரோக்கள் படத்துல பண்ற சண்டையக் காசு குடுத்துப் பாத்துட்டு, வீரம் நிஜத்துல இருக்கும்னு நீங்க நம்பினா, நாங்க என்ன பண்றது? எங்க ஹீரோக்களுக்கு அவங்க நிஜ முதலிரவுல கூட டைரக்டர் வந்து ஸ்டார்ட் ஆக்சன் சொன்னாத்தான் வீரமே வரும். நீங்க ரொம்பத் தொல்லை பண்ணா, படத்துல வர ஒரு ஹீரோ போற்றி பாட்டுல ஒரு லைன் வர வைப்போம். இதெயெல்லாம் நீங்க உண்மைன்னு நம்பினா எப்பிடி தம்பி?

எங்க தலைவருங்களும், தலைவிங்களும் ஒரு 100 தலைமுறைக்காவது சொத்து சேக்கணும்ங்குற வெறியில பிசியா இருக்காங்க. உங்க பசியா அவங்க கண்ணுக்குத் தெரியும்?

தினமும் உங்க சகோதரர்களின் ரத்தம் பாக்குறீங்களா? அதெல்லாம் சும்மா. நாங்க எங்க சினிமாக்கள்ல பாத்து பாத்து மனசு மரத்துப் போச்சு. உங்கள் சகோதரிகள் தினமும் கற்பழிக்கப்படுறாங்களா? அடப் போங்கப்பா, தினமும் டிவிய தொறந்தா, எங்க சினிமா சகோதரிகள் எதிர்ப்பு இல்லாமலே கற்பழிக்கிறாங்க எங்க ஹீரோக்கள.

இப்படி ஆயிரம் வேலைகள்ல நாங்களும் எங்க தலைவர்களும் பிசியா இருக்கும்போது, உங்களுக்கு எப்பிடியப்பா நாங்க உதவ முடியும்? போங்கப்பா, போய் வேற வேலை இருந்தா பாருங்க. நாங்க மனம் மரத்துப் போன மரத்தமிழர்களா ஆயிட்டோம், ரொம்ப வருஷமா...

இவ்வளவு நேரம் உங்ககிட்டே பேசிகிட்டு இருக்குறது தெரிஞ்சுதுன்னா, மெய்னோக்களும், நாயர்களும், சிங்குகளும், மேனன்களும் கோச்சுக்கப் போறாங்க. எஜமானர்களப் பகைச்சுக்க முடியுமா?

*- தஞ்சாவூரான்*

# குட்டிக் கதை

நகரில் கப்பி ரோடு ஒன்று இருந்தது. அதன் மேல் வேகமாகப் போன வண்டியின் சக்கரம் ஒன்று ஒரு கப்பிக் கல்லை பெயர்த்து உருட்டி விட்டுப் போய் விட்டது. அந்தக் கப்பிக் கல் தனக்குள் சொல்லிக் கொண்டது. 'என்னைப் போன்ற மற்றவர்களுடன் பிணைக்கப்பட்டு நான் இப்படி ஒரே இடத்தில் கிடப்பானேன்? நான் தனியாகவே வாழ்ந்து பார்க்கிறேன்!'

தெருவோடு போன ஒரு பையன் அந்தக் கல்லைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். கல் தனக்குள் எண்ணிக் கொண்டது. 'நான் பிரயாணம் செய்ய விரும்பினேன். பிரயாணம் செய்கிறேன். தீவிரமாக எதையும் விரும்பினாலே போதும். விரும்பிய படி நடக்கும்'

கல்லை ஒரு வீட்டை நோக்கி எறிந்தான் பையன். 'ஹா, நான் பறக்க விரும்பினேன்? பறக்கிறேன். என் விருப்பம் போலத்தான் நடக்கிறது எல்லாம்'

ஒரு ஜன்னல் கண்ணாடியில் 'டண்' என்று கல் மோதி உடைத்துக் கொண்டு உள்ளே போனது. கண்ணாடி உடையும் போது அது சொல்லியது 'போக்கிரி, நான் போகும் வழியில் விலகிக் கொள்ளாமல் நிற்கிறாயே? என்னை மறிப்பவர்களை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. என் சௌகரியத்திற்காகத்தான் எல்லாம் இருக்கிறது. ஆகவே இனிமேல் கவனமாக இரு!'

வீட்டின் அறைக்குள் இருந்த ஒரு மெத்தையின் மேல் விழுந்தது கல். 'இவ்வளவு நேரம் பிரயாணம் செய்ததில் அலுப்பாகி விட்டது. சற்று ஓய்வு தேவை என்று நினைத்த பட்சத்திலேயே படுக்கை கிடைத்து விட்டதே. ஆஹா!' என்று நினைத்துக் கொண்டது.

ஒரு வேலைக்க்காரன் அங்கே வந்தான். படுக்கையில் இருந்த கல்லைத் தூக்கி ஜன்னல் வழியே திரும்பவும் தெருவில் எறிந்து விட்டான்.

அப்போது கப்பிக் கல் தன்னுடன் பதிந்திருந்த ஏனைய கப்பிக் கற்களிடம் 'சகோதரர்களே! சௌக்கியமா? நான் இப்போது பெரிய மனிதர்களைப் பார்க்க அவர் மாளிகைக்குப் போய் விட்டுத் திரும்புகிறேன். பெரிய மனிதர்களையும் பணக் காரர்களையும் எனக்குப் பிடிப்பதில்லை. என்னைப் போன்ற சாதாரண மக்களிடம்தான் எனக்கு உண்மையில் ரொம்பப் பிரியமும் மரியாதையும் இருக்கிறது. அதனால்தான் திரும்பி விட்டேன்' என்றது.

சொல்லிக் கொண்டிருக்கும் போதே சரக்கு ஏற்றி வந்த ஒரு வண்டியின் சக்கரம் தனியாகக் கிடந்த கல்லின் மேல் ஏறியது. 'அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!' என்று சொல்லிக் கொண்டே துண்டு துண்டாகச் சிதறிப் போனது அந்தப் பச்சோந்திக் கப்பிக் கல்.

*- சிந்திப்பவன்*


IRO

Immigration – குடிவரவு

கடந்த 11 ஆண்டுகளாக பிரித்தானியாவில் குடிவரவுத்துறையில் முன்னணி நிறுவனம்

உங்கள் சகல விதமான

- குடிவரவு விண்ணப்பங்கள்
- மேன்முறையீடுகள் (Appeals)
- இலங்கை, இந்தியாவில் விசா மறுக்கப்பட்டவர்களுக்கான மேன்முறையீடுகள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்

இது தவிர

- Human Rights - Humanitarian Protection, 10 years - 14 years விண்ணப்பங்கள்,
- புதிய அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் (Fresh Application)

விபரங்கட்கு: திரு குலேந்திரன்
திரு ராம்
திரு சூரியகுமாரன்

Tel: 020 8682 4494
Mob: 07976 759 725
07939 261 540
07810 848 017

OISC

1083 Garratt Lane,
Tooting, London
SW17 0LN

(குடிவரவு ஆணையாளர் அலுவலகத்தினால் குடிவரவு ஆலோசனைகள் வழங்க Level 3 அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்.)

முன் அனுமதி பெற்று வரவும்
அலுவலக நேரம் 11.00 – 17:30
திங்கள் முதல் வெள்ளி

# KIDS

## MY LOFTY SNOWMAN



My snowman is as tall as tree, it has a very circular stomach. My Snowman's name is Billy. He has a nose which is as long as the River Nile. Except Billy's nose is not the same colour.

Billy's hue of his scarf is very dark. However, his hat is patterned with red and white colours. My snowman has a very vast head, its magnitude is like an elephant's body. Billy's eyes are round and spherical, his eye colour is deep blue.

Its body is very plump therefore he is hard to fracture. Even though my snowman is tall and fat he will defrost after two whole days. On the other contrary, it was fun making Billy also I used Billy as a target to practise my snowball throwing.

Moreover I used my snowman to hide, so that I could defend myself from my friends firing snowballs at me. My only wish about my snowman is that if he could come to life.

***By: Kirusanth Murugaiah ( Age:10)***

Knollmead Primary School

Tolworth ,Surbiton , Surrey

## THE ASS CARRYING THE IMAGE

An Ass once carried through the streets of a city a famous wooden Image, to be placed in one of its Temples.

As he passed along, the crowd made lowly prostration before the Image.

The Ass, thinking that they bowed their heads in token of respect for himself, bristled up with pride, gave himself airs, and refused to move another step.

The driver, seeing him thus stop, laid his whip lustily about his shoulders and said, "O you perverse dull-head! it is not yet come to this, that men pay worship to an Ass."

**They are not wise who give to themselves the credit due to others.**

## THE ASS IN THE LION'S SKIN

An Ass, having put on the Lion's skin, roamed about in the forest and amused himself by frightening all the foolish animals he met in his wanderings.

At last coming upon a Fox, he tried to frighten him also, but the Fox no sooner heard the sound of his voice than he exclaimed,

"I might possibly have been frightened myself, if I had not heard your bray."

## JOKES

Baby snake to its mother: Are we poisonous?

Mother: Why?

Baby: Because I've just bitten my tongue!

A frog went to an astrologer and was told, "You are going to meet a beautiful young woman who will want to know everything about you."

The frog said, "That's great! Will I meet her at a party, or what?"

"No", said the astrologer, "Next term—in her biology class."

First cow: Moo

Second cow: Baa

First cow: What do you mean, baa?

Second cow: I'm learning a foreign Language.

A family of mice were surprised by a big cat.

Father Mouse jumped and said, "Bow-wow!" The cat ran away.

"What was that, Father?" asked Baby Mouse.

"Well, son, that's why it's important to learn a second language."

Once there were three turtles. One day they decided to go on a picnic. When they got there, they realized they had forgotten the soda.

The youngest turtle said he would go home and get it if they wouldn't eat the sandwiches until he got back.

A week went by, then a month, finally a year, when the two turtles said, "Oh, come on, and let's eat the sandwiches."

Suddenly the little turtle popped up from behind a rock and said, "If you do, I won't go!"

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner: ***Naveen Rajeef (Age 6)**, Eastham.*

Last week's runners up -

***Nilani Sivachelvam (Age 8)***
*Wallington*

***Diluxshana Thayananthan (Age 9)***
*West Croydon*

***Iniyaal Rajkumar (Age 8)***
*Guildford*

***Oviya Richard (Age 7)***
*Harrow.*

## TONGUE TWISTER

**Knapsack straps.**

**Which wristwatches are Swiss wristwatches?**

**Lesser leather never weathered wetter weather better.**

**A bitter biting bittern**

**Bit a better brother bittern,**

**And the bitter better bittern**

**Bit the bitter biter back.**

**And the bitter bittern, bitten,**

**By the better bitten bittern,**

**Said: "I'm a bitter biter bit, alack!"**

**Inchworms itching.**

**A noisy noise annoys an oyster.**

## QUOTABLE QUOTES

**" What matters is not the size of the dog in the fight , but the size of the fight in the dog."**

***- Coach Bear Bryant***

**" Few things are impossible to diligence and skill."**

***- Samuel Johnson***

**" A man's worth is no greater than the worth of his ambitions."**

***- Marcus Aurelius Antonnius***

## AMAZING FACTS

- Each year there are approximately 20 billion coconuts produced worldwide
- A chicken with red earlobes will produce brown eggs, and a chicken with white earlobes will produce white eggs
- There is a restaurant in Stockholm that only offers all-garlic products. They even have a garlic cheesecake
- Superman The Escape rollercoaster, located in California at Six Flags Magic Mountain, goes from 0 to 100 miles per hour in only 7 seconds
- Five thousandths of a millimeter is the tolerance of accuracy at the LEGO mould factories
- 2.5 cans of Spam are consumed every second in the United States
- In 1836, Mexican General Santa Anna held an elaborate state funeral for his amputated leg. updated
- A meteor has only destroyed one satellite, which was the European Space Agency's Olympus in 1993.
- The Koala bear is not really a bear, but is really related to the kangaroo and the wombat.
- One gallon of pure maple syrup weighs 11 pounds
- Instead of a Birthday Cake, many Russian children are given a Birthday Pie
- The largest employer in the world is the Indian railway system in India, employing over 1.6 million people

## Nothing but the truth

- Might makes right.
- False confidence often leads into danger.
- The more honor the more danger.
- Every man for himself.
- He is not to be trusted as a friend who mistreats his own family.
- They are not wise who give to themselves the credit due to others.
- He who shares the danger ought to share the prize.
- Evil wishes, like chickens, come home to roost.
- Our mere anticipations of life outrun its realities.
- In quarreling about the shadow we often lose the substance.

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | H | A | P | A | I | U | W | S | O |
| H | C | H | A | D | D | I | I | B | N |
| J | E | T | U | A | D | U | P | P | U |
| O | P | H | K | P | C | X | T | U | K |
| A | R | A | U | A | S | O | P | C | X |
| T | U | D | D | A | K | L | M | R | D |
| V | F | D | H | N | T | N | G | U | F |
| U | N | U | A | A | B | R | A | I | N |
| W | S | O | M | I | H | I | Q | Y | Z |
| A | I | B | I | L | M | A | D | P | E |


**Hidden Words:**

**Subject: kitchen items**

PAANAI, CHADDI, ADUPPU, AHAPAI, KUDHAM, THADDU

*Submitted by:*
*Sabeena Sadagopan (Age 10) New Malden.*

## DOT... TO... DOT...





## Sunday with Dad



A Sunday is so typical
when Dad is around
The morning starts
With a loud TV sound.

One groan from my sister
and another from me
Doesn't melt his heart
To let us sleep for a
minute or three.


Mom tries to catch up
On her wee bit of sleep
For she knows Dad is
there
To make a cup of tea.

But once we are all up
It all seems so bright
For that's the only day
When Dad has all the
time.

*By Saakshi Khanna;*

## The Squeaky Squirrel

*By Chitra Padmanabhan;*



Squeaky
squirrel
is a little
sad
His bushy
tail is looking bad
Once it was a shiny one
Then someone used it
As a baby's bottlebrush!

But he likes the baby
So he's no longer sad
The baby's mother has
promised him a good bath!

## The Cat and the Cartoon

*By Chitra Padmanabhan;*



The
mouse
in the
movie
came out of the hole
The cat watching the TV
gave a low growl
There were no more mice
in the house
She had seen to that
Cartoons are so cruel,
the tabby thought
Why should they make me
dream of
the meals I no more have?

## The Man, the Boy, and the Donkey

A Man and his son were once going with their Donkey to market. As they were walking along by its side a countryman passed them and said: "You fools, what is a Donkey for but to ride upon?"

So the Man put the Boy on the Donkey and they went on their way. But soon they passed a group of men, one of whom said: "See that lazy youngster, he lets his father walk while he rides."

So the Man ordered his Boy to get off, and got on himself. But they hadn't gone far when they passed two women, one of whom said to the other: "Shame on that lazy lout to let his poor little son trudge along."

Well, the Man didn't know what to do, but at last he took his Boy up before him on the Donkey. By this time they had come to the town, and the passers-by began to jeer and point at them. The Man stopped and asked what they were scoffing at. The men said:
"Aren't you ashamed of yourself for overloading that poor donkey of yours and your hulking son?"

The Man and Boy got off and tried to think what to do. They thought and they thought, till at last they cut down a pole, tied the donkey's feet to it, and raised the pole and the donkey to their shoulders. They went along amid the laughter of all who met them till they came to Market Bridge, when the Donkey, getting one of his feet loose, kicked out and caused the Boy to drop his end of the pole. In the struggle the Donkey fell over the bridge, and his fore-feet being tied together he was drowned.

**"That will teach you," said an old man who had followed them:**
**Please all, and you will please none**

## Young Poets

*By Todd-Michael St. Pierre*

Todd-Michael St. Pierre writes poems, songs and plays for children. He is a storyteller at schools throughout the southern United States. Among his published works are 'Somewhere: As Told By Garnett The Parrot' and 'The Louisiana State Bird Beauty Pageant'. 'Young Poets' is part of a collection, 'A Treehouse On The Moon', to be published soon, along with other works such as 'The Prince Of Nonsense: Silly Poems4Kids' and 'Pat The People: In A Zoo And Set The Animals Free: Poems4Kids To Read Out Loud'. St.Pierre lives in St. Francisville, Louisiana, with his two Siamese twin cats.

You speak for the lakes, the trees and the birds
You say what they'd say if they had the words.
Make PEACE and be proud, choose well every choice
Speak HOPE and speak loud, you are Nature's voice.

Speak with respect now, for jungles and streams
Speak for all wildlife and dream giant dreams
Speak with great courage, speak up and speak out
Write with a whisper or write with a shout.

Stand up young poets for clean air and river
Free verse or lyric; your message delivers.

Truth for the future citizens of earth
Speak of your freedom your friends and self worth.

Speak for tomorrow and though you're still young
Speak for the Forest, your pen is her tongue.

The world waits to hear your songs still unsung
Words posses power, you can write the wrongs

Teach us and lead us with Poems and with songs
Speak now for nature, for trees and for birds.

Defenders of Earth choose careful your words!


SPECTRUM VIDEO & PHOTO
மங்களகரமான வைபவங்களுக்கும்,
வீடியோ படப்பிடிப்பிற்கும்,
போட்டோ எடுக்கவும்,
தொடர்பு கொள்ளவும்
SRIRAM OR PIRATHEEP
020 8687 2586
079 7748 5036





மலிவு விலையில் அரிசி
கைக்குத்தல் அரிசி - 10Kg - £9.99
தஞ்சாவூர் பொன்னி - 10Kg - £9.99
அமெரிக்கன் புழுங்கல் - (Jolly Boy) - 10Kg £9.99
Convenience Plus
72, North Street, Romford, RM1 1DA, London
தொடர்புகளுக்கு : 079 3245 6464

SHOP FOR SALE
MANCHESTER
WEEKLY TAKING £14500.00
OFF LICENCE & NEWS AGENTS
2 BED ROOMS OWNERS ACCOMMODATION
SAME OWNERS FOR 8 YEARS
FRESH LEASE AVAILABLE
ASKING PRICE - £75000.00
CONTACT - 07985250019
07939597345
Email:rochdale14@hotmail.com

First Indian Guru Rishi Ji From India
In the Spirit of true Spiritualism
who writes your problems before you speak.
A classical fantasy in the spiritual world
Doctrine in Tantra Practising
since 1973 world-wide.
(No Consultation Fees)
By using the tools of Ancient Indian Tantra:
Juju, Black Magic, Evil effects of any kind etc. are removed.
Financial, love, health problems etc. are rectified.
பார்வையொன்றே போதும் உங்கள் ஜாதகத்தை கணிப்பதற்கு...
To give this message worldwide we requested Rishi Ji to allow his followers to advertise
For appointment ring: 020 8518 2201 / 020 8554 2177
50 Vaughan gardens, Gants Hill, Ilford, Essex IG1 3PD

BEAUTICIAN - தேவை
CROYDONல் புதிதாகத் திறக்கப்படவுள்ள BEAUTY CENTER க்கு THREADING AND FACIALS செய்யக்கூடிய அனுபவம் உள்ள BEAUTICIAN தேவை
தொடர்புகளுக்கு :
020 8684 1026 | 079 6076 1606

PERMA
INTERNATIONAL SHIPPING LTD
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
தொடர்புகளுக்கு: சிவம்
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397

# NEW LONDON COLLEGE

New London College



ஐக்கிய ராச்சியத்தில் உள்ள மிகவும் பிரசித்தமானதும்,
அதிக சித்திகளை பெற்றதுமான கல்லூரி.

பிரித்தானிய பிரஜா உரிமைக்கும், நீண்ட நாட்கள் தங்கி
படிப்பதற்கும், ஏற்ற பாடத் திட்டம்
நீங்கள் ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழி பேசுபவர்களா ?

You will have to pass the ESOL Citizenship Test and submit the Certificate along with your application to the Home Office

**We are an authorised Test Centre with proven track record**

## WE TRAIN UNTIL YOU PASS

- ⇒ ACCA / CIMA / CAT
- ⇒ SAGE Accounting/Payroll
- ⇒ Business Management
- ⇒ Human Resource
- ⇒ Hotel Management
- ⇒ Tourism Management
- ⇒ Travel Agency Management
- ⇒ Air Ticketing
- ⇒ IT - ORACLE
- ⇒ English Language (ESOL)

**1 Martindale Road, Hounslow, London, TW4 7EW**
**(Opp. HOUNSLOW WEST Tube Station)**
**www.newlondoncollege.co.uk**

**Call Now**
**020 8570 7766**

virgin atlantic · abe · CIMA · ACCA · City & Guilds · IAM · BAC ACCREDITED · ilm · ncfe · ORACLE · WORKFORCE DEVELOPMENT PROGRAM



elSe PROPERTIES

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும்
ஒரே நிறுவனம்



Sales, Lettings, Management, Decoration, HIP, Energy Performance certificate, Gas / Electricity Safety Certificate, Damp & Timber treatment package etc...

- Garage for sale in Lewisham with more space.
- Office to let in - 40, Camps Hill Road, Lewisham,London,SE13 6QT
- Party Shop / A2 Licence to lease in Loampit Hill Lewisham London SE13 7SW
- Restaurant(Lease with A2, A3 licence) for sale in Loampit Hill

For more property details
walk in or Call us

**Else Properties**
20C Loampit Hill, Lewisham, SE13 7SW

**Phone: 020 8691 6878 | Fax: 020 8626 4575 | Mobile: 07525900820**
Email: info@elseproperties.com | Web: www.elseproperties.com



SLTWG

*South London Tamil Welfare Group*
தென் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு
*Enhancing the quality of life of tamil community.*

வேலை தேடுவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

## Employment Support Course
(includes basic IT & English)



FREE COURSES
for TAMILS!



Certificates given!!!

Travel & Childcare expenses given!
We welcome people with Disability.

Support Classes Every Month!
At Mitcham, Surrey.


**Course modules:**
- Interview Techniques.
- CV preparation & Job search;
- Application form filling;
- Team work; Presentation skills;
- Motivation & Time Management;
- Internet & E-mails;
- Basic MS Word & Excel.
- Skills for Life;

Telephone: 0208 646 1193 to Register.
(You must be eligible to work in the UK).

SLTWG Employment Training Centre
Ambassador Suite3, Justin Plaza 3,
341 London Road, Mitcham,
Surrey CR4 4BE.

SUPPORTED BY
LONDON DEVELOPMENT AGENCY
WORKING FOR THE MAYOR OF LONDON

**please telephone before visiting our Centre**



தீபம் TV யில்
ஒளிபரப்பாகவிருக்கும்
“இசையில் வீழ்ந்தேன்”
பாட்டுப் போட்டிக்கு பாடகர்கள்,
பாடகிகள் தேவை. பங்குபெற
விரும்புவோர் தொடர்பு
கொள்ளவும்.
MATHAN'S
CINE ZOOM
media
02084722519 / 07904125826
cinezoom@gmail.com
www.cinezoommedia.com


கைகள் இல்லை
என்றாலும் கவலை
வேண்டாம்
security
reliability
affordability
xprio.com
TOSHIBA
4 CAMERA PACKAGE NORMAIL £1499.00
INTRODUCTORY OFFER £999.00
EPOS TOUCH SCREEN Till NORMALY £2999.00
INTRODUCTORY OFFER £1999.00
INCLUDING INSTALLATION AND TRAINING
Epos
CCTV Systems
Alarms
Broadband
Telephone
Satallite
Shop fitting
&
Signs
வாருங்கள்
பாருங்கள்
வாங்கிச்செல்லுங்கள்
020 7193 6378
07847 334231
* Subject to terms and conditions
Epos
Hospitality and Retails
Web Hosting
Web Designing
Networking
PC Maintenance/ repairs
Complete IT solutions
free Consultation & Guaranteed price matching*
Leasing available
உலகின் எப்பாகத்திலிருந்தும் உங்கள் வியாபாரத்தையோ வீட்டையோ இலகுவாக கண்காணிக்கலாம்
prioritizing your business
call us for professional free advise

LYCAFLY.com
Travel the world for Less

Fares correct at the time of publication 22nd Dec 08

MERRY CHRISTMAS
AND
A HAPPY 2009

from London Heathrow
COLOMBO
from £425
Return flights including taxes

Want to try something new ?
Login to
www.LycaCruise.com

www.Lycafly.com

CALL US
0208 902 1040
Free Phone 0800 012 0500

Bombay
Delhi
from £320

Chennai
from £360

All fares
Return Incuding
taxes.
Subject to availability.
Conditions may apply

IATA ABTA Y0412



Hire a
van for
£59

Quote 'oru' to get
10% discount

உங்கள் வாகன தேவை அனைத்திற்கும்
அழையுங்கள்

Call: 020 8687 1555

www.colehire.co.uk

*TERMS & CONDITIONS
All prices exclude VAT and are quoted per week. Minimum hire is 28 consecutive days. Offer is valid from 1st January 2009 - 31st March 2009 inclusive. No other offer or discount can be used in conjunction with this offer. Full Terms & Conditions available on request.



GET ME
HALF
PRICE!

COLE HIRE
CAR & VAN RENTAL

50% OFF ALL VANS & CARS*

weekly

| CARS | WAS | NOW |
|---|---|---|
| FORD FOCUS 1.TDI | ~~£178.72~~ | £89.36 |
| VW GOLF 1.9TDI | ~~£187.23~~ | £93.61 |
| FORD GALAXY 7 SEATER | ~~£425.53~~ | £212.76 |
| **VANS** | **WAS** | **NOW** |
| FORD TRANSIT SWB | ~~£225.53~~ | £112.76 |
| FORD TRANSIT MWB | ~~£242.55~~ | £121.27 |
| FORD TRANSIT LWB | ~~£254.46~~ | £127.23 |
| MERC FREEZER VAN | ~~£468.08~~ | £234.04 |
| MERC LUTON FREEZER | ~~£510.63~~ | £255.31 |
| FORD LUTON BOX W/TAIL LIFT | ~~£361.70~~ | £180.85 |

WEST LONDON BRANCH
Cole Hire
Westar House
690 Great West Road
Isleworth
Middlesex
TW7 4PU
Tel: 020 8568 0733
E: arles@colehire.co.uk

SOUTH LONDON BRANCH
Cole Hire
136 London Road
Mitcham
Surrey
CR4 3LB
Tel: 020 8687 1555
E: come@colehire.co.uk

# என் அப்பு கட்டிய கோவணமே எனக்கு தேசியக் கொடி.!

**தமிழ்ப் பொடியன்**

*(அவுஸ்திரேலியாவிலிருந்து)*

ஒரு முக்கியமான கால கட்டத்தில் வரலாற்று கடமையை செய்ய வேண்டிய தருணத்தில் நிற்கிறோம். புலம்பெயர் தமிழர்களின் கைகளில் முக்கியமான பணி ஒன்று தமிழீழ தாயகத்தில் வாழும் எங்கள் உறவுகளால் தரப்பட்டிருக்கிறது.

இன்று ஒரு பலஸ்தீனியன் செய்யாத புரட்சியை, இஸ்ரேலியன் செய்திராத சர்வதேச பரப்புரையை, ஒரு காசா நாட்டுக்காரன் கண்டிராத இழப்பை எல்லாம் ஈழத்தமிழன் நிலத்திலும் புலத்திலும் அனுபவித்தும் செய்தும் காட்டியாகிவிட்டது. கடந்த 3 வார மாக சர்வதேச அளவில் வரலாற்றில் எந்த ஒரு இனமும் செய்திராத மக்கள் புரட்சியை புலம்பெயர் தமிழர்கள் நிகழ்த்தி சர்வ தேசத்தின் மனச்சாட்சியை தட்டியிருக்கிறார்கள்.

'இதற்கு மேல் சர்வதேச அளவில் கவனயீர்ப்பையோ பரப்புரையையோ செய்யமுடியாது என்பது சர்வதேச மனித நேய கனவான்களுக்கு தெரிந்த உண்மை. கொழுத்தும் வெய்யிலில் தீக்குளித்தார்கள் மெல்பேர்ன் நகரில் 5000 தமிழர்கள். பட்டினியிருந்து உடல் வருத்தி கருணை காட்டுங்கள் என இளையோர் மன்றாடிக் கேட்டார்கள் சிட்னியில். கன்பராவில் 4000 தமிழர்கள் என்றுமில்லாதவாறு அவுஸ்ரேலிய அரசியல் தலைவர்களின் கவனத்தை ஈர்த்தார்கள்.

ஆனாலும் என்ன பயன்? என்ன நடந்தது? ஒன்றுமேயில்லை. வெறும் காகிதத்தில் உப்புச் சப்பில்லாத பதில் அறிக்கைகள். அதுகூட சிறிலங்கா அரசாங்கத்தின் மனம் நோகக் கூடாது என்று கஸ்ரப்பட்டு தயாரிக்கப்பட்டவை என்பது எல்லோரும் அறிந்த கசப்பான உண்மை. ஆனால் கண்துடைப்புக்காக சில தாமதமான வாக்குறுதிகள் வழங்கப்பட்டது ஏனோ மனதுக்கு ஆறுதல். அவை கூட கானல் நீர்தான்.

வாழ்க்கை தேடி வந்த நாட்டையும் மக்களையும் குறை சொல்வதாய் சிலர் முணுமுணுப்பது என் காதுகளுக்கு கேட்கிறது. அடைக்கலம் தந்த நாட்டை ஆலயங்களாக நினைக்கும் ஆயிரம் ஆயிரம் தமிழர்களில் நானும் ஒருவன். நாயிற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கூட இந்த அகதிகளுக்கு கொடுக்கிறார்கள் இல்லையே என்று நினைக்கும் போதுதான் மனதின் ஒரு ஓரத்தில் வலிக்கிறது.

உங்கள் மனச்சாட்சியை தொட்டு சொல்லுங்கள் இதை ஒரு சீனாக்காரனோ இல்லை அவுஸ்ரேலிய பழங்குடியினரோ செய்திருந்தால் என்ன நடந்திருக்கும்? அவுஸ்ரேலிய குடியுரிமை உடைய அவுஸ்ரேலிய இளையோர் 4 பேர் உண்ணாவிரத போராட்டம் என்று ஒரு 5 நிமிடத்துக்கு இருந்தால் என்ன ஆகியிருக்கும்? அதுவே இந்த நாட்டின் முக்கிய பிரச்சினையாக அனைத்து ஊடகங்களிலும் தலைப்பு செய்தியாகியிருக்கும். நாடே திரும்பிப்பார்த்து கேள்வி கேட்டிருக்குமா? இல்லையா? ஆனால் அவுஸ்ரேலிய மண்ணின் குடியுரிமை பெற்ற இளையோர் 72 மணிநேரத்துக்கு மேலாக பட்டினியிருந்து குரல் எழுப்பி என்ன பலன்?

கடைசியில் அவர்கள் அந்த புனிதமான அகிம்சை வழி போராட்டத்தை தொடர்ந்து நடத்தக்கூட அனுமதி மறுக்கப்பட்டதுதான் வேதனை தருகின்றது. மகாத்மாகாந்தி மேல் கொண்ட வெறுப்பும் கோபமும் இன்னும் வெள்ளைக்காரர்களுக்கு போகவில்லை என்ற சந்தேகம் பலருக்கு இருக்கிறது. ஒரு நாட்டின் அனைத்து குடிமக்களையும் சமத்துவமாக சரிசமானமாக வேறுபாடின்றி பார்க்கவேண்டியது ஒரு நல்ல மாந்தை நேய அரசின் கடமையாகும்.

மனிதநேயம் என்பதை வெறும் வாயினால் பேசினால் மட்டும் போதாது. மனச்சாட்சியோடு அதை செயல் வடிவத்திலும் காட்டவேண்டும். அவ்வாறு வேறுபாடு காட்டப்படும் இடத்து அதை தட்டிக்கேட்க வேண்டியது எமது உரிமை. ஆனால் இது நமது வேலையல்ல. தாயகத்தில் நாள்தோறும் 50,100 என நரபலி எடுக்கிறது சிறிலங்கா பேரினவாத இராணுவம். இதற்கு துணைபோகிறது இந்திய ராணுவமும் சர்வதேச நாசகார படைகளும்.

புலம்பெயர் தமிழர்கள் நாங்கள் இப்போது ஒரு தீர்மானத்தை ஒருமனதாக எடுக்கவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கிறோம்.

விடுதலைப்புலிகள் இருக்கிறார்களா? தலைவர் பிரபாகரன் வன்னியை விட்டு ஓடி விட்டாரா? விடுதலைப் புலிகளுக்குள் பிளவு ஏற்பட்டு வலிமை குன்றி விட்டார்களா? காடுகளுக்குள் ஓடி ஒழிந்து விட்டார்களா? இன்னும் சில நாட்களில் ஆயுதங்களை எல்லாம் போட்டுவிட்டு சரணடைய போகிறார்களா? இப்படியெல்லாம் பலகேள்விகளை கேட்டுக் கொண்டிக்கிறார்கள் பலபேர்.

அவர்களுக்கெல்லாம் ஒரே பதில் தான். புலி பசித்தாலும் புல்லை தின்னாது. ஒரு மாதமாக 1500 அப்பாவி பொதுமக்களை நரபலி எடுத்து 5000 விடுதலைப்புலிகளை கொன்றொழித்துவிட்டதாக சர்வதேசத்துக்கு கணக்கு காட்டியிருக்கிறது மகிந்த அரசாங்கம். அதை அப்படியே மண்டையை ஆட்டி ஏற்றுக்கொண்டிருக்கிறது சர்வதேசமும் மனித நேய அமைப்புக்களும். கோடிக்கணக்கான புலம்பெயர் வாழ் தமிழர்கள் கொட்டும் வெய்யிலிலும் உறைபனியிலும் நின்று 'எங்களுக்கு நீதி வேண்டும், எங்கள் சொந்தங்களை மரணத்தில் இருந்து காப்பாற்றுங்கள்' என்று கதறிக் கூக்குரல் கொடுத்தும் சர்வதேசம் இறுக கண்மூடி தூங்குகின்றது. இல்லை தூங்குவது போல் நடிக்கிறது.

கடந்த ஒரு மாதத்தில் 2000 உயிர்கள் அநியாயமாக காவுகொள்ளப்பட்டுள்ளது. 2500இக்கும் அதிகமானவர்கள் உடல் ஊனமாக்கப்பட்டுள்ளார்கள். கோவில்கள், தேவாலயங்கள், வைத்தியசாலைகள் என அடைக்கலம் தேடி புகுந்த மக்களையும் சர்வதேச போர் விதிமுறைகளையும் மதிக்காது குண்டு வீசி கொன்றொழித்து கொண்டிருக்கிறது சிங்கள பேரினவாதம். இதை கைகட்டி வாய்பொத்தி மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமா கொல்லப்படுவது புலிகள்தான் என்று அறிக்கையும் வேறு. வெள்ளைப்புறா வேசம் போட்ட குளிர் நாடும் அதற்கு ஆமாம் என்று தலையாட்டுவதுதான் கொடுமையிலும் கொடுமை, வயிறுபிளந்து குடல் சிதறிக் கிடக்கும் சின்னக் குழந்தையும் தள்ளாத வயதில் தலை இல்லாமல் துண்டு துண்டாய்க் கிடக்கும் அப்புவும் ஆச்சியும் விடுதலைப் புலிகளா? இல்லை இரண்டு கைகளையும் இழந்து வலியால் குழறும் சின்னப்பொடியன் புலியா? என்னடா உங்கள் நீதி? காசாவில் நாலு வயது குழந்தை இறந்து விட்டால் வாய் கிழிய கத்துகிறீர்கள்.

நாய் ஒன்று நடுவீதியில் அடிபட்டால் நாலு பக்கத்துக்கு அனுதாப கட்டுரை எழுதும் சர்வதேச மனிதநேய வாதிகளே கொஞ்சம் மனச்சாட்சியோடு எங்கள் மக்களை திரும்பி பாருங்கள். இல்லையென்றால் நீங்கள் எடுத்திருக்கும் சில இறுக்கமான தீர்மானங்களையும் மனச்சாட்சி இல்லாத முடிவுகளையும் போல நாங்களும் அவசரமாக எடுக்கவேண்டிய இக்கட்டான நிலைக்கு வலுக்கட்டாயமாக தள்ளப்பட்டிருக்கிறோம்.

தமிழர்கள் இழிச்சவாயர்கள், குட்டக் குட்ட குனியும் மடையர்கள்.!, எது செய்யினும் ஏன் என்று கேட்பதற்கு நாதியற்றவர்கள்.!. தமிழன் உயிர் நாயிலும் கேவலமானது.!. மதிப்பில்லாதது. தமிழன் என்ற இனம் இனிமேல் இருக்கக்கூடாது. அவனுக்கென்று ஒரு நாடு வரலாற்றில் இருக்கவேகூடாது. இப்படியெல்லாம் நினைக்கும் சிங்களப் பேரின வாதத்துக்கும் சர்வதேச சண்டியர்களுக்கும் ஒன்றை மட்டும் கடைசியாய் கூறுகிறோம். என்ன ஆயுதம் எடுக்கவேண்டும் என்று எதிரியே தீர்மானிக்கிறான் என்று யாரோ ஒருவன் சொன்னான்.

முல்லைத்தீவிலும் புதுக்குடியிருப்பிலும் கொத்துக் குண்டுகளையும் கிளஸ்ரர் குண்டுகளையும் எரிகுண்டுகளையும் வீசியும் அப்பாவி பொதுமக்களின் உயிர்களை கொன்றொழித்தும் போராட்டத்தின் வடிவத்தையும் பாதையையும் மாற்றி விட்டான் எதிரி. வன்னியில் கேட்கின்ற அழுகுரல்களைப் போல் ஆயிரம் மடங்கு சிறிலங்காவின் மூலை முடுக்கெல்லாம் கேட்க வைப்பதற்கு தமிழர்களால் நினைத்தால் அரை நொடியில் முடியும். இதைத்தான் சிங்களப் பேரினவாதமும் மகிந்த அரசும் மனிதநேய அமைப்புக்களும் சர்வதேசமும் எதிர்பார்க்குமானால் அது வெகுவிரைவில் நடக்கும்.

அப்போதும் புலம் பெயர் தமிழர்களின் கைகளில் தான் இன்னொரு பணியும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இப்போது சர்வதேசமே கண்திறந்து பார் என கூக்குரலிட்டு கதறும் நாங்கள், சிங்கள தேசம் கூக்குரலிட்டு அழும்போது கொடுக்கு கட்டிகொண்டு ஓடிவரும் சர்வதேச சண்டியர்களை நடப்பதை பொத்திக் கொண்டு வேடிக்கை மட்டும் பார் என்று அடக்கி வைக்க வேண்டியதும் நாம்தான்.

என் அப்பு கட்டிய கோவணமே எனக்கு தேசியக்கொடி.!

உனக்கு வேண்டுமானால் பிரான்ஸ் கொடியோ அவுஸ்ரேலியக் கொடியோ தேசியக் கொடியாகலாம்...

எனக்கு என் அப்பு கட்டிய கோவணத் துணியே தேசியக் கொடி.!

ஒடியல் புட்டும் மீன்கறியும் தான்
எனக்கு எப்போதும் தேசிய உணவு.

பிசாவும் மக்கசும் ருசிதான் –ஆனாலும்

அம்மாவின் கைப்பக்குவத்தில் ஆக்கிய
நண்டுக் குழம்புக்கு கீழ்தான்

கொள்ளை அழகுதான் பாரிஸ் கோபுரம் –
ஆனாலும்

நெடிதுயர்ந்த பனையை விட கொஞ்சம்
குறைவுதான்.!

கங்கையில் மூழ்கினாலும் காக்கை
அன்னமாகாது

கடல் கடந்தாலும் கலாச்சாரம் மாறாது

நாகரிகம் என்று உன் நல்ல பெயரை
நறுக்கி மாற்றலாம்

உன்னுள் ஓடும் உன் தாயின் குருதியை
மாற்றலாமோ ?

ராப்பும் (துள்ளிசை) பப்பும் (கேளிக்கை
விடுதி) உனக்கு அந்த மாதிரி

உடுக்கோசையும் காவடி ஆட்டமும்தான்
என்றும் எனக்கு முன் மாதிரி

அடையாளங்களை தொலைத்து விட்டு
அசிங்கமாய் வாழ்வதை விட

அம்மணமாக வாழ்வது மேல்.!

## அக்கினிக் குஞ்சு

மனிதம் வதைபடுபவதை
தமிழன் அழிவதைத் தடுக்க
தாய் தடுத்தாலும் விடேனென்று
தமிழ்த் தாய் தடுத்தும் கேளாமல்
நெருப்பைப் பற்றிக் கொண்டாய்
உன் அங்கமெங்கும்

நீ அணைந்தாயா?
தன் மகனை இழந்ததாய்
விடாது அழுது புலம்பும்
தமிழ்த்தாய்க்கு உரக்கக் கூறிவிட்டோம்
இந்த இளைய சமுதாயமனைத்தும்
அந்த அக்கினியின் குஞ்சுகள் என்று

அக்கினிக் குஞ்சுகள் பெற்றெடுக்கும்
பாக்கியத்தைத் தாய்க்கு...
தமிழ்த்தாய்ககும் வரமாய்
வழங்கிச் சென்றாய்...
வாழ்க நீ!
ஒவ்வொரு அக்கினிக் குஞ்சிலும்

*- சுநயனன்*




ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் அர்ஜுனா ராஜா குருஜி ஜெங்கம்மா

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கைபெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.




07951 631 883 / 020 8470 5209

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

# The Brent Tamil Academy
## At Alperton

"முழுமைகொண்ட தமிழ் கல்வி நிலையத்தில் சேருங்கள்"



The Brent Tamil Academy யில் நாங்கள் உயர்ந்த தரம்கொண்ட கல்வியும் பயிற்சியும் வழங்குகிறோம். உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்தில் அக்கறைகாட்டும் நல்ல அனுபவம் கொண்ட, திறனுடன் செயற்படும் ஆசிரியர்கள் எம்மிடம் உள்ளார்கள். இங்குள்ள மாணவ சமுதாயம், ஒரு பாரிய குடும்பமாகத் தங்களைக் கருதி உண்மையான மகிழ்வுடன் உள்ளார்கள்.

**சனிக் கிழமைதோறும் கீழ்காணும் பிரிவுகளில் உயர்ந்த தரத்தில் வகுப்புகள் நடத்தப்படும்.**

**நுண்கலைப் பிரிவில்**
- தமிழ் மொழியும் இலக்கியமும்.
- இந்து சமயம்
- கர்நாடகசங்கீதம் வாய்ப் பாட்டு
- பரத நாட்டியம்
- வீணை
- வயலின்
- மிருதங்கம்
- Keyboard

**Science facultyல்**

| | |
|---|---|
| English | Yr. 3 – 11 |
| Maths | Yr. 3 – 11 |
| Science | Yr. 5 – 11 |
| Verbal & Nonverbal Reasoning | (11+ coaching) |
| Physics to | A Level |
| Chemistry to | A Level |
| Biology to | A Level |
| Mathametics to | A Level |

✌ உங்கள் குழந்தை ஆகக் கூடிய திறமையுடன் மேடையில் தோன்றவும், தங்கள் முழு ஆற்றலையும் பயன்படுத்தி பரீட்சைகளில் தோன்றவும் நாம் வழிவகுக்கின்றோம். கீழைத்தேய நுண்கலை சபையின் பொதுப் பரீட்சைகளில் 80 சதவீதமான எங்கள் மாணவர்கள் அதி திறமைச் சித்தி பெற்றுள்ளார்கள்.

✌ 90 சதவீதமான கீழ்ப் பிரிவு மாணவர்கள் தமிழ்ச் சோலை நடாத்திய பரீட்சைகளில் திறமைச் சித்தியும் அதிதிறமைச் சித்தியும் பெற்றுள்ளார்கள். கல்விச் சாதாரண பிரிவில் (Cambridge) எங்கள் 70 சதவீமான மாணவர்கள் A எடுத்துள்ளார்கள். அதேசமயம் Advanced Level ல் (Cambridge) 100 சதவீதமானவர்கள் A எடுத்துள்ளார்கள்.

*சனிக்கிழமைகளில் காலை ஒன்பதிலிருந்து பிற்பகல் நாலரை வரை வகுப்புகள் உண்டு.*

போக்கு வரத்துக்கும் எளிது. Alperton தொடருந்து நிலையத்திற்கு அடுத்தும் Ealing Road தமிழ் /ஆகிய கடைகளுக்கு அண்மையாகவும் இலவச வாகனத் தரிப்பிட வசதியுடனும் அமைந்துள்ளது..

**நடைபெறும் இடம்: Alperton Community School, Ealing Road, Alperton, Wembley HA0 4PW.**
**தொடர்புகளுக்கு: K Kuganathan, Dirctor of Studies 01895674952 Mobile 07710826835**

(The Brent Tamil Academy is part of the Brent Asian Academy, established 1991.)

# முத்துக்குமாரா உன் மரணம் மிக மிக மிக வலியது

இன்றும் (7.2.09 சனி) தமிழ் நாட்டில் இரவிச்சந்திரன் என்பவர் தீக்குளித்து தன்னைக் கொடையாகக் கொடுத்து இருக்கிறார். இந்த அவலச்சூழலில் ஈழத் தமிழர்களுக்காக ஈழத்துக்கு வெளியே தன்னைக் கொடையாய்க் கொடுத்தவர்களுள் இவர் நான்காவது தமிழ்இனஉணர்வாளர். தமிழ்நாட்டில் முத்துக்குமாரனில் தொடங்கியது இது. பிறகு தமிழ் நாட்டிலிருந்து ரவி என்பவரும் மலேசியா விலிருந்து ராஜா என்பவரும் தம்மைக் கொடையாய்க் கொடுத்து விட்டனர். இப்போது ரவிச் சந்திரன். வெறும் எண்ணுக்கணக்காக இதனை நாம் பார்க்கின்றோமா? அல்லது இன்னும் இன்னும் என இதனை நாம் ஊக்குவிக்கின்றோமா? அல்லது இத் தற்கொடைகளை இட்டு நாம் குதூகலம் எய்துகின்றோமா?

எப்படி இதனைப் பார்க்கலாம் அல்லது பார்க்க வேண்டும்? 'முத்துக்குமரன்கள் வேண்டாம்' என்று சென்ற ஒரு பேப்பரில் சயந்தன் எழுதியது போல் ஒற்றைச் சொல்லில் இதனை மறுதலிக்க வேண்டுமா? அப்பாலும், அப்பாலுக்கு அப்பாலும் சென்று இத் தற்கொடைகள் தரும் அர்த்தத்தை, விளைவை பிண்டப் பிரமாண்டமாக நாம் தரிசிக்க வேண்டாமா?

சயந்தன் என்ன எழுதி இருக்கின்றார்? 'முத்துக் குமரன்கள் வேண்டாம்'. ஏன் அப்படி எழுதுகிறார்? அதைக் கேட்பதற்கு முன்னர் அவர் என்ன சொல்ல வருகின்றார் என்று சுருக்கமாக.

'உயிர் மிகப் பெறுமதியானது அதைக் காப்பதற்கு ஈழ மக்கள் அல்லல் படுகின்றனர். இவ்வேளையில் திருமா, வைகோ போன்ற சிங்கக்களின் கர்ச்சனையில் முத்துக் குமரன் போன்றோர் தீக்குளிக்கின்றனர். அதனால் நிலமை மாறப்போவதில்லை இவர்களுக்கான அஞ்சலி கூட ஊக்குவிப்பாக அமைந்து விடும் ஈழத் தமிழர்கள் காலப்போக்கில் இவர்களை மறந்து விடுவர். ஈழத்தமிழர்களாகிய நாங்கள் இவர்களின் தீக்குளிப்பையிட்டு வெட்கப்பட வேண்டும். எங்கள் மூஞ்சிகளில் நாங்கள் துப்பிக் கொள்வோம்.'

ஊடக ஜனநாயகம் கருத்துச் சுதந்திரம் என்கிற அர்த்தம் இழந்த வெறும் சொற்களில் உடன்பாடு இல்லையாயினும் சில விசயங்களுக்கு ஒத்துப்போக வேண்டியிருக்கிறது. இதுவே பாரதூரமாக அமைகிற போது வெளியில் சில விளக்கங்களை முன் வைக்க வேண்டிய தேவை எனக்கு ஏற்படுகின்றது.

உண்மையில் சயந்தன் போன்ற அந்தத் தலை முறையைச் சேர்ந்த சிலரிடம் முதலாளித்துவ ஜனநாயகம் சில நச்சு விதைகளை விதைத்து விட்டு இருக்கிறது. அந் நச்சு விதைகளை வெளிப்படுத்தும் சில வார்த்தை விளையாட்டுக்கள் தாம் ஊடக ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம், நடுநிலமை போன்றன. இதில் மக்கள் நலம் சார்ந்த எதுவும் இல்லை. தெளிவும் இல்லை. இவை ஒருபுறம் இருக்கட்டும்.

முத்துக்குமாரனின் தீக்குளிப்பு என்பது மகத்தான ஒரு தியாகம். மகோன்மதமான பெரும் பணி. என்னைப் பொறுத்தவரையில் வித்தாய் விழுந்த போராளி, தன்னை கொடையாய்க் கொடுத்த கரும்புலி, இவர்களின் தியாகத்துக்கு சற்றும் குறைந்ததல்ல முத்துக்குமாரனின் தீக்குளிப்பு இன்னும் சொன்னால் அதனால் ஏற்பட்ட சாதக விளைவோ மிகப் பெரிது.

பெயர்களை ஞாபகம் வைத்திருப்பதில் எந்தப் புண்ணியமும் இல்லை சயந்தன். அதன் விளைவுகளை விளங்கிக் கொள்வதில் தான் புண்ணியமுண்டு 1995 ஒக்டோபரில் யாழ்ப்பாணத்தை சிங்களப் படைகள் கைப்பற்றிய போது தமிழ்நாட்டில் தமிழ் உணர்வாளன் அப்துல் ரவூப் தீக்குளித்ததை ஞாபகம் கொள்வதிலும் பார்க்க அதன் விளைவுகள் தான் முக்கியம் என நான் நம்புகிறேன். அனுராதபுரம் விமானத்தளத்தை தகர்த்தவர்களின் பெயரை ஞாபகம் வைத்துக் கொள்வது முக்கியமா? அல்லது அதன் விளைவுகள் முக்கியமா?

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

நெடுமாறன் ஐயா, சீமான், சுபவீ, வைகோ, திருமாவளவன், ராமதாஸ் இவர்கள் இனமான உணர்வுடன் தமிழ் நாட்டில் ஒவ்வொரு தமிழனையும் தட்டி எழுப்புவதை வெறும் கர்ச்சிப்பு என்று சொல்லும் சயந்தனை நாம் என்னவென்று சொல்வது? நொந்து போன மனசுக்கு அது எத்தனை ஒத்தடம் கொடுக்கின்றது என்பதை தமிழ் உணர்வாளர் அனைவரும் உணர்வோம். தங்களுக்கு உணர்வே இல்லாது இருக்கலாம் அதற்காக கர்ச்சிப்பு அது இது என்று மற்றவர்களின் உணர்வை கொச்சைப்படுத்துவது தகுமா?

முத்துக்குமரனை வெறுமனே ஒரு மானுடன் என்று என்னால் பார்க்க முடியவில்லை. அவரை மகாத்மா என்றே நான் உணர்கிறேன். என்னாலோ சயந்தனாலோ இதனை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. முத்துக்குமரன் மிகத் தெளிவாக பகுத்தறிவுடன் தான் இந்த முடிவை எடுத்து இருக்கின்றார். அதனால் தான் தர்க்க பூர்வமாக அவரால் கடிதத்தை எழுத முடிந்து இருக்கிறது. அவர் ஊடகவியலாளராகவும் இருந்து இருக்கிறார். தீக்குளிப்பின் முன்னால் அவரது ஒவ்வொரு அசைவுமே அர்த்தம் செறிந்ததாக இருக்கிறது.

முத்துக்குமரன் எழுதுகின்றார் 'தினம் தினம் கொல்லப்பட்டிருக்கும் எம் தமிழர்களைக் கண்டு சாப்பிட முடியாமல் தூங்க முடியாமல் யோசிக்க முடியாமல் தவிக்கும் ... ' இத்தகைய தவிப்பு எம்மில் எவருக்காவது இருக்கிறதா? நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள் இப்படியான உணர்வு கொண்டோரால் தான் இது இயலும்.

இத்தகைய தவிப்புக் கொண்ட முத்துக்குமரன் வேறு என்ன செய்து இருக்கலாம்? தனியே வள்ளம் வலித்து வன்னிக்கு வந்திருக்க வேண்டுமா? விடுதலைப் போராளிகளுடன் சேர்ந்து ஆயுதம் தூக்கி இருக்க வேண்டுமா? அதை விட மிகப் பெரும் பணியை அல்லவா அவர் செய்து முடித்து இருக்கிறார்.

முத்துக்குமரன் மேலும் ஒரு வசனம் எழுதுகிறார். 'தமிழ்ழ மக்களே நாங்களும் இங்கு இந்தி எதிர்ப்புப் போராட்டம் எல்லாம் செய்தோம். இடையில் கைவிட்டோம் .... ஆனால் என்ன செய்வது உங்களுக்கு அமைந்தது போன்று உன்னதத் தலைவன் எங்களுக்கு இல்லையே' இந்த வாசகத்தை வாசித்த போது ஒரு சிலிர்ப்பும் வெப்பியாரம் வெடித்து ஓர் அழுகையும் தான் நான் அடைந்தேன். முத்துக்குமாரன் சயந்தனைப் போல், என்னைப்போல், உங்களைப் போல் ஒரு சாதாரணன் இல்லை. அவன் சாவு மலையை விடக் கடினமானது.

மேலும் ஒரு வாசகமிருக்கிறது 'என் பிணத்தைக் கைப்பற்றி அதைப் புதைக்காது ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள்' அது ஒன்றே போதும் முத்துக்குமரனை மகாத்மா என்று சொல்ல இன்னும் ஒன்று சொல்ல அவன் மரணம் மிக மிக வலியது. தமிழர் உள்ளவரை முத்துக்குமாரா உன் நாமம் மறக்கற்பாலது.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**

*(ஒரு பேப்பருக்காக)*

## வெண்மை தரும் பனி

இம்மாதம் இரண்டாம் நாள் நாம் கண்ட பருவகாலக் கோலம் எம் மனக் கண்ணில் இன்னும் எத்தனை காலம் நிற்கப் போகின்றது. 17 ஆண்டுகளுக்கு முன் 1992ல் கண்ட காட்சியை திரும்பவும் எம் கண் முன் கொணர்ந்து நிறுத்தியது. பாற்கடல் என்று ஒன்று இருந்தால் கூட, இங்குள்ள வெளிகள் காட்டிய அளவுக்கு வெண்மையுடன் காட்சி தரும் என்று சொல்ல முடியாது.

அங்குலங்கள் ஆழத்தில் தரையை மூடிய இந்த வெண்போர்வை எம் உடலை மட்டும் குளிர வைக்கவில்லை. எம் கண்களையும் உள்ளத்தையும் குளிர வைத்தது. இன்றைய தாய்நாட்டு நிலையால் பதறும் எம் உள்ளங்களைக்கூட தற்காலிகமாக என்றாலும் சிறிது தணிய வைக்கும் ஆற்றல் கொண்டதாக இருந்தது.

நீருக்கு நிறமில்லை. திண்மை நிலை கொண்ட பனிக் கட்டி கூட தெளிவுடன் ஒரு குறிப்பிட்டுக் கூறும் நிறம் அற்றதாக உள்ளது. ஆனால் அதே நீரிலிருந்து எழும் ஆவி குளிரினால் பனித் துகள்களாகும்போது எங்கிருந்து இந்தக் கண்ணுக்கினிய வெண்மை தோன்றுகிறதோ புரியவில்லை.

கதிரவன் எமக்கு அனுப்பும் மின்காந்த அலைகளில் ஒரு சிறு தொகுதியான ஏழு கதிர்கள் மட்டுமே எம் கண்ணுக்குப் புலப்படும் தன்மை கொண்டவை. இந்தக் கண்ணுக்குப் புலப்படும் கதிர்களின் அலைகள் மிகவும் நீளம் குறைந்தவை. இதனால் இவற்றை அளக்க நனோ மீற்றர் என்னும் அலகையே பயன்படுத்துகிறார்கள். ஒரு நனோ மீற்றர் என்பது ஒரு மீற்றரின் 100 கோடியில் (பில்லியனில்) ஒரு பங்கு.

இந்த ஏழு கதிர்களில் நீளம் குறைந்த ஊதாக் கதிர் 400 நனோ மீற்றரும் நீளம் கூடிய ஏழாவதான சிவப்புக் கதிர் 750 நனோ மீற்றரும் கொண்டவை. வான வில்லில் இந்த, ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என்ற ஏழு நிறங்களையும் கண்டு களித்த அனுபவம் எம் எல்லோருக்கும் உண்டு.

ஒளிக் கற்றிலிருந்து இவை ஏழும் சரிசமனாக வெளி வரும்போது வெண்மையாகத் தென்படும். இவ்வலைகளின் நீளம் குறையக் குறைய விட்டு விட்டு நிகழும் தன்மை கூடி செயற்திறனும் கூடும். எடுத்துக் காட்டிற்கு ஊதா நிறத்திலும் அலை நீளம் குறைந்தவையும், எமது சருமத்தைப் பாதிக்கக் கூடியவையுமான தீவிர ஊதாக் கதிர்கள் கதிரவன் உச்சியில் நிற்கும் சமயங்களில் முகில்களையும் ஊடுருவி வரக்கூடியவை. ஆகையால் முகில் நிழல் எம்மை தீவிர ஊதாக் கதிர்த் தாக்கத்திலிருந்து பாதுகாக்காது. ஒரு நனோ மீற்றர் அல்லது அதற்கு குறைந்த நீளம் கொண்ட காமாக் கதிர்களைக் கூடக் கதிரவன் வெளியிடுகின்றான்.

இவ்வலைகள் ஊடுருவக் கூடிய பொருட்களின் ஊடாகப் போகும் வேளைகளில் சற்று முறிகின்றன. இப்படியான முறிவு காரணமாகவே ஒரு கேணியிலுள்ள தண்ணீர் அதன் உண்மையான ஆழத்தைக் குறைத்துக் காட்டுகிறது. எளிதில் முறிந்து சிதறக் கூடிய நீலக் கதிர்கள் வளி மண்டலத்தினூடாகப் புகும்போது வானில் சிதறுவதால் வானம் எமக்கு நீலமாகக் காட்சி தருகிறது.

காலையிலும் மாலையிலும் கதிரவனின் அலைகள் பல மைல் தூரம் வளி மண்டலத்தினூடாகப் புகுவதால் மற்றைய ஆறு கதிர்களும் முறிவுற்று திசை திருப்பப் பட்ட நிலையில் சிவப்பு நிற அலை மட்டும் எம் கண்களை அடைவதால் கீழ்வானம் சிவந்து காட்சி தருகிறது.

சில வேளைகளில் நாம் போடும் உடுப்புக்களே எம்மை ஏமாற்றலாம். நீலச் சட்டை போட்டு பாதரச ஒளிக் குமிழ்களால் ஒளி பெறும் அறைக்குள் போவீர்களானால் உங்கள் நீலச் சட்டை வேறு நிறமாகக் காட்சி தரும், காரணம் பாதரச ஒளிக் குமிழ்கள் நீல நிறத்தை வெளியிடுவதில்லை.

பனியும் பனிக்கட்டிதான். ஆனால் கொத்தாக இணைக்கப்பட்ட பளிங்குகளால் ஆனது. அந்தப் பனிக்கட்டிக் கொத்துக்கள் புகும் ஒளியை முறித்து முறித்து திசை திருப்பி ஈற்றில் சரிசமனாக வெளி விடுவதால், எம் கண்களுக்கு அந்தக் கண்ணுக்கினிய வெண் உருவில் பனி காட்சியளிக்கிறது.



- Accountancy & Auditing
- Business Start up Advice
- Business Plans & Cash Flow Forecasts
- Personal tax Affairs & Self Assesment
- Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- Preparing VAT, Payroll for the Sold Trader
- Patrnership & Limited Companies
- Company Formation
- Attending VAT & PAYE visits
- CIS Voucher & Construction
- Industry Services
- Tax Investigations
- Solicitors Accounts & Accounts Reports

TAMSONS

Accountancy & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# சாமியே சரணம் ஐயப்பா! மகரஜோதி பொய்யப்பா!

'சபரி மலையின் மகரஜோதி என்பது தானே எரிவது அல்ல, அது கோயில் ஊழியர்களால் கொளுத்தப்படுவதுதான்' என்று ஐயப்பன் கோயில் தலைமைப் பூசாரியின் குடும்பத்தைச் சேர்ந்த ராமன் நாயர் சமீபத்தில் ஒரு பேட்டியில் தெரிவித்தார். இதனை ஒட்டி பதில் சொல்லியாக வேண்டிய நிலைமைக்குத் தள்ளப் பட்டார் கோயிலின் தலைமைத் தந்திரி கண்டரரு மகேஸ்வரரு. அவர் சார்பில் அறிக்கை வெளியிட்ட அவரது பேரனும் கோயில் தந்திரியுமான ராகுல் ஈஸ்வர், 'வனத்துறை அதிகாரிகளும், தேவசுவம் போர்டு அதிகாரிகளும், போலீசும் கூட்டாகச் சேர்ந்து கொளுத்தும் தீப்பந்தம்தான் மகரவிளக்கு' என்ற உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

'இந்த அளவுக்கு குட்டு உடைந்த பிறகும் மார்க்சிஸ்டு அரசு மகரஜோதியைக் கொளுத்துமா?, என்ற கேள்விக்கு 'சபரிமலையில் மகர விளக்கு வெளிச்சம் எப்படி உருவாகிறது என்பதைக் கண்டறிய விசாரணை நடத்தப் படும். ஆனால் பக்தர்களின் நம்பிக்கைக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாது' என்று பதிலளித்திருக்கிறார் மார்க்சிஸ்டு முதல்வர் அச்சுதானந்தன். யாரை யார் விசாரிப்பது? பந்தம் பிடிப்பவனை பற்ற வைப்பவன் விசாரிப்பதா? 'தீவட்டியைத் தொடர்ந்து கொளுத்துவோம். தீவட்டிக் கொள்ளையைத் தொடர்ந்து நடத்துவோம்' என்பதுதான் அச்சுதானந்தனுடைய கூற்றின் பொருள்.

மகரஜோதி அம்பலமாவது இது முதல் முறையல்ல. பந்தம் கொளுத்திய மின்வாரிய ஊழியர்களைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள் கேரள மாநில பகுத்தறிவாளர் சங்கத்தினர். 'அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா, அரசாங்க வருமானத்துக்கு ஆப்பு வைக்காதீங்கப்பா' என்று அன்பு வேண்டுகோள் விடுத்து அன்று பகுத்தறிவாளர்களை அமுக்கினார் அந்நாள் மார்க்சிஸ்டு முதல்வர் ஈ.கே. நாயனார்.

கோயில் தந்திரி கண்டரரு மோகனரு,தனது லீலாவிநோதங்கள் மூலம் ஐயப்பன் மகிமையைக் கந்தலாக்கியது தனிக்கதை. அவருக்கு வேதம், மந்திரம் போன்ற வெங்காயம் எதுவும் தெரியாதென்பதும் விலைமாதர் வீட்டு முகவரிகள் மட்டுமே தெரியும் என்பதும் அவரிடம் நடந்த விசாரணையில் அம்பலமானது. இப்போது தலைமைத் தந்திரியின் ஒப்புதல் வாக்குமூலம் வந்திருக்கிறது.

தெற்கே தீவட்டி பிசினஸ் வடக்கே பனிக்கட்டி பிசினஸ். காஷ்மீரில் அமர்நாத் எனுமிடத்தில் குளிர்காலத்தில் ஒரு குகைக்குள்ளே பெரிய 'குச்சி ஐஸ்' வடிவத்தில் உருவாகும் பனிக்கட்டியைத் தரிசிப்பதற்கு ஆண்டுதோறும் 4 லட்சம் பக்தர்கள் அங்கே சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த பக்தர்களை பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாக்க 40,000 சிப்பாய்களை மாதக்கணக்கில் காவல் வைக்கிறது அரசு.

மேற்படி சிவலிங்கத்திற்கும் வந்தது சோதனை 'முன்னர் சுமார் 12 அடி உயரம் இருந்த பகவான் தற்போது 6 அடிக்கும் கீழே போய்விட்டார். காரணம் புரியவில்லை' என்று சென்ற ஆண்டு அபாயச்சங்கு ஊதினார் அந்தக் கோயிலின் நிர்வாக அதிகாரி. பகவானைக் கண்டு பக்தர்கள் உருகலாம், பக்தர்களைக் கண்டு பகவான் எப்படி உருக முடியும்? 'பக்தர்கள் விடும் மூச்சுக் காற்றின் வெப்பத்தைப் பனீசுவர பகவானால் தாங்கமுடியவில்லை' என்றன சில பத்திரிகைகள். பக்தர்களின் மூச்சை நிறுத்த முடியாதே. 'குகைக்கு அருகில் அடுப்பு பற்ற வைத்து பக்தர்கள் சப்பாத்தி போடுகிறார்கள். சூடு தாங்கமுடியாமல்தான் பகவான் கசிந்துருகுகிறார்' என்றன வேறு சில பத்திரிகைகள். புவி சூடேறுதல் தான் காரணம் என்றனர் வேறு சிலர்.

காரண காரியங்கள் குறித்த அறிவுப் பூர்வமான ஆய்வுகள் தொடர்வது ஆன்மீகத்துக்கு ஆபத்து என்பதால் குப்தா கமிசன் என்றொரு கமிசனைப் போட்டு ஆராயச் சொன்னது அரசு. பகவான் கரையாமலும், பக்தர்கள் கூட்டம் கலையாமலும் பாதுகாக்கும் பொருட்டு குகைக்கு குளிர் சாதன வசதி செய்து சிவபெருமானை ஸீரோ டிகிரியில் பாதுகாப்பாக பக்தர்கள் சப்பாத்தி போட 100 ஏக்கர் வனப்பகுதியைக் கோயிலுக்கு தானம் கொடுத்து அடுப்புச் சூட்டிலிருந்து ஆண்டவனைப் பாதுகாப்பது என்று முடிவு செய்தது அரசு. இந்த 100 ஏக்கர் தானத்துக்கு எதிராகக் காஷ்மீரே பற்றி எரியத் தொடங்கி, அதன் விளைவாக அம்மாநில காங்கிரசு அரசு இப்போது உருகிக் கொண்டிருக்கிறது.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக, 'அமர்நாத் பனிலிங்கம் செயற்கையானதல்ல' என்று கொட்டை எழுத்தில் செய்தி போடுகிறது தினமணி

இயற்கையாக உருவான எல்லாம் வல்ல இறைவனை செயற்கையாகப் பாதுகாப்பது ஏன் என்ற கேள்விக்கு மட்டும் அவர்கள் பதில் சொல்லவில்லை.

'இராமன் பாலம் என்பது இயற்கையாக அமைந்த மணல் திட்டு' என்று சொன்னால், 'இல்லையில்லை, அது இராமனால் கட்டப் பட்டது, செயற்கையானது எனவே தெய்வீகமானது' என்று கத்துகிறார் இராம. கோபாலன். 'அமர் நாத் பனிலிங்கம் செயற்கையானது' என்று சொன்னால் 'இல்லையில்லை, அது இயற்கையானது எனவே தெய்வீகமானது' என்கிறார்கள். வடக்கே இயற்கை தெய்வீகம்! தெற்கே செயற்கை தெய்வீகம்!

மக்களை மயக்கத்தில் ஆழ்த்துவதற்காக ஆளும் வர்க்கம் உருவாக்கிய மடமைகள் உடைபடும்போது மதவாதிகள் பதறுகிறார்கள்? அதற்குக் காரணம் இருக்கிறது. ஆனால் அற்புதம் என்றும் தெய்வீகம் என்றும் தாங்கள் இதுகாறும் நம்பிக் கொண்டிருந்தவை அயோக்கியத்தனமான மோசடிகள் என்று ஆதாரப் பூர்வமாகத் தெரியும்போது பக்தர்கள் பதறியிருக்க வேண்டாமா?

'கடன் பட்டதும், காவியணிந்ததும், மது, மாமிசம்,மனைவியைத் துறந்ததும், காடு மலைகளில் நடையாய் நடந்ததும் கேவலம் ஒரு தீவட்டியைத் தரிசிக்கத்தானா?' என்று குமுறியிருக்க வேண்டாமா? 'அது தீவட்டியில்லை, தெய்வீகத் தீபம்தான். நாங்கள் நம்ப மாட்டோம்' என்று நக்கீரனுக்குப் பேட்டி கொடுக்கிறார்கள் ஐயப்பசாமிகள். 'பகவானை எண்ணி பனியைச் சகித்ததும், பயங்கரவாதிகளை எண்ணிப் பயந்து செத்ததும், 12,000 அடி உயரம் மூச்சு வாங்க மலையேறியதும் ஒரு குச்சி ஐஸைத் தரிசிக்கத் தானா?' என்று கொதித்திருக்க வேண்டாமா? அந்தக் குச்சி ஐஸைப் பாதுகாக்க பாரத் பந்த் நடத்த அதற்கும் கூட்டம் சேருகிறது.

பகுத்தறிவின் ஒளி பட்டவுடனே மூடநம்பிக்கை இருள் அகலவில்லையே ஏன்? 'மகரஜோதி பொய்' என்பதை அந்தக் கோயிலின் தந்திரியே பிரகடனம் செய்த பின்னரும் அய்யப்பன்மார்கள் திருந்தவில்லையே ஏன்? இந்த பக்தர்களை 'மூட நம்பிக்கைக்குப் பலியானவர்கள்' என்று மட்டும் நாம் கருதமுடியுமா? என்ன வகை பக்தி இது?

மூடநம்பிக்கை, பகுத்தறிவு, ஏமாற்றுபவன், ஏமாற்றப்படுபவன் என்ற வகைப்பாடுகளின் வரம்பைத்தாண்டி ஒரு விநோதக் கலவையாக உருப்பெற்று வருகிறது இந்த 'பக்தி'. காமவெறி பிடித்த பித்தலாட்டக்காரனாக அர்ச்சகன், இந்தப் பித்தலாட்டத்துக்குப் பந்தம் பிடிக்கும் அரசு, அதற்குக் காவல் நிற்கும் போலீசு, ஐயப்ப சீசனில் திருடுவதற்காகவே மாலை போட்டுக் கொள்ளும் பிக்பாக்கெட்டுகள், டாஸ்மாக் கடைகளில் அய்யப்பன்மார்களுக்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும் தனிக் கோப்பைகள், சுத்தம் கருதி சாக்கனாக் கடைகளில் அவர்களுக்கு மட்டும் இலை போட்டுப் பரிமாறப்படும் புரோட்டாக்கள்..! மோசடியும் சுயமோசடியும் சரிவிகிதத்தில் கலந்து உருவாகியிருக்கும் இந்தக் கூட்டுக் களவாணித்தனத்தில் ஏமாற்றுபவன் யார், ஏமாற்றப்படுபவன் யார் என்று பிரித்தறிய முடியவில்லை.

(தொடர்ச்சி 34ம் பக்கத்தில்)


R.S. Finance

Commercial Mortgages
&
Business Loans



Re-Mortgages
(Raising Funds to Start Own Business and Other Needs)
Secured Loans

Contact:
Sri
297 High Street North, Manor Park, London E12 6SL
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755 / Mob: 07803 600 543



Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fullfil your business loan requirements.

Commercial Loans
Shops (Pharmacies)
Petrol Stations
Restaurants & Hotels
Care Homes Etc.

Whatever your needs, Regarding your Commercial Loans

# சுவர்களுடன் பேசும் மனிதர்



*பிரபல இலங்கை எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்களின் சிந்திக்க வைத்த சில வரிகள் இங்கே:*

'நான் நிறைய பேசிவிட்டேன். நீங்கள் எந்த நாடு, என்ன மொழி பேசுவீர்கள் என்று சொல்லவில்லையே?'.

நான் சொன்னேன். நானும் உங்களைப் போலத்தான். நான் பேசுவது தமிழ்மொழி. இலங்கைக்காரன். அங்கே எங்கள் மொழியை சிங்களம் விழுங்கிக்கொண்டிருக்கிறது.

உங்கள் மொழியைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அது பழைய மொழி அல்லவா?

அது உண்மை. இரண்டாயிரம் ஆண்டுகள் தொன்மையான இலக்கியங்கள் எங்களிடம் இருக்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு 300 ஆண்டுகள் முன்னராகவே செதுக்கிய தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் குகைகளில் கிடைக்கின்றன. இன்று உலகத்தில் பல நாடுகளில் 80 மில்லியன் மக்கள் தமிழ் பேசுகிறார்கள்.

எண்பது மில்லியனா? நம்பவே முடிய வில்லை. எங்கள் மொழியிலும் பார்க்க 80 மடங்கு அதிகமான எண்ணிக்கை. அதிர்ஷ்டம் செய்த மொழி. ஆனால் உங்களுக்கென்று ஒரு நாடு உண்டா?

இல்லை.

உங்கள மொழியில் தேசிய கீதம் உண்டா?

இல்லை.

அப்படியானால் உங்கள் மொழிக்கும், என் மொழிக்கும் பெரிய வித்தியாசமே இல்லை.

எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியும்?

நீங்கள் வரலாற்றைப் படித்தால் தெரிந்துவிடும். கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்னரே ஹிப்ரு மொழியும், அராமிக் மொழியும் செழித்து வளர்ந்தன. இரண்டுக்குமே சமவயது. இரண்டிலுமே எழுதப்பட்ட செல்வங்கள் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நாளடைவில் இரண்டு மொழிகளுமே நலிந்தன. 100 வருடங்களுக்கு முன் ஹிப்ரு மொழி எழுத்தில் மட்டுமே வாழ்ந்தது. பேசுவதற்கு ஓர் ஆன்மா இல்லை. இன்று ஐந்து மில்லியன் மக்கள் ஹிப்ரு பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். பழைய இலக்கியங்களும் புதிய இலக்கியங்களும் படிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நாடு உண்டு. அதன் பெயர் இஸ்ரேல். அவர்களுடைய மொழி இனி மேல் அழியவே அழியாது.

நாடு இல்லாமல் ஒரு மொழி வாழ முடியாது என்று சொல்கிறீர்களா?

நான் ஒரு தலைமுடி திருத்துபவன். மொழியியல் அறிஞன் அல்ல. எனக்கு என்ன தெரியும்? நாடு இல்லாமல்தானே என் மொழி சிதைந்தது. நாடு இருந்தபடியால் தானே இறந்து போன ஹிப்ரு மொழி மறுபடியும் உயிர்பெற்று நிலைத்து நிற்கிறது. உங்கள் மொழி - தமிழ் - நாடு இல்லாமல் வாழும் என்று நினைக்கிறீர்களா?

'ஆனால் இந்தியாவில் ஒரு தமிழ் மாநிலம் இருக்கிறதே.'

மாநிலம் வேறு. நாடு வேறு. இன்று உலகத் திலுள்ள ஒரு சின்னஞ் சிறிய நாட்டை எடுத்துக் கொள்ளுங்கள் - மால்ட்டா. அங்கே== 400,000 மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய மொழி மால்ட்டீஷ். அந்த மொழி அழியுமா? அழியாது. ஒரு மைல்கல் எப்போதும் உண்மை பேசுவதுபோல நான் பேசுகிறேன். அவர்களுடைய மொழி அழிய வேண்டும் என்றால் முதலில் அந்த நாடு அழியவேண்டும். உங்கள் நாட்டுக்கு சமீபத்தில் இருக்கும் மாலை தீவு, அதை எடுத்துக் கொள்ளுங்கள். அதனுடைய சனத்தொகை 350,000. அவர்களுடைய மொழி திவேஹ். அது அழியுமா? எப்படி அழியும்? 300,000 மக்கள் வாழும் நாடு ஐஸ்லாண்ட். அவர்களுடைய மொழி ஐஸ்லாண்டிக். அது அழியுமா? இல்லை. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

நம்புவதற்கு கஷ்டமாக இருக்கிறது. பத்து மில்லியன் மக்கள் ஒரு மொழியைப் பேசின லும் அவர்களுக்கு ஒரு நாடு இல்லாவிட்டால் அந்த மொழி அழிந்துவிடும் என்று சொல்கிறீர்கள்?

ஷாம்பூ போட்டு முடிந்ததும் அவர் முடி உலர்த்தியால் தலைமுடியைச் சீவி உலர்த் திக் கொண்டிருந்தார். அவர் வாய் மட்டுமே பேசியது, ஆனால் கைகள் வேறுயாருடை யவோ கைகள்போலத் துரிதமாக வேலை செய்தன.

அப்படித்தான் என் சிற்றறிவுக்குப் படுகிறது. ஒரு மொழிக்குப் பாதுகாப்பு வேண்டும். ஒரு நாடுதான் அதைக் கொடுக்கமுடியும். உலகத்தில் 7000 மொழிகள் இருக்கின்றன என்று படித்திருக்கிறேன். அவற்றிலே 2000 மொழிகள் அழிவில் இருக்கின்றன. மீதியில், ஒரு நாடு பாதுகாப்புக் கொடுக்க முடியாத மொழிகள் எல்லாம் ஒவ்வொன்றாக அழிவை நோக்கி நகர்கின்றன. அனைத்து மொழிகளையும் காப்பாற்ற முடியாவிட்டாலும் அவற்றை சேமிக்க வேண்டும். ஆவணப் படமாகவும், ஒலி வடிவமாகவும் கணிமைத் தொழில்நுட்பத்தில் பாதுகாக்கலாம். ஒரு மொழி அழிவது என்பது ஓர் இனம் அழிவதற்கு, ஒரு கலாச்சாரம் அழிவதற்கு சமம். கீழே விழுந்த முடியை திரும்பவும் ஒட்டமுடியாது. மொழியும் அப்படித்தான். பூமியிலிருந்து ஒரேயடியாக மறைந்துவிடும்.

நான் பேச முடியாமல் அவரையே பார்த்தேன்.

'ஒரு மொழியின் எதிர்காலத்தை அதைப் பேசும் மக்களின் எண்ணிக்கை தீர்மானிப்ப தில்லை. அது போல அதன் வளர்ச்சிக்கும் எண்ணிக்கைக்கும் சம்பந்தமில்லை. ஒரு சின்னப் பரிசோதனை. உங்கள் நாட்டு சிங்கள மொழியின் கடந்த 50 வருட கால வளர்ச்சியுடன் தமிழ் மொழியின் ஐம்பது வருட வளர்ச்சியை ஒப்பிட்டுப் பாருங்கள். நான் சொல்வது உங்களுக்கே புரியும்.'

புதிய முடி அலங்காரத்தை நான் கண்ணாடி யில் பார்த்தேன். திருப்தியாகவிருந்தது. காசாளரிடம் பணத்தைக் கட்டினேன். ஈராக்கிய நண்பரின் பெயரைக்கூட நான் அதுவரை தெரிந்திருக்கவில்லை. அது முக்கியமாகவும் படவில்லை.

எனக்குக் கவியின் வரிகள் ஞாபகத்துக்கு வந்தன.

நான் சாக்கடையில்

விழுந்து கிடக்கிறேன்.

என் கண்கள்

நட்சத்திரங்களில்.

நான் என் மொழி மீது வைத்த நம்பிக்கையைத் துறக்கத் தயாராகவில்லை.

### தமிழைத் தொலைக்கும் காட்சிகள்

தொலைக்காட்சிப் பெயரும் தமிழில்லை
நிகழ்ச்சிகளின் பெயரும் தமிழில்லை
காமெடி ரைம் சுப்பர் ரென்
லாஜிக் இல்லா மாஜிக்
வார்த்தைகளும் தமிழில் இல்லை
ஒனியனை கட்டிங் பானில் புட்டிங்
பொய்லிங் அன்ட் மிக்ஸிங்
அசிங்கமான பாடலுக்கு
ஐந்து குண்டுகள் நடனமாட
மூன்று குண்டுகள் அதை மதிப்பிட
கெமிஸ்ரி வேர்க்கவுட் ஆக
யானையாட எருமையாட என்பது
மானாட மயிலாடவானது
முறையற்ற காதல்கள்
அசிங்கமான கதைகள்
நிறைந்த நாடகங்கள்
தமிழனை யார்தான் காப்பாற்றுவார்?

- வேல் தர்மா

# Kill Them All

Kill them
Kill them
Till you
Embrace your idea
of a drawing
In cold blood

**

Tamils
In the deep North
corner of bleeding
Sri Lanka
Palestinians in the
pockets of suffering
Gaza
Shias, Sunnis and
Kurds in conflicting
Iraq
Kill them
Kill them
And
You say
They all are terrorists
Who cares?

**

They may be infants
or rattling old people
Kill them
Kill them
Till you think-
They now enjoy
Smell of democracy
Through the barrels
of guns.

**

Kill them
Kill them
To this-
Fill your war jets
You bought
From your friendly
oppressors
With cluster bombs
If you run out
clusters…
Why not fill your
killing machines
With shits as
Sri Lanka 's brave
Sinhala warriors
Exampled history (in
1990's)
Against the Northern
Tamils?

**

Who cares for
human concerns?
Who opens ears for
human sufferings?
Kill them
Kill them
Till you
Establish your
empire
With blood.

**

Say
Lord Buddha
Or
Almighty God is on
your side
And then-
Kill them
Kill them all
Till they
Understand
The one truth-
Killers will not go
silence
Until
Resistance
challenges sky.

*- by A.R.M. Imtiyaz*

~

*(Sri Lankan born A.R.M. Imtiyaz is a Visiting scholar, Department of Political Science, Temple University, USA)*




SRI ANJANEYA ASTROLOGY CENTRE


ஆஞ்சனேய ஜோதிடம்

ஜோதிடர் : வெங்கடேஸ் சாஸ்திரிகள்
Astro-Palmist

KALAI VANEE VIDEO
307, Mitcham Road, Tooting, London, SW17 9JQ (Near Tooting Police Station)
Opening Hours: 9.00 a.m – 8.00p.m all 7 days.

SPOKEN LANGUAGES: TAMIL,HINDI, & ENGLISH.
Your Secret matters will be maintain confidently

உலகத்தில் உள்ள சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை, தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார்.இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை.ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்லுவார்.கணவன் மனைவி சண்டை, பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை, தொழில், உத்தியோகம், விசா பிரச்சனைகள், இப்படி பல்வேறான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார்.செய்வினை, பில்லி, சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் , பிசாசு நடமாட்டம், சாக்கினி, டாக்கினி பேய் ஓட்டப்படும். கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகிய வற்றிற்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் எப்போதும் கொழிக்க உதவும் லட்சுமி பூஜை செய்து தருகிறோம்.



Would you like your future ?
We resolves life's problems like love, Family, Marriage, business , money & health, Work,Court,Case and any other Problems

Contact :- Mob : 07507 752 696 / 07507 760 448

# உண்டி சுருங்கினால் ஞாபகசக்தி கூடும்

கண்ட கண்ட உணவையெல்லாம் உண்டு தள்ளிவிட்டு, காலையிலும் மாலையிலும் கால் கடுக்க ஓடவும், ‘ஜிம்’ என்றும், ‘சுவிம்’ என்றும் ஓய்வு ஒளிச்சலின்றி ஓடி ஓடி களைக்கவும், பழக்கப்பட்ட பலரும் அறியாத சில இரகசியங்கள் இப்போது தெரியவந்துள்ளன.

60 வயதை எட்டிய பலபேர், தமக்கு வேண்டிய சிலருடைய பெயர்களைக்கூட ஞாபகத்தில் வைத்திருக்க முடியாத திண்டாட்டம் உணரப்பட்டுள்ளது. இப் பரிதாப நிலைமையைக் கண்டுகொண்ட ஆராய்ச்சியாளர்கள், ஞாபக சக்தியை இழந்தவர்களில் அனேகர் உடல்பருமன் கூடியவர்களாகவும், எடையில் அதிகம் நிறையுடையவர்களாகவும் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

இது போதும் எமது ஆராய்ச்சிக்கு என்ற துணிவுடன் ஜேர்மனியிலுள்ள Munster பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Agens Floel என்பவரும் அவரது குழுவினரும் சராசரி 60 வயதுடைய 50 ஆட்களை தெரிவு செய்து ஆய்வுக்குட்படுத்தினர்.

இவர்கள் அனைவரும் நிறைகூடியவர்களாக இருந்தாலும், பருமனான உடல்கட்டு உடையவர்களாக இருக்கவில்லை. இவர்கள் அனைவரையும் தங்கள் உணவில் 30 விகிதமான கலோரியின் அளவைத் தினமும் குறைக்கும்படி கேட்கப்பட்டனர்.

3 மாதகால இடைவெளிக்குப்பின் இவர்களுடைய ஞாபகசக்தியை ஒரு பரீட்சைமூலம் அளவு செய்தனர். உடல்நிறை குறைந்த பின் உட்படுத்தப்பட்ட சோதனையில் 15 சொற்களில் 12.5 சொற்களை, இவர்கள் சரியாக ஞாபகம் வைத்திருப்பதை கண்டுகொண்டனர்.

இதே ஆட்கள், உணவுக்கட்டுப்பாடு ஆரம்பிப்பதற்கு முன்னர் தோற்றிய பரீட்சையில் 15 சொற்களில் 10.5 சொற்களை மாத்திரமே ஞாபகத்தில் வரவழைக்கக் கூடியதாக இருந்தனர்.

குறித்த முன்னேற்றம் பெரிய வித்தியாசமாகத் தோன்றாவிட்டாலும், ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்ட கால அவகாசத்தைக் கணக்கிலெடுத்தால், ஞாபகசக்தியை அதிகரிக்கும் ஆராய்ச்சி நம்பிக்கை தருவதாக Agens Floel கூறுகிறார்.

அதேநேரம் உணவுக் கட்டுப்பாட்டுக்கு உடன்படாத நபர்களின் ஞாபக சக்தி பழைய நிலையிலேயே இருந்ததை இவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

உணவுக் கட்டுப்பாடு உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமல்லாமல் ஞாபக சக்தியை கூட்டவும் உதவுகின்ற சமாச்சாரம், ஆராய்ச்சிகள் மூலம் நிருபிக்கப்படுவது இதுவே முதல்தடவையாகும்.

உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு மட்டும் அழகல்ல. 60 வயதுக்கு மேற்பட்ட ஆண்/பெண் இருபாலாருக்கும் அழகே.

### காடுகளை வளர்க்க வானத்திலிருந்து விதைகள்

தீயினால் அழிந்து போகும் காடுகள், ஈவிரக்கமின்றி காடுவெட்டிகளினால் காணாமல் போகும் கனிந்த வளங்கள் ஏராளம்.

இவற்றை மீளவும் தழைக்க வைக்க பல முயற்சிகள் உலகளவில் முன்னெடுக்கப்பட்டாலும், அழிந்துபோன காடுகளுக்கு ஈடாக இதுவரை புதிய காடுகள் வளரவில்லை என்பது இயற்கையின் அழகை நேசிக்கும் அன்பர்களின் ஆதங்கமாகும்.

ஏற்கனவே வானூர்திகள் மூலம், வானத்திலிருந்து தூவப்படும் விதைகளில் 75 விகிதமானவை, தகுந்த நிலங்களைச் சென்றடையாததினாலும், விழுந்த விதைகளை பிராணிகள் உணவாகக் கொண்டதனாலும், எதிர்பார்த்த அளவிற்கு காடுகளில் வளர்ச்சியைக் காணமுடியவில்லையென Oxford பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வன வளர்ச்சிப் பகுதியின் முன்னாள் தலைவரான Burley என்பவர் கவலைப்படுகிறார்.

இவருடைய கவலையைப் போக்க Weybridge, surrey சேர்ந்தC.Questor ஸ்தாபனம் ஒரு புதிய கண்டுபிடிப்பை முன் வைத்துள்ளனர்.

கூம்பு வடிவத்தில் தயாரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் பைக்குள் 15 செ.மீற்றர் உயரமுள்ள செழிப்பான இளம் மரக்கன்றின் நாற்றை, போதியளவு உரச்சத்தும் நீர்ச்சத்தும் தாங்கிப் பிடிக்கக் கூடிய வகையில் உள்ளடக்கி, 7 மீற்றர் உயரத்தில் இருந்து நிலத்தில் வீசப்பட்டுள்ளது.

இதன் வடிவமைப்பின் நேர்த்தியால் நிலத்தில் விழும்போது அதன் மூக்கு நுனி நிலத்தினுள் குத்திட்டு, மரக்கன்று நேராக நிற்பதற்கு வழிசெய்யப்பட்டுள்ளதாக, இதன் வடிவமைப்பாளரும், கண்டுபிடிப்பாளருமான Peter Miller நிரூபித்துள்ளார்.

இத்தகைய மரக்கன்றுகளின் நாற்றுகள் 200வரை, வானூர்த்தி மூலம் ஒவ்வொரு தரமும் நிலத்தில் வீசக்கூடியதாக இருக்குமென அவர் தெரிவிக்கிறார். வானூர்தியின் கீழ்ப்பாகத்தில், விசேடமாகப் பொருத்தப்படும் மெத்தை போன்ற ஒரு மேடையை உருவாக்கி, கணனி மூலம் இந்த மரக்கன்றுகளின் நாற்றை நிலத்தில் விழச் செய்யலாம் என்பதே ஆய்வின் முடிவாகும்.

இக் கண்டுபிடிப்பின் வெற்றியை அடுத்து இந்த வருட இறுதியில் பிரேசில் நாட்டில் இதன் பரீட்சார்த்தமான நடுகைகள் இடம்பெறலாமெனC.Questor ஸ்தாபனம் முழு நம்பிக்கையுடன் இருக்கிறது.

மகோகனி, தேக்கு போன்ற பயனுள்ள மரங்களின் நாற்றுக்களை இம்முறையில் பயிரிட வர்த்தக ஸ்தாபனங்களும் விரைவில் முன்வருவார்கள் என Burleyதெரிவிக்கிறார்.

யார் குற்றினாலென்ன? எமக்கு தேவை அரிசி தானே. வளரட்டும் புதிய காடுகள்.

### வியர்வையின் மணத்தில் வெங்காய வாடை

அக்கம் பக்கத்தில் வெங்காய வாடை வீசுகிற தென்றால், ஏதாவது மரக்கறிக்கடை தெரிகிறதா என்று பார்ப்பது வழக்கம்




ஆனால் இனிமேல் உடலில் வியர்வை சொட்டச் சொட்ட ஓடிக் களைத்த பெண் யாராவது அருகில் நிற்கிறார்களா என்று பார்க்க வேண்டும். அப்படி நின்றால் வெங்காய வாடை அங்கிருந்து தான் வருகிறது என்று நிச்சயம் நம்பலாம்.

இந்த முடிவை ஆதாரமில்லாமல் கூறவில்லை. உணவுவகைகள், வாசனைப் பொருட்கள் ஆகியவற்றின் மணம், குணம் பற்றி ஆராயும் ஜெனிவாவிலுள்ள பிரபல்யமான Firemenich என்ற ஸ்தாபனத்தின் ஆராய்ச்சியாளர் Starkenmann என்பவரும் அவரது குழுவினரும் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பெறுபேறுதான் இந்த முடிவுக்குக் காரணம்.

25 பெண்களையும், 24 ஆண்களையும் ஓட ஓட விரட்டி, 15 நிமிட உடற்பயிற்சியின் இறுதியில் அவரவர் உடலிலிருந்து சொட்டும் வியர்வையை ஆராய்ந்தபோது, பெண்களின் கமக்கட்டுப் பகுதியிலிருந்து வரும் வியர்வையின் மணம் வெங்காயவாடை வீசியதாகவும், ஆண்களிடமிருந்து பாலாடையின் நெடி காணப்பட்டதாகவும், ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளனர்.

இதற்காகப் போய் உங்கள் வியர்வையை ஒருமுறை சோதிக்க முயற்சிக்காமல் வெங்காய வாடைதானே, புளிச்ச தயிர்க்கட்டியை விட மோசமில்லை அல்லவா என்று பெண்கள் சமாதானம் அடையலாம்.


- உங்கள் அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா ?
- ஏனைய வழக்கறிஞர்களால் கைவிடப்பட்டு மனவேதனையுடன் இருக்கிறீர்களா ?
- உங்கள் அனைத்து (குடிவரவு) Immigration பிரச்சினைகளுக்கும் மிகத்துரிதமாக, உங்கள் எதிர்பார்ப்பை உணர்ந்து, தகுந்தமுறையில் உயர்நீதிமன்றத்தில் வாதாடி வெற்றி காணச்செய்வோம்.

**AP LAW SOLICITORS**

257 Balham High Road, Balham, London SW17 7BD

Contact: **Shanthi** (LLB Hons, London)
Solicitor

Tel: **020 8672 2617** Mobile: **0777 5777 188** Fax: **020 8767 8533**
Ex: 251/259

# பெற்ற(து) சுமை

சிறுகதை
எழுதியவர்: தம்பிதாசன்

செத்த வீடு லீவு நாளில் வந்தபடியால் தான் நான் இறுதி கிரியைக்கு வரக்கூடியதாக இருந்தது. வேலைநாட்களில் வந்திருந்தால் வேலையை விட்டு வரவேண்டிய உறவு அல்ல இந்த செல்லப்பு வாத்தியார் எனக்கு. ஊரிலே எங்கள் வீதிக்கு அருகில் ஒன்பதாம் வகுப்பு கணித பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த அருமையான வாத்தியார்.

செத்த வீட்டுக்கு மிகவும் நேரத்தோடு நான் வந்து முதல் ஆசனத்தில் அமர்திருந்தேன். ஆட்கள் வந்த பிறகு போனால் செத்தவீட்டுக்கு வந்த சனம் என்னைப்பற்றியும் நான் போட்டி ருக்கும் உடுப்பை, என் பரம்பரையைப் பற்றி அலசியாராயும். அதை முன்கூட்டியே அறிந்த நான் பிணம் வைக்கும் பெட்டிக்கருகில் அமர்ந் தேன். 20 நிமிடங்களின் பின்னால் செல்லப்பு வாத்தியின் பிணத்தை தூக்கிக் கொண்டு அவரின் பிள்ளைகள் முன்னே வருகிறார்கள். அவர்கள் முகத்தில் கவலை, அழுத களைப்பு நன்றாகத் தெரிகிறது.

மருத்துவனாக பணிபுரியும் மூத்தவன் ஒரு முன் பக்கத்தை தூக்க, பொறியியலா ளனாகப் பணிபுரியும் இரண்டாவது மகன் அடுத்த பக்கத்தில் தூக்க, மூத்த மகளின் கணவன் ஒரு பின் பக்கத்தை தூக்க, அடுத்தப் பக்கத்தில் இரண்டாவது மகளின் கணவன் தூக்க பிணம் பெட்டிக்கருகே வந்தது தான் தாமதம் எங்கோ எதைப் பற்றியோ யோசித்துக் கொண்டிருந்த சனம் அழுது புலம்ப நானும் சும்மா இருந்தால், வேடிக்கை பார்க்க வந்தவன் என நினைத்து விடுவார்கள் என்று கூட்டத்தில் ஒன்றாய் அழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

செல்லப்பு வாத்தியின் உடம்பைப் பார்த்த வுடன் எனக்குள்ளே பல எண்ணங்கள் ஓடி மறைந்தன. உலகத்தில் பிறப்பவர்கள் யாவரும் எப்போ, எப்படி சாவோம் என்பது தெரியாமல் அலைந்து கொண்டிருக்கின்றோம். நாம் பிறந்து இறப்பதற்குள்ளே எத்தனை விதமான மனிதர்களை சந்திக்க தள்ளப்படுகிறோம்.

கம்பீரமாக படுத்துக்கிடக்கும் செல்லப்பு வாத்தியின் உடம்புக்குள்ளே உயிர் இருந்த போது அவர் பட்ட வேதனைகளை நான் என் மனதுக்குள்ளே சற்று மீட்டிப்பார்த்தேன்.

செல்லப்பு வாத்திக்கு நான்கு அழகான பிள்ளைகள். சீராட்டி உயிருட்டி அவர்களை வளர்த்து ஆளாக்கி மனிதனாக்கி ஒவ்வொன் றாய் படிப்பித்து வெளிநாட்டுக்கு (20 வருடங்களிற்கு முன்னால்) அனுப்பி வைத்து தானும் தன் பாடும் என்றிருந்த இவரை பிள்ளைகள் போட்டிப் போட்டு ஸ்பொன்சரில் கூப்பிட்டார்கள். மூத்தமகளுக்கு பிள்ளை பராமரிக்க அழகான திடமான ஒரு வயோதிபர் வந்தாயிற்று. இவருக்கு ஒதுக்கிய பேஸ்மன்றில் அழகான தொலைக்காட்சி, இலத்திரனியல் பொருட்கள் வந்த பெட்டிகளோடு இவரும் ஒருவராய் குடியமர்த்தப்பட்டார்.

மூத்த மகளை ஒற்றைக்காலில் நின்று அவளின் கணவன் இருவது வயதில் காதல் திருமணம் செய்து கொண்டவர். அந்தக் காலங்களில் மருமகனுக்கு மாமாவின் மேல் மிகுந்த பாசமும் மரியாதையும் இருந்தது. இன்று கனடாவில் நிலைமை மாறிவிட்டது. அருமை மகள் பாசத்தோடு அப்பாவை விழுந்து விழுந்து கவனிப்பதனால் உலகம் இதுதான் என்று செல்லப்பு வாத்தி தப்பாக ஒருபோதும் புரிந்திருக்க வாய்ப்பில்லை.

மேல் மாடியில் அழகான ஒரு தனியறை இருக்க அதை 'விருந்தாளிகளுக்கு' ஒதுக்கி வைத்துவிட்டு தன்னை பேஸ்மன்றில் கொண்டுபோய் குளிருக்குள் இருத்தியதை தான் தூக்கி வளர்த்த பிள்ளையின் பாசத்தை புரியாமல் செத்துப் போகவில்லை.

'ஏன் அப்பா, இந்த ஆளுக்கு இந்த உடுப்பு விலை கூடி போயிட்டுது. வேலைவெட்டி இல்லாமல் இருக்கிற இவருக்கு இது எல்லாம் தேவையா?' என்று ஆத்திரத்தோடு தன் கணவனைப் பார்த்துக் கேட்ட மகளின் கோபம் வாத்தியாரின் காதுக்குள்ளே போனது கடைசி வரைக்கும் அவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இரண்டாவது மகளுக்கு பிள்ளை பிறந்த போது 'என்னடி, அப்பாவை உன்னோடு வச்சுக் கொண்டு, அரசாங்க காசையும் நீ எடுத்துக் கொண்டு பெரிய இவள் மாதிரி கதைக்கிறாய்' என்று சண்டை பிடித்து இவரை தன் வீட்டு க்கு ஒரு மாதிரியாக கொண்டுபோய் அவருக் கென்று ஒரு தனியறையும் கொடுத்தாள் இரண்டாவது மகள். 'ஆகா இரண்டாவது மகள் தகப்பனோடு நல்ல பாசம் தான். மூத்தவள் மாதிரி அந்த மனுசனை கொடுமைப் படுத்த மாட்டாள்' என்று ஊர் சனம் கதைக்க அதை கேட்டு இன்புற்றிருந்தாள் இரண்டாவது மகள்.

'அப்பா எங்களோடும் சொஞ்ச நாள் இருந் தால் நல்லது தானே என்று' ஆதங்கத்தோடு கேட்ட மூத்தமகன் வீட்டுக்கு ஆறு மாதம் புலம் பெயர்ந்தார் செல்லப்பு வாத்தி. இவனுக்கு சீதனம் வாங்கி தான் செல்லப்பு வாத்தியார் இரண்டாவது மகளை கரையேற்றினவர். தன் தகப்பன் வீட்டு காசை இவர் எடுத்து தன் மகளுக்கு கொடுத்த நாளில் இருந்து மருமகளுக்கு 'இவர் எப்போ எங்களோடு வருவார் அப்ப இவரை நல்லா கவனிக்கிறன்' என்று சபதெமெடுத்திருப்பாள் போலும். வீட்டை வடிவாக வைத்திருக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருப்பாள் இவர் மருமகள். 74 வயதில் எந்த சாமானை எங்கே வைப்பது என்று அறியாமல் வைத்து விடுவார். மருமகள் ஒரு ஓப்பன் ரைப் என்பதனால் நேராக கேட்டுவிடுவாள் 'உங்களுக்கல்லவோ வயசாகிவிட்டது பிறகு ஏன் அதை, இதை எடுத்து கண்ட இடங்களில் வைக்கிறியள்' என்று.

வாத்தியாருக்கு 30 வயதாய் இருக்கும் போது ஆசையாக பெற்றெடுத்த மூத்த பிள்ளை. அந்த காலத்தில் அங்கே ஒருவர் வேலைக்குப்போக, மற்றவர், வீட்டில் பிள்ளையை வடிவாக வளர்க்கலாம். மூத்தவன் என்பதனால் அவன் பிறந்தபோது யாரோ ஒரு தெய்வப்பிறவி வீட்டில் பிறந்ததாய் ஒரே மகிழ்ச்சிக் கொண்டாட்டம். பிள்ளைகளை படிப்பிக்க பட்ட வேதனை செல்லப்பு வாத்திக்கும் மனுசிக்கும் தான் தெரியும். ஊர்க்காணிகளை விற்று ஆசை மகனை வெளிநாட்டுக்கு அனுப்பிப் பின்ன ால், தன் மனைவி இறந்ததுக்கு வந்து விட்டுப் போன பிள்ளைகள் ஆசையினை ஊட்டிச் செல்ல உறவுகள் அற்ற செல்லப்பு வாத்தியும் தூண்டிலில் அகப்பட்ட மீனாய் கனடாவுக்கு வெளிக்கிட்டவர்.

> உயிரோடு இருக்கும்போது நாயை விடவும் கேவலமாக நடத்தி விட்டு அவர் பிறந்த பின் எவ்வளவு செலவு செய்கிறார்கள்? எல்லாம் எதற்காக? இறந்தவரின் ஆத்மா சாந்தியடைவதற்காகவா? அல்லது பகட்டுக்காகவா?

மகன் தகப்பனுக்கு மனம் குறையாமல் நடப்பதாக பாசாங்கு செய்வதிலும் அவர் இல்லாத போது தகப்பனுக்கு மாதம் மாதம் கட்டும் இன்சுரன்ஸ்சு பணத்துக்கு மற்றப் பிள்ளைகளும் பங்குபோட என்று அடம் பிடித்த நிகழ்வுகள் அனைத்தும் அந்தப் காதுகளுக்கு போய்ச் சேர்ந்திருக்காது என்ற நிம்மதிதான் மூத்தமகனுக்கும் அவன் மனைவிக்கும்.

ஒரு நாள் பாத்துரூமில் சறுக்கி விழுந்து மகன் வேலைக்கு ஒரு கிழமை லீவு போட்டு தகப்பனை ஆஸ்பத்திரியும் வீடுமாக கூட்டிச் சென்றான். ஒரு கிழமை முடிந்த பின்னால் 'நீங்களும் பிள்ளைகள் தானே அப்பாவை லீவு போட்டுட்டு கவனிச்சிருக்கலாம் தானே. நான் என்ற லீவில் அவரை கவனிக்க வேண்டும். என்ற பிள்ளைகளை டிஸ்னி வேல்ட்டுக்கு கொண்டுபோக வைத்திருந்த லீவு' கத்திய முதது அவர் காதில் விழக்கூடாமல் இருப்பதே நல்லது என்று நினைத்திருந்தான். பாவம் அவன்.

செல்லப்பு வாத்திக்கு இப்போ போற நேரம் போல. எல்லாப் பிள்ளைகளும் அவரை அடிக்கடி தங்கள் வீட்டுக்கு கூட்டிச்சென் றார்கள். தாங்களும் இன்சுரன்ஸ் காசு கட்டப் போவதாய் சொல்லி தங்கள் பெயர்களையும் இணைத்து காசைக் கட்டத் தொடங்கி னார்கள். தன் தலைக்கு எவ்வளவு விலை என்பதை அறிந்திராத செல்லப்பு- வாத்தி தன் இறுதிக் காலத்தில் பேரப்பிள்ளைகளோடு நேரத்தை செலவழித்தார்.

ஒவ்வொரு பிள்ளைகளும் தன் தகப்பனை கவனிப்பது எதனால் என்பதை புரியாத செல்ல ப்பு வாத்தியார் தான் சாகப்போவதை உணர்ந் தவராக ஊருக்குப்போக வெளிக்கிட்டவரை பிள்ளைகள் ஊர் கதைக்குப் பயந்து தடுத்து விட்டார்கள். (அப்பாவை அடித்து விரட்டி விட்டார்கள் என்று பெயர் வந்துவிடும்.)

அதிகாலை தன் நெஞ்சுநோவதாய் சொல்லிக் கொண்டிருந்தவர் அம்புலன்சு வண்டியிலே அவர் உயிர் போய்விட்டது. பிள்ளை கள் பதறியடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போக அங்கே பார்வைகள் யாவும் முடிய, 'செத்த வீடு எங்கே கொண்டாடுவது' இரண்டாவது மகன் தனக்கு இப்போது தான் குழந்தை பிறந்ததாக கூறி மழுப்பியபோது நான் முந்தி நீ முந்தியாக மற்றவர்களும் 'நாங்கள் அவரை வைத்துப் பாத்தனாங்கள் என்று சொல்ல சண்டையில் இவர்கள் உள்ள போது சொந்தங்கள் செத்தவீட்டுக்கு யார் வீட்டுக்கு தங்கள் முகத்தை காட்டப்போவது என்ற குழப்பத்தில் இருந்தார்கள்.

கடைசியாக ஒரு நிபந்தனையோடு மூத்தவன் சொன்னான் 'என்ட வீட்டில செய்யலாம் ஆனா செலவுக்கு எல்லாம் காசு தரவேண்டும். அந்தியேட்டியோட என்ட வேலை முடிஞ்சுது.' அய்யருக்கு, மற்றைய புத்தகம் அடிக்கிறது எல்லா வேலைக்கும் நீங்கள் செய்ய வேண்டும்.

பிணம் எரிக்கப்படுவதற்கு முன்னாலே இன்சுரன்ஸ் பணத்தில் பெரியண்ணன் கை வைத்து விட்டான் என்று மற்றைய மூவரும் கூட்டணி போட்டார்கள். கூட்டணியை உடைத் தால் தான் தான் எடுத்த பணத்துக்கு காரணம் காட்டத் தேவையில்லை என்பதை புரிந்தவ னாக இரண்டாவது தங்கச்சியை பேசி தன் பக்கத்துக்கு எடுத்துவிட்டான்.

எங்கே மூலையில் சத்தம் ஓயாததைப் பார்த்து திடுக்கிட்ட எழும்பிய நான் அய்யரின் புலம்பலில் என் எண்ணங்கள் தடைப்பட்டன. நாளை இந்தப் பிள்ளைகள் புத்தகத்தில் தான் மருத்துவன், பொறியியலாளன் என்றும் அப்பா ஒரு தெய்வப்பிறவி என்றும் போட்டி போட்டு கதைகள் வரும். அவரோடு ஆர அமர 10 நிமிடங்களாவது நேரத்தை செலவு செய்யாத பிள்ளைகள் அவரைப் பற்றி திறமான தமிழில் கவிதைகள் வரைவார்கள். ஒவ்வொரு வருடமும் இவர் நினைவில் நினைவஞ்சலி செய்வார்கள். வாய் நிறைய எங்கட சனம் வந்து சாப்பிட்டு தங்கள் வீட்டையும் காரையும் வசதிகளையும் பார்த்துவிட்டு போவார்கள்.

உயிரோடு இருக்கும்போது நாயை விடவும் கேவலமாக மதித்து ஒருவர் இறந்த பின் னால் வெறும் சம்பிரதாயத்துக்காக இவ்வளவும் செய்வார்கள். பாவம் செத்த செல்லப்பு வாத்திக்கு கவலை மூலம் தான் இரத்த ஓட்டம் அதிகரித்தது என்பது இவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது. அது தான் போல எங்கட சனம் ஆக கூடியது 80 மட்டும் தான் இருக்குதுகள்.

நேரம் முடிகிறது. செத்த வீட்டில் எழும்பிய எனக்குள்ளே ஒரு நிம்மதி 'நல்ல காலம் என்ட அப்பா அம்மாவை இங்கே கூப்பிடாமல் விட்டது. அதுகள் இங்கே வந்தால் நாங்களும் இதைத் தானே செய்யவேண்டும். நல்லவ னைக் கூட கெட்டவனாய் மாற்றும் இயற்கையும், வேலைச் சுமைகள் உள்ள இந்த தேசத்தில் பாசம் புரியப் போவதில்லை'

எங்கள் பிள்ளைகளும் ஒரு காலத்தில் வளந்து ஆளாகி எங்களை துன்புறுத்தும் வரைக்கும் நாங்களும் இந்த பூமியில் ராஜாக்கள் தான்.

திருமணம் செய்து இன்புற்று பிள்ளை களையும் பெற்று மகிழ்ந்திருந்து பின்னால் எமக்கும் இந்த கதி தானே. எம் மண்ணில் ஓடித் திரிந்த எம் பிள்ளைகளே இப்படிச் செய்யும் போது இங்கே பிறந்து வளர்வதுகள் என்னத்தைச் செய்யப் போகுதுகளோ..என்ற குழப்பத்தில் நான் வீட்டுக்கு நடையைக் கட்டினேன்.

SRI SAI RAM ASTROLOGY CENTRE



ஸ்ரீ சாய்ராம் ஜோதிட நிலையம்

பண்டித் கங்காதர சாஸ்திரிகள்

World Famous Astrology

SKILLED IN - ASTROLOGY - PALMISTRY - NUMEROLOGY - GEMMOLOGY


11B/13, GEORGE STREET,
CROYDON,LONDON,
CR0 ILA (Next door to Nationwide Bank)

Opening Hours: 9.30 a.m – 7.00p.m all 7 days.

He can speak English, Hindi, Tamil & Other Language

கைரேகை சாமுந்திரிகா இலக்கணம் சாதகம் பிறப்பியல் நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாக கணித்து வழங்குவார். கல்வி. வேலை வியாபாரம் காதல் கணவன்-மனைவி ஒற்றுமை, திருமணப் பிரச்சனை தீர, தொழில் முடக்கம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அதிஸ்டக் கற்கள், கோர்ட் பிரச்சனை உடல் நலக்குறைவு லாட்டரி அதிஸ்டம் பில்லி சூனியம் மந்திரம் செய்வினை ஜனவசிகம் செய்வினையால் பாதிப்படைந்தவர்களுக்கு பரிகாரம் வழங்கப்படும்.அனைத்து விதமான தோசங்களுக்கும் லக்சுமி பூசை மூலம் பரிகாரம் வழங்கப்படும்.திருமணப் பொருத்தம் குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.பிறந்த குழந்தைகளுக்கு சாதகம் இலவசமாகக் கணித்துக் கொடுக்கப்படும்.குழந்தைகளுக்கு பாலகிரக இயந்திரம் இலவசமாகத் தரப்படும்.ஒருமுறை சந்தியுங்கள்.

You can know about your PAST-PRESENT-FUTURE IN:



Education, Good Job(Career)& promotion, Business, Money matters, Love Marriage, Children Problem & family Matters, Marriage Matching, Husband wife Relationship,Health(Natural medicine for all types of diseases), Peace-of-mind, Choice of Lucky stones(Rings can be made) Visa & Immigration, Lottery & luck-money, Lakshmi Prayers, Removal of witch-craft, Court problems, Sexual problems, Cinema star, Enmity & all types of Evil-Black-magic removal, Protection in home, Job & all types of personal problems etc going abroad, money and any personal problems and removing all black magic and bad evil things doing lakshmi poojas, prayers and protections in house, Job & all types of personal problems etc....

Contact :- Mob : 075 3583 8959/ 075 2949 8938

# சாமியே...

(30ம் பக்கத் தொடர்ச்சி )

புதுப்பட ரிலீஸ் அன்று கட் அவுட்டுக்குப் பால் அபிசேகம் செய்யும் ரசிகனின் பரவசம்,

நூறு ரூபாய் ஒரு குவாட்டர் என்று கறாராக ரேட் பேசிக் கொண்டு லாரியில் ஏறி வந்து 'தலைவா' என்று உணர்ச்சி வசப்படும் தொண்டனின் மனக்கிளர்ச்சி, இலஞ்சத்தை அழுதுவிட்டு அப்புறமும் அதிகாரியிடம் 'ங' போல் வளையும் நெளிவு சுளிவு, மொய் எழுதும் வயிற்றெரிச்சலை மறைத்தபடி திருமண வீட்டில் மலர்ந்து மணம் பரப்பும் புன்னகைகள்.. அன்றாட வாழ்வில் நாம் காணும் இந்த 'உணர்ச்சிகள்' எல்லாம் அமர்நாத் யாத்ரீகர்களின் பரவசத்தையும் அய்யப்பன்மார்களின் மனக் கிளர்ச்சியையும் பிரதிபலிக்கவில்லையா?

இந்த மத உணர்ச்சி ஒரு மயக்கமென்றால், அது ஆட்படுத்தப்பட்ட மயக்கம் மட்டுமல்ல, விரும்பி ஆட்படும் மயக்கம். இது புனித யாத்திரை என்ற முகமூடி அணிந்த இன்பச் சுற்றுலா. இந்தப் போலி பக்தியை ஆன்மீக அனுபவமாக 'உணர்ந்து மயங்கும் பொருட்டு ஒரு 'தெய்வீக கிளைமாக்ஸ்' பக்தனுக்கே தேவைப்படுகிறது.

எனவேதான் பக்தன் பதறுவதில்லை. சாம்சங் ரெப்ரிஜிரேட்டரையே கருவறையாக்கி, அதற்குள் பனி லிங்கம் ஒன்றை உறைய வைத்து, ஆண்டுக்கு ஒரு முறை திறந்து காட்டினாலும் 'ஹர ஹர மகாதேவா' என்று கன்னத்தில் போட்டுக்கொள்ள இந்த பக்தர்கள் தயார்! மகரஜோதிக்குப் பதில் சிலிண்டரை வைத்து 'ஸ்பிக் ஜோதி'யைக் கொளுத்திக் காட்டினாலும் அதனைத் 'தரிசிக்கும்' பொருட்டு விரதமிருக்கவும், இருமுடி சுமக்கவும் அய்யப்பன்மார்கள் தயார்!

'டென் கமாண்ட்மென்ட்ஸ்' என்ற திரைப்படத்தில் பார்த்த ஒரு காட்சி இங்கே நினைவுக்கு வருகிறது. பல வகையான விக்கிரக வழிபாடுகளில் மூழ்கியிருக்கும் யூத மக்களிடம் 'இவையெல்லாம் கடவுளல்ல, உண்மையான கடவுளின் செய்தியை நான் உங்களுக்குக் கொண்டு வருகிறேன்' என்று கடவுளைத் தேடி மலைக்குச் செல்வார் மோசஸ். போனவர் திரும்புவதற்குத் தாமதமாகவே, 'ஒரு கடவுளில்லாமல் இன்னும் எத்தனை நாள்தான் நாம் காத்திருக்க முடியும்?' என்று விசனப்பட்ட மக்கள் ஒரு எருமைக்கிடா பொம்மையைக் கடவுளாக்கி அதைத் தலையில் வைத்துக் கூத்தாடத் தொடங்குவார்கள்.

அந்தக் கூத்தும் இந்தக் கூத்தும் ஒன்று போலத் தோன்றினாலும் ஒன்றல்ல. அது அச்சத்திலும் அறியாமையிலும் மனிதகுலம் ஆழ்ந்திருந்த, அறிவியல் வளராத காலம். அது பல் முளைக்காத குழந்தையின் மழலை. இன்று நாம் காண்பதோ கிழவனின் மழலை. 'ஒரு பொய்யாவது சொல் கண்ணே உன் காதலன் நான்தான் என்று, அந்தப் பொய்யில் உயிர் வாழ்வேன்' என்று மன்றாடும் காதலனைப் போல, 'எங்களுக்கு ஒரு மாயையை வழங்கு' என்று இறைஞ்சுகிறார்கள் இந்த பக்தர்கள்.

சென்னை தீவுத்திடலில் அமர்நாத்தைப் போலவே பனிக்கட்டி லிங்கத்தை உருவாக்கி 'சென்னையில் அமர்நாத்' என்று விளம்பரம் செய்யப்படுகிறது. ராட்டினம் ஏறப்போன பொருட்காட்சிக் கூட்டம் உடனே பக்தர்களாக உருமாறி அந்த செயற்கை லிங்கத்தைப் பரவசத்துடன் வழிபடுகிறது. திருப்பதி வரை சென்று தரிசிக்க முடியாத பக்தர்களுக்காக 'சீனிவாச திருக்கல்யாணத்தை' சென்னையிலேயே நடத்தி, 'சென்னையில் ஒரு திருப்பதி' என்று விளம்பரம் செய்கிறது திருப்பதி தேவஸ்தானம். 'கோயிந்தா கோயிந்தா' என்று அங்கேயும் கூட்டம் அலைமோதுகிறது.

ஷாம்பு பாட்டில் வாங்கும் வசதியில்லாதவர்களுக்காக இப்போது சாஷேக்களில் தொங்குகிறார் கடவுள். நுகர்வு தரும் சிற்றின்பத்துக்கும் ஆன்மீகப் பேரின்பத்துக்கும் இடையில் நிலவுவதாகச் சொல்லப்படும் சீனப் பெருஞ்சுவர் மாயமாக மறைந்து விட்டது. இந்தப் பேரின்பமென்பது சிற்றின்பத்தின் வாலில் தடவப்பட்டிருக்கும் ஆன்மீக வாசனைத் தைலம். தமது இஷ்ட தெய்வங்கள் மீது இந்த பக்தர்கள் கொண்டிருக்கும் ஈடுபாடு, தமது இஷ்ட பிராண்டுகள் மீது நுகர்வோர் கொண்டிருக்கும் ஈடுபாட்டையே பெரிதும் ஒத்திருக்கிறது.

இது உத்திரவாதமில்லாத பரலோக இன்பவாழ்வை இலட்சியமாகக் கொண்டு இகலோகத் துன்பங்களைச் சகித்துக் கொள்ளும் இலக்கண வகைப்பட்ட ஆன்மீகமல்ல் உத்திரவாதமான இன்பத்துக்கான தேட்டம். 'பக்தி' என்று புனைபெயர் சூட்டிக் கொண்ட பிழைப்புவாதம். ஜோதியோ, லிங்கமோ, பக்திப் பரவசமோ அனைத்தும் இங்கே பிஸ்கெட் பாக்கெட்டுகளின் பளபளப்பான மேலுறைகள் மட்டுமே.

கஞ்சாச் செடியின் போதையைத் தெய்வீகமென்றும் பேரின்பமென்றும் தவமென்றும் எண்ணிக் கொண்டிருந்த கருத்து மயக்கமல்ல இது. 'கஞ்சாவே பேரின்பம்' என்று அறிவுப் பூர்வமாகத் தேர்ந்து தெளிந்த விழிப்பு நிலை. சொல்லப் போனால் இது வேறு ஒரு வகைப் பகுத்தறிவு. சுயநலத்துக்காகத் தெரிந்தே தன்னை மடமையில் ஆழ்த்திக் கொள்ளும் பகுத்தறிவு. கல்லையும் மரத்தையும் கண்டு அஞ்சி வணங்கிய மூடநம்பிக்கையைக் காட்டிலும் அபாயகரமான பகுத்தறிவு.

'மாலை போடுவது மடமை' என்று நீங்கள் சாடினால், 'ஒரு மண்டலம் விரதமிருப்பதும், புலால் மறுப்பதும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்' என்று அறிவியல் பூர்வமாக விளக்கி உங்களைத் திகைப்படையச் செய்வார்கள் இந்த பக்தர்கள். 'பனிலிங்கம் பொய்' என்று நீங்கள் கூறினால், 'இந்த விசயம் உங்களுக்கு இப்போதுதான் தெரியுமா, எனக்கு ஏற்கெனவே தெரியும்' என்று சொல்லி உங்களை அதிர்ச்சியில் உறைய வைப்பார்கள். நீங்கள் அறிந்திராத மேலும் இரண்டு ஆன்மீக மோசடிகளை உங்களுக்கு விளக்கி, தங்களது உலக ஞானத்தின் மேன்மையை உங்களுக்குக் குறிப்பாலுணர்த்துவார்கள்.

அல்லது 'மகரஜோதியும் பனிலிங்கமும் மட்டுமா, உலகமே மோசடிகளால்தான் நிறைந்து இருக்கிறது' என்று தத்துவஞானத்தின் தளத்துக்கு விவாதத்தை தள்ளிச் செல்லுவார்கள். லஞ்சம், வரதட்சிணை, சாதி, வாஸ்து, சாமியார்கள், ராசிக்கல் என நியாயப்படுத்த முடியாத எல்லா அயோக்கியத்தனங்களையும் கொள்கையளவில் மறுப்பதற்கும், நடைமுறையில் அவற்றுடன் அனுசரித்துச் செல்வதற்கும் என்ன விதமான நியாயப்படுத்தல்களை சமூக வாழ்வில் நாம் எதிர்கொள்கிறோமோ, அவற்றைத்தான் பக்தர்களும் பயன்படுத்துகிறார்கள். பிழைப்புவாதமும் காரியசாத்தியவாதமும் பழகிவிட்டதால், அந்த வாதங்கள் அனைத்தையும், 'பழகிய சைக்கிளை பழகிய ரோட்டில் ஓட்டும் இலாவகத்துடன்' பயன்படுத்தி பகுத்தறிவை முறியடிக்கிறார்கள் இந்த பக்தர்கள்.

WWF என்றொரு அமெரிக்க மல்யுத்தத்தைத் தொலைக்காட்சிகளில் நீங்கள் பார்த்திருக்கலாம். அதில் இரண்டு மாமிசமலைகள் மோதிக்கொள்வார்கள். நாக்கூசும் வார்த்தைகளால் ஏசிக் கொள்வார்கள். கொலை வெறியுடன் கட்டிப் புரளுவார்கள். எனினும் அது உண்மையான சண்டையல்ல. யார் வெல்ல வேண்டும் யார் தோற்க வேண்டும் என்பதை முன்னரே தீர்மானித்து நிகழ்ச்சியை நடத்தும் முதலாளிகள் காட்சிப்படுத்தும் நாடகம் அது. இரசிகர்களுக்கும் இது தெரியும். இருந்தாலும் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி சண்டையை ரசிக்கிறார்கள். 'குத்து.. கொல்லு' என்று வெறிகொண்டு கூச்சலிடுகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் ஏமாற்றுபவன் யார்' ஏமாற்றப்படுபவன் யார்? நடிகன் யார்' ரசிகன் யார்? தீவட்டி கொளுத்துபவன் யார்' கன்னத்தில் போட்டுக் கொள்பவன் யார்? கண்டவரு யார்' காணதவரு யார்? குருசாமி யார், கன்னிச்சாமி யார்?

இது ஒரு வகைப் 'பகுத்தறிவு'. இதுதான் நம் முன் பக்திவேடம் பூண்டு ஆடுகிறது. வெறும் கருத்துப் போராட்டத்தால் இதனை வீழ்த்த முடியாது. இதன் இதயம் ஆன்மீகத்தில் இல்லை? லௌகீகத்தில் இருக்கிறது சமூக வாழ்க்கையின் எல்லாப் பரப்புகளிலும் வேர் பரப்பியிருக்கும் இந்தப் 'பகுத்தறிவை' எதிர்த்துப் போராடுவதென்பது 'ஒரிஜினல் மூடநம்பிக்கையை' எதிர்த்துப் போராடுவதைக் காட்டிலும் கடினமானது.

*நன்றி : புதிய கலாச்சாரம்*

**By Air or By Sea Weekly Sailings TRY US and see the difference TRICO - The name you can trust**

*Bring your goods and do the packing in our warehouse itself, thereby saving money, **you spend on transporting.***





இலங்கை உட்பட 28 நாடுகளில் ட்ரைகோ 43 கிளைகள்

கொழும்பு காலி குருநாகலில் எமது சுங்க இணைக் களஞ்சியங்கள்

One T-Chest to **Sri Lanka - Only £10:** Transit Time Only **18 days**
Two T-Chests to **Chennai – Only £85:** Transit Time Only **27 days.**
Two T- Chests to **Cochin – Only £95:** Transit Time Only **27 days.**

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்

*Open 6 days a week!*



TEACHEST ONLY £ 10.00 TO COLOMBO (Deliver to our warehouse in London N17)

**TRICO**

T: 020 8888 8787 F: 020 8889 5445
Email: dilan@tricoshipping.com
www.tricoshipping.com

**Trico Shipping and Forwarding Ltd.**
555 Whitehart Lane, London. N17 7RP

# லண்டன் கண்டன ஊர்வலம்.













இலங்கையில் சிங்களப் பேரினவாதத்தின் தமிழினப் படுகொலையை நிறுத்தக் கோரியும் மரணத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் வன்னி மக்களை காக்கு மாறும் பிரித்தானியா வாழ் தமிழ் மக்கள் கடந்த 31-01-2009 சனிக்கிழமை அன்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

லண்டனில் MILL BANK எனும் இடத்தில் பிற்பகல் 1:00 மணியளவில் தொடங்கிய இந்த மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நாடாளுமன்ற சுற்று வட்டம் ஊடாக ரெம்பிள் பிளேஸை TEMPLE PLACE நோக்கி சென்று முடிவுற்றது. சிறிலங்கா இராணுவத்தின் படுகொலைகளை கண்டிக்கும் வகையில் படங்கள் அடங்கிய ஊர்திகளும் வர்ணச் சித்திரங்களையும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் தாங்கியிருந்ததுடன் தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்த வீரத் தமிழ் மகன் முத்துக்குமாரின் படம் தாங்கிய பதாகைகளையும் அமெரிக்க-பிரித்தானிய-ஜப்பானிய தலைவர்களின் வாய்கள் மௌனமாக்கப்பட்டுள்ளதை சித்தரிக்கும் பதாகைகளையும் சிறிலங்கா வான்படையின் போர் வானூர்திகள் மக்களை பலியெடுப்பது போன்ற பதாகைகளையும் மகிந்த ராஜபக்ச - கோத்தபாய ராஜபக்ச - சரத் பொன்சேகா ஆகியோரை படுகொலை யாளிகளாக சித்தரிக்கும் பதாகைகளையும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் தாங்கியிருந்தனர்.

இப்போது அறிமுகப்படுத்துகிறோம்
துல்லியமான
ஒலித்தெளிவுடன்
"புலிகளின் குரல்"
"தமிழீழ வானொலி"
உட்பட 60க்கும்
மேற்பட்ட தமிழ்
வானொலிகள்
துல்லியமான ஒலி
ஒளித்தரத்தில்
அனைத்து தமிழ்
தொலைக்காட்சிகளும்
£150
மட்டுமே
தொடர்புகளுக்கு
020 71830367
http://www.nallatv.co.cc/



**கடன் ஒரு பெரிய தலையிடியா உங்களுக்கு?**

**உழைக்கும் பணம் மாதாந்தம் கடன் அடைக்கவே போய் விடுகிறதா?**

**உதவக் காத்திருக்கின்றோம்.**
கடன் கொடுத்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு...

- மிக மிக குறைந்த கட்டுப்பணம் கட்ட வசதி.
- குறிப்பிட்ட காலத்தின் பின் குறைந்த தொகையோடு பூரண கடன் நிவர்த்தி.
- வட்டி வளராமல் தடுத்து நிறுத்தலாம்.
- No Credit Check.
- மேலதிகமாய் கடன் எடுக்க வேண்டியதில்லை.
வர்த்தக கடன் பிரச்சனைகளுக்கும் மற்றும் வேலை செய்பவர்/இல்லாதவர் இத் திட்டத்தின் மூலம் பயனடையலாம்.

கடனிலிருந்து படிப்படியாக மீள.... சட்ட நுணுக்கம் தெரிந்த அனுபவசாலிகள் சேவை செய்யக் காத்திருக்கின்றோம்.

The **Debt Unload Ltd.** is leading UK debt specialists, We offer free, professional advice to help get you out of debt and always recommend the best way forward, based on your circumstances.

**உடன் அழையுங்கள்**
**020 7378 9329**

Debt Unload Ltd.
Personal & impartial expert advice

**39-41 Borough High Street, London Bridge, SE1 1LZ**

# EVEREST CURRY KING

தென்கிழக்கு லண்டனில் பலவருட அனுபவம் நிறைந்த ஒரே சுவையகம்

- தரமான
- சுவையான
- சுகாதாரமான உணவுகளுக்கு நாடவேண்டிய இடம்

**திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள விழா, எதுவானாலும் விழாவுக்கான விருந்து ஏற்பாடு செய்யப்படும்.**

*Open 7 Days a week - Open 11am Till late*



**Sea food & Vegetarian Specialist**

**EVEREST CURRY KING**
24, Loampit Hill, Liwisham, SE13 7SW
**Tel: 020 8691 2233**

## பெப் 4 - கரிநாள் கவனயீர்ப்பு நிகழ்வுகள் - லண்டன்.

பிரித்தானிய வாழ் தமிழ் இளையோர் அமைப்பினரால் 04-02-2009 அன்று Parliament Square மற்றும் Sri Lankan High Commision முன்னால் கவனயீர்ப்பு ஒன்றுகூடல் நடைபெற்றது.













Coventry மாநகராட்சி முன் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வுகள்








## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**Feb 20 FRIDAY @ 19:00**

இலட்சியம்

City University Tamil Students featuring A.R.T.S productions present a celebration of dance and music.
இடம்: Logan Hall.
20, Bedford Way
London, United Kingdom

**Feb 24 Tuesday @ 19:00**

Reactive Media Talk: Sri Lanka - a hollow victory?
இடம்: Frontline Club
13 Norfolk Place,
London W2 1QJ, United Kingdom
Chaired by Priyath Liyanage (BBC)
Frances Harrison (freelance journalist)
Charu Lata Hogg (Human Rights Watch)
Lal Wickrematunge (Sunday Leader, Sri Lanka) by phone
Entrance: £10.00

"கண்ணெதிரே காணும் ஒவ்வொருவரையும் நம்புவது அபாயகரமானது.அதனைக் காட்டிலும் ஒருவரையும் நம்பாதிருப்பது மிகவும் அபாயகரமானது!

*- ஆபிரகாம் லிங்கன்*

நீ வெற்றி பெற்றால், நீ பிறருக்கு நின்று கொண்டு விளக்கத் தேவையில்லை. நீ தோற்றால் நீ அங்கு நின்று உன் தோல்விற்கான காரணங்களை விளக்கிக் கொண்டிருக்கக் கூடாது.

*- அடால்ஃப் கிட்லர்*

உங்கள் நிகழ்வுகள் தொடர்பான விபரங்களையும் பிரசுரிப்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

ஒரு பேப்பர்

உங்களுக்குத்தேவையான இலங்கை இந்திய உணவுப்பொருட்களை நியாயமான விலையிலும், தரமான சேவையுடனும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்!

PRM
பொதிகை
Phothihai
INDO-LANKA MARKET

வந்து பாருங்கள்!
வாங்கி மகிழுங்கள்!



News, Mag's, Booze, Tobbaco, Sweets, Snacks, Halal meat, Fresh Vegetable, Indo-lanka foods, Household and Hardware etc...

- எல்லாமே கிடைக்கும் -

Contact: 015 1259 8115
394/396 Prescot road, Liverpool L13 3DA
Open : 7.00AM -10.00PM 7 Days



# ஆயுர்வேதத்தின் பார்வையில் எக்சிமா என்னும் மேகப்படை நோய்....

டாக்டர் இராஷலக்சுமி ரமேஷ் - ஆயுர்பிரஸ்தா
Croydon

ஆயுர்வேதத்தில் எக்சிமா என்னும் மேகப்படை நோயை விசார்சிகா என்பார்கள். இது வாத, பித்த, கபம் என்னும் மூன்று தோசங்களினதும் சீரற்ற நிலையினால் தோன்றுவது.

இது கடுமை கூடிய நிலையிலும் தீராத நிலையிலும் அமையலாம். இதில் தீராத நீணடகாலம் நீடிக்கும் வகைதான் சர்வ சாதாரணம். அது அதன் வகையைப் பொறுத்து நீர் வடிதல், சொறி, தோல் தடித்தல் போன்ற குறிகள் தோன்றும்.

### காரணிகள்

வாதம் பித்தம் கபம் ஆகிய மூன்று தோசங்களினால் இந்நோய் தோன்றும். ஆனாலும் சீரற்ர பித்தமும் குருதியும் முக்கிய பங்கை ஆற்றுகின்றன. அவை தோலை சீரற்ரதாக்கி மேகப்படையை தோற்றுவிக்கின்றன. வாதமும் பித்தமும் நோயை யை அறியும் செயலில் தொடர்பு ஏற்படுத்தி பலவகை அறிகுறிகளை உண்டாக்கலாம்.

### அறிகுறிகள்

- வாத வகையால் பாதிக்கப்பட்ட தோல் வரட்சியுடனும் நோவுடனும் கடும் சொறி கூடியதாகவும் இருக்கும்.
- பித்த வகையில் நீர்வடிதலுடன் எரிச்சல் அல்லது காய்சல் இருக்கும்.
- கப வகையில் தோல் தடித்து வெளிறி சொறியும் நிர்வடிதலும் இருக்கும்.

### சிகிச்சை முறை

எல்லா வகையிலும் பித்தமும் குருதி அசுத்தமுமே சர்வ சாதார்ணமாக உள்ளதால் பேதி மூலமான வயிற்றுப் போக்கும் இயலுமானால் குருதிப் போக்கும் நல்லது. அதன்பின் குளிர்தரும் மூலிகைகள் மூலம் மருந்தாக்கப் பட்ட நெய் நல்ல பயனைத் தரவல்லது. அதற்கேற்ற மூலிகைகளாக வேம்பு, blue flag, burdock, chaparral, dandelion, tinospora cordifoliaபோன்ற மூலிகைகளை தெரிவு செய்யலாம்.

ஒரு மாதத்திற்கு நாள்தோறும் இரு தடவை ஒரு தேக்கரண்டிPanchatika ghrita. அத்துடன் arogyavardhini 250 மில்லி கிராம் குளிகை நாளுக்கு மூன்றுவேளை எல்லா வகைக்கும் பயன் தரும்.

கபா வகைக்கு myrrh, prickly ash, and bayberryash அகிய மூலிகைகளில் ஒன்றைச் சூடாக்கி நாளுக்கு இருதடவை ஒரு கிராம் படி ஒரு மாதத்திற்கு எடுக்க வேண்டும்.

பவுண் கலந்த chaturmukh 50 மில்லிகிராம் குளிகை நாளுக்கு இருதரம், அத்தோடு 15 மல்லி லீற்ரர் khadirarishtaநாளுக்கு மூன்று தரம் என்ற வகையில் ஒரு மாதத்திற்கு எடுப்பது பயன் தரும்.

mahamarichyadi எண்ணை அல்லது guduchyadi எண்ணை பூசுவதும் பயன் தருகிறது.

வாந்தியை தூண்டுவதும் வயிற்றுப் போக்கை தூண்டுவதும் நல்ல பயன் தரும். அறிகுறிகள் கடுமையானவையாகவும், நீண்ட காலம் கொண்டதாகவும் இருக்கும் சூழலில் தொழில் அனுபவம் கொண்ட வைத்தியர் உதவியுடன் செய்வது அவசியம்.

பூச்சு மருந்துகள்: சந்தணம், நெய் தேன் கலவை, கறுவாக்கற்பூர எண்ணை, Shatadhout Ghruta, Dashang lep, Hemidesmus indicusஉட்கொள்ளும் மருந்துகள். Triphala Guggul, Manjishthadi qadha, Kamdududha, Gandhak Rasayanand Mahatikta Ghruta..

தனி மூலிகைகளான வேம்பு, Hemidesmus indicus, Rubia cordifolia, Bacopa monnieri, Nardostachys jatamansi ஆகியவைகளைக் சொல்லலாம்.

கூட்டாகவும் சிறந்த மூலிகைகள் உண்டு. மொத்தத்தில் குருதியையும் சருமத்தையும் பழைய நன்நிலைக்கு திருப்புவதும், எங்கள் உடலின் எதிர்ப்புச் சக்தியை நிதார்த்தம் ஆக்குவதுமே.

உணவு: உப்பு குறைக்கப்பட வேண்டும். புளிப்பான ஊறுகாய் தயிர் போன்றவை நிச்சயம் தவிர்க்கப்பட வேண்டும். கசப்பும் வேப்பம் பூவும் பயன் தருபவை. உணவாக எடுக்கவும் வெளியே பூசவும் தலை சிறந்ததாக மஞ்சள் கருதப் படுகிறது.

ஆயுர்வேத நிறைவு படுத்திகள்

- Neem Guard
- Suracta
- Raktosodhak vati
- Rasamanikaya
- Haridra Khanda

### வாழ்கை முறை

வேப்பம் பட்டை அவித்த இளம் சூட்டு நீரினால் நாளாந்தம் நோயாளிகள் கழுவப்பட வேண்டும். கழுவிய பின் பட்டை கசிவு பூசப்பட்டு உலர விடவேண்டும். எண்ணைச் சாப்பாடும் காரமான சாப்பாடும் நோயாளிகள் தவிர்க்க வேண்டும். இறுகிய உடைகளோ, வெப்ப சூழலோ அல்லது ஈரலிப்பான சூழலோ தவிர்க்கப்பட வேண்டும். நைலோன், ரெறிலின்ஸ், செயற்கை நார்த் துணிகள் வேர்வை, காய்தல் போன்றவற்றிற்கு இடஞ் சலாக இருப்பதால் அவை தவிர்க்கப்பட வேண்டும்.

பிராணயம,; சர்வாங்காசனம், சிரசாசனம் போன்ற யோக ஆசனங்கள் மேகப்படைக்கு சிகிச்சையாக அமைகின்றன.

KERALA AYURVEDIC CLINIC
ayurprastha

505 London Road, Thornton Heath
Surrey, CR7 6AR




Booking and Appointments: 020 8684 7574 / 08447780052
croydon@keralaayurvedam.co.uk
www.keralaayurvedam.co.uk

மாபெரும் மலிவு விற்பனை !

அத்துடன் அனைத்துவகை மரக்கறிகள் மற்றும் ஊர்ப்புழுங்கல் அரிசி, குத்தரிசி என அனைத்தைம் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.







நம்பிக்கையும், நல்ல மதிப்பும் நிறைந்த பாலன்ஸ் தமிழ்க்கடை உங்கள் எல்லா தேவைக்கும் நாடுங்கள்.

Balans தமிழ் கடை
160 Merton high Street, South Wimbledon,
London, SW 19 1AZ (Near South Wimbledon station)
Tel: 020 8540 2249 Mob: 07716 947 039

WESTERN UNION
MONEY TRANSFER

# தமிழினத் துரோகி யார்? எதிரி யார்?

அண்மைக் காலமாக நம் சொந்தங்கள் ஈழ மண்ணிலே சொல்லொன்னா துன்பத்துக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்திலே அவற்றை காணச் சகியாமலும் அதை எதிர்த்து ஆக்கப் பூர்வமாக எதுவும் செய்ய முடியாத கையறு நிலையிலும் என்னைப் போன்றவர்கள் சற்று வன்மையாகவும் கரடு முரடாகவும் பல பதிவுகளை எழுதி வருகிறோம். இத்தகைய கட்டுரைகளில் அதிகம் விமர்சிக்கப்படுபவராக கருணாநிதி இருக்கிறார். ஆனால் பல நண்பர்கள் இந்த விடயத்தில் கருணாநிதியை இந்த அளவுக்கு விமர்சிப்பது அர்த்தமற்றது என்றும் அவர் தன்னால் இயன்றதை செய்துள்ளார் என்று வக்காலத்து வாங்குகிறார்கள். அதுவும் அவர் ஆட்சியில் இருப்பதுதான் ஈழத்தமிழர்களுக்கு நாம் ஏதாவது ஆக்கப்பூர்வமாக செய்ய உதவும் என்று வாதிடுகிறார்கள். ஈழத்தந்தை செல்வா அவர்களின் புதல்வர் கூட கருணாநிதியின் நிலையை ஆதரித்து அறிக்கை வெளியிட்டதாக செய்தி கூட வெளிவந்தது. ஆனால் இதில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்பதை இவர்களும் மற்ற தமிழின உணர்வாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கருணாநிதி மேலான எங்கள் கோபத்தில் உள்ள நியாத்தை நண்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நான் எப்போதுமே கருணாநிதியை தமிழினத் தலைவர் என்று ஏற்றுக் கொண்டவன் இல்லை. தமிழ் தமிழினம் என்பவற்றை தன் அரசியல் சித்து வேலைகளுக்காக மட்டுமே பயன்படுத்தும் அவரது சாணக்கியத் தனத்தைக் என்னால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. அப்படிப்பட்ட நானே ஈழத்தமிழர் விடயத்தில் அண்மைக் காலங்களில் அவர் காட்டிய வேகத்தைப்பார்த்து அசந்து போனேன். இந்த முறை கண்டிப்பாக ஆக்கப் பூர்வமாக ஏதாவது நேரும் என்று எல்லோரையும் போல் நானும் ஆர்வமாக அவரது வாயையே பார்த்திருந்தேன். ஆனால் அவர் யார் என்பதை அவர் படிப்படியாக காட்டிவிட்டார்.

முதலில் நிவாரணப் பொருட்கள் அனுப்பலாம் என்றார். கடந்த ஒரு வருட காலமாக தாங்கள் சேகரித்தப் பொருட்களை அனுப்ப வேண்டும் என்று பழ.நெடுமாறன் போன்றோர்கள் மன்றாடிய போதெல்லாம் வாளாயிருந்தவர் இப்போது அனுப்பலாம் என்பதில் இருந்த சூழ்ச்சியை யாரும் அறியவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டினார். எல்லோரும் ராசினாமா செய்வோம் என்று முழங்கினார். என்னமோ இவர்தான் மக்களவை சபாநாயகர் போல எல்லா எம்பிக்களிடமும் ராசினாமா கடிதம் வாங்கினார். அப்புறம் கெடுவைநிர்ணயித்தார். அப்புறம் அவரே அதை பல முறை நீட்டித்தார். அப்புறம் டெல்லிக்குச் சென்று மனு கொடுத்தார். பிரணாப் கொழும்பு செல்வார் என்றும் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்துவார் என்றார். இவரது நாடகத்துக்கு டெல்லி அசைந்து கொடுக்கவில்லை என்பதை பார்த்தவுடன் கண்ணீர் தீர்மானம் நிறைவேற்றினார். இப்படி இவர் தொடர்ச்சியாக ஆடிய நாடகங்களால் ஈழத்தமிழர்களுக்கு ஒரு இம்மியளவாவது நன்மை ஏற்பட்டதா என்று நண்பர்கள் சிந்திக்க வேண்டும். இவரது திட்டமெல்லாம் ஒரு வேளை ஈழ மக்களுக்கு தமிழக மக்களின் உதவி அல்லது ஆதரவால் ஏதேனும் நன்மை விளைந்தால் அதனால் உண்டாகும் நல்லப் பெயர் சிந்தாமல் சிதறாமல் தனக்கு மட்டுமே கிடைக்கவேண்டும் என்பதுதான். அதற்கு தன்னை முன்னிறுத்திக் கொள்வதற்கான முயற்சிதான் இவர் காட்டிய படமெல்லாம்.

இவர்கள் முயற்சியால்தான் பிரணாப் இலங்கை சென்றார் என்று இதுவரை ஒரு இடத்தில் கூட மத்திய அரசு குறிப்பிடவில்லை. மாறாக தமிழகத்தின் கோரிக்கைக்கும் பிரணாப்பின் வருகைக்கும் எந்த தொடர்புமில்லை என்று கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் அறிவித்தது. அதே போல் பிரணாப்பும் நமது கோரிக்கை குறித்து பேசியதாக எதுவும் குறிப்பிடவில்லை. மாறாக போரால் சீரழிந்த பகுதிகளின் மறுசீரமைக்க இந்தியா உதவும் என்று சொன்னார். அதாவது ஆயுதங்களை கொடுத்து தமிழினத்தை அழித்ததோடு நில்லாமல் அவர்களுக்கு நிரந்தர சமாதி கட்ட உதவுவோம் என்றார். இதற்கெல்லாம் திமுக அரசு கட்டிய சப்பைகட்டு என்ன தெரியுமா? அண்டை நாட்டு விடயங்களில் ஒரு அளவுக்கு மேல் இந்தியா தலையிட முடியாதாம். என்ன ஒரு கண்டு பிடிப்பு! இது ஏன் இவர்களுக்கு இத்தனை நாள் தெரியவில்லை. இன்று மட்டும் இந்த ஞானோதயம் எங்கிருந்து வந்தது. இதுதான் கருணாநிதி ஆட்சியில் இருந்து தமிழர்களுக்காக சாதித்தது.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போல் இன்னொரு பெரிய ஞானோதயம் இப்போது கருணாநிதிக்கு வந்துள்ளது. அதாவது விடுதலைப் புலிகள் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளாம். அதனால் அவர்களை திமுக ஆதரிக்கவில்லையாம். ஆனால் பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் அவர்கள் மறைந்தபோது அவருக்காக கவிதை பாடிய போது அவர் ஒரு போராளி என்பது தெரியாமல் போயிற்றா? தமிழனுக்காக என் உயிரையும் அரசையும் இழக்கத் தயார் என்று முழங்கிய கருணாநிதி இன்று எதற்காக யாரோ தம் ஆட்சியை கவிழ்க்க சதி செய்கிறார்கள் என்று புலம்புவது ஏன்? யாரை ஏமாற்ற நீங்கள் முன்னர் அவ்வாறு முழங்கினீர்?

மேலும் ஈழத்தமிழர்கள் சுயாட்சி உரிமை பெறும் அரசியல் தீர்வுக்காக திமுக பாடுபடுமாம். அதாவது தனி ஈழக் கோரிக்கையை இவர்கள் ஆதரிக்கவில்லை என்பதைதான் மறைமுகமாக இவ்வாறு தெரிவித்திருக்கிறார். எல்லாம் தெரிந்த ஏகாம்பரமான கருணாநிதிக்கு ஈழத்தின் வரலாறு தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. ஈழத்தந்தை செல்வா பல பல ஆண்டு காலமாக சுயாட்சி உரிமைக்கும் பெடரல் உரிமைக்கும் அகிம்சை வழியில் போராடிப் பார்த்துவிட்டு வேறு வழியில்லாமல் வைத்ததுதான் தனி ஈழ கோரிக்கை. அகிம்சை போராட்டங்களை வன்முறையால் அழித்த சிங்கள இனவாத அரசை எதிர்க்க வேறு வழியின்றி ஆயுதமேந்தி போராடுகிறார்கள் விடுதலைப்புலிகள். ஆகவே தனி ஈழம் என்பது தந்தை செல்வாவின் கோரிக்கை. விடுதலைப் புலிகளுடையது மட்டுமல்ல. இப்படி காலாவதியாகி போய்விட்ட கோரிக்கையை யாருக்காக கருணாநிதி முன்வைக்கிறார் என்று கருணாநிதியை ஆதரிக்கும் தியாகி செல்வாவின் மகன் விளக்கவேண்டும்.

இவர்களின் புண்ணாக்கு கோரிக்கைகளுக்காக பொது மக்களை திரட்டி போராடப் போகிறார்களாம். அதற்காக ஒரு இயக்கத்தையும் ஆரம்பித்து இருக்கிறார்கள். அதாவது போராட்டத்தில் குதித்த பிள்ளைகளை விடுதியை அடைத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டு இவர்கள் போராடப் போகிறார்களாம். அதே போல இந்திய அரசால் இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது என்று இவர்களே சொல்லிவிட்டு இப்போது யாரை எதிர்த்து போராடப் போகிறார்கள். என்ன ஒரு நாடகம் பாருங்கள்.

திமுக ஆட்சி போய்விட்டால் இப்போதிருக்கிற நிலை கூட கிடைக்காது என்ற சொத்தை வாதத்தை வைத்து பூச்சாண்டி காட்டும் நண்பர்களே! ஒரு விடயத்தை சிந்தித்து பாருங்கள்! செயலலிதாவுக்கும் கருணாநிதிக்கும் என்ன பெரிய வித்தியாசம். செயலலிதா எதிப்பை வெளிப்படையாக காட்டுவார். ஆனால் கருணாநிதி நம்பவைத்து கழுத்தறுப்பார். ஆக இருவராலும் நமக்கு பயனில்லை. மேலும் நமது போராட்டங்களாலும் அரசின் ஆதரவாலும் மத்திய அரசின் நிலையில் இது வரையில் ஒரு மில்லிமீட்டர் அளவாவது மாற்றம் இருக்கிறதா? இந்நிலையில் நம் போராட்டங்களை அவர்கள் அனுமதித்து என்ன பயன்? நம் போராட்டங்களை காட்டி கூடுதல் தொகுதி பெறத்தான் கருணாநிதிக்கு அது உதவும்.

நாங்கள் கையெடுத்து கும்பிட்டு கருணாநிதியை மன்றாடி கேட்டுக் கொள்வது இதுதான். எங்களுக்காக உத்தமர்களாகிய நீங்கள் ஆட்சியை எல்லாம் இழக்க வேண்டாம். பேசாமல் வாயையும் ....த்தையும் மூடிக் கொண்டு இருங்கள். இத்தாலி அம்மையார் சோனியாவுடன் சம்பந்தம் பேசி பேரப்பிள்ளைகளுக்கு மேலும் எப்படி சொத்து சேர்க்கலாம் என்று யோசியுங்கள்.

அல்லது தமிழினத்தின் எதிரிகளான தமிழகத்தின் சாபக்கேடுகளான செயலலிதா, சுப்பிரமணியம்சாமி, தங்கபாலு இவர்களுடன் சேர்ந்து கொள்ளுங்கள். சிங்கள இன வெறியர்களோடு சேர்த்து இவர்களையும் எதிர்த்துதான் நாங்கள் போராடுகிறோம். அவர்களோடு உங்களையும் சேர்த்துக் கொள்கிறோம். இவர்கள் எங்கள் இனத்தின் எதிரி என்று எங்களுக்கு தெள்ளத்தெளிவாகத் தெரியும். அதனால் இவர்களால் எங்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறைவுதான். ஆனால் எங்கள் கூடாரத்தில் இருந்து கொண்டே நீங்கள் செய்யும் துரோகத்தால் எங்களுக்கு ஏற்படும் பாதிப்புதான் அதிகம். நீங்கள் நடத்தும் நாடகத்தால், நீங்கள் எடுக்கும் ஒன்றுக்கொன்று முரண்பாடான முடிவுகளால் உண்மை உணர்வாளர்களின் போராட்டங்களும் கோரிக்கைகளும் நீர்த்துப் போகின்றன. உங்களின் இத்தகைய நடவடிக்கைகள் நம்முடைய உள்ளப் பூர்வமான ஆதரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஈழத்து உறவுகளை சோர்வடைய செய்கிறது. இந்த கோரிக்கை உங்களுக்கு மட்டுமல்ல எல்லா தமிழக அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும். உங்களின் கோமாளித்தனத்தினால் பன்னாட்டுச் சமுதாயமே ஒரு மானமிகு இனத்தை கேவலமாகப் பார்க்கிறது.

நண்பர்களே எதிரிகளை காட்டிலும் துரோகிகள் ஆபத்தானவர்கள்!

*- தமிழ் நாடன்*

## கலைஞரே காணும்

பொறுத்தது போதும்
பொறுத்தது போதும்
பொங்கியெழு மறத்தமிழா

பொறுத்தம னோகரனை
நொருக்கச் சொன்ன மு.க.
நீர் பொங்குவதெப்போ
பொறுப்பதே உம் பிழைப்போ

பொறுத்துப் பொறுத்துப்
பூத்த கண்ணால்
பூஞ்சிப் பார்த்தும்
புரியவில்லை
மு.க. நிலை – தி.
மு.க. நிலை
வெறுத்துப் போனோம்
வெல வெலத்துப் போனோம்

மு.க., தி.மு.க.
இன்று தமிழீழம்
நாளை தமிழகம்
என்று நிரல்
நீளும் போது
எங்கு போவீர்
என்ன செய்வீர்

மு.க. முழங்காத தமிழா
நாக்கால் வழங்காத பொருளா
கைப்புண்ணுக்குக் கண்ணாடியா
கலைஞருக்கே ஏடெழுதவா

காணும் ஐயா
ஓடலும் சாதலும்
காணும் ஐயா
தமிழன் மாய்தலை
காரும் ஐயா – உம்
பலம் கொண்டு
சேரும் ஐயா
பெருஞ் சிறப்புமக்கு

உம் கதவை நாமும்
உம் காதை ஊரும்
இன்னொரு முறை தேடாது
உம் புகழும் பெயரும்
உருக்குலைய முன்னே
உன்னி எழுந்து விடும்
உத்வேகம் பெற்று விடும்


உம்மால் முடியா விட்டால்
ஒதுங்கி வழி விடும் – உம்
இளைய தலைமுறையை
உசுப்பி அனுப்பிடும்

முன்னால் நின்று கொண்டு
தானும் செய்யான்
தள்ளியும் நில்லான்
என்றெல்லாம் தூற்றமுன்

செய்பவனைச் செய்ய விடும்
வெந்த புண்ணை ஆற விடும்

**- செயபால்**

THURAI & CO ACCOUNTING
Comprehensive Accounting & Tax
Personal Tax
Corporation Tax
Value Added Tax
Capital Tax
Business Advice
☎ 01865 247 109
தரமான சேவை
நியாயமான கட்டணம்!
9A, Arnold Road, Oxford, OX4 4BH




# National Legal Services



## Wills

## Estate Planning

- Lifetime tax planning
- Life time tax planning through the use of trusts
- Making regular gifts out of income
- Utilising annual allowances
- Shared accomadation

## Client Welfare and Lasting Powers of Attorney

- Enduring / Lasting Powers of Attorney
- Court of Protection receivership
- Statutory wills

## Probate

We will take time to fully understand your particular circumstances and advise with sympathy and understanding.

## Best service with your best interest in heart.

**So why not ask us for a no obligation consultation in the comfort of your own home?**

**Free consultation in their own home No Obligation**

**10% of any fee charge will be given for the tamil charity "White Pigeon"**

**நாம் கீழே குறிப்பிட்டுள்ள பிரச்னைகளுக்கு தகுந்த ஆலோசனை வழங்குகிறோம்.**

உங்கள் முதுமையின் நீண்டகால கவனிப்பிற்காக உள்ளூராட்சி உங்களது வீட்டினை அபகரித்தல்

எதிர்பாராத விதமாக மனநோய் பிரச்சனை ஏற்பட்டால் ஒரு நிலையான வருவாயை உண்டாகுதல்

உங்கள் பிள்ளைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய வருமானத்தைத் தவிர்த்தல்

உயில் இல்லாது மரணம் சம்பவிப்பதால் உண்டாகும் மன உளைவுகளையும், பணப் பிரச்சனைகளையும் தவிர்த்தல்.

அங்கவீனமான, மனநோயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை பணப்பிரச்சனைகளிலிருந்து காப்பாற்றல்

உங்களது வாரிசுகளுக்கு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்படும் வரிகளைக் குறைத்தல்

## அடுத்த இதழிலிருந்து கேள்வி பதில் ஆரம்பம்!

**National Legal Services**

150 Cheyneys Avenue
Edgware, Middlesex
HA8 6SE

t: **020 8952 2410**
m: **07931 794 809**
e: info@national-wills.co.uk
w: www.national-wills.co.uk

# Call Us: 020 8952 2410

## புறக்கணியுங்கள் கலைஞர் தொலைக் காட்சியை........

'தமிழர்களே தமிழர்களே நீங்கள் என்னை கடலில் தூக்கி' போட்டாலும் இப்படி ஆரம்பம் ஆகும் மதியம் ஒரு மணி கலைஞர் செய்திகள் இது வரை தேனாய் இனித்த இந்த வரிகள் இன்று நெருப்பை எடுத்து காதில் ஊற்றியது போல் உள்ளது.

அடப்பாவி இன்னுமாடா இந்த ஏமாற்று வேலை, இந்த நிகழ்வு பிறகு கருணாநிதி தெளிவான முடிவு எடுப்பார் என்ற நம்பிக்கையில் அவரின் அறிக்கை (ஒரு எதிர்பார்ப்பு) முதலில் அவரின் தரம் கெட்ட அந்த தொலைக்காட்சியின் செய்தியில் இடம்பெறும் என்ற நம்பிக்கையில் அமர்ந்த எனக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

கொள்ளை கும்பலிடம் கொள்கையை எதிர்பார்த்தது என் தவறுதான் ஆம் வீரமரணம் அடைந்த அந்த தியாக செம்மல் முத்துக்குமரனை பற்றி ஒரு வார்த்தை கூறாமல் விட்டது கூட கருணாநிதியின் சிறு மதி என்று எடுத்து கொள்ளலாம், ஆனால் கலைஞரின் வேண்டுகோளை ஏற்று போர் நிறுத்தம் என்று அறிவிப்பு என்று ஒட்டு மொத்த தமிழினத்தையும் ஏமாற்ற துணிந்த உன்னை சீ, உன் அரசியல் வாழ்வை முடித்து வைக்க சோ, ஜெயலலிதா, சுப்ரமணிய சுவாமி வேண்டாம் நீயே போதும்.

ஆம் உன்னை நம்பி உட்கார்ந்து இருக்கும் மு.க.ஸ்டாலின் மற்றும் மு.க.அழகிரி அவர்களின் எதிர்காலத்தை அழிக்க சன் தொலைக்காட்சி வேண்டாம் நீயே போதும். வெல்லட்டும் உன் முயற்சி. இங்கு உள்ள மொத்த தமிழர்களையும் மத்திய அரசாங்கத்தில் அடகு வைத்து உன் குடும்பத்தை நீ வளப்படுத்தி கொள். ஆம் இனி நீ தமிழகத்தில் செல்லாக் காசுதான். போராடும் இளைய சமுதாயம் போராடுவது உன்னையும் எதிர்த்து தான் என்று மனதில் கொள்.

தமிழின எதிர்ப்பு செய்திகளையும் பொய் பரப்புரை களை ஒளிபரப்பும் கலைஞர் தொலைக்காட்சியை புறக் கணிப்போம்.

*- திலீபன்*

## போர் நிறுத்தம் காண ஒரே வழி....

வெறும் வார்த்தை ஜாலங்களாலும், அறிக்கைகளாலும் ஈழப் பிரச்சினையை கையில் எடுத்து அரசியல் நடத்தும் தலைவர்களே !

தமிழன் ஒவ்வொருவனின் வேட்டியும் , கோவணமும் ஒவ்வொன்றாக பறிபோய் கொண்டிருக்கிறது . வெறும் வாய் சவடல்களும், வெத்து அறிக்கைகளும் ஈழத் தமிழர்களின் வாழ்வை வளம்பெற வைக்காது. முன்னாள், இந்நாள் முதல்வர்களை இலங்கை வர ராஜபக்சே விடுத்த அறிவிப்புக்கு இரு தலைவர்களும் காரணங்கள் கூறி தப்பித்து விட்டனர்.

ஆனால் இரு தலைவர்களும் நேரில் இலங்கை சென்று ராஜ பட்சே போர் நிறுத்தம் செய்யும் வரை அங்கு உண்ணாவிரதம் இருந்து இருப்பார்களே ஆனால் இன்று கதையே வேறு. ஆனால் இவர்கள் பொதுக்குழு, செயற்குழு என்று குழுக்களை கூட்டுவதற்கே மாதங்கள் ஆகின்றன. ஆனால் அறிக்கைகள் என்னவோ ரத்த சாயம் பூசித்தான் இருக்கும்.

போர் நிறுத்தம் காண, மத்திய அரசால் முடியாது ... ஆனால் காங்கிரஸ் காரர்கள் அதை ஒத்துக்கொள்ளவே மாட்டார்கள். டாங்கிகளும், ஆயுதங்களும் தமிழகம் வழியாகவே செல்லும் சிங்களர்களுக்கு. நாமும் வேண்டுகோள் விட்டே நாட்களை கடத்தி விடுவோம். ஆட்சியை பற்றி பயப்படுபவர்கள், என்னால் தான் நல்லது செய்ய முடியும் என அறிக்கை விடுவதை விட்டு விடுங்கள். யாரை ஏமாற்ற இவை எல்லாம்.

போர் நிறுத்தம் காண ஒரே வழி என்னவென்றால்....

அனைத்து கட்சி தலைவர்களும் ராஜபட்சே அழைத் ததன் பேரில் சென்றுஅங்கு பேச்சு நடத்தி, ஒரு முடிவுக்கு வரும் வரை அங்கேயே இருந்து வேண்டுமானால் இலங்கை நாடாளுமன்றம் முன்பு உண்ணாவிரதம் இருந்து ஈழ மக்களை காப்பாற்றுங்கள். அப்படி நீங்கள் செய்தீர்களானால் இது உலகம் முழுதும் கவனம் ஈர்க்கும். கண்டனங்கள் பெரிதாகும்.. உலகளாவிய ஆதரவும் கிட்டும். அதை விடுத்து இப்படியே அறிக்கை விட்டால் , கடைசியில் அறிக்கை மட்டும் மிஞ்சும். ஈழம் ரத்தத்தில் கரைந்திருக்கும்.

எல்லாவற்றிற்கும் ஒரு கால அவகாசம் வேண்டும். பரீட்சை கூட மூன்று மணி நேரம் தான். எனவே உடனே யோசியுங்கள்... முடிவெடுங்கள்... செயல்படுத்துங்கள்... (நன்றே செய் , அதை இன்றே செய் )

*- என் மனசு*

## இந்திய அரசுக்கு ஈழத்தில் இருந்து...

இன்னும் தலையில் குண்டு இறங்காத/இறங்கப் போகும் இளைஞன் எழுதிக் கொள்வது...

செய்தித் தாள்கள் எல்லாம் எம் மக்களின் குருதி படிந்த செந்நிறத்தில் அச்சிடப்படுகிறதே.. ஈழ தேசத்து மரண ஓலம் வையம் எல்லாம் கேட்கிறதே.. ஒரு இனம் வேரோடு பிடுங்கப்படுகிறதே.. இவை எல்லாம் உங்களுக்கும் தெரியும் தானே... எரியும் பிணங்களின் வாடைதான் அங்கு வரை வந்திருக்குமே..!

கரன்ட்டாக இருந்தாலும் சரி, காஷ்மீராக இருந்தாலும் சரி, காவேரியாக இருந்தாலும் சரி இப்படி எந்த பிரச்சனைக்கும் தீர்வு காணத் துப்பில்லாத உங்களை உதவி செய்யச் சொல்லி ஒன்றும் நாங்கள் அழைக்க வில்லை..

அவர்களுக்கு மறைமுக உதவி செய்யாதீர்கள் என்றே இம்மடல்..

பிறந்த குழந்தையா.. சுடு.. பிறக்கப் போகும் குழந்தை வயிற்றிலா.. உதைத்துக் கலை. கன்னியா? பிறப்புறுப் பையே அழி.. எதற்காக இந்த வெறி என்று சிங்கள அரசிடம் கேட்டுப் பாருங்கள். அந்த குழந்தைகளில் இன்னும் எத்தனை போராளிகளோ என்ற அச்சம்தான் என்பதே பதிலாய் இருக்கும்..

இந்திய வரைபடத்தின் கீழ் முற்றுப் புள்ளியென இருக்கும் ஒரு சிறு நாட்டின் சர்வாதிகார போக்கை தட்டி கேட்க இந்திய அரசு நினைத்தாலே போதும்.. நிறுத்தி விடலாம் போரை.. ஆனால் அதை நினைப்பதை எது நிறுத்துகிறது.

எல்லா பிரச்சனைக்கும் காலம்தான் தீர்வு என்ற போக்கைகடைபிடிக்கும் இந்திய அரசே.. இந்த பிரச்சனை யில் காலத்தின் முன் காலன் தீர்த்து விடுவானே என்ற எண்ணம் எப்போது ஏற்படும் உங்களுக்கு? இரத்தம், வெடிகுண்டு, இறப்பு எல்லாம் பார்த்து பழகிவிட்டது.. இன்று துரோகம் பழகும் துணிவும் வந்துவிட்டது உங்களால். நன்றி..

முடிக்கும் முன்...

இன்னொரு கார்கிலோ இல்லை வேறு ஏதாவது யுத்தமோ வந்தால் சொல்லி அனுப்புங்கள்.. உயிரோடு இருந்தால் வந்து போரிடுகிறோம்..

உங்களுக்காக அல்ல..

உங்களை நம்பி அங்கிருக்கும் எம் சகோதரர் களுக்காக..

இன்னும் உயிருடன் இருக்கும் ஓர்

ஈழத்தமிழன்.

## கலைஞர்- புலிகள் - அரசியல்

கருணாநிதி இந்த விஷயத்தை கொண்டு பதவியை தான் விடுவதாக இல்லை என்று தெளிவாக கூறிவிட்டார். சில மாதங்களாகவே அவரது சொல்லும் செயலும் இதை நோக்கித்தான் இருந்ததால் இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. பலரும் இதை எதிர்ப்பார்க்காதது போல அதிர்ச்சி அடைவது ஏனென்று புரியவில்லை. ஏதோ நமக்கெல்லாம் ஒரு ஆறுதல். ஏதோ ஒரு வகையில் கருணாநிதியை கும்மி நம்முடைய ஆதரவை இலங்கை தமிழர்களுக்கு தெரிவித்துவிட்டோம்.

கலைஞர் இன்று புதிதாக சில வார்த்தைகளை சேர்த்து விட்டுள்ளார். பிரபாகரன் சர்வாதிகாரியாக நினைத்தாராம். புலிகள் அமிர்தலிங்கத்தை கொன்றனராம். (அதுதானே அவர் சொன்னதற்கு அர்த்தம்). ஆக அவர்களுக்கு நான் உதவ முடியாது. விடுதலைப் புலிகள் அழிந்தவுடன் இலங்கை தமிழருக்கு உதவுகிறேன் என்று அவர் நிலையை கூறிவிட்டார். புலிகள் அழிந்தவுடன் தமிழர் சார்பாக பேச யார் இருப்பார்கள் என்று அவர் தெளிவுபடுத்தவில்லை.

ராமதாஸ் அடிக்கும் கூத்து இன்னும் கொடுமையானது. வாயால் மட்டும் சிரிக்க முடியாதது. அதாவது அவருக்கு திமுக செயற்குழு முடிவு அதிர்ச்சி அளிக்கிறதாம். ஏது எதுக்கோ மரத்தை வெட்டினோமே அய்யா!! சட்டசபை தேர்தலில் ராமதாஸ் எந்த கூட்டணிக்கு போக போகிறார் என்பதில் இருக்கு சூட்சுமம். மூடிட்டாவது இருக்கலாம் கருணாநிதி மாதிரி.

கலைஞருக்கு அப்புறம் திமுக வை கைப்பற்றும் ஆசையில் இருக்கும் வைகோவிற்கு கலைஞர் தமிழின உணர்வாளர்களால் அடிபட்டு ரணகளமாக இருக்கும் இதைவிட ஒரு நல்ல வாய்ப்பு கிட்டுமா? அவர் சாவதானமாக இருப்பதை பார்த்தால் அப்படி ஒண்ணும் அவர் வாய்ப்பை உபயோகிப்படுத்த போவது போல் தெரியவில்லை.

புலிகள் மிக மோசமாக தனிமைப்படுத்த பட்டுள்ளனர். ராஜபக்செ பொறுப்பேற்றதில் இருந்தே ஒவ்வொரு நடவடிக்கையும் அணுஅணுவாக திட்டமிட்டு கடைசியில் இன்றைய நிலை வரை தமிழர்களுக்கு பின்னடை வாகத்தான் இருக்கிறது.

ஐரோப்பிய யுனியன், கனடா, யு.எஸ் இங்கு எல்லாம் தடை செய்யப்பட்டது பலத்த அடி. பிறகு ராணுவ ரீதியாக இந்தியாவுடன் இலங்கை நெருங்கியது புலிகளுக்கு தெரியாமல் இருந்திருக்காது. அதற்கு அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன? அவர்கள் அரசியலே என்னவென்று தெரியவில்லை.

பல தமிழ் ஆர்வலர்களிடமும் நாம் இதைப்பற்றி கேட்கும் போதெல்லாம் இது ஒரு திட்டம், இங்க தான் இருக்கு ஐடியாவே என்றெல்லாம் சொல்கிறார் களே ஒழிய நடப்பவை எதுவும் தமிழர்களுக்கு நன்மையாக முடிய காணோம். கடைசியாக நார்வே உள்பட முக்கிய நாடுகள் புலிகளை சரணடைய சொல்வதில் வந்து நிற்கிறது நிலைமை.

இன்றைய நிலையில் தமிழகத்தின் அழுத்தம், மத்திய அரசு தலையீடு என்பதெல்லாம் வெறும் கனவுதான். அப்படி இருக்கு புலிகளின் எதிர்ப்பார்ப்பு, திட்டம் என்னவாக இருக்கமுடியும்?

*- முத்து தமிழினி*

## ஈழத் தமிழர்களா அல்லது ஈனத் தமிழர்களா?

அடுத்தவனை நோக்கிக் கைகாட்டுவது சுலபம். ஆனால் அடுத்தவனால் கை காட்டப்படாமல் இருப்பது மிகவும் சிரமம் என்று எப்போதோ வாசித்த தாக ஞாபகம். வெளிநாடுகளிலும் இருக்கும் சில ஊடகங்களும் பல தனிப்பட்ட வர்களும் இந்தக் கூற்றை உறுதிப்படுத்தும் விதமாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழக மக்கள் கொதித்தெழவில்லை. எமக்காகக் குரல் கொடுக்கவில்லை என்று பஞ்சப் பாட்டுப் பாடிக் கொண்டிருப்பவர்கள் இப்போது கொஞ்சம் உறைந்து போயிருக்கிறார்கள். அரசியல் வாதிகள் சிலரின் சந்தர்ப்பவாத அரசியலைக் கடந்து சட்டத்தரணிகள், வியாபாரிகள், மாணவர்கள் என்று பல தரப்பட்ட அமைப்புகளும் தாயகத்தில் அல்லலுறும் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் முத்துக்குமரன், ரவி, ரவிச்சந்திரன் என்ற தியாகிகள் எமக்காகத் தம் உயிர்களைக் கொடுக்கக் கூடத் துணிந்து விட்டனர்.

ஆனால் வெளிநாட்டில் வாழும் தமிழரில் பலர் இன்னும் லயன் பியரைக் குடித்துக் கொண்டு லெமன் பஃப் பிஸ்கட்டையும் சாப்பிட்டுக் கொண்டு மானாட மயிலாடவில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

இவர்களை ஈழத் தமிழர்கள் என்பதா? அல்லது ஈனத் தமிழர்கள் என்பதா?

*- திண்ணைப் பிறந்த தமிழன்*

தமிழில் இணையத்தளம் உருவாக்கும் பயிற்சி

நீங்கள் தமிழில் இணையத்தளம்
உருவாக்கும் பயிற்சியைப் பெற
வேண்டுமா?

கிழமை நாட்களில் மாலை நேரத்தில் 3 மணி நேர பயிற்சி
வகுப்புகள் நடைபெற உள்ளன.

5 வகுப்புகளில் பயிற்சி பெற்ற பின் நீங்களாகவே ஒரு
இணையத் தளத்தை உருவாக்கும் ஆற்றல் பெறுவீர்கள்.

வகுப்புக்கள் ஆரம்பமாக
இருக்கின்றன !

இடத்திற்கு முந்துங்கள்

பதிவு செய்வதற்கு
தொலைபேசி: 020 7043 4316
45B, Crusoe Road, Mitcham, CR4 3LJ

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orumanam.com




## மணமகள் தேவை

1. UK citizen since 1985, 5' 9" 36 years, BSc Hons, working as an Executive in an International firm in London. Looking for a suitable bride. Ref: 1360

2. Eleven years in London, 34 years, 5' 7" tall, Hon.Degree (UK) in Electronics, well employed seeks a matching bride. Ref: 1359

3. மாணவர் விசாவில் பெரிய பிரித்தானியாவில் மேற் படிப்பு படிக்கும் 33 வயது 5' 8" உயரமுடைய பட்டதாரி மணமனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர் Ref. 1358

4. இரண்டு ஆண்டுகளாகப் பிரான்சில் வசிக்கும் A/Level படித்த 36 வயது 5' 7" உயரமுள்ள மணமகனுக்கு நிரந்த வதிவிட உரிமையுள்ள மணமகள் தேவை. Ref.1357

5. Australian citizen, Green Card Holding senior employee in a leading company, 30 years old, 5' 11" tall seeks a matching bride, willing to live in USA. Ref: 1356

6. EU பிரஜா உரிமையுள்ள தற்போது இலண்டனில் படித்து தொழில் புரியும் வயது 29 உயரம் 5'8" பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1355

7. கனடாவில் எட்டு ஆண்டுகளாக வசிப்பவரும் பிரஜா உரிமை உள்ள வருமாகிய 29 வயது 5'3" உயரமுள்ள பட்டதாரி மணமனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1354

8. ஏழு ஆண்டுகளாகப் பிரித்தானியாவில் வசிக்கும் ஏ எல் படித்த 38 வயது 5' 11" உயரமுள்ள மணமகனுக்கு நிரந்தர வதிவிட உரிமை உள்ள மணமகளை தேடுகிறார்கள். Ref: 1353

9. In the UK since childhood, 30 years, 6' tall, a medical professional, seeks a matching bride who is tall, traditional and pleasant. Ref: 1352

10. PostGraduate Student in Australia, planning to settle down there, 30 years, 5' 7" tall, seeking a suitable bride. Ref: 1350

11. British Citizen, 35 years, 5' 4" tall, A/L qualified, willing to settle down in Canada, seeks a matching bride. Ref: 1349

12. In UK since 1997, now on 'leave to remain' status, 35 years, 5' 7", an accountant, seeks a matching bride in Europe or Canada with permanent residence. Ref: 1348

13. On work visa, 5 years in UK, a post-graduate, 32 years, 5' 7" tall, seeks a matching bride with permanent residence status, in an European country. Ref: 1347

14. கொழும்பில் தொழில்புரியும் ஏ எல் படித்த 31 வயது 5' 6" உயரமுள்ள மணமகனுக்கு வெளிநாடுகளில் Sponsor பண்ணக் கூடிய தகுந்த மணமகள் தேவை. Ref: 1346

15. 10 ஆண்டுகளாக லண்டனில் வசிக்கும் 32 வயது 5' 9" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref 1345

16. விசிற் விசாவில் கனடாவில் தங்கியுள்ள 36 வயது 5'7" உயரமுள்ள BSc Multimedia Production படித்த மகனுக்கு Sponsor பண்ணக்கூடிய மணமகளை பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1344

17. Dubai யில் Software Engineer (Senior Programmer) ஆக தொழில் புரியும் 30 வயது 5'11" உயரமுள்ள மகனுக்கு இலண்டனில் அல்லது ஐரோப்பாவில் மணமகளை பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1343

18. ஜேர்மன் குடியுரிமை உள்ள 28 வயது 5'8" உயரமுள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref. 1342

19. இலங்கையில் தொழில் புரியும் 5' 5" உயரமுடைய 45 வயதுடைய, மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். விவாக இரத்துச் செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம். கனடிய /ஐரோப்பிய வதிவிட உரிமையுள்ளவர்கள் விரும்பத் தக்கது. Ref. 1341

20. கனடியப் பிரஜையும் 6' உயரம் 45 வயதுடைய விவாகரத்துச்செய்த மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் தேடுகிறார்கள் இலங்கையும் விரும்பத் தக்கது. Ref. 1340

21. பிரித்தானியப் பிரஜையும் 28 வயது 5' 10" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறார்கள். Ref. 1338

22. British citizen, in the UK since 5 years of age, MSc qualified and well employed, 28 years and 5' 10" tall, seeks a matching bride. Ref: 1335

23. லண்டனில் மாணவ விசாவில் படிக்கும் 27 வயது 5' 7" உயரமுள்ள மணமகனுக்கு கனடாவில் அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிரந்தரவ வதிவிட உரிமை உள்ள தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1334

24. பிரித்தானியாவில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள 38 வயது 5' 7' உயரமுள்ள கணக்கியல் பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். விவாக ரத்து செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref: 1333

25. ஐக்கிய இராச்சியத்தில் 7 ஆண்டுகளாக வசிக்கும் குடியுரிமை உள்ள 34 வயது 5' 5" உயரமுள்ள A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1332

26. ஐக்கிய இராச்சியத்தில் 18 ஆண்டுகளாக வசிக்கும் குடியுரிமை உள்ள 37 வயது 5' 11" உயரமுள்ள படித்த மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். விவாக ரத்துச் செய்தவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும். Ref: 1331

27. ஐக்கிய இராச்சியத்தில் 2007ல் இருந்து மாணவ விசாவில் இருக்கும 22 வயது 5' 10" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1330

28. கொழும்பில் தொழில்புரியும் A /L படித்த 32 வயது 5' 5" உயரமுள்ள மணமகனுக்கு கனடாவில் வதிவிட உரிமை உள்ள தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 1329

29. London இல் 16 வருடங்களாய் வசிக்கும், படித்து நல்ல தொழிலில் இருக்கும் 38 வயது, 5'3" உயரமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பார்க்கின்றனர். Ref: 1328

30. மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்யும் A/L படித்த 32 வயது 5' 9" உயரமுள்ள மணமகனுக்கு, வெளிநாடுகளில் வதிவுடமை உள்ள மணப்பெண்ணை பார்க்கின்றனர். Ref: 1327

31. In the UK, since 2000 on holiday working visa, 28 years, 5' 9" tall, a graduate from the East London Uni., and well-employed, seeking a bride in Europe with permanent residence status. Ref: 1326

32. In Norway since 1996 on 'Leave to remain status', 42 years, 5' 7" tall, A/L educated, seeks a bride in EU or Canada with permanent residence status. Ref: 1325

33. பிரித்தானியக் குடியுரிமை உள்ள 31 வயதும் 5'7" உயரமும் உடைய A/L படித்த மணமகனுக்கு கனடாவில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகள் தேவை. Ref:1323

34. UK qualified professional, on 5 year-work-visa, 30 years, 6' tall, looking for a suitable bride. Ref: 1321

35. British born professional, 32 years, 5' 4" tall, seeking a matching bride. Ref: 1320

36. Living in the U.K on Permanent Resident status, diploma holder and in permanent employment, 34 years old, 5' 7" tall, seeking an educated bride living in India. Ref: 1318

37. Canadian Citizen, over there since 1993, 32 years, 5' 8" tall, Software engineer seeking a matching Bride. *Ref: 1316*

38. In the UK since 2000 on student-visa, Graduate in Accountancy, 34 years, 5' 10" well employed, seeking a suitable bride with permanent resident status. *Ref: 1315*

39. Senior Manager, with Master's degree, a citizen of USA, 36 years, 5' 9" tall, seeking a matching professional bride in USA, or one willing to migrate to USA. Ref: 1307

## மணமகன் தேவை

40. கனடாவில் நிரந்தர வதிவிட உரிமையுடன் 2001ம் ஆண்டு தொடக்கம் வசிக்கும் 29 வயது 5' 2" உயரமுள்ள பட்டதாரி மணப்பெண்ணுக்கு தகுந்த வரனை தேடுகின்றனர். Ref. 1805

41. UK ல் 13 ஆண்டுகளாக வசிக்கும் 22 வயது 5' 3" உயரமுள்ள பட்டதாரி மணப்பெண்ணுக்கு நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகன் தேவை. Ref. 1804

42. இந்தியாவில் சென்னை வைத்தியக் கல்லூரியில் மருத்துவப் பட்டம் பெற்று டாக்டராகப் பணிபுரியும் (RC) 24 வயது 5' 3" உயரமுள்ள மணப்பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref. 1803

43. கொழும்பில் ஆசிரியையாகத் தொழில் புரியும் 31 வயது 5' 4" உயரமுள்ள மணப் பெண்ணுக்கு EU நாடுகள் அல்லது Canada வில் தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref. 1802

44. Permanent resident in UK, 35 years 5' 6" tall, educated and well employed, a divorcee, seeks a matching groom. Ref. 1801

45. Eight years in USA on work visa, a Master's degree holder, 31 years old, 5' 2" tall, looking for a matching groom. Ref: 1800

46. சிறு வயதிலேயே கனடாவில் குடியேறிய 25 வயது 5'8" உயரமுடைய மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவில் அல்லது அமெரிக்காவில் தேடுகின்றனர். Ref: 1699

47. In Canada from childhood, a graduate from Toronto Uni., working in Bank, 30 years old, 5' 5" tall, seeks a matching groom. Ref: 1698

48. Colombo Uni. Graduate, living in Colombo, 25 years, 5' 2" tall looking for a matching groom. Ref: 1697

49. In the UK since 1994, now on PR, a student of IT, 26 years old, 5' 4" tall seeks a matching groom. Ref: 1696

50. கொழும்பில் வசிக்கும் 21 வயது 5'1" O/L படித்த மணமகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்திலோ அல்லது கனடாவிலோ தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1695

51. In Canada since 2000, Jaffna Uni. Graduate, 43 years, 5' 3" tall, seeks a matching groom. Ref: 1694

52. கொழும்பில் பட்டதாரி ஆசிரியராகத் தொழில் புரியும் 36 வயது 5'2" உயரமுள்ள மணமகளுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1693

53. நோர்வேயில் வளர்ந்த, ஐரோப்பிய ஒன்றிய குடியுரிமை உள்ள 26 வயது 5'5" உயரமுள்ள பட்டதாரி மணமகளுக்கு தகுந்த வரனை UK ல் பெற்றோர் தேடுகிறார்கள். Ref. 1691

54. In the UK since 2004, on student/work visa, 28 years, 5' tall, advanced diploma qualified and well employed bride, seeks a matching groom. Ref. 1690

55. கனடா குடியுரிமை உள்ள 30 வயது 5'4" உயரமுள்ள Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனை பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1687

56. பிரித்தானிய குடியுரிமை உள்ள 32 வயது 5'7" உயரமுள்ள திருமணமாகி இரண்டு ஆண்டுக்குள் விவாகரத்துப் பெற்ற Medical Engineer ருக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref. 1686

57. இலங்கையில் வசிக்கும் 31 வயது 5'3" உயரமுள்ள B A பட்டதாரியான பெண்ணுக்கு தகுந்த மணமகனை கனடாவில் வசிக்கும் பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref. 1688

58. In the UK since 2001 on student-visa, 34 years, 5' 6", doing Master, in Law, seeking a suitable bride from Sri Lanka or UK. Ref: 1198

59. கனடாவின் பிரஜையும் 35 வயது 5' 7" உயரமும் கொண்ட நன்கு படித்த பெண்ணுக்குத் தகுந்த மணமகனைத், தேடுகிறார்கள். Ref. 1681

60. கொழும்பில் தொழில் புரியும் 24 வயது 5'2" உயரமுள்ள பெண்ணுக்குத் தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள் Ref. 1682

61. நெதர்லாந்துப் பிரஜையும் 22வயது 5' 2" உயரமுள்ள Administration படித்து முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள் 1683

62. பிரித்தானியப் பிரஜையும் 25 வயது 5' 5" உயரமுள்ள Administration படித்து முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். 1684

63. பிரன்சுப் பிரஜையும் 32 வயது 5' 2" உயரமுள்ள Accountancy Diploma முடித்துள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். 1685

64. 11 ஆண்டுகளாக கனடாவில் வசிக்கும் பட்டதாரி 30 வயது 5' 3" உயரமுள்ள மணமகளுக்குத் தகுந்த வரனை கனடா, அமெரிக்கா அல்லது லண்டனில தேடுகின்றனர். Ref: 1680

65. யாழ் பல்கலைக் கழகப் பட்டதாரி, 25 வயது 5' 1" உயரமுள்ள மணப் பெண்ணுக்கு கனடா அல்லது லண்டனில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள கத்தோலிக்க மணமகனை தேடுகின்றனர் Ref: 1679

66. கொழும்பில் வசிக்கும் 31 வயது 5அடி உயரமுள்ள படித்த மணமகளுக்கு லண்டனில் அல்லது அவுஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகனை தேடுகின்றனர் Ref: 1678

67. லண்டனில் தொழில் விசாவில் வசிக்கும் கணக்கியற் பட்டதாரி 34 வயது 5' 2" உயர மணமகளுக்கு தகுந்த வரனை தேடுகின்றனர். Ref: 1677

68. Graduate in Accountancy, 26 years old 5' 5" tall, born and brought up in the U K looking for a matching groom, a professional. Ref: 1675

69. கொழும்பில் தொழில் புரியும் 23 வயது 5' 1" உயரமுள்ள CIMA பட்டதாரி பெண்ணுக்கு தகுந்த வரனைத் தேடுகின்றனர். Ref: 1673

70. Top professional, in the UK since childhood, 35 years, 4' 9" tall, seeks a matching groom. Ref: 1672

71. In the UK since 1999, British Citizen, a Graduate and well employed, 26 years, 5' 4" tall, seeks a matching groom. Ref: 1671

72. Canadian citizen, a graduate from Uni. of Toronto, well employed, 26 years old, 5' 3" tall, seeking a matching bride. Ref: 1668

73. கொழும்பில் வேலை செய்யும் 29 வயதுடைய 5' 6" உயரமுள்ள படித்த மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த மணமகனை தேடுகிறாரகள். Ref:1666

74. In Canada since 1990, a canadian citizen, A Graduate, well employed, 28 years, 5' 1" tall seeking a suitable groom. Ref: 1665

75. A graduate, 28 years, 5' 4" tall, born in the U.K, seeking a matching groom. Ref: 1664

76. Sri Jayewardenepura Accountancy Graduate, 27 years, 5' 4" tall, well employed in Colombo, seeks a matching groom, abroad. Ref: 1663

77. Professional, in USA on 5 year student visa, 32 years, 5' 3" tall, seeking a matching professional groom in Canada or USA Ref: 1660

78. Professional qualified bride working in Colombo, 27 years, 5' 3" tall, seeking a matching educated groom, a UK / USA citizen. *Ref: 1657*

79. In Canada since her 12 years, a Science Graduate and a teacher in a public school, 33 years, 5' 1" tall, seeks a matching groom. *Ref: 1656*

80. 8 வருடங்களாக இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி 27 வயது 5'7", மணப்பெண்ணுக்கு தகுந்த வெளிநாட்டு வதிவிட உரிமை உள்ள வரனை தேடுகின்றனர். Ref: 1654

81. Canadian citizen, in Canada since 1991, 30 years, 5' 6" tall, Maths Graduate, well employed seeking a matching groom. *Ref: 1653*

82. Canadian citizen, over there since 1996, Engineering Graduate, 29 years, 5' 6" tall, seeking a matching groom in Canada. Ref: 1650

# தமிழில் எழுதலாம் வாருங்கள்... வலையில் பரப்பலாம் வாருங்கள்...



## வலையுலகில் சம்பாதிக்கலாம்!

முன்னைய இதழில் ஒன்றில் நாங்கள் பொதுவாக இணையத்தில் பணம் சம்பாதிக்கும் இரண்டு வழிமுறைகளை பற்றி பார்த்திருந்தோம். இப்பொழுது அவற்றில் சில விடயங்களை பற்றி விரிவாகப் பார்ப்போம்.

**போட்டிகளில் கலந்து கொள்ளல்.**

பணம் சம்பாதிக்க அல்லது உங்களுக்கு தேவையான சில விடயங்களை இலகுவாக பெற்றுக்கொள்ள இன்னுமொரு வழி போட்டிகளில் கலந்து கொள்ளுதல். பல இணையத்தளங்கள் மற்றும் வலைப்பதிவுகள் காலத்துக்கு காலம் போட்டிகளை நடாத்தி பரிசில்கள் கொடுக்கும்.இப்படி எங்கயெங்க போட்டிகள் நடக்குது எண்டதை எப்படி கண்டுபிடிக்கிறது எண்டுறதையும் பிறகொரு இதழில சொல்லுறன்.இப்பொழுது நாங்கள் விடயத்துக்கு வருவோம்.

**Elance அல்லது GetAFreelancer இணையத்தளங்களினூடு வேலைகளை பெற்றுக்கொள்ளுதல்.**

Elance நிறுவனம் மற்றும் GetAFreelancer இணையத்தளங்களில் நீங்கள் இலவசமாக ஒரு கணக்கினை உருவாக்கி கொள்ள முடியும். ஆனால் அங்கு சில வரையறைகள் உள்ளன. உதாரணமாக Elance நிறுவனத்தின் இலவச கணக்கினை கொண்டு உங்களால் ஆகக் கூடியது மாதம் ஒன்றிற்கு மூன்று கோரல்களையே செய்ய முடியும் (நீங்கள் மாதாந்தம் 10 அமெரிக்க டொலர்கள் செலவளித்தால் உங்களால் 20 கோரல்கள் வரை செய்ய முடியும்). இங்கு அனேகருக்கு ஏற்படுகின்ற பிரச்சனை என்னவென்றால் இந்த மாதம் செய்கின்ற மூன்று கோரல்களும் கிடைக்காது போய்விடின் பின்னர் இன்னுமொரு கோரலை செய்ய ஒரு மாதம் காத்திருக்க வேண்டும். இது சலிப்பினை ஏற்படுத்துவதோடு வேலை செய்யும் எண்ணத்தையும் கைவிட வைத்துவிடும்.

நாங்கள் எவ்வளவு திறமையானவர்களாக இருந்தாலும் அதனை சரியான முறையில் வெளிப்படுத்தாதவிடத்து எந்த பயனும் இல்லை. அதனால் கோரல் ஒன்றினை எவ்வாறு செய்வது என்பதை தெரிந்திருக்க வேண்டும். முதலில் எம்மிடம் இருக்க வேண்டிய அடிப்படையான விடயங்கள் தொடர்பாக பார்ப்போம்

1. இணைய இணைப்பு - நீங்கள் சரியாக வேலைகளை தெரிந்தெடுத்தால் அலுவலகத்தில் இருக்கிற இணைய இணைப்பும் ஒரு மணத்தியால நேரமும் காணும்.

2. கணினி - உங்களிட்ட சொந்தமா ஒரு கணினி இருக்கிறது நல்லம். அலுவலக கணினியிலேயே எல்லாம் செய்யலாம் எண்டா கொஞ்சம் கஸ்டம்.

3. நேரம் - இது இணையத்தில் வேலை செய்ய என்று மட்டுமல்லாமல் எங்கு வேலை செய்வதானாலும் நேரம் என்பது முக்கியமானது.ஆங்கிலத்தில் Quality time என்று சொல்லுவார்கள், அந்த நேரம் எமக்கு தேவை. தினமும் உங்களிடம் இரண்டு மணத்தியாலம் Quality time இருக்குமானால் கூட உங்களால் இணையத்தில் சிறப்பாக வேலை செய்ய முடியும்.

4.Profile-எமக்கு வேலைதருபவர்கள் எங்களது கோரல்களை பார்த்த பின்னர் எம்மைப்பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள பொதுவாக விரும்புவார்கள் எனவே Elance அல்லது GetAFreelancer தருகின்ற எமது Profile பக்கத்தை முடிந்தளவு சிறப்பாக பேணுதல் வேண்டும். அனானியாக இருக்கின்ற எவருக்கும் எவரும் வேலை தர விரும்பமாட்டார்கள்.Profile இல் கவனிக்க வேண்டிய விடயங்கள்.

a. புகைப்படம்.

பொதுவாக நாங்கள் எங்கள் வலைப்பதிவுகளில் புகைப்படங்களை பொதுவில் வைக்க விரும்புவதில்லை. ஆனால் இணையத்தளமூடாக வேலை செய்யும் போது இவை சரிப்படா. பொதுவாக எமது புகைப்படம் எம்மை நன்கு அறிந்தவர் போன்ற உணர்வை வேலை தருபவருக்கு ஏற்படுத்தும். இது மிக முக்கியமானது.

b. குறிச்சொற்கள்.

வேலை தருபவர்கள் பொதுவாக சிறந்த வேலையாட்களை தேடிக்கண்டுபிடிக்க விரும்புவார்கள். எனவே அவர்கள் அதற்கான தேடலை செய்யும் போது நாங்கள் வரிசைப்படுத்தப்பட வேண்டுமாயின் எமது குறிச்சொற்கள் எம்மை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்கவேண்டும்.

c. Tagline

இதனை பொதுவாக நம்மவர்கள் நன்கு பயன்படுத்துவதில்லை. tagline இல் சரித்திரம் எழுதுபவர்களும் இருக்கிறார்கள். tagline எமது திறமயை இரண்டு மூன்று சொற்களில் நச்சென்று சொல்லுவதாக இருக்க வேண்டும்.

d. எம்மைப் பற்றிய விபரம்.

உங்கள் திறமையைத்தான் எதிர்பார்ப்பார்களே தவிர நீங்கள் எங்கு படித்தீர்கள் திருமணமானவரா இல்லையா என்று எதிர்பார்ப்பதில்லை. எனவே அவ்வாறான விடயங்களை பொதுவாக விபரத்தில் இடத் தேவை இல்லை. மதம் சார்ந்த விடயங்களை இணைப்பது பொதுவாக நல்லதல்ல. சில நிறுவனங்கள் வேலை தரும்போது இப்படியான விடயங்களை எதிர்பார்த்தால் அவர்களுக்கு மட்டும் அவற்றை கொடுத்தால் போதுமானது. அடுத்த முக்கியமான விடயம் துறை சார் மேம்படுத்தப்பட்ட அறிவு, அதை அடுத்த இதழில் விரிவாக எழுதுகிறேன்

*ஊரோடி பகீ - யாழ்ப்பாணம்*

## பில்கேட்ஸ் அவர்களுக்கு ஓர் கடிதம்

ஐயா பில்கேட்ஸ்!



சமீபத்தில் ஒரு கம்ப்யூட்டரும் விண்டோஸ் softwareம் வாங்கினோம். அதில் சில பல பிழைகள் உள்ளதாக அறிகிறோம்.அவற்றை உங்கள் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வருவதில் மிக்க பெருமை அடைகிறோம்.

1. இண்டெர்நெட் கனெக்ட் செய்தபிறகு, "Hotmail" அக்கவுண்ட் உருவாக்க முயற்சி செய்தோம். ஃபார்மில் எல்லா விபரங்களையும் சரியாகக் கொடுத்துவிட்டோம். ஆனால் பாஸ்வேர்ட் கேட்குமிடத்தில் நாங்கள் என்ன டைப் செய்தாலும் ***** என்று மட்டுமே தெரிகிறது. நாங்கள் இங்கு லோக்கல் சர்வீஸ் எஞ்சினியரிடம் விசாரித்ததில், அவர் கீபோர்டைச் செக் பண்ணிவிட்டு கீபோர்டில் ப்ராப்ளம் இல்லை எனக்கூறிவிட்டார். எனவே இதை விரைந்து சரிசெய்யுங்கள்.

2. விண்டோஸில் "Start" என்னும் பட்டன் உள்ளது. ஆனால் "Stop" பட்டன் இல்லை. அதையும் சேர்த்துவிடுங்கள்.

3. "Run" மெனுவை எனது நண்பர் ஒருவர் தவறுதலாகக் கிளிக் செய்துவிட்டதில் அவர் சண்டிகருக்கே ரன் ஆகிவிட்டார். எனவே, அதை "sit" என மாற்றிவிடுங்கள். அப்போதுதான் எங்களால் உட்கார்ந்து வேலை செய்யமுடியும்.

4. "Recycle Bin" என்பதை "Rescooter Bin" என மாற்றவேண்டும். ஏனென்றால் என்னிடம் சைக்கிள் இல்லை, ஸ்கூட்டர்தான் உள்ளது.

5. "Find" பட்டன் சரியாக வேலை செய்யவில்லை என நினைக்கிறேன். எனது மனைவி அவளது கார் சாவியைத் தொலைத்துவிட்டதால் "Find" மெனுவிற்குச் சென்று தேடினோன். ஆனால் கண்டுபிடிக்கமுடியாது என்று கூறிவிட்டது. இது ஒரு Errorஎன நினைக்கிறேன். தயவு செய்து அதை சரி செய்து எனது சாவியக் கண்டுபிடித்துத் தாருங்கள்.

6. தினமும் நான் தூங்கும் போது Mouseஇனை பூனைக்குப் பயந்து என்னுடன் வைத்துக்கொண்டு தூங்குகிறேன். எனவே Mouse தரும்போது கூடவே ஒரு Dog தரவும், பூனையை விரட்டுவதற்கு.

7. நான் தினமும் "Hearts" விளையாடி ஜெயித்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு எப்போது நான் ஜெயித்த பணத்தைத் தருவீர்கள்? சில நேரங்களில் தோற்றிருக்கிறேன். உங்கள் பணத்தை எப்போது வந்து வாங்கிக்கொள்கிறீர்கள்?

8.என்னுடைய குழந்தை "Microsoft word" கற்று முடிந்து விட்டான். நீங்கள் எப்போது "Microsoft sentence" ரிலீஸ் செய்யப்போகிறீர்கள்? என்னுடைய குழந்தை மிகவும் ஆவலாக உள்ளான்.

9. நான் கம்ப்யூட்டர், மானிட்டர், கீபோர்டு, மவுஸ் என அன்னத்தையும் விலைகொடுத்து வாங்கியிருக்கிறேன். ஆனால் Desktopல் "My Computer" ஐகான் மட்டும் உள்ளது. மிச்சம் எங்கே?

10. என்னுடைய கம்ப்யூட்டரில் "My pictures" என்று ஒரு folder உள்ளது. அதில் என்னுடைய போட்டோவைக் காணவில்லையே! எப்பொழுது அதைப் போடப்போகிறீர்கள்?

11. "Microsoft Office" இன்ஸ்டால் செய்துவிட்டேன். என்னுடைய மனைவி "Microsoft Home" கேட்கிறாள். நான் என்ன செய்யட்டும்?

*- கணினியின் முன் உட்கார்ந்து யோசிப்டோர் சங்கம் சார்பாக ரூபன்*

## இப்படியும் ஒரு வாழ்க்கை..

ஏக்கம், துக்கம் ஏன் இந்த
வாழ்வென்ற விரக்தியோடு
விடிந்துகொள்கிறது பகல்

சந்தோசமான சடங்குகளில்கூட
எல்லோர் மனத்திலும்
தனித்துட்காந்திருக்கிறது
எதிர்காலம் பற்றிய பயம்


வீதி,வேலைத்தளங்கள், பாடசாலை,
பயணத்திலெல்லாம் – விதி
எம்மீது ஒரு விழி வைத்திருக்கிறது

கண்ணயரும் போதெல்லாம்
துப்பாக்கிச் சத்தங்கள்
விழித்திருக்கிறது இரவு.

*- தர்சகராசா ஜீவராஜ்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design

# இப்போது அறிமுகப்படுத்துகிறோம்

## சுவிஸ் வாழ் தமிழர்களின் இல்லமெங்கும்

## தமிழ் பரப்பும் தொழில்நுட்பம் தற்போது லண்டனிலும்....

துல்லியமான ஒலித்தெளிவுடன் **"புலிகளின் குரல்", "தமிழீழ வானொலி"** உட்பட 60க்கும் மேற்பட்ட தமிழ் வானொலிகள்

துல்லியமான ஒலி, ஒளித்தரத்தில் அனைத்து தமிழ் தொலைக்காட்சிகளும்

- புலிகளின் குரல்
- தமிழீழ வானொலி
- ஐரோப்பிய தமிழ் வானொலி
- அவுஸ்ரேலிய தமிழ் வானொலி
- சூரியன் FM
- தமிழ் கிறிஸ்தவ வானொலி
- வெற்றி FM
- TRT தமிழ் ஒலி
- தமிழருவிFM
- இசைFM
- பெரியார் குரல்
- மற்றும் பல வானொலிகள்..

**£150 மட்டுமே!**



**புதிய சட்டிலைட் இணைப்புகளுக்கு அழையுங்கள்**


மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

# 020 7183 0367

http://www.nallatv.co.cc/

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு

# நாகேஷ் - மற்றும் நான் கடவுள் சில குறிப்புக்கள்



அ. இரவி
*(ஒரு பேப்பர்)*

## 1.

முதற்கண் நாகேஷுக்கு அஞ்சலிகள்

வெறுமனே மொட்டையாக நாகேஷ் என்று சொல்லி விட முடியாது. அதற்காக நகைச் சுவை திலகம் நாகேஷ் என்ற பட்டப் பெயரும் பொருத்தமற்றது மாத்திரமல்ல போதாததும் கூட. நாகேஷின் பரிமாணத்துக்கு நகைச் சுவைத் திலகம் நாகேஷ் என்று அவரைச் சுருக்கி விடவும் கூடாது. நடிப்பில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனை விட எந்த விதத்திலும் குறைந்தவர் அல்லர் நாகேஷ். இன்னும் சொல்லப் போனால் சிவாஜி கணேசனுக்கு இருக்கக் கூடிய ஒளிவட்டம் நாகேசுக்கு இல்லாதிருப்பதும் நாகேசுக்குப் பெரும் பலம். அதனால் அவர் ஆசை தீர தான் விரும்பிய பாத்திரங்களில் நடிக்க முடிந்தது.

ஒப்பற்ற நடிகர்களைக் கண்ட தமிழ்த் திரையுலகில் நாகேஷ் எல்லோரையும் மிஞ்சி நின்றார் என்றால் அது அவருடைய திறன் என்றே சொல்வேன். சிவாஜி கணேசன், எம் ஆர் ராதா, பாலையா, சாவித்திரி, லக்ஷ்மி, கமல்காசன் போன்ற உன்னத நடிகர்கள் மத்தியில் நாகேஷின் இடத்தை யாராலும் நெருங்க முடியாது இருந்தது. சில சமயங் களில் கமல்காசன் நெருங்குவார் போல் இருந்தாலும் அது எளிதில் கைகூடவில்லை. சிவாஜி கணேசன் மிகைப்படுத்தப்பட்ட நாடக நடிப்பைக் கைக்கொண்டிருந்த போது நாகேஷ் தனது யதார்த்தமான நடிப்பாலேயே உச்சத் தைத் தொட்டார்.

அப்போது அனைத்து தமிழ்த்திரைப்பட இயக்குனர்களினதும் செல்லப்பிள்ளையாக நாகேஷ் இருந்தமைக்கு காரணம் என்ன இயக்குனர்களின் பணியை இலகுபடுத்தி விடுவார் என்பதைத் தவிர வேறு என்ன காரணம்? சிறீதர் இயக்கிய அனேக திரைப் படங்களில் நாகேஷ் தோன்றினார். சிறீதரின் நகைச்சுவைத் திரைப்படங்களான காதலிக்க நேரமில்லை, உத்தரவின்றி உள்ளே வா ஆகியன நாகேஷ் என்ற கலைஞன் இல்லாமல் எடுத்திருப்பது சாத்தியமோ என்றே கேட்கத் தோன்றும். தமிழ்த்திரையுலகில் மறக்க முடியாத ஒரு காட்சி உண்டு என்றால் அது காதலிக்க நேரமில்லை திரைப்படத்தில் நாகேஷ் தான் எடுக்க நினைக்கும் திரைப் படத்தைக் காட்சி வடிவத்தில் தனது தந்தையா ராகிய பாலையாவுக்குச் சொல்லுகின்ற காட்சி. அதை இப்போது இருபது வயதும் நிரம்பாத என் மைந்தர்கள் கூடப் பார்த்து விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். அது உன்னதமான இரண்டு கலைஞர்களின் (நாகேஷ், பாலையா) அற்புதத் திறன்தான் என்பேன்.

நாகேஷின் எல்லா வகைப் பரிமாணங் களையும் வெளிப்படுத்தியவர் பாலச்சந்தர்? அவர்களே. அவரது நகைச்சுவைத் திரைப்படங் களான பாமாவிஜயம் தில்லுமுல்லு ஆகியன நாகேஷையே எதிர்பார்த்து நின்றன குறிப் பாகச் சொல்வதானால் பாமா விஜயம் திரைப் படம் நாகேஷ், பாலையா, சவுக்கார் ஜானகி ஆகியோரின் நகைச்சுவை நடிப்பால் நிரம்பப் பெற்றது.

அத்துடன் பாலச்சந்தர் நாகேசுக்காக பிரத்தி யேகமாக பல விசயங்களை தன்னுள் பொதிந்து வைத்திருந்திருக்கிறார். பாலச்சந்தர் முதலில் இயக்கிய நீர்க்குமிழி திரைப்படத்தில் நாயகன் நாகேஷ் தான். இன்னும் சில நாட்களில் மரணத்தை எதிர்கொள்பவன் பற்றிய கதை அது. வசனமழை பொழிகின்ற அக்காலத்தில் தமிழ் சினிமாவில் நாகேஷின் நடிப்பு மிகப் புதுசு.

மெல்லிய நகைச்சுவையும் மெல்லிய சோக மும் இழையோடிய ஒரு பாத்திரம் பாலச்சந்த ரின் சர்வம் சுந்தரம் திரைப்படத்தில் நாகேசுக்கு வாய்த்தது. கலியாணச் சாப்பாடு போடவா என்ற பாடலில் நாகேஷ் குதூகலமாகத்தான் நடிக்கிறார். ஆயினும் உள்ளுக்குள் ஒளித்து வைத்த சோகத்தை நாகேஷ் வெளிப்படுத்து கின்ற விதம் தமிழ்த்திரை ஒரு போதும் பார்த் திராதது. இது எவராலும் இயலாததும் கூட .

இதேபோல் இன்னொரு திரைப்படத்தையும் சொல்லலாம் என்றால் அது எதிர்நீச்சல். மாடிப்படியில்? வாழுகின்ற மாது (நாகேஷ்) பின்னர் மாடி வீட்டு மாது ஆகிற கதை. ஆனால் மாடிவீட்டு மாது ஆக முடியாததுதான் கதையே. நான் நம்பவில்லை இப்படியான பாத்திரத்தை வேறு எவராலும் செய்திருக்க முடியும் என்பதை. சிவாஜி கணேசனால் இயலுமென்றால் அதுவும் பொய்யே. அவரது மிகை நடிப்பும் உருவ மும் இப்பாத்திரங்களுக்குச் சற்றும் பொருந் தாதது.

தாழ்வு மனப்பான்மையில் சிக்குகின்ற பாத்திரம் தாமரைநெஞ்சத்தில் நாகேஷுக்கு வாய்த்தது. சரோஜாதேவியை நாகேஷ் விரும்பு கிறார். தாழ்வு மனப்பான்மையால் சொல்லத் தயங்குகிறார். இதில் நாகேசின் நடிப்பு பல தமிழ் திரைப்படங்களின் முன்னோடி அபூர்வ சகோதரர்கள் திரைப்படத்தில் குள்ளன் அப்பு பாத்திரத்தின் நடிப்பு தாமரை நெஞ்சம் நாகேஷிலிருந்துதான் தோற்றம் பெற்றது என்பேன். கமல்காசன் என்ற நடிகன், சிவாஜி கணேசனும் நாகேசும் சரி விகிதத்தில் கலந்த ஒரு கலவை என்றுதான் சொல்லலாம் வெள்ளி விழா திரைப்படத்திலிருந்து கே பாலசந்த ருக்கும் நாகேசுக்கும் முரண்பாடு தொடங்கி யிராவிட்டால் கமல்காசன் என்ற கலைஞன் தமிழ்த் திரையுலகிற்கு கிடைக்காமலே போயிருப்பார்

நாகேஷின் இன்னும் இரண்டு பாத்திரங்கள் பற்றிப் பேசாவிட்டால் நாகேசுக்கான அஞ்சலி நிறைவு பெறாமலே போய்விடும் அந்த இரண்டு பாத்திரங்கள் தருமி மற்றும் வைத்தி புராணத் திரைப்படங்களுக்கான நாயகன் சிவாஜிகணேசன் அல்ல. உண்மையில் இயக்குனர் ஏ.பி நாகராஜன் அவர்களே. ஏ.பி நாகராஜன் போல் புராண திரைப்படங்களை சுவைபட இயக்கியவர்கள் எவருமே இல்லை. புராணத் திரைப்படங்களிலேயே சிகரம் எனச் சொல்லத்தக்கது திருவிளையாடல். சுமார் 180 நிமிடங்காளாலான இத்திரைப்படத்தில் 15 - 20 நிமிடங்களுக்குள்ளேயே நாகேஷ் தருமியாக வந்து போகிறார். ஏழைத் தமிழ்ப்புலவர் அவர். அச் சொற்ப நேரத்துக்குள் நாகேஷ் செய்த சித்து விளையாட்டு மகா பெரிது. ஏழைப் புலவன், அறிவு, பணம் என்று ஏதும் இல்லாதவன் அவன் தரித்திரம் ஆயிரம் பொற்காசுகளுக்கு ஆசைப்பட வைக்கிறது. அதை அபாரமாக வெளிப்படுத்தி இருப்பார் நாகேஷ். அந்தக் காட்சியில் நாகேஷ் இல்லை என்றால் சிவாஜிகணேசன் இல்லை. ஆனால் சிவாஜிகணேசன் இல்லையென்றாலும் நாகேஷ் இருந்திருப்பார்.

தருமியை விட மேம்பட்ட பாத்திரம் தில்லானா மோகானாம்பாள் திரைப்படத்தில் வைத்திக்கு. தமிழில் வந்த மிகச் சிறந்த திரைப்படங்களில் தில்லானா மோகானாம் பாள் ஒன்று. அத்திரைப்படத்தில் மூவர் அதி திறம்பட நடித்து இருப்பார் சிவாஜிகணேசன் பாலையா மற்றது நாகேஷ். அதிதீவிர வில்லன் அல்ல, சாடையான வில்லன் பாத்திரம். சிண்டுமுடிகிற, காட்டிக்கொடுக்கிற வில்லன் பாத்திரம் எலுமிச்சம் பழத்தை உருட்டிய படி வருகிற அந்த வைத்தியை எவர் தான் மறக்க முடியும்

தமிழ்த் திரையுலகின் நடிப்பின் உச்சங் களைத் தொட்டவர் நாகேஷ் ஜெயகாந்தனின் உன்னைப் போல் ஒருவன் யாருக்காக அழுதான் இவை நாகேஷை இந்தியா முழுமை க்கும் கொண்டு சென்றவை யாருக்காக அழுதான் சோசப்பூவை நாகேஷை விட்டால் யார் தான் செய்திருக்க முடியும்?

அப்போது நாகேஷ் சிரித்தால் அநேகமாக எல்லாத் தமிழரும் சிரிப்பர். ஆனால் நாகேஷ் அழுதால் யாரினாலும் தாங்க முடியாது. எல்லாத் தமிழர் வீட்டிலும் செல்லப் பிள்ளை நாகேஷ். இவரது இந்த மரணம் ஒரு முப்பது வருடங்களுக்கு முன்னம் நிகழ்ந்திருந்தால் தமிழர் ஒவ்வொருவரினது வீட்டிலும் ஒப்பாரி யுமாக பிலாக்கணமுமாகவே இருந்திருக்கும் அந்தளவு தமிழர்களை நாகேஷ் போல் ஆகர்சித்தவர்கள் வேறு எவரும் இலர். அம் மகா கலைஞனுக்கு எம் மனப்பூர்வமான அஞ்சலிகள்

## 2.

இந்த அவலமான சூழலில் ஒரு திரைப்படம் பார்ப்பது தொடர்பாக எனக்குள் கேள்விகள் இருக்கின்றன. திரைப்படம் என்பது வெறும் பொழுதுபோக்கு அல்லது கேளிக்கை என்ற விதத்தில் அதனைப் பார்க்காமல் தவிர்க்க ம் தான். ஆனால் நான் கடவுள் திரை த நான் பார்க்கப் போனது எனது வேறு ஒரு நோக்கம் காரணமாகத்தான். சேது, நந்தா, பிதா மகன் தந்த பாலாவின் அடுத்த திரைப் படம் நான் கடவுள். அதன் கலைப் பெறுமதியை உணர திரையில் பார்ப்பது அவசியம் என்றும் மீள இனி லண்டனில் இது திரையிடப்படமாட்டாது என்றும் உணர்ந்ததால் திரையரங்குக்குச் சென்றேன்

பாலா, அமீர், மிஸ்கின், செல்வராகவன் முன்னர் மணிரத்தினம் (இப்பொழுது அல்ல), கமல்காசன் ஆகியோரின் திரைப்படங்களை திரையில் சென்று பார்ப்பதையே அதிகம் விரும்புவேன். திரையரங்கில் படம் பார்ப்பது படைப்புக் கலைஞர்களுடன் நேரடி அனுபவம் பெறுவதற்கு ஒப்பானது. அது இரகசியமாக படைப்பின் சூட்சுமங்களையும் சொல்லித் தரும். வீட்டிலிருந்து பார்க்கையில் ஆயிரம் தொலைபேசி அழைப்புகள், பிச்சல், பிடுங்கல் ஒன்றும் திரைப்படங்களுடன் ஒன்றிப்போக என்னை விடாது

பெரிய எதிர்பார்ப்பும் பிரமிப்பும் நான் கடவுள் படத்தில் எனக்கு இருந்தது. அதே முன்னாய்த்தத்துடன் அமர்ந்தேன். இளைய ராஜாவின் பின்னணி இசையும் ஆதர்.சி. வில்சனின் ஒளிப்பதிவும் ஒரு சுகமான அனுபவத்திற்கு என்னை இட்டுச் சென்றன. எந்தத் திரைப்படமும் காட்டியிராத ஒரு களம். பிச்சைக்காரர்களின் உலகம் விரிந்து செல்கிறது. வெறும் பிச்சைக்காரர்கள் அல்ல அங்கவீனமான பிச்சைக்காரர்கள். சிலர் அங்கவீனமாக்கப்படுகின்றார்கள். கண் கொண்டு பார்க்க முடியாத அங்கவீனம் ஒரு முதலாளி (அப்படிச் சொல்லலாமா?) அவர்களை முக்கிய இடங்களில் வைத்து பிச்சை எடுக்க வைக்கிறான். மேலும் சில கஞ்சாச் சாமியார்கள் இந்தப் பிச்சைக்காரர் களுடைய உலகம் ஆடல் பாடல் கூத்து கும்மாளம் நக்கல் நையாண்டி நிறைந்தது. அவர்கள் ஒரு குடும்பமாக தம்மை உணர்கிறார் கள். ஒருவருக்கு ஒருவர் உதவியாக ஒருவ ருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து.... அவர்கள் சிரிக்கிறார்கள், அழுகிறார்கள் அவர்கள் சிரிக்க சிரிக்க என்னை வேதனை பிடுங்கித் தின்றது. விளிம்பு நிலை மாந்தரை அபாரமாகச் சித்தரிக்கின்றார் பாலா....

இன்னும் எழுதத்தான் விருப்பம். முடிய வில்லை சுமார் 120 நிமிடங்களுக்கு மேற்பட்ட இத்திரைப்படத்தில் 100 நிமிடத்தில் உள்ள திரைப்படத்தைக் கூட நமக்குக் காட்டவில்லை காட்டிய காட்சிகளும் முன்னுக்குப் பின் முரணாக வந்தன. காரணம் என்ன? இதைத் திரையிட்ட ஐங்கரன் நிறுவனமா அல்லது அத் திரையரங்கமா இத் தவறுக்குக் காரணம். பாலா என்ற அற்புதமான கலைஞனின் கழுத்தான் குத்தியில் கை வைத்து விட்டார்கள் திரைப்படத்தின் முக்கிய காட்சிகள் வெட்டப் பட்டு இருந்தன. வெட்டப்பட்ட காட்சிகளில்? அதிகமான வன்முறைகள் இருக்கின்றது என்றால் அதற்குரிய தணிக்கைச் சான்றுகள் கொடுத்து இருக்க வேண்டியதுதானே. அல்லது சிறார்களும் பார்க்க வந்தால் பணம் பெருகும் தானே என்று ஐங்கரன் நிறுவனம் கருதியதா? அதனால் காட்சிகளை வெட்டச் சொன்னார்களோ? யாதொன்றும் யாமறியோம் பராபரமே. ஐங்கரன் நிறுவனம் இதற்கு பதில் சொல்லுமா?



NAG & Co.
SOLICITORS

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

# சினிமா

## விமர்சனம்: படிக்காதவன்





நடிப்பு: தனுஷ், தாமன்னா, விவேக்
இசை: மணிசர்மா
இயக்கம்: சுராஜ்
ஒளிப்பதிவு: வெங்கடேஷ்
சண்டைப்பயிற்சி : தளபதி தினேஷ்
நடனம்: தினேஷ் - ஷோபி
பாடல்கள்: பா.விஜய் - சினேகன் - தபு சங்கர்
தயாரிப்பு: பாரதி ரெட்டி

படிக்காதவன் என்று பெயர் வைத்ததால் லாஜிக் பற்றி எந்தக் கவலையும் படவில்லை இயக்குனர். இதனால் தமிழ் சினிமாவுக்கு லாபம் மற்றுமொரு கமர்ஷியல் படம். ஆனால், நமக்கு...?

படித்த குடும்பத்தில் படிக்காத ஒரேயொருவர் கடைக்குட்டி தனுஷ். பத்தாம் வகுப்பையே தாண்டாத இவரை படுத்தியெடுக்கிறார் படித்த தந்தை, பிரதாப் போத்தன். இதிலிருந்து தப்பிக்க என்ன வழி? நண்பர்கள் குழாம் டுட்டோரியல் காலேஜில் சேரச் சொல்கிறது.ஆனால், காலேஜையே இழுத்து மூடும் அளவுக்கு ரவுசு காட்டுகிறார் தனுஷ். படித்த பெண்ணை காதலித்து மணந்தால் தானாக கௌரவம் வந்து சேரும் என அடுத்த ஐடியா கொடுக்கிறார்கள் நண்பர்கள்.ஐடியா இதுதான் நீ ஒரு பொண்ணைக் காதலிக்கற. அவ பேர் கீதான்னு வெச்சுக்க. அவள நீ கல்யாணம் பண்ணிகிட்டு அவ ஐ.ஏ.எஸ். படிச்சா கீதா ராதாகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்.ன்னு போடுவாங்க. அப்போ, நீ படிக்காமயே உம் பேருக்குப் பின்னாடி டிகிரி வருமில்ல? ? என்று அசத்தலான ஐடியா தருகிறார்கள் நண்பர்கள். தனுஷ் கல்லூரியில் படிக்கும் தமன்னாவை காதலிக்கிறார். தமிழ் சினிமாவின் வழமையான மோதலுக்குப் பின் தமன்னாவும் தனுஷை காதலிக்கிறார்.

இடைவேளை வரை இதுபோதும். அதற்குப் பிறகு? வருகிறார்கள் தடித்தடியாக மூன்று வில்லன்கள். யப்பா.... டைரக்டர்களா.. ஒரு வில்லன் போதும்ப்பா.. வர வர எல்லாருமே ரெண்டு மூணு வில்லன்களைக் காமிச்சு, ஹீரோவை டார்ச்சர் பண்றதுக்கு பதிலா எங்களை டார்ச்சர் பண்றீங்கப்பா.. அதுவும் எல்லாருக்குமே திடீர்னு தெலுங்குப் பாசம்வேற.. முடியல! ஒருவர் தமன்னாவின் அடிதடி அப்பா (சுமன்). இனனொருவர் அவரது எதிரி (சாயாஜி ஷிண்டே). மூன்றாவது அதுல் குல்கர்னி. மூவரையும் தன்னுடைய பென்சில் தேகத்தால் துவட்டியெடுத்து அதன்படி தமன்னாவைக் காதலித்து பல கஷ்டங்களுக்குப் பின் (அவருக்கல்ல.. நமக்கு!) கைபிடிக்கிறார். படத்தை காப்பாற்றுவது தனுஷின் நடிப்பு. டைமிங் காமெடியும், சரவெடி ஆக்சனும் தனுக்கு சரளமாக வருகிறது. தமன்னாவை இவர் ரூட் விடும் இடங்கள் கலகலப்பானவை. வீட்டுக்குள் நடக்கும் காட்சிகள் வழக்கமாக தனுஷ் படங்களில் வருபவைதான் என்றாலும் ரசிக்க வைக்கின்றன. கலகலப்பான காட்சிகளும் தனுஷின் நடனம், காமெடி, புரூஸ் லீ ஸ்டைல் சண்டையும் படத்தைத் தூக்கி நிறுத்துகின்றன.மயில்சாமி, கணேஷ், சுமன் ஷெட்டி இவரது உருப்படாத நண்பர்கள். உருப்படியான சில காமெடிக்கு இவர்களே உத்தரவாதம்.தமன்னாவுக்கு அழகை காட்டும் வேடம். நடிப்பு? அடுத்தப் படத்தில் தான் பார்க்க வேண்டும். விவேக் சிரிக்க வைக்கும் அளவுக்கு சித்திரவதையும் செய்கிறார். குறிப்பாக அந்த கோயில் குளத்தில் குளிக்கும் காட்சி. கெட்டப் போடாமல் நடிக்கவே வராதோ? மாத்தி யோசிங்க சார்.

தனுஷை திடீரென்று வில்லன்கள் தாக்குவதும், அவர்களின் குறி தனுஷ் அல்ல தமன்னா என தெரிய வருவதும் திரைக்கதையை விறுவிறுப்பாக்குகிறது. ஆனால், அடுத்த காட்சியிலேயே வழக்கமான முறையில் படம் செட்டாகி விடுவது ஏமாற்றம். தமன்னாவை கொல்ல ஆந்திராவிலிருந்து வரும் ரவுடிப் பட்டாளம் சென்னையில் சர்வசாதாரணமாக துப்பாக்கி உள்ளிட்ட கொடூர ஆயுதங்களோடு வலம் வருகிறது. எதிர்கோஷ்டியும் துப்பாக்கிகள் சகிதகமாக முறைத்துக் கொண்டு நிற்கிறார்கள். தமிழகம் பீகாரை மிஞ்சுகிறது என்று சொன்ன தலைமை தேர்தல் கமிஷனர் இந்தப் படத்தைப் பார்த்தால் மகிழ்ச்சியடைவார். போலிஸ், போலிஸ் என்றொரு அமைப்பு இருப்பதை துணை இயக்குனர்கள் யாராவது இயக்குனருக்கு நினைவுபடுத்தியிருக்கலாம்.

சுமன், சாயாஜி ஷிண்டே, அதுல் குல்கர்னி மூவரும் வீணடிக்கப் பட்டிருக்கிறார்கள். சேத்தன், தேவதர்ஷினி, ஷர்மிளா என தெலைக்காட்சி நடிகர்கள் பட்டாளமும் படத்தில் உண்டு. மணி சர்மாவின் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் சுமார். கதைக்கு ஏற்ற ஒளிப்பதிவு. காமெடியில் ஜெயிக்கும் இயக்குனர், ஆக்சனில் அளவுக்கதிகமான ஆந்திர காரத்தால் கோட்டை விடுகிறார் முதல் பாதியில் இருந்த வேகத்தை, இரண்டாவது பாதியில் மெயின்டெயின் கூட பண்ணாமல் விவேக்கையும், பாடல்களையும் வைத்து ஓட்டி, கடைசி 20 நிமிடங்களை மட்டும் நம்பி இருப்பது திரைக்கதையின் பெரிய ஓட்டை.

படிக்காதவன் - முட்டாளில்லை..புத்திசாலியுமில்லை

- *விந்தன்*

## சினித்துளி

### நடிகர்களுக்கு பட்டம் ஒரு கேடா!



கார்த்திக் - அனிதா படத்தின் பாடல் வெளியீட்டு விழா சென்னையில் அண்மையில் நடந்தது. வாழ்த்தியவர்கள் எல்லாம் படத்தை பற்றி பேசி அமர்ந்துவிட, கடைசியாக பேச வந்த தங்கர்பச்சானின் உரை ஈழப் பிரச்சனைக்கு தாவியது. அதில் தமிழ் சினிமா நடிகர்கள், பெயரில் மட்டும் புரட்சியை வைத்துக் கொள்கிறார்கள். நடிப்பதற்கு கோடி கோடியாய் கூலியை வாங்கிக்கொண்டு தமிழையும், தமிழ் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.இந்த லட்சணத்தில் புரட்சி தளபதி, இளைய தளபதி என்று பட்டம் வைத்துக்கொள்கிறார்கள். ஈழத்தமிழனுக்காக எதையுமே செய்யாமல் உண்ணாவிரத மேடையில் உட்காருவது வெட்கமாக இல்லையா? இப்படி தமிழனை ஏமாற்றும் நடிகர்களுக்கு பட்டம் ஒரு கேடா? என பொரிந்து தள்ள கேட்ட அனைவருக்கும் அவரது பேச்சு நியாயமென்றே தோன்றியது.

### ரகுமான் பெற்ற "BAFTA" விருது!



இந்தியாவில் தயாரான 'Slumdog Millionaire' படம் சர்வதேச அளவில் விருதுகளை குவிக்கிறது.இப் படத்துக்கு இசையமைத்த ஏ.ஆர்.ரகுமான் ஆஸ்கார் விருதுக்கு அடுத்த படியான கோல்டன் குளோப் விருது பெற்று உலகத்தையே திரும்பி பார்க்க வைத்தார். அமெரிக்காவின் டைரக்டர் யூனியன் விருதுகளையும் ஸ்கிரீன் விருதுகளையும் இப்படம் வாரி குவித்தது. தற்போது இங்கிலாந்தின் BAFTA விருதுகளும் ( British Film Academy Award) இப் படத்துக்கு கிடைத்துள்ளது. இவ்விருது ஆஸ்கார் விருதுக்கு இணையானது என்பது குறிப்பிடத்தக்கது.11 BAFTA விருதுகளுக்கு 'Slumdog Millionaire' படத்தை பரிந்துரை செய்தனர். அதில் 7 விருதுகள் வாங்கியுள்ளது. சிறந்த இசையமைப்பாளருக்கான BAFTA விருதை ஏ.ஆர்.ரகுமான் பெற்றார். இவ்விருது பெறும் முதல் இந்திய இசையமைப்பாளர் ரகுமான் என்பது குறிப்பிடத்தக்கது.

### 'எங்க வீட்டு பிள்ளை'யில் பரத்!



தென்னிந்தியாவில் புகழ்பெற்ற படத்தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாக திகழ்ந்ததுதான் விஜயா-வாஹினி நிறுவனம்.40 வருடங்களுக்கு முன் எம்.ஜி.ஆர். இரு வேடங்களில் நடித்து வெற்றி பெற்ற 'எங்கள் வீட்டு பிள்ளை' படத்தை விஜயா வாஹினிதான் தயாரித்தது. அதே பெயரில் இப்போது புதிய படத்தை தயாரிக்கவுள்ளது. இதில் நாயகனாக நடிக்கிறார் பரத். எம்.ஜி.ஆர் படத்தின் தலைப்பு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதே தவிர அந்த கதைக்கும் பரத் நடிக்கும் படத்தின் கதைக்கும் சம்பந்தமே இல்லையாம்.

### லிங்குசாமி இயக்கத்தில் விஜய்!



விஜயின் 49வது படமான வேட்டைக்காரனை பாபுசிவன் இயக்குகிறார். ஐம்பதாவது படம் ஜெயம் ராஜாவுக்கு. விஜய்யின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரன் தயாரிப்பு. 49வது படமே இன்னும் தொடங்காத நிலையில் 51வது படத்துக்கு கதை கேட்டிருக்கிறார் இளைய தளபதி. கதை சொன்னவர், லிங்குசாமி. பீமா, பையா படங்கள் ஏற்படுத்திய மெகா இடைவெளியை வீணாக்காமல் புதிய ஸ்கிரிப்ட்டுகள் பலவற்றை உருவாக்கியிருக்கிறார் லிங்குசாமி. அதில் ஒன்றைத்தான் விஜயிடம் கூறியிருக்கிறார். கதை விஜய்க்குப் பிடித்துப் போனதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.






**SRI KALI MATA** Face reading & Astrology Center

***இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும்*** **Pandit S.M.Sahadevaraju Swamiji** Mrs Subbuluxmi

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம், துன்பங்கள் நன்மை தீமைகள், பற்றிய விபரங்களைக் கூறுவார். இவரை ஒரு முறை சந்தியுங்கள். கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி, வியாபாரம், திருமணம், கணவன், மனைவி ஒற்றுமையின்மை குழந்தைப்பாக்கியம், காதல் கலியாணம், விசா பார்த்து சொல்லப்படும். நிலம், வீடு, யோகம் அதிஸ்ட நம்பர்கள் கோர்ட் வழக்குகள், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு கண்திருட்டி, பரிகாரம் செய்வார்.


You will come to know about your past, present and future by hand prediction, face reading and horoscope intending persons may contact for job, family matters, sickness, promotion, children problems, visas, going abroad, money and any personal problems and removing all black magic and bad evil things doing lakshmi poojas, prayers and protections from enemies.

Opening Hours: 10.00 am to 8.00pm , 7Days a week

*தொடர்புகளுக்கு :*

**Mobile : 07529 548 667 & 07529574 699**
**02085484698**

**FCC SUPER STOR 158, Green St, Upton Park, London E7 8JT (Opp: Dipesh Jewellery)**








# NO WIN NO FEE

# WWW.GEORGECLAIMS.COM

(PERSONAL INJURY SPECIALIST)

## WE CAN HELP YOU MAKE A CLAIM FOR :

MOTOR ACCIDENT ACCIDENT AT WORK
MEDICAL NEGLIGENCE SLIP & TRIP CRIMINAL INJURIES

HAD AN ACCIDENT IN THE LAST 3 YEARS?
CLAIM AS A DRIVER AND/OR A PASSENGER INVOLVED IN ANY ACCIDENT (MINOR/MAJOR)

E-mail:- contact@georgeclaims.com

உங்கள் அனைத்து பாதுகாப்பு தேவைகளுக்கும் எங்கள் உடனடி சேவை !


24 hours

For free advice **Office: 01782 444264**
and home visit **Mob: 07957108339**

www.georgeclaims.com

# HYPERTECH
## SHOPFITTERS

**ELECTRIC WIRING**
**PLUMBING &**
**CENTRAL HEATING**
DOMESTIC AND
COMMERCIAL




**REFRIGERATION**





INSTALLATION
MAINTENANCE
REPAIRS
& PARTS

**CCTV**
ACCESS CONTROL &
NETWORKING
(DOMESTIC/COMMERCIAL)





FINANCE
OPTIONS AVAILABLE

CONTACT
DETAILS:

T: 0845 006 1166
M:078 3366 7905
F: 020 8711 3145

TECH.CITITECH@GMAIL.COM

60 TORRINGTON WAY,
MORDEN, SURREY SM4 5QA